400
காவேரி
விரோதி - ஆடி
JULY - 1949.
MADRAS
8 அணா

உங்கள் (தேக) ஆரோக்கியத்தை

பருகுங்கள்

விளையாட்டுக் காரருக்கும் சரி, பலஹீனருக்கும்சரி, போர்ன்-வீடா அதிக நன்மையும் அதிக புஷ்டியும் அளிக்கும் அதனால் அதிகசக்தியும்பெறுகின்றனர். குழந்தைகள் அதன் சாக்லேட் வாசனையை விரும்புகின்றனர். காலையிலும் மாலையிலும் ஒரு கிளாஸ் சூடான அல்லது குளிர்ந்த பாலில் இரண்டு தேக் கரண்டியளவு கலந்து பருகவும்.

Cadbury

THE TREE OF HEALTH

- ஆரோக்கிய விருக்ஷம் -

புதியதாக குறைக்கப்பட்ட விலையைப் பற்றி கேட்கவும்

CFY-I TAM

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியமும், ஏ & டி விடமின்களும் நிறைந்தது

காட்பரி-ப்ரை (இந்தியா) லிமிடெட்

தபால் பெட்டி நெ. 1417 பம்பாய் தபால் பெட்டி நெ 251 கல்கத்தா தபால் பெட்டி நெ. 1725 மதருன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 AUG 1949
MADRAS

PANDYAN INSURANCE COMPANY

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி, லிமிடெட்.

(இந்தியாவில் ஸ்தாபிதம்: 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

★

சிறந்த சேவைசெய்து வருகிறது.

நெருப்பு, கப்பல், மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 70,00,000

★

கிளைகள் : பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, நாகபுரி.

★

பிரதம ஏஜண்டுகள் :

ஏ & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை Etc.

யாவரும் விருப்புடன் தேர்ந்தெடுத்து வாங்கும் சிறந்த சமையல் சாதனம். பதார்த்தங்களின் சுவையையும், மணத்தையும் பன்மடங்கு பரிமளிக்கச் செய்கிறது. சுத்தமான தாவர எண்ணெயில் சாஸ்திரீய முறையில் தயாரிக்கப்பட்டு வீட்டுத் தேவைக்காக, காற்றுப் புகாத லிவர் மூடியுடன், 2, 5 பவுண்ட் டின்களில் எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கிறது.

காமதேனு

வனஸ்பதி

தயாரிப்பவர் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்பொரேஷன் லிமிடெட்,

மேட்டூர் அணை, சேலம்.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்,

திருச்சிராப்பள்ளி

பூரண விற்பனை ஏஜண்டுகள் :

அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்

120, அரண்மனைக்கார தெரு, மதராஸ்.

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	....	ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ. 45,00,000

●

டைரக்டர்கள்

G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா (வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா (வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்
B. T. தாகூர்

●

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.

டிரேட் மார்க்கை
கவனியுங்கள்!



ஒவ்வொரு
வீட்டிலும்
உட்வார்ட்ஸ்
க்ரைப் வாட்டர்
இருக்கவேண்டும்

19852

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

1-WW112-111 W. WOODWARD LTD. LONDON ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A. Linghi Chetty Street, — G. T. MADRAS.

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபாத்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) திலமயற்றது ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 5-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 3-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-14-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி.எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்றால் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கூஞ்சா தைலம்

வழுக்கை, மயிர் கொட்டுதல், போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது. தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேசவிருத்தி டானிக்.

ஒரு பாட்டில் ரூ. 2-0-0

தபாற் செலவு ரூ. 0-14-0 வேறு.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI

Ayurvedha Sasthri (K. M.)

24, Debendra Ghose Road, Bhowanipore

CALCUTTA, 25

Stockists:

Messrs. APPAH & CO., 286, Netaji Subhas Chandra Bose Road Madras.

பொருளடக்கம்

விரோதி மலர் 8 | ஆடி இதழ் 12

கம்யூனிஸ்ட் அட்டூழியம் 7

கீதைக்குப் பிறகு 10
ஈ. ஸ்ரீ.

அரங்கேற்றம் 15
ஜி. எஸ். மணி

அரசியின் நடனம் 19
வேங்கடலக்ஷ்மி

ஸங்கீத போதனு முறை 23
கலாதஸான்

இரண்டு லீலா விநோதங்கள் 27
வாரன்

லண்டன் பத்திரிகைகள் 33
கே. கோபாலன்

விரும்பிய உலோகம் 36
நா. கி. நாகராஜன்

காஷ்மீர் குஸுமா 41
மானசீகன்

லக்ஷியக் கனவு (தொடர் கதை) 54
கே. சுந்தரம்மாள்

தந்தச் சிலை 67
வே. ரங்கராஜன்

பட்டண் பெருமை (தொடர் கதை) 76
கே. எம் முன்ஷி

தகோபாத் தமிழ்க் கல்வெட்டு 90
தராசு

குறிப்பு:—காவேரியில வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.



குழந்தைகள் குஷியாக
சவாரி செய்ய
இதோ எத்தனை சிறந்த
பெராம்புலேட்டர்கள்,
ட்ரைசிகில்கள்!



விபரங்களுக்கு :-

ராயல் ஸைக்கிள் & மோட்டார் கம்பெனி

13/14, பிராட்வே :: சென்னை 1

தி பயனீர் சைக்கிள் ஹவுஸ்

மேலகோபுர வீதி :: மதுரை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 AUG 1949
MADRAS

காவேரி

விரோதி மலர் 8	"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	ஆடி இதழ் 12

கம்யூனிஸ்ட் அட்டூழியம்

மேற்கு வங்காளத்தில் நடக்கும் கம்யூனிஸ்ட் அட்டூழியங்களைப் பார்த்தால் நமக்கு வியப்பாக இருக்கிறது. அதுவும் தலைநகரான கல்கத்தாவில் தினம் கலாட்டா, வெடிகுண்டு வீச்சு, 144 தடை உத்தரவு எதிர்ப்பு, காங்கிரஸ்காரர்கள் வீடு தாக்குதல், சுவர்தோறும் அராஜகத்தைத் தூண்டும் விளம்பரங்கள். இவ்வளவும் கம்யூனிஸ்ட் கட்சி சட்டவிரோதமானது என்று மேற்கு வங்காளத்தில் பிரகடனப்படுத்தியும் நடைபெறுகின்றனவென்றால் ஆச்சர்யத்திற்கு அளவேது?

இவை போதாவென்று காங்கிரஸுக்குள் பிளவு. தென் கல்கத்தா தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்குப் படுதோல்வி. ஆட்சிபுரியும் காங்கிரஸ் நிர்வாகஸ்தர்கள் திறமையற்றவர்கள் என்றே அல்லது இதை மறைமுகமாக ஆதரிக்கிறார்களென்றேதான் கருத வேண்டி வருகிறது. கவர்மெண்டாரின் முதல் கடமை பாதுகாப்பு, அமைதி குலையாது காப்பது, இந்தக் கடமையைச் செவ்வனே செய்ய இயலாவிட்டால் அந்த மந்திரி சபை பதவியிலிருப்பது நாட்டிற்கே அபாயம். டம் டம் விமான நிலயத் தாக்குதல், பஸிர்காட் போலீஸ் ஸ்டேஷன் அட்டூழியம், காங்கிரஸ் தலைவர்கள் வீடுகளில் புகுந்து கலவரம்,—இன்னும் என்ன வேண்டும்? சமீபத்தில் ஒரு விவாகவிருந்தில்—பெரிய போலீஸ் உத்யோகஸ்தர்கள் விஜயம் செய்திருக்கும் விருந்தில் — நெடுநாளாக மறைவாக இருந்துவரும் கம்யூனிஸ்ட் தலைவர் விஜயம் செய்து விருந்துண்கிறார்.

கல்கத்தாவில் அநேகம் பிரிட்டிஷ் சணல் கம்பெனிகளும் மற்றும் பிரபல வியாபாரஸ்தலங்களும் உள்ளன. கொள்ளை லாபம் அடிக்கும் வியாபாரிகளும் உள்ளனர். ஆனால் அங்கெல்லாம் வேலை நிறுத்தம் என்ற பேச்சே கிடையாது. கம்யூனிஸ்டுகள் இந்திய முதலாளிகளைத் தாக்குவதில்தான் ஆர்வம் கொண்டுள்ளார்கள். சந்திரநாகூர் இந்திய யூனியனுடன் சேருவதை எதிர்த்துப் புகழ் பெற்றவர்கள் அன்றோ கம்யூனிஸ்டுகள்!

நமது மாகாணத்திலும் ஆந்திர ஜில்லாக்களில் கம்யூனிஸ்டு அட்டகாசம் ஓங்கி வருகிறது. தஞ்சை ஜில்லாவிலும் மறைவாக இருக்கும் கம்யூனிஸ்ட் தலைவர்களின் தூண்டுதலினால் அடிக்கடி கிஸான்கள் கொள்ளை அடிப்பதும் கிளர்ச்சி செய்வதுமாக இருக்கிறார்கள். கிராமங்களில் இன்று அவர்கள் மற்றும் வேறு விதத்திலும் தொண்டு புரிகின்றனர்; ஒண்டி சண்டியாகப் போகும் வழிப் போக்கர்களைப் பறிமுதல் செய்து கிலி உண்டு பண்ணுகிறார்கள். இன்று கிராமத்தில் வசிப்பதே அபாயம் என்ற மனப்பான்மை மக்களிடையே பரவும்படி செய்துவிட்டார்கள். காங்கிரஸ் அரசாங்கம் இதைக் கவனிப்பதில்லை. அவர்களுக்குத் தங்கள் பதவியை நிலைநாட்டவே, கட்சிப் பிரதி கட்சிச் சுழலி

விருந்து தங்களை மீட்டுக் கொள்ளவே போதிய அவகாசமில்லை. சம்பவங்கள் நடந்த பின்பு போலீஸ் புலிகள் ஆர்ப்பாட்டம் செய்யக் கற்றுள்ளார்களே ஒழிய, அவை நடக்குமுன் அவை நிகழா வண்ணம் தடுக்க ஆற்றலும் கிடையாது; அவ்வகையில் அவர்களுக்குப் பழக்கமுமில்லை, திறனுமில்லை எனலாம். இது தான் பொது மக்களின் அபிப்பிராயம். தலைமறைவாக இருக்கும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் இங்கே தான் இருக்கிறார்கள். அவர்களைப் பிடிப்பதில் ஏன் கவர்மெண்டார் அக்கரை கொள்ளவில்லை?

பொதுவில் நமது துப்பறியும் போலீஸ், பைஸா பிரயோஜனமில்லாதது. இந்தத் துப்பறியும் போலீஸ் படையை மிகவும் பலப்படுத்த வேண்டும். அவர்களுக்குப் பிரத்யேக சலுகைகள் காட்டி ஊக்க மூட்டவேண்டும். அதை விரிவாக்க வேண்டும். அதற்குப் பல பாஷைகள் பயின்ற நல்ல படித்த வாலிபர்களைப் பொறுக்கி எடுக்கவேண்டும். பொறுக்குவதில் திறமை ஒன்றைத் தவிர வேறெவ்வித பிரச்னையும் தலையிடக்கூடாது. இதில் கவர்மெண்டார் சிரத்தை காட்டாவிடில், அதோ கதிதான். நமது சாதாரண போலீஸ் இனி கவைக்குதவாது. கிராமங்களிலும் நகரங்களிலும் துப்பறியும் போலீஸாரின் எண்ணிக்கை அதிகமாயிருத்தல் அவசியம். சம்பவங்கள் நடப்பதற்கு முன்னரே அவர்கள் உளவறிய வேண்டும். அவர்களை, "பிரிவெண்டிவ் போலீஸ்" (Preventive Police) என்று நாமகரணமிட்டு வேலை செய்யச் செய்யவேண்டும்.

வங்காளத்தில் கம்யூனிஸ்டுகள் பெரிய திட்டத்தின் கீழ் வேலைசெய்கிறார்கள். கம்யூனிஸ்ட் "பொலிட் பீரோ" (Polit Bureau) ஜெயிலிலுள்ள கைதிகளைப் புரட்சி செய்யத் தூண்டியது என்று வங்ககவர்மெண்டு அறிக்கை ஒன்று கூறுகிறது. ஜெயிலினுள் உள்ள கைதிகளுக்கும் தலைமறைவாக வெளியில் இருக்கும் "பொலிட் பீரோ" நபர்களுக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது என்பது தெளிவாகவில்லை. காங்கிரஸ் அரசாங்கத்தார் அடிக்கடி துப்பாக்கிப்பிரயோகம் செய்யும்படி தூண்டி மக்களைக் காங்கிரஸ்மீது ஆத்திரமடையச் செய்ய வேண்டுமென்பதே அவர்கள் நோக்கம். இதைப் புரிந்து கொள்ளாது சம்பவங்கள் நிகழ்ந்தபோது அதைத் துப்பாக்கி கொண்டு அடக்குவது கம்யூனிஸ்ட் வலையில் சிக்குவதாகும். இப்படி ஒரு தடவை நிகழ்ந்தால் அம்மாதிரி இனி நிகழாவண்ணம் தடுக்க முயலுவதுதான் முறை. அதைத்தான் நம் மாகாணத்திலும் சரி, மேற்கு வங்காளத்திலும் சரி, செய்ய முயலுவதில்லை என்று நாம் கருதுகிறோம்.

தஞ்சை ஜில்லாவில் திருத்துறைப்பூண்டியிலும் மன்னார்குடியிலும் கம்யூனிஸ்ட் அட்டகாஸம் தலை ஓங்கி நிற்கிறது. மிராசுதார்கள் கதிகலங்கி நிற்கிறார்கள். ஆந்திர நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் என். ஜி. ரெங்கா அவர்கள் ஆந்திர ஜில்லாக்களில் கம்யூனிஸ்டு தாக்குதல் தாளமுடியாத நிலைமைக்கு வந்துவிட்டது என்றும், நேரு சர்க்காரைத் தாக்க முற்பட்டுவிட்டதோடு பிரபல மாகாண காங்கிரஸ் அதிகாரிகளைத் தாக்கவும் முற்பட்டு விட்டார்கள் என்றும் ஓர் அறிக்கையில் கூறுகிறார். கிராமங்களில் அவர்கள் புகுந்து அடித்த கொள்ளை இன்னும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. தலைவர்கள் உயிருக்கே இனி அபாயம் தான். இந்நிலையில் மாகாண கவர்மெண்டார் மக்களுடைய உயிரைக் காப்பாற்ற முற்படுவார்களா என்று அறை கூவியிருக்கிறார்.

இதற்கு நேர்மாறாக, நமது பிரதமர் ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைச் சட்ட விரோதமானதுஎன்று பிரகடனப்படுத்துவதினால் யாதொரு பயனுமில்லை என்று கூறியிருக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சியின் முக்யஸ்தர்கள் அனைவரும் தலைமறைவாகவுள்ளனர் என்றும் அவர்கள் மீது வாரண்ட்கள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றனவென்றும்தற்போதுள்ள சட்டத்தின்கீழ் அவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கப் போதிய வசதி இருக்கிறதென்றும் கூறியுள்ளார். கம்யூனிஸ்ட் தலைவர்கள் தலைமறைவாக இருந்தபோதிலும்கூட கம்யூனிஸ்ட் அட்டகாசம் குறையவில்லை என்றால்,

அவர்கள் தூண்டுதலினால் பலாத்காரச் செயல்கள் நிகழ்ந்து வருகின்றன என்று ஏற்படவில்லையா? வாரண்டுகள் பிறப்பிப்பதின் பயன் என்ன? தலைமறைவாயிருப்பவரைக் கண்டுபிடிப்பது கவர்மெண்டார் பொறுப்பன்றோ? அவர்கள் நாட்டை விட்டு ஓடி விட்டார்களா? இங்கேதானே இருக்கிறார்கள். பின் ஏன் அவர்களைக் கண்டுபிடிக்கவில்லை? நமது துப்பறியும்போலீஸ் என்ன செய்கின்றனர்? மக்களுக்குப் போதிய அளவு பாதுகாப்பு அளிக்கவில்லை என்பது கிருஷ்ணா முதலிய ஆந்திர ஜில்லாக்களில் நடக்கும் கம்யூனிஸ்ட் தாக்குதலிலிருந்து தெளிவாகிறது. மறுபடியும் இத்தகைய சம்பவங்கள் நிகழாதிருக்கச் செய்தல் அல்லவோ மக்களுக்குப் பாதுகாப்பு. அப்படிச்செய்யாது சமபவங்கள் நடந்து முடிந்த பிறகு போலீஸ் புலிகள் போய், சிலரைக் கைது செய்வதினால் மக்கள் பாதுகாக்கப்பட்டு விடுவார்களா? தூண்டுதல் செய்யும் தலைவர்கள் மற்றொரு இடத்தில் தங்கள் தாக்குதலை ஆரம்பிக்கிறார்கள்.

நமது ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்கள் இதையெல்லாம் கொஞ்சம் ஆலோசித்துப் பேசினால் நலமாயிருக்கும். அவருடைய அறிக்கை கம்யூனிஸ்ட்டுகளுக்குக் குளிர் விட்ட மாதிரி ஆய்விடும்.

வங்காளத்தைப் பொறுத்த மட்டில் பண்டித நேரு அங்கே சென்று விசாரணை நடத்தி வருகிறார். காங்கிரஸ் ஊழல்களையும் கம்யூனிஸ்ட் அட்டூழியங்களையும் ஒழிக்கக் காங்கிரஸ் காரியக் கமிட்டி கங்கணம் கட்டிக் கொண்டுள்ளது. ஆனால் சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை குட்டை குழப்பல்தான். கம்யூனிஸ்ட்டுகளுக்கு இடங் கொடுக்கக் கொடுக்க அராஜகம் தாண்டவமாடுவதோடு மக்களுக்கு அரசாங்கத்தார்பாலுள்ள கொஞ்ச நஞ்ச மதிப்பும் குன்றிவிடும். ஏற்கனவேயே காங்கிரஸ் ஆட்சியிடம் மக்களுக்கு நன்மதிப்புக் கிடையாது. இன்னும் கம்யூனிஸ்டு அட்டூழியங்களும் பரவினால் கேட்பானேன். இதோடு மட்டும் நில்லாது, பிறகு நிலைமை சீர்திருத்தவும் முடியாமற் போய் விடும்.

எனவே, மத்திய கவர்மெண்டார் சென்னை ஆட்சியைப் பலப்படுத்த மந்திரி சபையை மாற்றி அமைத்துத் திடச் சித்தமும் பலமும் பொருந்தியவர்களை நிர்வாகப் பதவியிலமர்த்தினாலன்றி மாகாணம் கடைத் தேறவழியில்லை. வங்க மாகாணம் மாதிரி நிலைமை முற்றும் சீர் கேடடையுமுன்னரே இதைச் செய்ய வேண்டுமென மத்திய கவர்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஹிந்துஸ்தானி பத்திரிகை

(ஹிந்தி தமிழ் மாத வெளியீடு)

ஹிந்தி கற்கவும் கற்றதை அபிவிருத்தி செய்யவும் ஓர் சிறந்த சாதனம்.

வருட சந்தா ரூ. 3—0—0 தனிப்பிரதி அணா 0—5—0

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 6 அணா தபால் பில்லைகள் அனுப்பவும்

ஹிந்தி பிரசார சபை

தெப்பக்குளம் P. O. :: திருச்சி.

கீதைக்குப் பிறகு

ஈ. ஸ்ரீ.

மதோத்ததர் தம் அரியாசனத்தில் அமர்ந்தார். பிரதானி பிரதாப ஹ்ருதயன் பக்கத்தில் வந்து நின்றான்.

"பிரதாப ஹ்ருதயரே' நம்முடைய சேனை வீரர்கள் எல்லாம் நல்ல பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பயிற்சியைப் பயன் படுத்திக் கொள்ள என்ன வகையைக் கையாளலாம்.''

''என்ன செய்வது? எங்காவது படையெடுக்க வேண்டியது தான். அங்க வங்க களிங்கம் முதலிய இராஜ்யங்கள் இருக்கின்றன. நல்ல வல்லரசுகள. அவர்கள் மேல் படையெடுத்தால்தான் நம்முடைய பிரதாபம் உலகம் பூராவும் பரவும்.''

''அப்படித் திடீரெனப் பெரிய இராஜ்யத்தை யடிக்கக்கூடிய ஆற்றல் நமக்கிருக்கிறதா? அதைவிடச் சிறிய இராஜ்யத்தை முற்றுகையிட்டு, அதைப் பிடித்துக் கொள்ளுவோம். அங்கிருக்கும் சைன்யங்களையும் நம்மோடு சேர்த்துக் கொண்டு சண்டை செய்து கொஞ்சம் கொஞ்சமாக இராஜ்யப் பொறுப்பைப் பலப்படுத்தி, புகழ் பெற வேண்டும். ஆதலால் சிறிய இராஜ்யமாகப் பார்த்து முதலில் படையெடுக்க வேண்டும்.''

''ஆம்! சிறிய இராஜ்யம் என்றால், தஞ்சாவூர் தான். அவ்வரசன் இப்பொழுதுதான் காடுகளையழித்து நாடாக்குகிறான். மேலும் சத்திய சந்தன். அவன் இராஜ்யத்தில் சேனைகளே கிடையாது. கொஞ்சம் தான் வைத்திருக்கிறான். மற்றப்படி கலையில் ஆர்வம் அதிகம் செலுத்துகிறான்.''

''அதன் மேல் தான் படையெடுக்க வேண்டும். அவன் தான் நம் ஜய யாத்ரைக்கு முதல் களப் பலி.''

"அப்படிச் சொல்லாதீர்கள். அவன் பரம சாது. எப்பொழுதும் தங்கள் குல குருவிடம் வேதாந்தத்தைக் கற்கிறான். அவர் எல்லாச் சாஸ்திரத்திலும் வல்லவர். அவர், சண்டை போட்டு ஒருவன் இராஜ்யத்தைப் பிடுங்கக் கூடாது'' என்கிறார்.

''என் உத்தரவு. ஆதலால் நீர் கண்டிப்பாய் அந்த இராஜ்யத்தை ஆக்ரமித்துத் தான் தீர வேண்டும்''

''தங்கள் உத்தரவுப்படியே. தஞ்சை மன்னன் தன் நிலையை இழந்து கஷ்டப்படுகிறான். அவனுக்கு எல்லா விஷயங்களிலும் முன் நின்று உதவியவள் அவனது சகோதரி விசாலினி. அவள் கணவர் பாஹு வீரர், வடநாட்டில் பாஞ்சால அரசரின் சேனை வீரராக இருந்தார்; போரில் இறந்தார். அதைக் கேட்டு மகரிகையும் பிராணனை விட்டாள். அவரின் ஒரே பிள்ளை, அதை வைத்துக் கொண்டு கஷ்டப் படுகிறான் அரசன். இது நமக்குத் தருணமல்ல. பட்சிகளைப் பறக்கும் போதுதான் எய்தல் வேண்டும். கஷ்ட காலத்தில் கூடாது. தற்பொழுது அவனது கஷ்டம் நம்முடையதுதான்''

''அது தான் இல்லை. நாம் இராஜ்யங்களை ஜயித்துப் பல விதத்திலும் பெரிதாக்க வேண்டும். உலகப் புகழ் பெற வேண்டும். நம்முடைய அடையாளங்களை யாவரும் வைத்திருக்க வேண்டும். அரண்மனைச் சோதிடர் சொன்னபடி தஞ்சாவூரின்மேல்தான் பாய வேண்டும்.''

''அப்படியே சுவாமி, சித்தனுப்புக் காத்திருக்கிறேன். நாளைய அமாவாசை நிறைந்த நாள். சேனைகளைக் கிளப்பி விடுகிறேன்''

சைன்யங்கள் வெளிக் கிளம்பின: இராஜ வீதியில் இருபக்கங்களிலும் ஆற்று வெள்ளம் போல் நிறைந்து சென்றன. மார்பை விறைத்துக் கொண்டும் கால்களை ஒரே அளவில் பட் பட்' என்று வைத்துக் கொண்டும் சென்றன.

படைகள் தஞ்சாவூரை யடைந்து முற்றுகையிட்டன. தஞ்சாவூர் அரசர் தம் சைன்யங்களைக்கொண்டு எதிர்த்தார். சேனைகள் பலபக்கங்களிலும் அடித்துக் கோட்டையுட் புகுந்தன.

உள்ளே புகுந்து அரசரைச் சிறை பிடிக்கப் பலவிதத்திலும் அலைந்தன. அரசரைக் காணோம். அரசருக்குப் பதிலாகச் சிம்மாசனத்தின் பக்கத்தில் ஒரு இலைச்சுவடி இருந்தது. பக்கத்தில் நின்று கொண்டிருந்தான் ஒரு சிறு வாலிபன். வயது பதினாறு இருக்கும். முகம் சந்திரனின் ஒளியைப் பெற்றிருந்தது,

அவனையழைத்து மதோத்ததரின் சமீபத்தில் கொண்டு விட்டனர்.

அரசர் அவனைப் பார்த்து "உன் பெயர் என்ன இராஜகுமாரனே!" என்றார்.

"என் பெயர் ஆத்மசுகி"

"அரசருக்கு நீ என்ன ஆகவேண்டும்?"

"சகோதரியின் பிள்ளை"

"பாஹு வீரரின் பிள்ளையா"

"ஆம் சுவாமி, என் தகப்பனார் பாஹு வீரர். தாய் விசாலினி."

"அரசர், அதாவது உன் மாமன் என்ன ஆனார். இறந்துவிட்டாரா? யுத்தத்தில் ஏன் அவர் அதிகமாகச் சேனைகளையனுப்ப முடியவில்லை."

"எனக்குத் தெரியாது. கடைசி நாள் யுத்தத்தின்பொழுதுஎன்னைப்பார்த்து, 'மைந்தா, ஆத்மசுகி! நான் யுத்தத்திற்குப்போகிறேன். அனேக சேனை வீரர்கள் மடிந்தார்கள். நான் மாத்திரம் யுத்தத்திற்குப் போகாமல் இருக்கக்கூடாது. நான் இறந்து போனால், துககப்படாதே. என் பெண் ஸ்நேகலதா உள்ளே இருக்கிறாள். நீயும் அவளும் ஜயித்த அரசரை வணங்கி, உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அரசர் உன்னால் என்ன லாபம் என்று கேட்டால், மூன்றெழுத்தால் மூன்றெழுத்தைச் சம்பாதித்துத்தருகிறோம் என்று சொல்லுங்கள் என்று சொன்னார்' அதைத்தான் தங்களுக்குத் தெரியப்படுத்தினேன்"

"அது என்ன இரண்டு மூன்றெழுத்துக்கள்."

"அதுதான் சொல்ல இயலாத விஷயம். உங்கள் வாளுக்கு இரையாகலாம். என் உடலில் ஊடுருவிப் பாய்ந்திருக்கும் ஒரு விஷயம் எக்காலத்தும் நிலைத்திருக்க வேண்டியே உங்களை என் உயிரைக் கொல்லாதிருக்கும் வண்ணம் வேண்டுவது."

"சரி! அப்படியே செய். இந்த இராஜ்யத்தில் ஜனங்கள் அதிகமில்லை. இதை ஜயித்துத்தான் என்ன செய்வது? இந்த ஜயம் உலகத்தில் புகழக் கூடியதா? இனி நான் ஒவ்வொரு இராஜ்யமாக ஜயிக்கப் போகிறேன். நீங்கள் இருவரும் சொன்னபடி செய்யுங்கள். இங்கிருக்கும் குடிகளைக் கூடியவரை சௌகரியப்பட்டால் இங்கே இருக்க ஏற்பாடு செய்யுங்கள். இல்லையேல் என் இராஜ்யம் வேதநாராயணபுரம் போய்ச் சேரட்டும்."

"அப்படியே! எனக்கு வேண்டியவர்களை வைத்துக்கொண்டு மிகுதியுள்ளவர்களைத் தங்கள் இராஜ்யத்திலேயே குடி புகுத்தி விடுகிறேன். தாங்கள் எப்பொழுது இந்தப் பக்கம் வந்து எங்களைப் பார்க்கப் போகிறீர்கள்."

"ஆயிற்று. எனக்கு வடக்கே பாஞ்சாலத்திலிருந்து நிருபம் வந்திருக்கிறது. அவ்வூர் அரசன் என் சேனையின் சாமார்த்தியத்தைப் பார்த்துத் தனக்கு உதவ வேண்டுமென்று எழுதியிருக்கிறான். ஹூணன் அலெக்ஸாண்டர் பெரிய படைகளைத் திரட்டிக் கொண்டு வருகிறானாம். அவனை ஜயிக்க சைனியங்கள் மேற்கொண்டு அதிகமாக வேண்டியிருக்கிறதாம். அந்த யுத்தத்திற்குச் சென்று ஜயித்துவிட்டுத் திரும்புகிறேன். அப்பொழுது உங்கள் இருவரையும் பார்த்துவிட்டுப் போகிறேன்."

"அப்படியே செய்யுங்கள்."

மதோத்ததர் தம் சைனியங்களைத் திருப்பினார். வேதநாராயணபுரம் சென்று ஒருமாதம் தங்கி, ஸகல முஸ்தீபுகளுடன் கிளம்பினார். வடக்கே பாஞ்சால தேசம் போகும் வழியில் பாஹ்வல தேசத்தில் நுழைந்தார். அங்கேதான் சைன்யங்கள் எல்லைக்கு வெளியே பட்டாளம் இறங்கின.

அடுத்த இரண்டு ஜாமத்திற்குள் பாஹ்வல அரசன் தன் சைன்யத்தைவிட்டு அவர்களுடன் சண்டையிடச் செய்தான்.

சேனை வீரர்கள் பலமாய் இருந்தாலும் பாஹ்வல வீரனின் சின்ன சைன்யம் அவர்களை முறியடித்தது. சேனை வீரர்கள் தப்பினது தம்பிரான் புண்ணியமென்று ஓடினார்கள். அநேகர் இறந்தும் போயினர்.

மதோத்ததர் மெல்லத்தப்பித்துக்கொண்டு ஒரு இரவெல்லாம் புதரில் மறைந்திருந்தார். பாஹ்வல அரசன் அவரைக்காணாது தேடித் தேடித் தவித்தான். அவனுக்கு மதோத்ததர் மீது கடுங்கோபம். பாஞ்சால அரசர் புருஷோத்தமர்மீது அலெக்ஸாண்டர் படையெடுக்கப் போகிறான் என்பதைத் தெரிந்து மதோத்ததரின் சைன்யத்தை உதவிக்குக் கேட்டார். தஞ்சாவூர் அரசரோடு சண்டையிடாது நேரேசென்றிருந்தால், அலெக்ஸாண்டருடன் மற்றொரு பக்கத்தில் இவரும் போர் தொடுத்தால், அலெக்ஸாண்டர் தோற்றுப் போயிருப்பான். அம்மாதிரி செய்யாமல் கொஞ்ச காலத்தைத் தஞ்சாவூர் அரசரோடு சண்டை செய்து அந்தச் சிறு இராஜ்யத்தைச் சின்னாபின்னப் படுத்திய கோபம்

வேறு. அதிக கர்வம் கொண்டவர் என்ற எண்ணத்தால் புருஷோத்தமரின் சிநேகர் என்பதையும் மறந்து, தன் சைன்யத்தைக் கொண்டுச் சிதற அடித்தான்.

மூன்று நாட்கள் அன்ன ஆகாரமின்றிப் புதரிலேயே மறைந்திருந்தார். சைன்யங்கள் தங்கள் யுத்த முஸ்திபுகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு சென்றன.

மூன்றாம் நாள் காலை, காஷாயம் தரித்த சந்நியாசி ஒருவர் மெல்லப் புதரண்டை வந்தார். அவர் தம் கையில் கொண்டு வந்த அன்னத்தை அவரிடம் நீட்டினார்.

மூன்று நாளாகப் பட்டினி கிடந்த அவர் அந்த அன்னத்தைப்புசித்து, இரண்டு கைகளையும் கூப்பினார்.

வாயைத்திறக்காதேயும் என்று தம் கைகளின் மூலமாய்ச் சொல்லி, மெல்ல அஸ்தமனத்திற்கு அழைத்துச்சென்றார்.

அவர்கள் பகல் வேளையில் ஒளிவதும் இரவில் கிளம்பிச் செல்வதுமாய், சுமார் நூறு கிராமங்களைத் தாண்டினார்கள்.

பிறகு அந்தச் சந்நியாசி, "சுவாமி! தங்களை நான் நன்கு தெரிந்துகொண்டேன். நீங்கள் வேதநாராயணபுர அரசர். புருஷோத்தமரின் யுத்தத்தில் அவருக்குச் சகாயம் செய்ய வந்தீர். ஆனால் நீர் இங்கு வருவதற்குள் புருஷோத்தமர் தோற்று மறுபடி அலெக்ஸாண்டரிடம் இராஜ்யத்தைப் பெற்று ஆளுகிறார், நீர் கொஞ்சம் முன்னே வந்திருந்திருந்தால் புருஷோத்தமர் தோல்வியையே அடைந்திருக்க மாட்டார். ஹூம், எல்லாம் தெய்வச் செயல், உங்களுக்கு அந்தத் தஞ்சாவூர் அரசரின் இராஜ்யத்தில் ஏன் கண் போயிற்று. அவர்தான் சிறிய அரசர். தெய்வம் வேண்டி நின்றார், அதிகமாய்ச் சேனைகளை வைத்திருக்கவில்லையே."

"அரசர் நல்லவர்தான். என் சைன்யத்தைக்கொண்டு பரீக்ஷை பார்த்தேன். ஆனால், அங்கு அரசரைக் காணோம், இரண்டு சிறுவர்கள் இருந்தார்கள். இருவரும்அத்தைபிள்ளை, அம்மான்பெண். பால் வடியும் முகம். அவனை விட்டுத்தான் வந்திருக்கிறேன். அவன் தன்னையும் தன் மாமன் பெண்ணையும் விட்டு விடும்படி கெஞ்சினான்."

"ஆம், சுவாமி! என்ன கஷ்டம்; அந்தப் பையன் தகப்பனார்தான் மிகுந்த வீரம்படைத்தவர் என்று கேள்விப்பட்டேன். ஆனால், அவரின் அரும்புதல்வன், தங்களிடம் தஞ்சம் புகுந்தான்."

"அதென்னவோ தெரியாது. அவன் மாமன் தான் அவ்வாறு சொல்லச் சொன்னாராம். அங்கு அரியாசனத்தின் பக்கலில் ஓலைப் புத்தகம் ஒன்று இருந்தது. அதையெடுத்துக் கொண்டான். மூன்றெழுத்துள்ள வஸ்துவைக் கொண்டு எனக்கு ஒரு மூன்றெழுத்துள்ள வஸ்துவைச் சம்பாதித்துத் தருவதாய்ச் சொன்னான். அப்படியே விட்டு வந்து விட்டேன். அந்தப் பையன் என்ன செய்தானோ தெரியாது."

"வந்தது வந்தாய் விட்டது. தங்களது சைன்யங்கள் சிதறிப் போயின. இனி நாம் க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கடைசியில் ஊருக்குச் செல்லலாம். தங்கள் பிள்ளைதான் இராஜ்யத்தை ஆள்கிறான். இனி உங்களுக்கு வேண்டியதென்ன?"

"எனக்கு என்ன வேண்டிக் கிடக்கிறது? ஒரு தவறு செய்தேன். தஞ்சாவூர் அரசரைத் தோற்கடித்தேன். அவர் சேனைப் பலம் குறைவாக உடையவர் என்று என் சேனாபதி சொன்னார். அதைக் கேட்காமல் அவரைத் துரத்தியடித்தேன். அவர் இறந்தாரோ அல்லது எங்கு ஓடி ஒளிந்தாரோ? ஆனால் அவர் பெண்ணும், சகோதரியின் பிள்ளையும் (மருமானும்) இருக்கிறார்கள். அவர்களுக்கு என் கையால் தஞ்சாவூர் இராஜ்யத்தைப் பட்டம் கட்டி விடவேண்டும். சமாதானம் தான் உலகத்தில் நிலை நிற்கும். ஆதலால், அப்பையனிடம் என் மன்னிப்பையும் கேட்டுக் கொள்ளப் போகிறேன். நான் இனி இராஜ்யத்தை யாளப் போவதில்லை. என் மைந்தனே ஆளட்டும். தெய்வ வழிபாட்டில் இறங்கப் போகிறேன்"

"அப்படியானால் ஒன்று செய்வோம். வடநாட்டில் ஆலயங்கள் அதிகம் கிடையாது. முற்றும் புண்ணிய நதிகளும் ஸரஸ்ஸுகளும் (குளங்களும்) தான். ஆங்காங்கே சென்று ஸ்நானம் செய்து கடைசியில் கீதையின் தத்துவமான பதரீகாச்ரமம் போய், ஊர் திரும்புவோம். கீதையை வழி நெடுக உபதேசிக்கிறேன்."

"அப்படியே செய்வோம். தாங்கள் தான் இனி எனக்கு ஆசாரியன்." என்று கை கூப்பினார் மதோத்ததர்.

இருவரும் பதரிகாச்ரமம் முதலிய க்ஷேத்ரங்களுக்கும் நாகார்ஜுன கொண்டா முதலிய தீர்த்தங்களுக்கும் சென்று தரிசித்தார்கள். பிறகு நாலாயிர திவ்யப்பிரபந்தத்தை யெடுத்துத் தமிழின் இசையோடு போதித்தார்.

வருஷங்கள் எட்டு ஓடின. அரசர் சந்நியாசியோடு வேத நாராயண புரத்தின் எல்லையை யடைந்தார். ஊரில் அவர் எல்லா விஷயங்களையும் விசாரித்துக் கொண்டார். ஒரு குறையுமில்லாது அரசாட்சி நடப்பதாயும், அரச குமாரன் நல்ல பெயர் பெற்றிருக்கிறுன் என்றும் கேள்விப் பட்டார்.

சந்நியாசி அரசரைப் பார்த்து, "நீங்கள் இப்பொழுது என் சொற்படி நடக்க வேண்டும். இராஜ்யத்தில் புகுந்து விட்டீரானுல் மறுபடி வெளியில் வர முடியாது. மூன்றெழுத்துள்ள வஸ்துவால் மூன்றெழுத்துள்ள வஸ்துவைப் பார்க்க முடியாது. ஆதலால் முன்னே அதைப் பார்த்து விட்டுப் பிறகு இங்கு வந்து விடுவோம்'' என்ருர்.

"அப்படியே சுவாமி, கிளம்புங்கள். எனக்கும் மனம் அந்தப் பையனிடத்தில் தான் இருக்கிறது. தாங்கள்தான் உபதேசித்தீர்கள் இந்தக் கோலத்தோடு கிளம்பி விடுவோம்."

இருவரும், கிளம்பி, சுமார் பதினைந்துநாட்கள் சென்றனர். கீதை முடிந்து திருவாய் மொழியின் அர்த்தங்கள்சொல்லலானுர். திருவாய் மொழியின் பாசுரங்களை அர்த்தத்தோடு தினம் சொல்லிக் கொண்டேவந்தார் அந்தக் குரு.

ஒருநாள் உதயம். காவிரி யாற்றங்கரை. அதில் ஸ்நானம் செய்து ஒருபக்தர் ஜபம் செய்து முடித்தார். பளபளவென்று ஜ்வலிக்கும் ஸ்தூபியோடு கூடிய புத்தம் புதிதாய் நிர்மாணிக்கப்பட்ட ஒரு கோயிலைக் கண்டார்கள்.

"இதுவரை நான் இம்மாதிரியான கோயிலைக் கண்டதில்லை. மேலும் இந்தவழியாய்த் தஞ்சாவூர் அரசரை ஜயிக்கச் சைன்யத்தை யழைத்துச் சென்றிருக்கிறேன். அப்பொழுது இப்படிப்பட்ட கோயிலை நான் பார்க்கவில்லையே." என்ருர் அரசர்.

"நான்கூடப் பார்த்தது கிடையாது. போய்த் தரிசித்துச் செல்வோம். என்ன கோயிலோ?"

"எனக்கும் தான் தெரியாது. வாருங்கள்"

இவ்வாறு பேசும்போது அந்தப் பக்தர் இரு கைகளையும் கூப்பி, ஒரு தமிழ்ப் பாசுரத்தைப் பாடினுர். இருவரும் உள்ளே சென்றனர். அந்தக்கோயிலின் அமைப்பையும் அழகையும் கண்டு அரசர் ஆச்சரியமடைந்தார். தேர்போன்ற தோற்றம். இருபக்கமும் இரு புரவிகள். இருயானைகள். தேர்ச்சக்கரங்களின் அழகு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. உள்ளே பகவான் உத்யோகசயனத்தில்படுத்திருந்தார். அவரைப் பார்த்ததே மன்னர், சந்நியாசியைப் பார்த்து, 'சுவாமி இது என்ன விபரீதமாயிருக்கிறதே! தேரில் பகவான் அல்லவோ வீற்றிருக்கிருர். அர்ஜுனன் அல்லவா இருக்கவேண்டும்?' என்ருர்.

"ஆம் இரண்டிற்கும் கால வித்தியாசம். அதைத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். நான் முதலில் உங்களுக்கு எதையுபதேசித்தேன்."

"மகாபாரதத்தில் அடங்கிய கீதையை."

"இப்பொழுது என்ன உபதேசிக்கிறேன்.?

"நாலாயிரத் தமிழ்ப் பிரபந்தத்தில் திருவாய்மொழி."

"கீதையைப் பகவான் எப்படி எங்கே உபதேசித்தார்."

"யுத்தகளத்தில் அர்ஜுனன் தன் எதிரிகளை யடிக்கத் தயங்கிய போது"

"ஏன்"

"தன் சத்ருக்கள் என்பவர்கள், தங்கள் பந்துக்களும், சினேகிதர்களும், தனக்குக் கற்பித்துக் கொடுத்த ஆசாரியர்களுமாய் இருப்பதால், அப்படி ஜயித்துத் தனக்கு இராஜ்யம் வேண்டாம் என்று சோகமடைந்தான். அதைப் போக்கவே இந்தக் கீதையுபதேசம்."

மணி கணகணவென்று ஒலித்தது. கர்ப்பூர ஜோதி கண்ணைப் பறிக்கும் வண்ணம் ஆலத்தி யெடுத்தான் ஒருவன். எல்லோரும் பகவானையே சேவித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆலாத்தி யெடுத்தவனது பளபளப்பான முகத்தைப்பார்த்துக் கொஞ்சம் நேரம் சிந்தனையிலாழ்ந்தார் அரசர். ஆனுல், அப்பையனே திடீரெனப் பகவானைவிட்டு ஓடி வந்து அரசர் பக்கலில் இருக்கும் சந்நியாசியின் காலில் விழுந்து, "மாமா, என் கடமையை நிறைவேற்றினேன். ஆனுல், தாங்கள் பார்க்கவில்லையே என்ற குறை என் மனதில் வெகு நாளாய் இருந்தது. இந்தத் தமிழ்த் தெய்வம் எப்படியும் உம்மைக் கொண்டு விட்டு, பார்க்கும்படி செய்து மகிழ்விக்கும் என்று எண்ணினேன். அதே மாதிரி செய்து விட்டது'' என்ருன்.

அரசர் திரும்பிப் பார்த்தார். சந்நியாசியைக் காணேம். சாதாரண உடையில் நின்று கொண்டிருந்தார் அவர்.

அவர் அரச குலத்தில் பிறந்தவர் என்பதை அப்பொழுதுதான் அவர் முகம் எடுத்துக் காட்டிற்று.

உடனே மதோத்ததரும் அந்த அரசரின் காலில் விழுந்து, "அரசே! மன்னிக்க வேண்டும். பெரிய அபசாரம் செய்துவிட்டேன், இப்பொழுது தெளிந்தேன். தங்களால் தான் ஞானம் பெற்றேன். தங்களுக்கு இந்த ஆத்மாவை ஒப்படைக்கிறேன். இந்தச் சேதனனைக்கொண்டு நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். நான் தங்கள் நாட்டை யழித்தது தவறு என்னை மன்னியுங்கள்."

"அது கிடக்கட்டும், மதோத்ததரே, நான் கீதைக்குப்பிறகு ஏன் இந்தத்தமிழ்ப் பிரபந்தத்தை யுபதேசித்தேன், நான் ஏன் சந்நியாசிக்கோலம் கொண்டேன், ஏன் என் சகோதரியின் பிள்ளையை உங்களைச் சரண் அடையச் செய்தேன்? இவைகள்தான் தங்களுக்கு அவசியம் தெரிய வேண்டியது.

"பகவான் யுத்தகளத்திலல்லவா கீதையை உபதேசித்தார்? ஆனால், இங்கு யுத்தம் முடிந்து தோற்ற உமக்குக் கீதையின் தத்துவத்தைச் சொல்லிக் கடைசியில் திருவாய் மொழி உபதேசம் செய்தேன். கீதையில் பகவான் தேரோட்டியாக இருந்து, உள்ளே எஜமானனாய் வீற்றிருந்த அர்ஜுனனுக்கு உபதேசம் செய்தார். இங்கு சண்டை ஓய்ந்த பிறகு நடக்கும் உபதேசம். உபதேசம் பெற்ற பிறகு பக்தன், தன்னைப் பக்தனாகவும் பகவானை எஜமானனாகவும் கொண்டு பக்தி செலுத்துவது, இது கீதைக்கு மேற்பட்ட சொரூபம்? கீதையில் மூன்று பிரிவு கர்மயோகம், பக்தியோகம் ஞானயோகம்; இதில் எல்லாம் ஞானமே. நான் என் நாட்டைப் புதுப்பித்துக் காடுகளையெல்லாம் சீர்திருத்த ஆரம்பித்தேன். இந்த ஞானச் சுடரைக் கண்டு பிடிக்கத்தான். என் சகோதரியின் பிள்ளை ஆத்ம சுகி சிற்ப சாஸ்திரம் பயின்றான். இந்தத் திருவாய்மொழியையும் கற்றுக்கொடுத்தேன். அவன் உடனே இந்த ஸ்தூபியைப் போல் துணியில் எழுதி என்னிடம் காண்பித்தான். இம்மாதிரி அப்பகவானுக்கு ஒரு ஒளிக்கோயில் நிர்மாணிக்கப்போகிறேன் என்றான். நான் அவனை அம்மாதிரியே நிர்மாணம் செய்து அதில் அந்த விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்யச் சொன்னேன். அதற்குள் சண்டை வந்தது. தாங்கள்தான் ஜயித்தீர். என் பெண்ணையும் ஆத்மஸுகியையும் விட்டு நான் ஓடி விட்டேன். வடக்கேசென்றதும் உம் சைன்யத்தைக் கண்டேன். பாஹ்வல அரசருக்குப் புருஷோத்தமர் தோற்றதனால் தமக்கு உயிரோடு இருக்கக்கூட இஷ்டமில்லை. பிறகு, புருஷோத்தமர் தம் இராஜ்யத்தை யடைந்தார் என்று கேள்விப்பட்டு ஆனந்தமடைந்தார். புருஷோத்தமர் தம் தோல்விக்குப் காரணம் மதோத்ததர் என்று சொல்லிவிட்டார், அதனால் அவரைக் கண்டால் அடித்துத் துரத்த எண்ணம் கொண்டார் பாஹ்வலர். நானும் அங்கேதானிருந்தேன். தாங்கள் தோற்றவுடன் அழைத்து வந்தேன். எனக்குத் தெரிந்ததை யுபதேசித்தேன்.

மற்றொன்று ஆத்மஸுகி சொன்னபடி மூன்றெழுத்துள்ள வஸ்து ஞானம். அதைப் பெற்றால் முழுதும் பெற்றதே. மற்றொரு மூன்றெழுத்து வஸ்து புகழ். அதைத் தங்களுக்குத் தேடிக் கொடுக்க இந்தக் கோயிலை நிர்மாணித்தான். தமிழ்ப் பெயரும் இவருக்கு ஏற்பட்டது. அமுது, ஆராவமுது, என்ன அழகான பெயர்! எல்லோரும் புகழ் பெற்றோம். கீதைக்கு முன் இருந்த நிலை அது. கீதைக்குப் பின் பகவான் இருக்கும் நிலை ஞானச் சூரியன், ஞான தீபம், திருவாய் மொழி. அதிலும் இந்த அரிய பாட்டுத்தான் எல்லோர் மனதையும் உருக்குகிறது. ஹேமரிஷி கைகூப்பி நிற்பதும் பகவான் தேரில் ஆரோஹணித்திருப்பதும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டா அமுது தான்.

ஆராவமுதே யடியே னுடலம்
[நின்பாலன்பாயே
நீராயலைந்து கரையவுருக்குகின்ற
நெடுமாலே
சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த்
திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக்கிடந்தாய்
கண்டேனெம்மானே.

கங்கைக் கரையில் காசி விசுவேச்வரர். காவிரிக்கரையில் ஆராவமுதர். இரண்டும் இரு உயர்ந்த ஸ்தானங்கள். யுத்தத்திற்கு முன் கீதையுபதேசம். யுத்தத்திற்குப் பின் திருவாய்மொழி. அதிலும் நான் சொன்ன பாசுரம் வெகு அழகு.

"ஆராவமுதன் தமிழ்த்தெய்வமாய் விளங்கினார்." ஆனால், தற்பொழுது முகம் சிரித்த மாதிரியே சயனித்துக்கொண்டிருக்கிறார். எக்காரணம்பற்றி? தம் பக்தன் ஆத்மஸுகி ஸ்நேஹலதாவை மணக்கப்போகிறான் என்று தான், அந்தப் பகவான் புன்முறுவல் பூத்துப் படுத்திருக்கிறார். நிச்சயம். பாருங்களேன், எழுந்திருக்கும் மாதிரியல்லவோ இருக்கிறது. எழுந்து இந்த இரண்டு தம்பதிகளை ஆசீர்வதிக்கப் போகிறார்" என்று சொல்லி முடித்தார் தஞ்சாவூர் அரசர்.

அரங்கேற்றம்

ஜி. எஸ். மணி

M.S.V—

கலாதேவி சொல்லுகிறாள்:

நாட்டியக் கலையின் மீது ஜனங்களுக்கு இவ்வளவு மோகம் திடீரென்று எப்படித் தான் உண்டாயிற்று? இந்தப் பிரச்னைக்குப் பதில் இன்று வரையில் எனக்கே புரியவில்லை. நாட்டியக் கலையின் மறு மலர்ச்சியென்று சொல்லிக் கொண்டு ஒவ்வொருவரும், தத்தமக்குத் தோன்றியபடி, ஒவ்வொரு விதத்தில் என்னை ஹிம்சிக்கிறார்கள்; நாடக சாலைகளிலும், ஸினிமாக் கொட்டகைகளிலும் மற்றும் பொது இடங்கள் பலவற்றிலுமாக அரங்கேற்றம் என்று சொல்லிக் கொண்டு என்னைத் தீராத அவமதிப்புக்கு உட்படுத்துகிறார்கள். அரங்கேற்றக் காரண கர்த்தர்களைச் சிலையாகப் போய் விடும்படி சபிக்கவா? அல்லது அவர்களுடைய அரங்கேற்றத்திற்கு முன்னே நானே அரங்கேறி விடவா? அல்லது என்னை அவர்கள் முழுவதும் சின்ன பின்னப் படுசதி அழிப்பதற்கு முன்னதாக நானே என்னை அழித்துக் கொண்டு விடவா?

* * *

நாட்டிய சாலையின் ஜோடனைகள் எல்லாம் பிரமிக்கத் தக்க விதத்தில் பிரமாதமாய் இருந்தன. பற்பல வர்ண விசித்திரங்களில் மின்சார விளக்கு அலங்காரங்கள், ஆகாயத்தை அளாவி, பிரும்மாண்டமான பந்தல், ஆங்காங்கே கண்களைக் கவரும் வகையில் ஒவ்வொரு அம்சத்தைக் காட்டும் நடன ஓவியங்கள், காதைத் துளைக்கும் ரிகார்டு ஸங்கீதத்தின் அலறல்

அன்று புது அரங்கேற்றம் ஒன்று நடக்க இருக்கிறது. ஊர்ப் பிரமுகர் ஒருவரின் கடைசி புத்திரி அரங்கேறி ஆடப் போகிறாள். அந்த விழாவை யொட்டித்தான் அவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்.

விசாலமான வீதியை இரு புறங்களிலும் பாதிக்கு மேல் அடைத்துக் கொண்டு வர்ண ஜாலங்கள் ஜொலித்த பல வித மோட்டார்கள், ஒன்றன் பின்னொன்றாக, ஒரு மைல் நீளத்திற்கு வரிசையாக நின்றன.

கொட்டகை தாங்காத ஜனக்கூட்டம். கண்களைக் கூசவைக்கும்படி பாய்ந்து பரவி நின்ற மின்சார ஒளியினூடே உண்மை வைரங்களும் போலிவைரங்களும் போட்டி போட்டுக் கொண்டு சுடர் விட்டன; பணம் படைத்த பட்டாடைகளுடன் பகட்டான உடைகளும் பசப்பியபடி போயின.

பிரமுகர் வீட்டு விழா அல்லவா? சுற்று வட்டாரத்துப் பெரிய மனிதர்கள் அத்தனை பேர்களும் வந்திருந்து சோபிக்கச் செய்தார்கள்.

அரங்கிலே நடனமாட வந்து நின்ற பிரமுகரின் புத்திரியைக் கண்டவுடன்—அங்கே கூடியிருந்த முக்கால் வாசிப்பேருக்குச் சொல்லமுடியாத திகைப்பு ஏற்பட்டு விட்டதென்றே தோன்றியது. அநேக புருஷர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டதென்றே உறுதியாகச் சொல்லலாம்.

"அய்யோடியம்மா! இத்தனூண்டு பாப்பாவா ஆடப் போறது இன்னிக்கு!" என்று ஆச்சர்யம் தாங்க முடியாமல் கேட்டது ஒரு 'இரண்டுங் கெட்டான்' குழந்தை! கணீரென்று ஒலித்த அந்தக் குழந்தையின் குரலை அடக்கமுற்பட்ட அதன் தாய் அவசரமாக வாயைப் பொத்தினாள்.

"இவ்வளவு சின்ன வயதில் அவருக்கு ஒரு குழந்தை யிருப்பது எனக்குத் தெரியவே தெரியாது ஸார்!"—ஆடப் போவது அந்தக் குழந்தைதான் என்பது அவருக்கு முன்னதாகவே தெரிந்திருந்தால் அன்றைய அரங்கேற்றத்திற்கு வந்திருக்கவே மாட்டார் என்றே அவர் குரல் மன்ற முகமாகச் சொல்லியது.

"எழு அல்லது எட்டு வயதிற்குள்ளாகத் தான் இருக்கும் போலிருக்கிறது; பெண்கள் பதினேழு—பதினெட்டு வயதிற்குக் குறைவுள்ளவர்களாக இருந்தால் பரத நாட்டியம் ஆடவே தகுதியில்லை ஸார்!" என்று அங்கலாய்த்தார் ஏமாற்ற மடைந்த இன்னொருவர்.

"நன்றாயிருக்கிறது; பொம்மைக்கு அலங்காரம் பண்ணி வைத்தது போல்!" என்ற

புதிய இரு சிறந்த

வாக்ஸால் கார்கள்



வெலாக்ஸ் 6 - (18-H. P.) குறைந்த பெட்ரோல் செலவில் சிறந்த உழைப்பு. மணிக்கு 75 மைல் வேகம். பெட்ரோல் காலன் ஒன்றுக்கு 25 முதல் 28 மைல்கள் வரை போகும்.



வைவர்ன் 4 (12 H. P.) மிகச் சிக்கனமுள்ள உயர்தர வண்டி. மணிக்கு 64 மைல் வேகம். பெட்ரோல் காலன் ஒன்றுக்கு 33 முதல் 35 மைல்கள் வரை போகும்.

தென்னிந்தியாவுக்கு விற்பனை உரிமையாளர்கள்:

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் லிமிடெட்,

மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, புதுக்கோட்டை.

சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்,

மவுண்ட் ரோடு, சென்னை.

சொற்களில் சாந்தியைத் தேடலானுர் மற்ருெருவர்.

எப்படியோ—அந்த அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்த பேர்வழி பலே கைக்காரராகத்தான் இருக்க வேண்டும். ஆடும் பெண்ணுடைய பெயரின் முன்னே "பேபி" என்கிற வார்த்தையை ஒட்டி வைக்க வாஸ்தவத்திலேயே மறந்துதான் விட்டாரோ —அல்லது வேண்டு மென்றேதான் சேர்க்காமல் விட்டாரோ—தெரியாது; 'கெட்டிக்காரர்' என்கிற பட்டம் அவரைச் சேர்ந்துவிட்டது.

குழந்தை ஆடினுள்.

'தெருவில் வாராஞே—என்னைச் சற்றே திரும்பிப் பாராஞே'— என்று 'அபிநயம்' பிடித்த போது தொண்ணூறு வயது நிரம்பிய கிழவர் ஒருவர் தம் பொக்கை வாயைத் திறந்து காட்டிச் சிரித்து, வழுக்கைத் தலையைத் தடவிவிட்டுக் கொண்டார்.

'கண்டவுடன் என் உள்ளம் கொள்ளை கொண்ட கள்வா!'-என்று அந்தக் குழந்தை முன் வரிசையில் கம்பீரமாக உட்கார்ந்திருந்த ஒரு 'மைன'ரை நோக்கிக் கொஞ்சிய பொழுது— அந்த வாலிபன் வெட்கம் மேலிட்டுத் தலைகுனிந்தான்.

அப்புறம் 'தூக்கிய திருவடி'யின் போது குழந்தை தடுமாறிக் கீழே விழுந்து விட்டாள். ஜனங்களிடையே ஒரே 'ஹா ஹா' காரம்.

ரகளை ஓய்ந்ததும் தொடர்ந்து மயில் நடனம்-வாத்து நடனம்-கோழி டான்ஸ் முதலியவைகளும் விடாமல் வந்து போயின.

அரங்கேற்றம் ஆனவுடன் அந்தக் குழந்தை தன் கழுத்தில் வந்து விழுந்த பூமாலைகளுக்கிடையே மூழ்கி மறைந்தேவிட்டாள்; தூர நின்று பார்த்தவர்களுக்குப் பூக்குவியல்தான் தெரிந்தது; நடுவில் நின்று தவித்த குழந்தை தெரியவில்லை.

முடிவுரையென்று சொல்லி மேடையேறிய ஒருவர் சுற்றிவளைத்து ஏதோ சொல்லிக் கொண்டே இருந்தார்; அவர் சொன்னது அவருக்கே புரிய வில்லை: காது கொடுத்துக் கேட்போரும் இல்லை.' 'கலை—கலை' யென்ற சொல் மட்டும் அருகில் நின்றவர்களுக்கு அடிக்கடி கேட்டது. 'கலையா—கொலையா' என்று எட்டி யிருந்தவர்கள் சந்தேகப் பட்டனர்.

அரங்கேற்று விழா 'இனிது' முடிந்தது. அமர்க்களங்களெல்லாம் அடங்கியபிறகு ஆடியகுழந்தையை ஒருவர் நெருங்கினுர்; அன்புடன் அதைத் தட்டிக் கொடுத்தார்; தடவிக் கொடுத்தார்.

''பேஷ்! ரொம்ப நன்னு ஆடினே! உனக்கும் எல்லாம் நன்னு யிருந்ததோன்னே?" என்று வாத்ஸல்யத்துடன் அந்தரங்கமாகக் கேட்டார்.

"எனக்கு ரொம்ப பயமாயிருந்தது" என்று சொன்னுள் குழந்தை.

"பயம் ஏன்?"

"அவ்வளவு பெரிய கூட்டத்தில்—பயமில்லாமெ—பின்னே எப்படி ஆடுவதாம்?"

"ஆடப் பிடிக்கற தோன்னே?"

"எனக்கு ஒண்ணுமே பிடிக்கல்லெ மாமா;

"பின்னே? உனக்கு எது பிடிக்கும்?"

"எங்க பக்கத்தாத்துப் பையன் பாலு இருக்காஞேன்னே! அவஞேடு விளையாடறதுதான் எனக்கு ரொம்ப பிடிக்கும்; அப்பாகிட்டே சொல்லி விடாதேங்கோ மாமா!"

"ஏன்?"

"அடிப்பார், கோவிச்சுப்பார்: நான் ஆடத்தான் ஆடணுமாம்"!

"சமத்துக்குழந்தை! போ-போய் விளையாடுபோ! இனிமேல் அடுத்த கச்சேரி ஏற்பாடு பண்ணுகிற வரைக்கும் நீ பாலுவோடு விளையாடலாம்!"

பேசிய மனிதர் சிந்தனையில் ஆழ்ந்தார்; நெற்றியில் விழுந்த கோடுகள் மனசின் வேதனையை ஒருவாறு வெளிப்படுத்தின.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் அந்த அரங்கேற்றத்தைப்பற்றிய விமர்சனம் ஒன்று பிரபல நாட்டியப் பத்திரிகையொன்றிலே வெளியாகியிருந்தது; விமர்சகர் எழுதியிருந்தார்:

"ஜனங்களின் நாட்டிய மோகம் விபரீதத்தை விளைவிக்கும் அளவுக்கு மோசமாகிவிட்டது. அந்தக் கலையை உத்தாரணம் செய்வதாகச் சொல்லிகொண்டு குழிவெட்டி அடியோடு புதைக்கவே முன் வந்து விட்டார்கள் என்று கூசாமல் சொல்லுவேன். மறுமலர்ச்சி போகும் வேகத்தைப் பார்த்தால் கலைக்கும் சரி-அதைக் கையாளும் ஊழியர்களுக்கும் சரி விமோசனமே கிடைக்காதென்பது ஸர்வ நிச்சயம். விளையாட்டுப் பருவத்திலுள்ள பச்சைக்குழந்தை பரத

பொன் விழாவின்
பொலிவு......

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்

ஆரோக்யத்தின் சிகரம் ஆனந்தத்தாண்டவம். சுகவாழ்வும் ஆரோக்யமும் அனைவருக்கும் அத்தியாவசியமானது. அரை நூற்றாண்டுக்கு மேலாக மானிட வர்க்கத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியும் மாசற்ற தேகாரோக்யமும் அளித்துவரும் பண்டித டி. கோபாலாச்சார்லுவின் ஜீவாம்ருதம் பொன் விழாவின் பொலிவுடன் விளங்குகிறது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
(ஸ்தாபிதம் 1898)
மதராஸ் 17

நாட்டியம் ஆடுவதா? மரப்பாச்சி பிடிக்கும் கைகள் அபிநயத்திற்குத் தகுதியுடையவை தானா? கபடமற்றுப் பார்க்கும் குழந்தை காதல் நோக்கை ஏற்குமோ? வெள்ளையுள்ளம் படைத்த குழந்தை நெஞ்சு பார்ப்பவரைக் கொள்ளைகொள்ளும் விதமே தனியழகு படைத்ததாயிற்றே!

''அன்று 'ஆடிய' குழந்தை உண்மையில் 'ஆடவில்லை' எகிறி எகிறிக் குதித்தது; குண்டுகுண்டென்று ஓடியது. அன்று பாடிய பதங்களின் கருத்தைப் புரிந்து கொள்ளும் வகையில் குழந்தை நெஞ்சு வளரவில்லை. அவற்றைவிட—'கண்ணே பாப்பா! மிட்டாயி வாங்கித்தருகுவேனே!' என்று குழந்தைக்குத் தக்கபடி பாட்டுக்கள் அமைந்திருந்தால் ரொம்ப அழகாய் ஆடியிருக்கும்; இன்னும் 'கைவீசம்மா; கைவீசு; கடைக்குப் போகலாம் கைவீசு' 'என்பதற்கு அபூர்வமாய் அபினயம் பிடித்திருக்கும்; தெருவில் போகும் பம்பாய் மிட்டாய்காரன் குழந்தைகளைக் கவரப் பாட்டுப் பாடுகிறானே:

'தேனுன்னா தேனுதான் அது
கொட்ட வரும் தேனுதான்;
கொடுக்கைத் தூக்கும் தேனுதான்-
அதுகிட்ட வரும் தேனுதான்'

என்ற மாதிரி பாட்டுக்களுக்குப் பயிற்சி கொடுத்திருந்தால் குழந்தைக்கும் எவ்வளவோ உற்சாகமாயும் — குதூகலமாயும் இருந்திருக்குமே!''

"வெளுத்து வாங்கிவிட்டான்!" —என்று அந்த விமர்சனத்தைப்பற்றிப் பொதுவாக மக்கள் பேசிக்கொண்டார்கள்.

''அசூயை பிடித்த அயோக்யன்!''—என்று அரங்கேற்றம் செய்துவைத்த பிரமுகர் பல்லைக் கடித்தார்.

கலாதேவி சொல்லுகிறாள் :— ஆடுபவள் 'பேபி'யாக இருந்தால் அங்கே 'கலைக்கொலை' தான் நடக்கிறது; யுவதியாகத் தக்கபடி இருந்துவிட்டாலோ—எனக்குப் போட்டியாக அங்கே காமதேவதைகூட வந்து தன் வஞ்சக வலையை விரித்துவிடுகிறாள்; நிருத்யத்தை முன்னிட்டு ஆணழகன் மேடையேறி விட்டானோ — சிருங்கார பதங்களுக்குப் பிடித்தது சனியன். என்னிடம் அந்தரங்க பக்தியுள்ள உண்மைக் கலாதாஸர்கள் சிலருக்காகவே நான் இன்றுவரை எனக்கு இழைக்கப்படும் ஹிம்சைகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டிருக்கிறேன்; அவர்களுக்காகவே அநீதியையும். அவமானத்தையும் பாராட்டாமலிருக்கிறேன். இல்லையேல் நானே என்றோ வெகுண்டெழுந்து 'நாட்டியம் ஒழிக' என்று கோஷித்திருப்பேன்!

அரசியின் நடனம்

வேங்கடலக்ஷ்மி

"பிட்டி தேவா!......இதென்ன அவமானம்?-அரச வம்சத்துப் பெண்கள் ஆயிரமாயிரம் பேர் அடங்கிய அரங்கிலேறிப் பகிரங்கமாக நாட்டியமாடுவதை எங்காகிலும் கேட்டதுண்டா? ஹொய்சாலச் சக்ரவர்த்தி விஷ்ணுவர்த்தனின் மனைவி, சென்ன கேசவர் கோயிலில் சாதாரண தேவதாசிகளைப் போல் நாட்டியம் செய்தாளென்றால் நம் பகைவர்கள் நகைப்பார்களே! பிறகு நம் குலத்தின் பெருமை என்னாவது? இதைச் சற்றாவது யோசித்தாயா?"

இவ்வாறு கோபத்தோடு கேட்டான் ரங்கமல்லன். சிவந்த கண்களும் அனல் கக்கிய பார்வையும் அவனுள் எழுந்த அளவற்ற கோபத்தைக் காண்பித்தன. கைகளை மார்பின் குறுக்காக மடித்தபடியே அவ்வறையிற் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தான்.

சாளரத்தருகில் நின்று வெளியே நீலவானில் வளைய வரும் பிறைமதியின் வெள்ளிக் கீற்றை நோக்கியபடியே ரங்கமல்லனின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த விஷ்ணுவர்த்தனன், அவன் பேசி முடித்ததும் மெதுவாகத் திரும்பினான்.

"ரங்கமல்லா!...... கலாதேவியின் கடாக்ஷத்துக்குப் பாத்திரமானவர்கள் இவ்வுலகில் மிகச் சிலர். அத்தேவிக்கு அரசியென்றும், விறலியென்றும் வித்தியாசம் கிடையாது. அவளுடைய அருளால் உன் சகோதரியும் என் மனைவியுமான சாந்தலாதேவிக்கு நாட்டியக் கலையில் வியக்கத் தக்க அபூர்வத் திறமை வாய்த்திருக்கிறது. சென்ன கேசவன் சந்நிதானத்தில் அவள் கலைப்பிரதர்சனம் செய்வதையும், அதைப் பலர் கண்டானந்திப்பதையும்பற்றி எனக்கு எவ்விதமான ஆக்ஷேபணையும் கிடையாது. ஹொய்சால ராணியான என் மனைவியிடம் உலகம் வியக்கும் இப்படிப் பட்ட அதிசயமான கலைப் பயிற்சியிருப்பது எனக்கு அளவற்ற சந்தோஷமே!" என்று தாழ்ந்த குரலிற் சாந்தமாக விடையளித்தான் விஷ்ணுவர்த்தனன்.

ரங்கமல்லனின் கோபம் மீண்டும் பெருகியது. சக்கரவர்த்தியெதிரில் நின்ற அவன், "ரொம்ப நன்றாயிருக்கிறது, அந்தப்புரத்திலிருக்கவேண்டிய அரசகுலப்பெண்டிர் ஆடரங்கிலேறி நாட்டியம் செய்தால்தான் கலாதேவியின் கடாக்ஷத்துக்குப் பாத்திரமாவார்களோ? அற்புதமான வியாக்கியானம்! சாந்தலாதேவிக்கு நாட்டியப்பித்துப் பிடித்திருக்கிறதென்றால் உனக்கு அதற்குமேல் பித்துப் பிடித்திருக்கிறது!" என்று ஆத்திரத்துடன் மொழிந்துவிட்டு அவ்விடத்தை விட்டு வேகமாய் வெளியேறினான் ரங்கமல்லன்.

அவன் போகும் வேகத்தைக்கண்ட மன்னனின் மனம் சஞ்சலத்திலாழ்ந்தது. மீண்டும் சாளரத்தண்டை சென்று ஆகாயத்தை நோக்கினான். கருவானில் மின்னி மினுக்கிய தாரகணங்களிடையே தோன்றிய பிறைமதி மேற்குத் திசையை நோக்கி வேகமாய்ப் பிரயாணம் செய்துகொண்டிருந்தான்.

விஷ்ணுவர்த்தனின் ஹ்ருதயத்தைக் கீறி வெளிவந்த பெருமூச்சொன்று காற்றுடன் கலந்து சென்றது. மேலும் மேலும் எழும்பி வந்த சிந்தனை அலைகளிடையே அமிழ்ந்து தன்னை மறந்தான் அவன்.

2

அன்று சுக்லபட்சத்து ஸப்தமி. சென்ன கேசவன் கோயிலில் விசேஷ தீபாலங்காரம் தென்பட்டது. கோயிலுக்கு முன்புறமிருந்த அழகிய நேர்த்தியான நாட்டிய அரங்கம் விதம் விதமான வர்ணத் திரைச் சீலைகளாலும் கண் பறிக்கும் மணி விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

சென்ன கேசவனின் அழகு பொருந்திய விக்ரகம் நவரத்தினமிழைத்த ஆபரணங்களாலும் பட்டாடைகளாலும் அலங்கரிக்கப் பட்டுக் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்தது.

ஹொய்சாலச் சக்கரவர்த்தியின் மனைவியான சாந்தலாதேவி மிகச் சிறந்த கலா ரஸிகை. சாஸ்திர பூர்வமாக நாட்டியமும் சங்கீதமும் பயின்று அவற்றில் அளவற்ற ஆர்வம் செலுத்தி வந்தாள். மன்னனுக்கு அவளிடம் அளவற்ற பிரேமை. கடைந்து வார்த்த சிலை போன்ற அவளுடைய சரீரம்

பழுதற்ற அங்க லட்சணங்கள் அமைந்து நடனக் கலைக்காகவே பிரும்ம சிருஷ்டியில் அமைந்ததுபோல் விளங்கியது. தெய்வ பக்தியிற் சிறந்த அவளுடைய வேண்டுகோளுக்கிணங்கி, பிட்டிதேவன் ஹொய்சால ராஜதானியான துவார சமுத்திரத்தில் அழகு பொருந்தியதோர் ஆலயத்தை எழுப்பிக் கொடுத்தான். அவ்வாலயத்தில் எழுந்தருளிய மூர்த்தியின் திருநாமம் சென்ன கேசவன் என்பது. சென்ன கேசவனின் சந்நிதானத்துக் கெதிரில் நேர்த்தியான ஆடரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டது. தெய்வ சந்நிதானத்தில் வருடம் ஒரு முறையாவது நடனம் ஆட வேண்டுமென்பது சாந்தலா தேவியின் அவா. அவ்வவாவைப் பூர்த்தி செய்வதற்காக அழகிய அவ்வரங்கம் ஏராளமான பொருட் செலவில் தயார் செய்யப்பட்டது.

வைகாசி மாதச் சுக்ல பட்சத்து ஸப்தமி யன்று முதன் முதலாக அரசி தெய்வ சந்நிதானத்தில் நடனமாடுவதாக ஏற்பாடு. நகர் முழுதும் ஒரு வகையான பரபரப்புத் தென்பட்டது. அரகுலத்துதித்து, கீர்த்தி வாய்ந்த ஹொய்சால மன்னவனின் ராணி பலர் முன்னிலையில் பகிரங்கமாக நாட்டியமாடுவதென்பது அனைவருக்கும் ஒரு அதிசயமாகவே தென்பட்டது. அதை யொட்டி ஆயிரக்கணக்கான ஜனங்கள் சென்னகேசவன் சந்நிதானத்தில் குழுமி விட்டனர்.

3

அந்தி மயங்கும் வேளை. வானில் கருமையும் வெண்மையும் கலந்து ஒளி விட்டது. "தேவி!"– என்றழைத்தபடியே அரசியின் அந்தப்புரத்தில் நுழைந்தான் பிட்டி தேவன். அப்பொழுதுதான் ஸ்நானம் முடித்து விரித்த கூந்தலுடன் வீணையைக் கையிலேந்தி அமர்ந்திருந்தாள் சாந்தலா தேவி. தோழியொருத்தி கையில் மயில் விசிறியேந்தி அரசிக்கு விசிறிக் கொண்டிருந்தாள். சாம்பிராணிப் புகை சுழன்றெழும் வட்டிலைக் கையிலேந்தி அரசியின் ஈரக் கூந்தலுக்குப் புகையூட்டி ஆற்றிக் கொண்டிருந்தாள் இன்னொருத்தி.

மன்னனைக் கண்ட தேவியின் வதனம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. வீணையைக் கீழே வைத்து விட்டு எழுந்தாள். தோழிகளிருவரும் வணங்கி வெளியே சென்று விட்டனர்.

அரசியை ஆர்வத்துடன் அணைத்த மன்னன் அருகேயிருந்த ஆசனத்திலமர்ந்தான்.

"சாந்தலா!" என்றான் ஹொய்சாலச் சக்கரவர்த்தி.

"ஏன் பிரபு?"

"ஒன்றுமில்லை—இன்று உன் சகோதரன் ரங்க மல்லன் என்னைக் காண வந்திருந்தான்,"

"ஆம், தெரிந்தேன்; எதற்காகவோ?"...... அவள் குரலிற் கவலைதொனித்தது. மன்னன் அவள் கூந்தலைக் கோதியபடியே, "இன்றைய ஏற்பாடுகள் அவனுக்கு மிகுந்த கோபத்தை யுண்டாக்கியிருக்கின்றன. அரச வம்சத்துப் பெண்கள் பலரறியப் பகிரங்கமாக அரங்கமேறி ஆடலாமாவென்று கேட்கிறான். அவன் போக்கு எனக்கு விளங்கவேயில்லை. இவ்வளவு நாளாக என்னிடம் இதைப்பற்றி ஒன்றுமே பேசாதவன் இன்று இவ்வாறு திடீரென்று மாற வேண்டிய அவசியமென்ன?" என்று கேட்டான்.

ஒரு விநாடி யோசனையிலாழ்ந்த அரசி,.... "பிரபு!...எனக்கொன்று தோன்றுகிறது.... அவன் மனைவி மங்கள கௌசிகியின் போதனையாயிருக்கும். அவளும் இப்பொழுது இங்கு வருவதேயில்லை. போன சுக்ரவாரத்தன்று கேதாரகௌரி பூஜைக்காக அழைத்துவரச் சொன்னேன்; பூஜை முடியும் தறுவாயில் வந்தவள் அப்பொழுதே தாம்பூலம் பெற்றுக்கொண்டு போய்விட்டாள். இரவு போஜனம் முடித்துப் போகலாமென்று எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை." என்றாள்.

"இருக்கட்டும்; நீ கவலைப்படாதே; நேரமாகிறது; நான் போகிறேன்; நீ சீக்கிரமாகவே கோவிலுக்கு வந்துவிடு!" என்று எழுந்தான் மன்னன்.

"இரவு விசேஷ பூஜைக்குரிய ஏற்பாடுகளெல்லாம் தயாராய் விட்டனவா, பிரபு?" எனக் கேட்டாள் அரசி.

"எல்லாம் தயாராய்விட்டன. இன்று காலையிலிருந்து நம் மந்திரி மாதவராயர் அங்கேயேயிருக்கிறார். நீ விரும்பியபடியே செந்தாமரை மலர்கள் கொண்டுவந்து குவித்திருக்கிறார். பூஜை ஆரம்பிப்பதற்குள் மாதவியும் வகுளமும் அரும்பாகவே வந்துவிடும்; மற்ற வாசனைத் திரவியங்களும் வேண்டியவளவு சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையில் கண்டிராதபடி ஆலயம் எவ்வளவு அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. பொழுது போய்விட்டது; நான் போகிறேன்; நீ தோழிகளுடன் துரிதமாகவே வந்துவிடு!" என்று கூறிக்கொண்டே

வெளியே வந்தான். சாந்தலாதேவி கொஞ்சதூரம் வரையிலும் அவனுடன் போய் வழிவிட்டுவிட்டு மீண்டும் தன் விடுதிக்குள் வந்தாள்.

அவள் மனது ஒன்றும் நிலைகொள்ளாமல் வேதனையிலாழ்ந்திருந்தது. ரங்கமல்லனின் போக்கு அவளை ஒரு வகையான பயத்துக்குள்ளாக்கியது. இவ்வளவு நாளாக இல்லாமல் இப்பொழுது அவனுக்கு என்ன வந்துவிட்டது? அவனும் மிகச் சிறந்த கலா ரஸிகனுயிற்றே! இப்பொழுது அவனுடைய மனம் இவ்வாறு மாறவேண்டிய அவசியமென்ன?'' என்றெல்லாம் எண்ணியெண்ணி வேதனை கொண்டாள்.

''தேவி! நேரமாகவில்லையா? என்று தோழி வந்து நினைவு மூட்டினுள்.

சட்டென்று எழுந்த அரசி தன் மனக்கலக்கத்தை அடக்கிக்கொண்டு ஆலயத்துக்குப் புறப்படவேண்டிய எத்தனங்களில் துரிதமாக ஈடுபட்டாள். இருந்தாலும் இடையிடையே ரங்கமல்லனின் நினைவும், அவனுடைய கோபத்தால் என்னென்ன உத்பாதங்கள் நேரிடுமோ வென்னும் பயமும் அவள் மனதில் எழும்பி எழும்பி மறைந்தன.

* * *

லட்சக் கணக்கில் மின்னிக் கண்பறித்த ஆலயத்தின் மணிவிளக்குகளை நோக்கியபடி தன் மாளிகையின் உப்பரிகையில் நின்றிருந்தான் ரங்கமல்லன். அவனுடைய வைரம் பாய்ந்த கரங்கள் உப்பரிகையின் மதிலைப்பற்றியிருந்தன. இடையிடையே, உரம் பாய்ந்த தன் தோட்களைத் தடவிப் பார்த்துக்கொண்டான். அருகில் நின்றிருந்த அவன் மனைவி மங்களகௌசிகி தாம்பூலச்சுருட்டுகளை அவனிடம் அளித்தபடியே ''கடைசியில் நீங்கள் பாடுபட்டதெல்லாம் வீண்தானல்லவா? உங்கள் சகோதரி இன்றைக்குப் பலர் காணப் பகிரங்கமாக அரங்கமேறி ஆடப் போகிருள்! ஆஹா! ஹொய்சாலசக்ரவர்த்தியின் வம்சத்துக்கும் உங்கள் வம்சத்துக்கும் எவ்வளவு பெருமைக்குரிய விஷயம்?'' என்று அளவற்ற ஏளனத்துடன் கேட்டாள். பிறைமதியின் மங்கலான வெளிச்சத்தில் ரங்கமல்லனின் விழிகள் குரூரத்துடன் மின்னின. இடையிலிருந்த வாளை இறுகப்பற்றியபடியே—

''இருக்கட்டும்; குலப்பெருமையைச் சேற்றில் அமிழ்த்த வந்திருக்கும் அவளைச் சரியான விதத்தில் தண்டியாவிட்டால் நான் ரங்கமல்லனல்ல;'' என்று மார்பைத் தட்டிக் கொண்டான்.

மங்களகௌசிகியின் உதடுகளில் வெற்றிப் புன்னகையொன்று நெளிந்தது. அதை மறைப்பதற்காக முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டாள்.

கோயிலில் கணகணவென்று மணிச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து கீத வாத்தியங்களின் நாதமும், ஜல்ஜல்லெனத் ஜாலராக்களின் ஓசையும், சலங்கையொலியும் காற்றில் மிதந்து வரலாயின.

ரங்கமல்லன் ஒரு விநாடி மௌனமாய் நின்ருன். அவன் முகம் கல்லிற் செதுக்கியது போலிருந்தது. பற்களை உதடுகளில் அழுத்திக் கொண்டான்.

மெதுவாகத் தன் முகத்தை நிமிர்த்தி அவனை நோக்கினுள் அவன் மனைவி. அவன் முகத் தோற்றம் அவளுக்குச் சிறிது பயத்தையுண்டாக்கியது.

ஒரு விநாடிக்கெல்லாம் வேகமாய் உப்பரிகையிலிருந்து கீழேயிறங்கலானுன்.

''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டாள் மங்களகௌசிகி.

ரங்கமல்லன் ஒன்றுமே பதில் சொல்லாமல் பின்னும் துரிதமாய் இறங்கினுன்.

''எங்கே போகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?'' என்று திகிலுடன் கேட்டபடியே அவனை வேகமாய்த் தொடர்ந்தாள் அவள்.

அப்படியே இருளில் இறங்கி வேகமாய் மறைந்துவிட்டான் அவன்.

''எங்கே போகிறீர்கள்?'' என்ற அவள் குரல் மட்டும் சற்று நேரம் வரையில் அவ்விடத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

* * *

இரவு நடு நிசி. துவார சமுத்திரம் முழுதும் ஆழ்ந்த அமைதி குடி கொண்டிருந்தது.

சென்ன கேசவன் கோயிலில் தீபங்களெல்லாம் எண்ணெய் வற்றி அணைந்து விட்டன. அங்கங்கே ஒன்றிரண்டு மட்டும் மினுக்கு மினுக்கென்று பிரகாசித்துச் சூழ விருந்த இருளை மிகைப் படுத்திக் காட்டின. சில மணி நேரங்கள் முன்பு ஒளிமயமாகக் கண் பறித்த ஆடரங்கம், இப்பொழுது அந்தகாரத்திலும் அமைதியிலும் ஆழ்ந்து கிடந்தது.

அரண்மனையின் அந்தப்புரம். எங்கும் அமைதி சூழ்ந்து நிற்கையில் அவ்விடத்தில் மட்டும் ஒரு வகையான பரபரப்பும் பேச்சரவமும் காணப்பட்டன.

தாதியரும் பணி மக்களும் கவலை தோய்ந்த முகத்துடன் குறுக்கும் நெடுக்கும் போய்க்கொண்டிருந்தனர்.

தன்னுடைய வஸந்த விடுதியில் மஞ்சத்தின்மேற் கிடத்தப்பட்டிருந்தாள் அரசி. அவளுடைய விழிகள் இறுக மூடப்பட்டிருந்தன. இருபுறமும் தோழிகள் விசிறிக் கொண்டிருந்தனர்.

அரசியின் அருகே அமர்ந்திருந்த விஷ்ணுவர்த்தனன் கவலை மிகுந்த பார்வையுடன் அப்பொழுதே உள்ளே வந்த மந்திரி மாதவராயரிடம் பேசிக்கொண்டிருந்தான்.

“அவன் எப்பொழுது உள்ளே வந்தான்? அரங்கத்தின் அருகிலேயேதானே நான் அமர்ந்திருந்தேன்!” என்று அவன் கேட்ட கேள்விக்கு விடையாக, “இல்லை, பிரபு! ரங்கமல்லன் அரங்கத்தின் முன்வாயில் வழியாக வரவில்லை; பக்கத்திலிருக்கும் சிறு வாயில் வழியாக உள்ளே நுழைந்ததை நான் கண்டேன். சற்றுப் பொறுத்து சென்னகேசவன் சன்னிதியில் பூஜைத் தறுவாயில் வந்து நின்றான். அப்புறம் நான் அவனைக் காணவில்லை!— இப்படிப்பட்ட கொடிய எண்ணத்துடன் அவன் உள்ளே வந்ததை நான் சந்தேகிக்கவில்லையே! கொஞ்சமாவது தெரிந்திருந்தால் இப்படிப்பட்ட விபரீதம் நடக்கச் சம்மதிப்பேனா? அப்பொழுதே அவனை என்னுடைய வாளுக்கு இரையாக்கியிருக்கமாட்டேனா?” என்று கோபத்துடன் மொழிந்தார் அவர்.

அரசன், “எல்லாம் சென்னகேசவன் அருள். நடனம் முடிந்து தேவி உள்ளே போவதற்கும் மேலேயிருந்த கிளைவிளக்கு அறுந்து அரங்கத்தின்மீது விழுவதற்கும் சரியாயிருந்தது. ஒரு வினாடி தாமதம் நேர்ந்தால் அவ்விளக்கு அவள்மீது விழுந்து அதோகதியாக்கியிருக்கும்!” என்றான்.

“மகாபாபி; கடைசியில் அவன் செய்த சதி அவனையே கெடுத்தது. மணிவிளக்கை அறுத்துவிட்டு இறங்குகையில் கால் வழுக்கி விழுந்திருக்கிறான், ஆள் உருவே தெரியவில்லை; கற்படியில் உடல் பட்டவுடனேயே பிராணன் உடலைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டும்!” என்றார் மாதவராயர். ஒரு வினாடி மௌனம் சாதித்தான். பிறகு ஒரு ஆழ்ந்த பெருமூச்சுடன் எழுந்தான் பிட்டிதேவன்.

அதே சமயத்தில் மெதுவாக விழிகளைத் திறந்தாள் சாந்தலா தேவி. அவள் பார்வை மன்னன் மீது விழுந்தது.

“பிரபு! என்ன நேர்ந்தது?” என்று பயம் கலந்த குரலில் மெதுவாகக் கேட்டாள்.

“ஒன்றுமில்லை, தேவி! இன்றைய நடனம் மகா அற்புதம்! கடைசியில் உத்வேகம் தாங்காமல் மூர்ச்சித்து விட்டாய்! அவ்வளவுதான்,” என்று சாதாரணமான குரலில் விடையளித்தான் பிட்டி தேவன்.

“ஆம், தேவி! யாரும் கண்டிராத அற்புதம், இன்றைய தங்கள் நாட்டியம்; கலை மங்கையின் கடாக்ஷம் தங்களுக்குப் பரிபூரணமாகக் கிடைத்திருக்கிறது,” என மனதாரப் புகழ்ந்தார் மாதவராயர்.

அரசி மௌனத்திலாழ்ந்திருந்தாள். அவள் மனதிலுண்டான வேதனையின் சாயல் முகத்திற் படிந்தது. எழுந்து உட்கார்ந்தாள்.

சற்றுப் பொறுத்து, “ரங்கமல்லன்! அவன் என்னவானான்?” எனக் கேட்டாள். மன்னனும் மந்திரியும் ஒன்றும் பதிலளிக்கவில்லை. ஒருவரையொருவர் நோக்கினர். அரசியும் மீண்டும் அக்கேள்வியைக் கேட்டாளில்லை. அவள் விழிகளில் மட்டும் இரண்டு துளி கண்ணீர் தேங்கியது.

* * *

ஒரு வருடம் ஓடிச் சென்றது. அடுத்த வைகாசி மாதம். சுக்ல பட்சத்து ஸப்தமி இரவு. சென்ன கேசவன் கோயிலில் சந்நிதியெதிரில் சர்வாலங்கார பூஷிதையாய் நடனம் செய்து கொண்டிருந்தாள் சாந்தலாதேவி. கோவிலில் ஒருவருமில்லை. சிலையின் பாதத்தடியில் குவிந்து கிடந்த தாமரை மலர்களருகே நின்றிருந்த மன்னன் மட்டும் தேவின் நடனத்தை அதிசயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

கோயிலின் ஆலாட்சிமணி கணகணவெனச் சப்தித்தது. அத்துடன் கலந்து, காற்றில் மெல்லென மிதந்து சென்றது அரசியின் பாதங்களிலணிந்திருந்த பொன் சலங்கைகளின் ஒலி.

ஸங்கீத போதனா முறை

கலாதாஸன்

ஸங்கீத உணர்ச்சி, அதாவது, ஸங்கீதத்தையனுபவிக்கும் திறம் ஸகல ராசிகளிடத்துமுள்ள ஒரு விசேஷ குணம்! மனிதனானாலும் மிருகமானாலும், பாலனானாலும், கிழவனானாலும் பாட்டிற்குக் கட்டாயம் ஈடுபடுகிறார்கள். பெரியோர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய வேணுநாதம் கேட்டு மரம், கல், புல், பசு முதலிய அசேதன வஸ்துக்கள் கூட ஆகர்ஷிக்கப்பட்டன என்று கூறியிருக்கிறார்கள். நமது அனுபவத்திலும் இந்தத் தன்மையை ஸங்கீதத்தில் காணலாம். வார்த்தைகளை ஆதாரமாகக் கொள்ளாத தனி ஒலிக்கு இச் சக்தியுண்டு. குழந்தையும் பாம்பும் பாட்டில் அக்ஷரங்களையோ ஸாகித்யத்தையோ அறிந்தா அதற்குக் கட்டுப்படுகின்றன? அல்ல. தனிநாதத்திற்கு இந்தச் சக்தியுண்டு. அது பாஷையைக் கடந்தது, பின்ன ஜாதி மதங்களைக் கடந்தது, தேசங்களைக் கடந்தது. எல்லோரும், எவ்விடத்திலும், எத்தேசத்திலும் உணரத்தக்கது. ஆகையால் சகல ஜீவராசிகளும் இசையை அனுபவிக்கமுடியும். எல்லோரும் ஸங்கீத வித்வான்கள் ஆவார்கள் என்றோ, ஆகவேண்டுமென்றோ அர்த்தமல்ல. பெரிய ஸங்கீதத் தொழிலாளிகளாக ஆசையுள்ளவர்கள் அதற்குத் தக்கபடி முயற்சி செய்ய வேண்டும். ஆனால் ஸகலரும் ஸங்கீதத்தை யனுபவிக்கலாம்.

பகுத்தறிவுள்ள நாம் அனுபவிப்பதற்கும் பாம்பு முதலிய மிருகங்கள் அனுபவிப்பதற்கும் வித்யாசமுண்டு. நாம் விஷயம் தெரிந்து அனுபவிக்கலாம்; கேட்கும் பாட்டின் குணா குணங்களை வகுத்தறியலாம்; உயர்தரமான ஸங்கீதத்திற்கும் தாழ்ந்ததரமானதற்குமுள்ள வித்யாசமறியலாம். ஆனால் அதற்குக் கொஞ்சம் பிரயத்தனத்தை மேற்கொள்ளவேண்டும். இத்தகைய பிரயத்னத்தை மேற்கொள்ள வேண்டிய கடமை மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்குமுண்டு. நமது குழந்தைகளுக்கு ஸங்கீதம் சொல்லிக் கொடுக்கும் முறையில் இந்த உத்தேசம் தான் முக்யமானது. இந்த நோக்கத்தை நிறைவேற்றின பிறகுதான் ஸங்கீத வித்வான்களாகக் கச்சேரி பண்ணுவதற்குரிய முயற்சிகளைச் செய்யவேண்டும்.

ஸங்கீதம் பயின்று வருபவர்களில் இந்த இரண்டு வகுப்பினருமுண்டு. முன் காலங்களில் வேடிக்கையாக, ஆத்மார்த்தமாகப் பொதுஜனங்கள் ஸங்கீதம்பயின்று வந்ததாகத் தெரியவில்லை, ராஜாக்கள், ஜமீன்தார்கள் முதலியவர்கள் தங்கள் ஸந்தோஷத்திற்காகப் பயின்று வந்தார்கள். மற்றப்படி வித்வான்கள் குருகுல வாஸம் செய்து ஸங்கீதம் கற்று அதையே தொழிலாகவும் வைத்துக்கொண்டிருந்தார்கள். தற்காலம் பள்ளிக்கூடங்களிலும் காலேஜுகளிலும் கணிதம், சரித்திரம் முதலிய பாடங்களைப்போல் ஸங்கீதத்தையும் கற்றுவருகிறவர்களுடைய உத்தேசம் அந்த ஸங்கீதத்தைக் கொண்டு வித்வான்களாகிக் கச்சேரி பண்ணலாமென்பதல்ல. இவர்களுடைய உத்தேசம் நான் சற்று முன்புசொன்ன மாதிரி ஸங்கீதத்தைப் பகுத்தறிவுடன் அனுபவிக்க வேண்டுமென்பதே. இதற்கு ஸாதாரண ஞானமும் கொஞ்சம் அப்பியாசமுமிருந்தால் போதும். ஆனால் ஸங்கீதத் தொழிலை ஏற்க விரும்புகிறவர்கள் மேலும் பயிற்சி செய்யவேண்டும். ஸங்கீதம் கற்றுக் கொடுப்பதற்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாசாலைகள் (திருவனந்தபுரம் ஸங்கீத அகாடமி, சிதம்பரம் ஸங்கீத கலாசாலை முதலியன) இத்தகைய நோக்கமுடையவர்களுக்கு ஏற்றவை. ஆகிலும் என்ன நன்றாய்ப் படித்தாலும், உயர்ந்த படியில் பரீக்ஷை தேறினாலும் தொழிலாக ஸங்கீதத்தைக் கைக்கொண்டவர்கள் என்றும் உழைக்க

வேண்டும். வித்தைக்கு எல்லையே கிடையாது.

குழந்தைகளுக்கு ஸங்கீதம் கற்றுக் கொடுக்கிற விஷயத்தில் முதன் முதலில் நாம் கவனிக்க வேண்டிய சில காரியங்களுண்டு. ஸங்கீத உணர்ச்சி தானாகவே ஏற்படுகிறதற்கு வேண்டிய ஸௌகரியங்களைக்குழந்தைகளுக்குத் தரவேண்டும். வீட்டில் ஏதாவது ஸங்கீத வாத்யங்களிருந்தால் அவைகளைக் கண்டு குழந்தைகள் 'அதென்ன' என்று கேட்கும்; கையாண்டும் பார்க்கும். அதன் மூலமாக அதில் ஒரு தொடர்பு ஏற்படலாம். பெரிய வித்வான்களுடையவோ, வாக்கேயக்காரர்களுடையவோ படங்கள் அல்லது உருவங்கள் இருந்தால் அதன் மூலமாகவும் ஒருவித உற்சாகம் தோன்றலாம். வீட்டில் பாடத் தெரிந்தவர்கள் பாடிக்கொண்டிருந்தால் அதைக் கேட்டுக் குழந்தைகள் தாமாகவே பாடத்தொடங்கும். கிராமபோன், ரேடியோ முதலியவைகளால் குழந்தைகளுக்குத் தம்மையறியாமலே இசை யுணர்ச்சி ஏற்படும். இத்தகைய சௌகரியமிருக்கும் வீடுகளில் குழந்தைகள் இயற்கையாகவே பாட்டுக் கற்றுக் கொள்வதில் அதிக ஊக்கமும் திறமும் வாய்ந்தவர்களாக இருப்பார்கள். இந்த விதம் ஏற்படும் ஞானம் தான் லக்ஷ்ய ஞானமாகும். அது தான் சிலாக்யமானது. உண்மையான ஸங்கீதப் பயிற்சிக்கு லக்ஷ்யம் தான் பிரதானம். லக்ஷணம் பின்னால் தானாகவே வரும். எதற்கும் முதலில் ருசி ஏற்படும்படி செய்ய வேண்டும். குழந்தையின் ஸ்வபாவம் தெரிந்து, அதன் நோக்கம் அறிந்து, அதனுடைய வாஸனைக்குத் தக்கபடிக்கும் ஸம்ஸ்காரத்திற்கிசைந்தபடிக்கும் அதற்குப் போதிக்க வேண்டும். என்ன வந்தாலும் வெறுப்பு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சில வீடுகளில் சில வாத்தியார்கள் நடந்து கொள்ளப்பட்ட ரீதியில் குழந்தைகளுக்கு ஸங்கீதத்திலேயே ஒரு வெறுப்பு உண்டாகும்படி நேருகிறது. பாட்டு வாத்தியாரைக் கண்டால் பதுங்கி ஒளிந்து கொள்கிற சில குழந்தைகளுண்டு. அந்தக் குற்றம் குழந்தைகளுடையதுதான் என்று சொல்லமுடியாது. குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் ஸங்கீதத்தில் ஒரு ருசி இருக்க வேண்டும் என்கிற உத்தேசத்துடனே நமது தேசத்தில் தினசரி ஜீவிதத்தில் பல முறைகளில் ஸங்கீதம் கலக்கும் படியான ஏற்பாடுகள் பழக்கத்தில் இருக்கின்றன. கோயில்களிலும் பஜனை மடங்களிலும் அடிக்கடி ஸங்கீதம் கையாளப்பட்டு வரும்.

அநேகமாக எல்லா ஊர்களிலும் விடியற் காலையில் பஜனை கோஷ்டிகள் தெருவைச் சுற்றி வரும். எனக்கு வாஸ்தவத்தில்ஸங்கீத உணர்ச்சிஏற்பட்டது இந்தப் பஜனைகளால் தான். வீடுகளிலும் ஏதாவது காரணத்தைக் கொண்டு ஸங்கீதம் நடமாட்டத்திலிருக்கும். காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே பெரியவர்கள் ஏதாவது பாடல்களைப் பாடிக்கொண்டுதான் எழுந்திருப்பார்கள். தயிர் கடையும்போது ஒரு பாட்டு, குழந்தைகளைத் தாலாட்ட ஒரு பாட்டு, வேறு வேலைகள் செய்யும் போதும் பாட்டு, இப்படி பாட்டு மயமாகவே இருக்கும். தற்காலத்தில் "நாகரிகம்" என்று சொல்லப்படும் புது நோக்கம் வந்து சேர இப்படிப்பட்ட பழக்கங்கள் குறைந்துகொண்டு வருகின்றன.

ஸங்கீதம் அப்யசிக்கும் போது நான் முன்பு கூறின இரண்டு வகுப்புகளையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஸங்கீத உணர்ச்சியும் ஸங்கீதப் பகுத்தறிவும் வேண்டுமென்கிற உத்தேசத்தோடு பயிலுகிறவர்கள், ஸங்கீதத்தைத் தொழிலாகவைத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் என்ற இந்த இரண்டு வகுப்புகளும் ஆரம்பத்தில் ஒன்றுபோல் கற்றுக்கொண்டாலும் பிறகு தனித்தனியான முறைகளைத்தான் அனுசரிக்க வேண்டிவரும். முதன் முதலில் லக்ஷ்ய ஞானம் ஏற்படும் வழிகளை அனுசரிக்க வேண்டும்.

மஹான் புரந்தரதாஸர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அப்யாஸ முறை (அதாவது வரிசைகள், கீதங்கள், அலங்காரங்கள் ஸ்வர ஜாதிகள் முதலியவை) மிகவும் சிலாக்யமானதாயிருந்தாலும் கற்றுக்கொள்கிறவர்களுக்கு அலுப்புத் தட்டாமல் அதை யனுஷ்டிக்க வேண்

டும். குழந்தைகளுக்கு அலுப்போ கவனக் குறைவோ ஏற்பட்டால் உடனே நிறுத்திவிட வேண்டும். ஸங்கீத சம்பந்தமான கதைகள், பெரிய வித்வான்களைப்பற்றிய கதைகள், ஹாஸ்யத்துணுக்குகள் முதலியவைகளைக்கொண்டு அவர்களுக்கு உற்சாகத்தை உண்டு பண்ண வேண்டும். வேடிக்கையான பாட்டுகளைச் சொல்லிக் கொடுத்துக் குழந்தைகளை ஸந்தோஷப்படுத்தலாம். இத்தகைய முறைகளைக் கையாண்டு மாணவர்கள் உற்சாகம் குறையாமல் இருக்கச் செய்ய வேண்டும். மேலும் ஸங்கீத மாணவமாணவிகளுடைய ஆதார ச்ருதியைக் கவனத்துடன் நிர்ணயம் செய்ய வேண்டும். ஆண்களுக்குச் சுமார் 16, 17 ஆவது வயதில் சாரீரம் மாறுதலடையும். அதற்கு முன் ஸ்திரீகளைப் போல் உயர்ந்த ச்ருதியில் (4, 5 கட்டை ச்ருதிகளில்) பாடுவதற்கிசைந்திருந்த குரல் பிறகு கனத்துப் போகிறது; தாழ்ந்த ச்ருதியில் பாடத் தக்கதாகிறது. பொதுவாக ஸ்திரீகள் சாரீரமும் குழந்தைகள் சாரீரமும் ச்ருதி கூடினதாக இருக்கும். ஸ்திரீகள் சாரீரத்தில் ஆண்கள் மாதிரி அவ்வளவு மாற்றமோ உடைவோ ஏற்படாது. ஸாதாரணமாக ஆண்கள் சாரீரத்தைக் காட்டிலும் பெண் சாரீரத்தில் இனிமை அதிகமிருக்கும்.

கர்நாடக ஸங்கீதத்திற்கு உரிய சாரீரம் சுமார் 2½ ஸ்தாயிகளில் சிரமப்படாமல் ஸஞ்சாரம் செய்யத் தக்கதாயிருக்க வேண்டும். மந்தரஸ்தாரி ஷட்ஜம் முதல் தாரஸ்தாரி பஞ்சமம் வரை ஸஞ்சாரம் செய்யத் தக்க ஆதார ச்ருதியை எடுத்துக்கொள்ளவேண்டும். அனேகமாக நமது ஸங்கீத கிருதிகள் மந்தரஸ்தாயி மத்யமத்திற்கும் தாரஸ்தாயி மத்யமத்திற்குமுள்ள இடையில்தான் ஸஞ்சாரமுள்ளவைகளாக இருக்கின்றன. பெரும்பாலும் மத்யஸ்தாயியில்தான் பாடவேண்டும். அதற்குத் தக்கபடிச்ருதியை எடுத்துக்கொள்ளவேண்டும். சமீபகாலத்தில் ஆதாரச்ருதியை அனாவசியமாகக் குறைத்துவைத்துக் கொள்கிறவழக்கம் நமது வித்வான்களிடையில் காணப்படுகிறது. சில பெரிய வித்வான்கள் தங்கள் சாரீரத்தின் ஸௌகரியத்தை உத்தேசித்து, தங்கள் ச்ருதியைக் குறைத்து வைத்துக்கொண்டதினால் சாரீர ஸௌகரியமுள்ளவர்கள் ஏன் குறைக்கவேண்டுமென்று தெரியவில்லை. ஆதார ச்ருதியைக் குறைத்துவைத்துக்கொண்டு மேல் ஸ்தாயியில் உரக்கப் பாடுவதால் ஸங்கீதம் சோபிக்குமா? அது நல்லஸர்க்கஸ் வேலையாயிருக்கலாம், ஸங்கீதமாகாது. ஜனங்கள் கரகோஷத்தைக் கோரி ஸங்கீதத்தை ஸர்க்கஸ் ஆக்குவது ஸங்கீதக் கலைக்கு அழகல்ல.

குழந்தைகள் பாடிப் பாடிப் பழகி, சாரீரம் கனப்பட்டு வரும்போது ஆதார ச்ருதியையும் அதற்கிணங்க மாற்றிக் கொள்ளவேண்டும். இந்த ச்ருதி விஷயத்தைக் கவனிக்கும்போது அநேக குழந்தைகளுக்குச்சேர்ந்தாற்போல் பள்ளிக்கூடங்களில் மற்றப் பாடங்களைக் கற்றுக் கொடுப்பதுபோல் ஸங்கீதம் சொல்லிக் கொடுப்பது அவ்வளவு உசிதமோ என்ற ஸந்தேகமேற்படுகிறது. பலவித ஆதார ச்ருதியுள்ள குழந்தைகளுக்கு ஒன்றாகப் பாட்டுச் சொல்லிக்கொடுப்பது நல்லதல்ல. எப்படி இருந்தாலும் புருஷர்ளுக்கும் ஸ்திரீகளுக்கும் ஒரே சமயத்தில் பாட்டுக் கற்றுக்கொடுப்பது இயலாத காரியம். ஸ்திரீகளுக்குள்ளேயும் பலருக்கு ஒரே ஆதார ச்ருதியிருக்காது; 2½-கட்டை முதல் 6½-கட்டை வரைக்கும் அவர்கள் ச்ருதி பேதப்படலாம். அதனால் கூடிய வரையில் கிட்டத்தட்ட ஒரே ஆதாரச்ருதியுள்ளவர்களை ஒரு பகுதியாகப் பிரித்து அவர்களுக்கு ஒரே சமயத்தில் பாட்டுக் கற்றுக்கொடுப்பது தான் உசிதமானது. ஆனால் பள்ளிக்கூடங்களில் சின்ன கிளாஸுகளில் குழந்தைகளுக்கு ஒன்றாக எளிதான பாட்டுக்களைக் கற்றுக்கொடுப்பதில் சில சௌகரியமும் உண்டு. சில குழந்தைகளுக்கு லயஞானம் குறைவாயிருக்கும். எவ்வளவு சொன்னாலும் கால நிர்ணயம் கிடைக்காத குழந்தைகளுமுண்டு. அந்தக் குழந்தைகள் கூட்டமாகப் பலபேர்களுடன் பாடும்போது ஒருவித லயநிச்சயம் ஏற்படலாம். அதே மாதிரி ச்ருதி உணர்ச்சியில்லாத குழந்தைகளுக்கும் கூட்டத்தில் பாடுவதால் ஒருவித நிச்சயம் கிடைக்கலாம். மேலும் சில குழந்தைகள் தொண்டையைத் திறந்து தம்முடைய இயற்கையான சாரீரத்தில் பாடா

மல் பல்லைக்கடித்துக்கொண்டு ஒருமாதிரி கள்ளத்தொண்டையில் பாடுவதுண்டு. இத்தகைய குழந்தைகளுக்கு ஒரு கூட்டத்துடன் பாடச்சொல்வதால் நல்ல பலன் கிடைக்கலாம். ஆனால் இதெல்லாம் ஆரம்பத்தில்தான் பயன்படும். கொஞ்ச காலத்திற்குப் பிறகு அந்தந்தக்குழந்தைகளின் ஆதார சுருதியையும், பக்வத்தையும், வாசனையையும் ஒட்டித்தான் கற்றுக்கொடுக்கும் முறையை நிர்ணயித்துக் கொள்ளவேண்டும்.

இந்த விஷயத்தைப்பற்றி எவ்வளவு சொன்னாலும் கடைசியில் காரியத்தை நடத்தவேண்டியவர்கள் பாட்டு வாத்தியார்கள்தான். அவர்கள் குழந்தைகளுக்குத் தக்கபடியும் ஸமய ஸந்தர்ப்பங்களுக்குத் தக்கபடியும் போதனா முறையை அனுசரிக்கவேண்டும். பொதுவாக, சில காரியங்களைப் பற்றிமட்டும்தான் நாம் சொல்லமுடியும். அனுஷ்டானத்தில் சரியானபடி அவைகளை உபயோகப்படுத்த வேண்டிய தர்மம் குருமார்களுடையது.

சாரீர வசதி இல்லாதவர்கள் வீணில் கஷ்டப்படாமல் வாத்யங்களிலுழைப்பது நல்லது. ஆனால் வாய்ப்பாட்டுக்காரர்களுக்குக்கூட வாத்யங்களில் பரிச்சயமிருப்பது மேன்மையானது. அதிலும் வீணையில் பழக்கமிருப்பது உத்தமமான உதவியாகும்; ஸ்வரஞானம் சீக்கிரத்தில் நிச்சயமான நிலையில் ஏற்படும். நம்மிடையில் பிரமுகர்களாக இருக்கும் பல வித்வான்களுக்கு வேறு வாத்யங்களில் பழக்கமுண்டென்பது கவனிக்கத்தக்கது.

ஸ்ரீ புரந்தரதாஸ ஸ்வாமி அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஸங்கீத போதனா முறை பொதுவாக எல்லாருக்கும் பொருத்தமானது என்பது அனுபவ ஸித்தமான விஷயம். ஆனால் அந்த முறையில் ஒவ்வொரு படியிலும் எவ்வளவு தூரம் பயிற்சி வேண்டுமென்பது கற்றுக்கொள்ளும் சிஷ்யனைப் பொறுத்தது. கீர்த்தனைகள் தொடங்கும்போது, அதிக கமகப்ரயோகங்களில்லாமல் சுத்தமான ஸ்வரஸஞ்சாரமுள்ள ராகங்களை எடுத்துக்கொள்வது நலம். அநேகமாக ஹம்ஸத்வனி வர்ணம், ஹம்ஸத்வனி, கருடத்வனி, பங்காளா முதலிய ராகங்களில் கிருதிகள், இவைகளை முதன் முதலில் கற்றுக்கொடுப்பது வழக்கம். காரணம் வேறொன்றுமில்லை. இந்த ராகங்களில் வரும் ஸ்வரங்களுக்கு அதிக அசைவு முதலிய கமகங்கள் இல்லை. நேராக ஸ்வரங்களைச் சுத்தமாய்ப் பிடித்தால் போதும். இக்காலத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிற ஸங்கீத கல்வி முறை அனுபவ ஸம்மதமானது. ஸமயோசிதம்போல் அதைக் கொஞ்சம் அங்குமிங்கும் மாற்றி உபயோகித்தால் தகுந்த பலன் தரும்.

முற்காலங்களில் நடைபெற்ற ரீதியில் குருகுலவாஸம் இப்போது இல்லையென்றே சொல்லலாம். ஸங்கீதப் பள்ளிக்கூடங்கள் அநேகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. காலேஜுகளிலும் ஸ்கூல்களிலும் மற்றப் பாடங்களைப்போல் ஸங்கீதமும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. சில ஸர்வகலாசாலைகளில் ஸங்கீதத்திற்கென்றே கலாசாலைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். இப்படி ஸங்கீதம் அதிக பிரசாரம் அடைந்து பொது ஜனங்களுடைய ஆதரவை அடைந்திருப்பது ஸந்தோஷிக்கத்தக்கதே. ஆனால் ஸங்கீத சாஸ்திரத்தைப் பற்றியோ, ஸம்பிரதாய ஸங்கீதபோதனா முறையைப் பற்றியோ நிர்ணயம் செய்வது ஸங்கீதத்திலாழ்ந்து உழைத்தவர்களுக்குத்தான் உரியது. அதை நாம் மறக்காமலிருப்பது நலம்.

இரண்டு லீலா விநோதங்கள்

வாரன்

‘சென்னையிலிருந்து மதுரைக்கு முந்நூறே மைல் தூரம். இது போக எஸ். ஐ. ஆர் கம்பெனி ரயிலுக்கு 12 மணி நேரம் கொடுத்தும் போரவில்லை. சக்கடா வண்டி மாதிரி ஊர்ந்து ஊர்ந்து இப்பவே 2 மணி லேட்டாய் விட்டது சனியன். மதுரைக்குக் குறித்த டயத்துக்கு மறு நாள் தான் போகும் போலிருக்கு. கொடுத்து வைத்த மகராஜங்கள் ஸார்! ஆயிரக்கணக்கான மைல் ஒரே நாளில் ப்ளேனில் பறந்து போய் வேலையை முடித்துக் கொண்டு திரும்பி விடுகிறார்கள். ஒரு கல்யாணத்துக்குப் போக 3 நாள் காஷுவல் லீவு எடுத்தும் போராத இந்த ரயில் பிரயாணம் என்னிக்குத் தொலைந்து எல்லாரும் சுலபமாக ப்ளேனில் பிரயாணம் செய்ய வசதி ஏற்படுமோ தெரியல்லை; அன்னிக்குத் தான் நாம் பெற்ற சுதந்திரம் பூர்ணமானதாகச் சொல்ல முடியும். அதோ ஜன்னலடியில் பாருங்கோ, எத்தனை பேர் நின்றபடியே காத்து வராமல் மறைக்கிறார்கள்? இது வா ஸார்! சுதந்திரம்? நான் சொல்றதென்ன சரியில்லையா? பேசாமல் இருக்கேளே ஸார்!’’ என்று எதிரே உட்கார்ந்திருக்கும் பிரயாணியைக் கேட்கிறார் நேரத்தின் அருமை அறிந்த தீரர்.

எதிரே இருப்பவரால் வாயில் இருக்கும் வெற்றிலை பாக்கு புகையிலையை மென்று கொண்டு, வண்டியில் கூட்டத்தைக் கடந்து போய் ஜன்னல் வழியாகத் துப்பவும் முடியாமல் பேசவும் முடியாமல் எத்தனை நேரம் கேட்டுக் கொண்டிருக்க முடியும்? கூட்டத்தை விலக்கிப் போய், பாதாளத்தை எட்டி விடுபவர் போல் குனிந்து துப்பி விட்டு, சிரமத்துடன் தம்மிடத்தில் அமர்கிறார். ஒரு கனைப்புக் கனைத்து விட்டு, ‘‘நேரம், பணம், வேலை’ இந்தப் பல்லவியைத் தவிர நவீன காலத்தில் மனிதன் என்ன சுகத்தைக் கண்டான்? ‘சீக்கிரம் சீக்கிரம்’ என்ற பரபரப்புத் தான், வேலையிலும் வீட்டிலும் பிரயாணத்திலும் வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும். பிரயாணத்தில் அதிலும் கல்யாணத்திற்குச் செல்லும் பிரயாணத்தில் ஒரு உல்லாசம் வேண்டமோ? நிதானத்திற்கு இடமுண்டா? குஷியா வெற்றிலை போட்டுத் துப்பச் சுதந்திரமுண்டா? திணறிப் போய்ச் சமாளிக்க மாட்டாமல் துப்பினால் பின் வண்டியில் உட்கார்ந்திருப்பவன் ‘பெரியவரே! புத்தி யில்லையா? ஜாக்கிரதையாகத் துப்பும்’ என்று எச்சரிக்கை செய்கிறான். ரயில் பிரயாணத்துக்கே இந்தப் பாடானால் எல்லாரும் பறக்க ஆரம்பித்து விட்டால் இந்த அளவுக்குக்கூடப் பேச்சு உல்லாசம் இல்லாமல் போய் விடும்.

’’அந்தக் காலத்திலே பிரயாணம், அதிலும் கல்யாணப் பிரயாணம் இப்படியாயிருந்திருக்கும். ‘டயம், டயம்’ என்ற பரபரப்பும் நினைத்த காரியம் அதன் படி நடவாது போனால் கல்யாணம் என்று கூட நினைக்காமல் ‘எழவு சனியன்’ என்று கோபமாய் நிதானம் இழந்து பேசறதும், அந்தக் காலத்தில் ஏது? ‘கல்யாணத்துக்கு ஒரு கூட்டம் நாளைப் பிரயாணம்’ என்றால் இன்றைக்கே வீட்டு வாசலில் 4 கட்டை வண்டிகள், மாடுகள், வண்டிக்காரர் சகிதம் வந்து விடும். பிரயாணத்திலே இந்த அவசரம் உண்டா? கோபம் உண்டா? கட்டுக் கட்டா வழியில் வெற்றிலை பாக்குப் போடுவதும் சுதந்திரமாய்த் துப்புவதும், காலை மடக்கி நெடு நேரம் உட்காருவது கஷ்டமாயிருந்தால் வண்டிக்குப் பின்னே நாலு பேர் சுதந்திரமாய் நடந்து போவதும், உற்சாகமாப் பேசுவதும், அடடா என்ன ஆனந்தம்! சோலையும் தடாகமும் வந்து விட்டால் எல்லாரும் கட்டுச் சாதத்தைக் கூட்டாகச் சாப்பிடுகிறதும், அந்த உல்லாசத்திலே நாலு அவுன்ஸ் சாப்பிட முடியாத வயிற்று வலிக்காரன் தேங்

காய்ச் சட்னியைப் பார்த்துக் கொண்டே எட்டு அவுன்ஸ் சாதம் சாப்பிட்டு 'இன்னும் கொண்டு வா?' என்று கேட்கிறதும், எல்லாம் அலாதி ஆனந்தம்! சாப்பாடு முடிந்ததும் எல்லாரும் தாம்பூலம் தரித்துக் கொண்டு ஒருவர் பாடுகிறதும், ஒருவர் கதை சொல்கிறதும், அதற்கு முன் அதிகம் பேசியிராதவரை விகடமே பண்ண வைப்பதும் அப்பப்பா! அந்த உல்லாசம் இனிமேலேது சார்! ப்ளேன் சர்வீஸ் அதிகமானால் கல்யாண வீட்டிலே சாப்பிடக் கூட நேரம் இருக்காது சார்!" என்று பெரிய ராமாயணம் ஆரம்பிக்கிறார் பதிலுக்கு.

பிரயாணங்களில் எது உல்லாசகரமானது? என்பதைப் பற்றி நாம் ஏன் இந்த விதமாகச் சர்ச்சை பண்ண வேண்டும்? பரிசீலனை செய்து முடிவு சொல்லும் பொறுப்பை ஆராய்ச்சித் துறையிலுள்ளவர்களுக்கே விட்டு விடுவோம். மேலும் ரயில் பிரயாணத்தையும் ஆகாசப் பிரயாணத்தையும் இனி அநுபவித்து அறிய முடியுமே யொழிய, கட்டை வண்டிகளில் நாள் கணக்காகப் பரபரப்பில்லாமல் பிரயாணம் பண்ணி அநுபவித்தறியப் போகிறோமா? பிறர் சொல்வதைக் கேட்டு நமது செய்திக் குப்பையில் இதையும் சரித்திர சம்பவம் என்று சேர்த்துக் கொள்ளலாமே யொழிய உல்லாசத்தை நாமே அநுபவிக்க முடியாது. ஆனால் கவிகள் தமது அநுபவமாக இதை வெளியிட்டிருந்தால், நாமும் நமது மனத்தை அதில் செலுத்தினால் பிரயாணம் செய்யாமலே அநுபவிக்கவும் முடியும். தமிழ்க் கவி ஒருவர் கல்யாணப் பிரயாணம் ஒன்றையே விவரிக்கிறார். ஊன்றிக் கவனிப்போம்.

சக்கரவர்த்தி தம் மைந்தன் கல்யாணத்திற்குப் பரிவாரங்களுடன் புறப்படுகிறார். 200 மைலுக்குமேல் பிரயாணம் செய்தாக வேண்டும். பிரஜைகளில் பாதிக்குமேல் கூடவே தொடர்ந்து விடுகிறார்கள். தேரிலும் யானையிலும் குதிரையிலும் சவாரி போகிறவர்கள் தவிரப் பெரும்பாலோர் வண்டிகளிலே பிரயாணம் செய்கிறார்கள். இரண்டு காத தூரம் போனவுடனே கூட்டம் ஒரு நாளைக்கு முகாம் போட்டு விடுகிறது. முகாமிடம் தடாகங்கள் உள்ள ரமணீயமான சோலை. காணுமிடமெல்லாம் கண்ணைக் கவரும் பூக்கள் நிறைந்த செடிகளும் கொடிகளுமாயிருக்கின்றன.

பூக்களின் பல்வேறு வர்ணங்களும் வனப்பும் வாஸனையும் நகரத்தில் விலைப் பூக்களையே வாங்கிச் சூடின பெண்களைப் பிரமிக்கச் செய்கின்றன. நகரத்தில் வாஸனைப் பூக் கிடைக்காவிட்டால் கனகாம்பரம், அதுவும் இல்லாது போனால் வர்ணக் கடிதாசிகளைக் கத்தரித்துச் செய்த போலிப் பூக்கள் சூடிய பெண்கள் சோலை மலர்களைச் சும்மாப் பார்த்துக் கொண்டிருப்பார்களா? அவற்றைப் பறிக்கக் கூட்டம் கூட்டமாகச் சோலைக்குள் பிரவேசிக்கிறார்கள். ஆடவர்களும் சும்மா விருக்கவில்லை. பூக்களைப் பறித்துத் தம் மனைவியர் கூந்தலில் தாமே சூட்ட ஆசை கொள்கின்றனர். காதலிக்குமுன் தாம் பறிக்கவேண்டுமென்று ஆடவர் அனைவரும் ஒருவரை யொருவர் போட்டி போட்டுக்கொண்டு, சோலையுள் புக முந்துகிறார்கள்.

சோலையுள் புகுந்த பெண்கள், வானத்தில் நக்ஷத்திரம்போல் அபரிமிதமாகப் பூத்திருந்த பூக்களைக் கண்டு ஆச்சரிய மிகுதியால் ஒருவர்க் கொருவர் பேசிக் கொண்டனர். பெண்களின் பேச்சொலி கேட்ட சோலைக் குயில்களெல்லாம் இனிமையாகக் கூவிக் கொண்டிருந்ததை நிறுத்திவிட்டன. குயில்கள் வாய் மூடியதற்குக் காரணம் அச்சம் காரணமாக வரும் கூச்சமல்ல. பெண்களின் குரல் இனிமைக்குத் தாம் தோற்றதாக நினைத்து நாணியதே காரணம். இனிமையாகப் பேசவல்லவர் முன்னிலையில் சாமானியர் எவர்தான் பேசத் துணிவார்? நாணி ஒடுங்குவது தானே உலக இயல்பு.

மூசிய கூந்தல் மாதர் மொய்த்தபேர்
அமலை கேட்டுக்
கூசின அல்ல பேச நாணின குயில்கள்
எல்லாம்;
வாசகம் வல்லார் முன்நின்று யாவர்
வாய்திறக்க வல்லார்?

[மூசிய — பரந்த பேர் அமலை — பேரொலி]

அன்னங்களும் அவ்வாறே பெண்களின் நடையழகுக்குத் தோற்று நாணத்தால் ஒதுங்கி மறைந்தன. பூங்கொடி போன்ற பெண்கள் பூங்கொடிகளையே நெருங்கி, கைக்கெட்டாமல் உயரப் பூத்திருந்ததை ஆசையோடு பார்த்தனர். பூக்களைப் பறிப்பதற்காகக் கொம்பினைத் தமது கைகளால் பற்றினர். பற்றியதும் அப் பூங்கொடிகள் பெண்களின் பாதங்களில் தாழ்ந்தன. தம்மிடத்திருந்த மலர்களைச் சொரிந்தன. வஞ்சிக் கொடி போன்ற மங்கையர்க்கு வணங்காத ஆடவர் யார்? என்பதைக் கவிச் சித்திரத்திலே கண்டு களிக்க.

செஞ்செவே கமலக் கையில் தீண்டலும்
நீண்ட கொம்பர்
தம் சிலம்படியால் மென்பூச் சொரிந்து
உடன் தாழ்ந்த என்றால்
வஞ்சி போல் மருங்குலார் மாட்டு யாவரே
வணங்கலாதார்

[செஞ்செவே—நன்றாக, கமலம்—தாமரைப்பூ, கொம்பர்—கொடி, சிலம்படி—சிலம்பணிந்த பாதத்தில், மருங்குலார் மாட்டு—இடையுடைய பெண்களிடம்]

ஆடவர்களும் தம் காதலிமார் கூந்தலில் சூட்ட வேண்டுமென்று அவசர அவசரமாகப் பூக்கொய்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒரு காதலன் ஸௌந்தர்யத்தால் மன்மதனை ஒத்திருந்தான். போர் என்ற சொல்லைக் கேட்ட உடனே அவனுக்கு உள்ளத்தில் அடங்காத உற்சாகம் பெருகுமாம். அந்த உற்சாகத்தால் உடலில் ஏற்படும் பூரிப்பை முகத்தில் தான் காண வேண்டும் என்பதில்லை. பூரித்து வீங்கும் தோளிலும் காணலாம் என்கிறார் கவி. தன் வீரத்தாலும் ஸௌந்தர்யத்தாலும் தன் காதலியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்வன் என்றே சொல்லலாம் இக் காதலனை.

ஆனால் அவன் உள்ளத்தையும் வசீகரிக்கும் பண்புகள் அவன் காதலியிடத்தில் இருந்தன. மேகம் போல் இருண்டு, சுருண்டு கற்றை கற்றையாய் அடர்ந்திருந்த தன் காதலியின் கூந்தல் அழகு அவன் நினைவிலிருந்து நீங்காமலேயிருந்தது. காதலியின் குயில் போன்ற இனிய குரல் அவன் காதில் எப்பொழுதும் ஒலிப்பது போலவே இருக்கும். இப்படிப் பரஸ்பரம் அன்பு கொண்டு ஈருடலும் ஓர் உயிரும் என்று சொல்லத் தக்க காதலன் காதலிக்குள்ளேதான் ஒரு லீலை நிகழ்ந்தது.

காதலன் காதலி ஞாபகமாகவே அதிலும் அழகிய அவள் கூந்தலை நினைவாக அதைப் பூக்களால் அலங்கரிக்க வேண்டும் என்ற ஆசையுடன் மலர்களைப் பறித்துக் கொண்டிருந்தான். நடந்து வரும் காலடிச் சத்தம் கேட்காமல் அவன் பின்னே வந்து நின்ற காதலியை அவன் கவனிக்கவில்லை. காதலி விளையாட்டாகத் தன் கைகளால் அவன் கண்களை மூடினாள். காதலன் 'யார்?' என்று கேட்டான். அக் கேள்வி கேட்டவுடனே விளையாட்டாகக் கண்ணை மூடிய காதலியின் உற்சாகமே போய் விட்டது. மனவேதனையின் மிகுதியால் காதலிக்கு நெருப்புப் போல் வெப்பமாகப் பெருமூச்சு வர ஆரம்பித்துவிட்டது.

போர் என்ன வீங்கும் பொருப்பு அன்ன
பொலம்கொள் திண் தோள்
மாரன் அனையான் மலர் கொய்திருந்தானை
வந்தோர்
கார் அன்ன கூந்தல் குயில் அன்னவள்
கண் புதைப்ப,
'ஆர்?' என்னலோடும், அனல் என்ன
வெதும்புகின்றாள்.

[பொருப்பு அன்ன — மலையைஒத்த, பொலம் கொள்— அழகுடைய, மாரன்— மன்மதன், அனையான்—ஒத்த(காதலன்), கார் — மேகம், அன்னவள் — காதலி, அனல் — நெருப்பு, வெதும்புகின்றாள்— பெரு மூச்சு விடுகிறாள்.]

மனைவி பெரு மூச்சு விடுவதற்குக் காரணத்தைக் கவி தம் சொல்லினால் தெரிவிக்கவில்லை; கவிதைக் கண்ணாடியில் காட்சிகளை உள்ளபடியே காட்டும் இச் சந்தர்ப்பங்களில் கவி தம் சொற்களால் காரணம் காட்ட ஆரம்பித்தால் அது ஒரு பிரசாரமாய் விடும். அதனால் காவிய நாடகக் கலையழகுக்கே பழுது ஏற்படும். ஆங்கில மஹா கவி ஷேக்ஸ்பியரும் இது போன்ற சந்தர்ப்பங்களில் படிப்போரையே ஊகித்தறிய விட்டு விடுவதைப் பலர் பாராட்டுகின்றனர்.

கண்களை மூடியதும் கணவன் 'ஆர்?' என்று கேட்ட போது மனைவிக்குச் சங்

தேகம் தோன்றி விட்டது. 'இவரிடம் நம்மைப்போல் தொட்டு விளையாடுவதற்கு உரிமை பெற்ற பெண்கள் பலர் இருக்க வேண்டும். அதனால் தான் 'யார்' என்று கேட்கிறார்' என்று வரும் நினைப்பிலே மனைவிக்கு வேதனை பிறந்தது. இது ஊகிக்க வேண்டிய விஷயம். ஆழ்ந்த சிந்தனைக்கு விஷயமாக்கினால் இதுவே நல் உபதேசமுமாகும்.

கவிஞர் நம்மை மற்றோர் லீலைக் காட்சிக்கு அழைத்துச் செல்கிறார்.

உபயோகத்திற்கு பிரசித்தி பெற்றவை

RAMAN INKS

அழகாக எழுதுவதற்கு

PACHOLI HAIR TONIC

பச்சோலி ஹேர் ஆயில்

கூந்தலின் அழகிய வளர்ச்சிக்கு

PREVENTO PHENYLE

சிறந்த சுகாதார வசதிகளுக்கு

HIND

WAX CANDLES

பிரகாசமான நீடித்த வெளிச்சத்திற்கு

Manufacturers :

RAMAN INKS Co., Regal Agencies,

186, Royapettah High Road, :: MADRAS.

முகாமில் ஒருவன் தன் இரு மனைவிமார்களில்மூத்தவளைமட்டும் அழைத்து வந்திருந்தான். வந்த இடத்தில் இளைய மனைவியின் பெயரை இட்டு மூத்தவளை அழைத்தான். அழைத்த போது மூத்தாளுக்குப் பற்கள் வெளியே தோன்றச் சிரிப்பே உண்டாய்விட்டது அதே நேரத்தில் கயல்மீன்போல் பிறழும் கண்களிலிருந்து களகளவென்று நீர்த்துளி சிந்தியது.

வளைபயில் முன்கை ஒர் மயில்
[அனுள் தனக்கு
இளையவள் பெயரினைக் கொழுநன்
[ஈதலும்
முளைஎயிறு இலங்கிட முறுவல் வந்தது
களகள உதிர்ந்தது கயல்கண் ஆலியே.

[வளைபயில் — வளைகள் நெருங்கிய, மயில் அனுள் தனக்கு—மயிலை ஒத்த மூத்தாளிடம், கொழுநன் — கணவன், ஈதலும் — இட்டு அழைத்தபோது, முளை எயிறு இலங்கிட—முளைபோன்ற பற்கள் வெளித் தோன்ற, முறுவல்—சிரிப்பு, ஆலி—நீர்த்துளி.]

கணவன் மறதியில் இளையவள் பெயரைச் சொல்லி அழைக்கும்போது 'இல்லாத இடத்திலும் அச் சக்களத்தி ஞாபகமா?' என்ற நினைப்பிலே கோபம் வருகிறது. கோபம் உண்டாகாமல் கோபச் சிரிப்பாகவும் வெளியே தோன்றி விடுகிறது. 'எதிரே இருந்தாலும் என்னை நினைப்பதே இல்லை இவர்' என்று எண்ணும்போது மனவேதனை அதிகரிக்கிறது. அவ்வேதனை கண்ணீராக வெளிப்படுகிறது. இதுவும் ஒரு லீலையைக் காட்டும் விநோத சித்திரம் தான். ஊன்றிக் கவனித்தால் முந்தியதைப் போலவே ஒரு நல் உபதேசம் என்று விளங்கும்.

கவிஞன் வருணிக்கும் இரண்டு விநோத லீலைகளையும், எக்ஸ்ரே முதலிய கருவிகளாலும் காணமுடியாத பெண்கள் ஹ்ருதய பாவத்தை உள்ளபடியே எடுத்துக்காட்டும் கவிதைக் கண்ணாடி என்றே சொல்லவேண்டும். தம் மனைவிமார் பிற புருஷரிடம் காதல் கொள்வதையும் அதனால் ஒழுக்கம் தவறுவதையும் ஆடவர் மனம் சகிப்பதில்லை. அதே போலத்தான் பெண்களும் தம்மை விவாகம் செய்துகொண்ட புருஷர் அந்நியஸ்தரீகளிடம் அன்புகொண்டு ஒழுக்கம் தவறுவதைச் சகிப்பதில்லை. "பிற பெண்களிடம் அன்பு இருக்குமோ?" என்று சந்தேகிக்க இடம் கொடுக்கும் வார்த்தையோ சிறிய சம்பவமோ அருளுக்கும் அன்பிற்கும் தியாகத்திற்கும் உறைவிடமான பெண்ணின் ஹ்ருதயத்தைப் பிளக்கும் என்ற இயற்கை இயல்பே இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது.

பெண்கள் கற்பின் அவசியத்தையே எடுத்துக்காட்டுவது சாதாரண கவிகளின் வழக்கம். சுயநலமும் இனவேற்றுமையும் அறவே ஒழிந்த உலக மஹா கவிகள் பெண்களின் கற்போடு ஆண்கள் கைக்கொள்ள வேண்டிய ஏகதார விரதத்தின் அவசியத்தையும் அதி நுட்பமாக எடுத்துக் காட்டுவார்கள். இப்படி ஆணையும் பெண்ணையும் சரிநிகர் சமானமாகப் பாவித்துப் பிறரும் அவ்வாறே உணருமாறு நாடகங்கள் ஆக்கிய பெருமை ஐரோப்பாவில் ஷேக்ஸ்பியருக்கு உண்டு.

இவ்விநோத லீலைகளைக் கவிக்கண்ணாடியில் காட்டிய புலவரும் ஆணையும் பெண்ணையும் சரிநிகர் சமானமாகவே பாராட்ட நுட்பமாக உபதேசிக்கிறார். 'இவரை யார்?' என்று நினைக்கிறீர்கள். கவிச்சக்ரவர்த்தி என்று கொண்டாடப்படும் கம்பர்தான். சீதா கல்யாணத்திற்குப் போகும் தயரதன் வழியில் முகாமிட்டபோது இச்சம்பவங்கள் நடந்ததாகச் சித்தரிக்கிறார். ஆடவர் பெண்கள் இருசாராருக்கும் ஏற்ற ஏகதார ஒழுக்கத்தையும் கற்பையும் அனுஷ்டித்துக்காட்டிய சீதா ராமர் தம்பதிகளின் விவாகத்திற்குச் சற்று முன்னே இவ் விநோதக் காட்சிகளை ஜோடித்தமைத்த கற்பனைத் திறமையை ரஸிகர் மறக்க முடியாது.

லண்டன் பத்திரிகைகள்

கே. கோபாலன்

முதன் முதல் கீழ் நாடுகளிலிருந்து லண்டன் நகரத்துக்கு வந்தவர் ஒருவருக்கு முக்கியமாகக் கண்ணில் படுவது ஒவ்வொருவர் கையிலும் ஒரு பத்திரிகைதான்,

வீதிகளிலும், பஸ் வரிசைகளிலும், ரயில் வண்டிகளிலும் போஜன சாலைகளிலும் ஒவ்வொருவரும் ஒரு செய்திப்பத்திரிகையை வைத்துப் புரட்டிக்கொண்டிருப்பார்கள். கையில் ஒரு பத்திரிகையை வைத்திராத ஒருவரை எங்கும் காண்பது அரிது.

நமது நாட்டில் வீதி முனையிலோ, வாயில் திண்ணையிலோ நாம் ஒரு செய்திப்பத்திரிகையைத் திறந்துவிட்டால் ஒரு நிமிடத்தில் பத்துப்பேர்கள் சூழ்ந்துகொண்டு தலைக்கு ஒரு பக்கமாகப் பங்கிட்டுக் கொண்டு பார்க்க ஆரம்பித்து விடுவார்கள். ஆனால் எந்த இடத்திலிருந்தாலும் இங்கே பயமில்லாமல் நாம் பத்திரிகையைப் பிரித்து வாசிக்கலாம். ஏனென்றால் பக்கத்திலுள்ள நண்பர் கையில் பத்திரிகை யில்லா விட்டாலும் நம் பிடரியில் மூச்சுவிட்டுக்கொண்டு எட்டிப்பார்க்கும் வழக்கம் இங்கு இல்லை.

> லண்டன் ராயிடர் தலைமை ஸ்தாபனத்தில் "பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா" சார்பாக இந்தியாவுக்கெனச் செய்திகளை 'எடிட்' செய்து வரும் ஸ்ரீ கே. கோபாலன் அவர்கள் இக் கட்டுரையை எழுதியுள்ளார். இவர் அவ்வப்போது "காவேரி"க்குக் கட்டுரைகள் எழுத இசைந்துள்ளார் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்குள்ளவர்களுக்குக் காலையில் எழுந்தவுடன் தேத்தண்ணீர் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் செய்திப் பத்திரிகை. பொதுவாகக் காலை, மாலைப் பத்திரிகைகள் 1 அல்லது $1\frac{1}{2}$ பென்னிகள் விலை. லண்டன் டைம்ஸ் பத்திரிகை போன்றவை சில 3 பென்னிகள் வரையிருக்கும். ஒரு பென்னி என்பது ஏறக்குறைய 1 அணு அல்லது இலங்கை 6 சதம்.

லண்டனில், சில தொழிற் பத்திரிகைகளை நீக்கி, இப்பொழுது 24 செய்திப் பத்திரிகைகள் இருக்கின்றன. இவற்றுள் 12 காலைத் தினசரிகள். மூன்று மாலைத் தினசரிகள். ஞாயிறு தோறும் வெளிவரும் செய்திப் பத்திரிகைகள் 9.

காலையில் ராஜீய, உலக விஷயங்களில் அதிக கவனம் செலுத்துபவர்களுக்காக டைம்ஸ் என்ற பத்திரிகையும் டெய்லி டெலிகிராப் என்ற பத்திரிகையும் என்று சொல்லலாம். இவைகள் மற்றப் பத்திரிகைகளைவிடச் சற்று விலை கூட. டைம்ஸ் 3 பென்ஸ். டெய்லி டெலிகிராப் $1\frac{1}{2}$ பென்ஸ். இவைகள் பொதுவாக கான்ஸர்வேடிவ்பத்திரிகைகளாக இருப்பதோடு சற்று உயர்ந்த நிலையில் உலகச் செய்திகளைப் பிரசுரிக்கும், ஆனால் இந்தப் பத்திரிகைகளை வாங்குபவர்கள் படிப்பாளிகளான சிலரே. அதிலும் விலை காரணமாக, மற்றப் பத்திரிகையுடன் ஒப்பிட்டால், டைம்ஸ் வாங்குபவர்கள் மிகவும் சொற்பம்.

ஆனால் பொது மக்கள் விரும்பி லக்ஷக்கணக்கில் வாங்குவது டெய்லி எக்ஸ்பிரஸ், டெய்லி மெயில், டெய்லி ஹெரால்ட், நியூஸ் கிரானிகள் போன்ற பத்திரிகைகள். இதில் முதலிரண்டும் கான்ஸர்வேடிவ் கக்ஷியைச் சேர்ந்தவை. ஹெரால்ட் முற்போக்கான தொழிற்கக்ஷியைச் சார்ந்தது. கிரானிகள் மிதவாதக் கொள்கையுடையது. இவைகள் ஒவ்வொன்றும் தினசரி, 20 லக்ஷம் 30 லக்ஷம் பிரதிகள் விற்பனையாகின்றன.

தினசரிகளுள் மிகவும் விரும்பி வாங்குவது டெய்லி மிர்ரர் என்றபட தினசரி.

இப்பத்திரிகை 36, 37 லக்ஷம் பிரதிகள் தினம் விற்பனையாவதாகச் சொல்லப்படுகிறது. மற்றொரு படப்பத்திரிகை டெய்லி கிராபிக் என்பதும் வெகுவாய் விற்பனையாகிறது. இவ்விரண்டு பத்திரிகைகளிலும் அன்றன்றைய செய்திகளை உடனுக்குடன் படங்களுடன் காணலாம். தினமும் ஆயிரக் கணக்கான பவுன்கள் செலவிட்டுப் படமெடுத்து ஒருவருக்கொருவர் போட்டியிட்டுப் பிரசுரிப்பதால் நடக்கும் சம்பவம் ஒவ்வொன்றையும் சிலமணி நேரத்துக்குள் சித்திரத்தில் கண்டு ஆனந்திக்கலாம்.

இவையன்றி, பொதுவுடைமைக் கக்ஷி, கம்யூனிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்த டெய்லி ஒர்க்கர் என்ற ஒரு பத்திரிகையும் உலாவுகிறது. வியாபாரிகளுக்கும் தனவான்களுக்குமென்று பிரத்தியேகமான பினான்ஷயல் டயம்ஸ் என்று பொருளாதார விஷயப்பத்திரிகையும் விளையாட்டுகளில் ஈடுபட்டவர்களுக்கு ஸ்போர்ட்டிங் லைப் என்ற தினசரியும் இருக்கின்றன.

இவ்விதமே ஞாயிற்றுக்கிழமைகளிலும் உயர்தரப் பத்திரிகைகள் இரண்டும், ஐந்து பொதுஜனப் பத்திரிகைகளும் இரண்டு சித்திரப் பத்திரிகைகளும் இருக்கின்றன.

நம் நாட்டின் பத்திரிகைப் பிரதிகளைப் பற்றி யறிந்த நீங்கள் இப்பத்திரிகைகளின் சங்கியைகளைக் கேட்டால் பிரமித்துப்போய் விடுவீர்கள். முதலில் சொன்னபடி டைம்ஸ் என்ற பத்திரிகை 2½, 3 லக்ஷம் விற்பனையுடன் மிகவும் குறைந்த சங்கியையுடையதாகக் கருதப்படுகிறது. மற்றவை ஒவ்வொன்றுக்கும் 10 லக்ஷத்திலிருந்து 40 லக்ஷம் வரை தினசரி விற்பனை. வாரப் பத்திரிகையான நியூஸ் ஆப் தி வொர்ல்டு என்ற பத்திரிகை 75 லக்ஷத்திற்குமேல் இங்கிலாந்திலேயே அதிக பிரதிகள் விற்பனையாகும் பத்திரிகையாய்க் கருதப்படுகிறது.

லண்டன் பத்திரிகைகள் எல்லாவற்றின் சங்கியைகளைக் கூட்டிப் பார்த்தால் தினமும் காலை 155 லக்ஷத்திற்கு மேல் பிரதிகள் விற்பனையாகின்றன. மாலையில் 35 லக்ஷத்திற்குமேல். ஞாயிற்றுக்கிழமை தோறும் 235 லக்ஷம் ஜனங்களுக்குமேல் பத்திரிகை வாங்குவதாகச் கொள்ளலாம்.

இந்த லண்டன் பத்திரிகைகள் ஆயிரக் கணக்கில் இத்தேசத்து மூலைமுடுக்குகளிலெல்லாம் சென்று விற்பனையாகின்றன. இவையன்றி லண்டனுக்கு வெளியே கிளாஸ்கோ, மாஞ்செஸ்டர் போன்ற சிறிய நகரங்களில் ஆங்காங்கு உள்ளூர்ச் செய்திப் பத்திரிகைகளும் உலவுகின்றன. இவைகள் காலை மாலை சேர்ந்து ஒரு 100 லக்ஷம் மதிப்பிட்டால் இந்நாட்டில் தினமும் சுமார் 290, 300 லக்ஷம் பத்திரிகைப் பிரதிகள் விற்பனையாகின்றன. இந்நாட்டு ஜன சங்கியை சுமார் 450 லக்ஷம்; ஆண், பெண், குழந்தை அடங்கலாக.

ஆகையால் சிறு குழந்தைகளையும், மிகவும் வயோதிகர்களையும் நீக்கினால், பணக்காரர் ஏழை என்ற பேதமில்லாமல் இங்குள்ள ஒவ்வொரு ஆண், பெண்ணும் தினமும் ஒரு பத்திரிகையாவது வாங்கி வாசிக்கிறார்கள் என்பது வெளியாகும்.

காவேரி சந்தா விகிதம்

சந்தா விபரம்	உள் நாடு, ஸிலோன் & பர்மா.	மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு
ஒரு வருஷம்	6 0 0	7 8 0
அரை வருஷம்	3 0 0	3 12 0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0 8 0	0 10 0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

இப்படியிருக்க, இத்தேசத்தில் ஜனங்களிடையே ஜனநாயக உணர்ச்சி நன்கு பரவியிருப்பது ஆச்சரியமில்லை. தோட்டத்தில் உலவிவரும் சீமான் ஒரு தனியிடத்தில் காலையிலோ மாலையிலோ தம் டைம்ஸ் பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந்தால் அவருக்காகக் காத்திருக்கும் அவருடைய மோட்டார் வண்டியோட்டியும் தன் பையிலிருந்து ஒரு தொழிற்கக்ஷிப் பத்திரிகையை வைத்துக்கொண்டு வாசிக்க ஆரம்பித்துவிடுவான்.

இந்நிலையில் செய்திப் பத்திரிகைகள் ஜனங்களிடையே மிகவும் செல்வாக்குடையனவென்று சொல்லவேண்டுமா. நம்நாட்டில் பொதுவாகச் செய்திப் பத்திரிகை யென்பது மேற்கல்வி பயின்ற சில ஆயிரம் பெயர்களுக்கே. பெரும்பான்மையோர் எழுதப்படிக்க அறியாதவர்கள். சிலர் கல்வியறிவிருந்தும் பத்திரிகை வாசிக்கும் பழக்கமில்லாதவர்கள். அங்கேயே ஒரு பத்திரிகை ஜனங்களிடையே நன்மைக்கும் கெடுதிக்கும் ஏற்ற பிரசாரக் கருவியாகக் கருதப்பட்டால் இங்கு இப்பத்திரிகைகளின் பிரசார பலம் எவ்வளவென்று சொல்லவும் வேண்டுமா?

இவ்வளவு வன்மை யிருப்பதால் பத்திரிகைகளுக்கும் பத்திரிகைத் தொழிலிலிருப்பவர்களுக்கும் இங்கே சமூகத்தில் விசேஷ மதிப்பு. அதே மாதிரி ராஜதந்திரிகளுக்கும் ராஜாங்க உத்யோகஸ்தர்களுக்கும் "பொது ஜனம்" என்றால் சற்றுப் பயமும் நல்ல மரியாதையும் இருப்பதால் அரசாங்க நடவடிக்கைகளில் எப்பொழுதும் சற்று ஜாக்கிரதையும் கவனமும் இருக்கின்றன. அதனாலேயே இந்நாட்டில் ஜனநாயகம் ஒரு சார்பில் ஏகாதிபத்யமாகவும் மற்றொரு சார்பில் பொதுவுடைமையாகவும் மாறாமல் இந்தக் கொந்தளிப்பான காலங்களில்கூட நடுநிலையில் நின்றுவர ஹேதுவாயிருக்கிறது.

விரும்பிய உலோகம்

(நா. கி. நாகராசன்)

தீபாவளியின் போது குழந்தைகள் வெடிக்கும் விளையாட்டுத் துப்பாக்கிகூட இக்காலத்தில் நம் நாட்டில் செய்யப்படுவதில்லை. ஆகையால் வேறு போர்க்கலங்களைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். ஆனால் பழங்காலத்திலோ நம் நாட்டுக் கத்திகள் உலகெங்கும் பிரசித்த மடைந்திருந்தன. கூர்மைக்குப் பேர் போன "தமாஸ்கஸ் கத்திகள்" உண்மையில் நம் நாட்டில் செய்யப்பட்டனவாகும். எஃகுத் தொழிலில் அக்காலத்தவர் எவ்வளவு முன்னேறியிருந்தனர் என்பதற்கு இது நல்ல சான்றாகும். நாட்டில் ஆங்காங்கு நாட்டப் பெற்றிருக்கும் சாசனத் தூண்களிற் பல எஃகினால் ஆனவை. அவை இன்றைக்கும் துருவேறாது இருந்து நம் முன்னோரது உலோகத் தொழில் திறமைக்குப் புகழ்த் தம்பமாக விளங்குகின்றன. உலோகக் கலப்புகளை (Alloys) ஆயிரக் கணக்கிற் கையாளும் இக்காலத்தில் இதையெண்ணி நாம் ஓரளவு பெருமைப் படலாம்.

"பழமை இருந்த நிலை" போகட்டும். தற்கால நாகரிகத்திற்கு உலோகக் கலப்புகளே அடிப்படையாக உள்ளன எனலாம். உலோகங்களால் மானிடன் எய்தும் பெரும் பயன் அவற்றைக் கலப்புகளாகச் செய்ய இயல்வதால் தான். விஞ்ஞானியின் உதவியால் தற்காலத்தில் சுமார் ஐயாயிரம் கலப்புகள் வழங்குகின்றன. தேவையான பண்புகள் கொண்டு நாம் விரும்பிய உலோகப் பொருளை நமக்கு அளிக்கும் திறமை உள்ளவாறு இத்துறை முன்னேற்ற மடைந்துள்ளது.

சுத்தமான உலோகங்களை அவ்வாறே பயன்படுத்தும் வகைகளை நாம் விரல் விட்டு எண்ணி விடலாம். கலப்பற்ற செம்பு மிருதுவான, வலியற்ற ஓர் உலோகம். அதை அப்படியே பயன் படுத்த இயல்வதில்லை, சுத்தத் தகரமோ இதைவிடப் பயனற்ற பொருள். ஆனால் இவ்விரு உலோகங்களையும் கலந்து பெறும் வெண்கலமோ உறுதியும் வலிமையுமுள்ள ஒரு கலப்பு. இதை ஆயிர வகைகளிற் பயன்படுத்தலாம். நாம் கையாளும் எல்லா உலோகங்களும் இவ்வாறே.

கலப்புகளைச் செய்யப் பழங்காலத்திலிருந்து வழங்கி வரும் எளிய முறை, பல உலோகங்களைத் தனித் தனியே உருக்கி ஒன்று சேர்ப்பதே. இதற்குப் பதிலாக உலோகங்களின் கனியங்களையே (Ores) கலந்து உருக்கிக் கலப்பைப் பெறுவதும் உண்டு. செம்பையும், தகரத்தையும் உருக்கிச் சரியான விகிதத்தில் கலந்து வெண்கலம் செய்யப்படுகிறது. மிகவும் எளிய இம்முறையில் பல கலப்புகள் செய்யப் படுகின்றன. ஆனால் கலக்கும் உலோகங்களின் உருகு பதன்கள் (Melting Points) மிகவும் வேறு பட்டால் இம்முறையில் பல தொல்லைகள் நேரும். அப்போது முதலில் இரு உலோகங்களையும் சம விகிதத்திற் கலந்து இடைப் பொருளொன்று தயாரிக்கப்படும். நமக்குத் தேவையான கலப்பில் அதிகமாக உள்ள உலோகம் இவ்விடைப் பொருளுடன் சேர்க்கப்பட்டு அக் கலப்புப் பெறப்படும். செம்பையும், அலுமினியத்தையும் சேர்த்துத் தயாரிக்கப் படும் கலப்பு இவ்வாறுதான் தயாரிக்கப்படுகிறது.

சில சமயங்களில் இம் முறையும் பயன் தராமல் இருக்கலாம். அப்போது இரு உலோகங்களையும் தூளாக்கி அவற்றைச் சரியான விகிதத்தில் ஒன்று கலந்து அவ்விரு உலோகங்களின் உருகு பதனுக்குச் சற்றுக் குறைவான வெப்பத்தில் சூடேற்றுவதால் அவை சீராகக் கலந்து புதுப் பொருளாகின்றன. மிக அருமையாகக் கையாளப்படும் மற்றொரு முறையும் உண்டு. இதில் ஓர் உலோகத்துடன் மற்றொன்றைக் கலக்க, அது மற்றதன் ரசாயனக் கரைவில் இடப்பட்டு, மின்சாரம் பாய்ச்சப்படும். முலாம் பூசும் முறையையொத்த இதனால் முதல் உலோகத்தின் மேல் இரண்டாவது நுண்ணிய பொடியாகப் படிந்து கலப்பைத் தரும்.

கலப்புப் பொருள்களின் தன்மைக்கேற்றவாறு அவை இருவகைகளாகப் பிரிக்கப்படும். முதல் வகைக் கலப்பில் ஒரு பொருள் மற்றொன்றில் கரைந்து 'திண்மைக் கரைவு' (Solid Solution) என்னும் பொருளைத் தருகிறது. இத்தகையகலப்பில் சேர்ந்துள்ள இரு பொருள்களையும் தனித்தனியே பிரித்தறிய இயலாது. அப்பொருளைப் பெருக்காடியின் (Micros-cope) கீழ் வைத்துப் பார்த்தாலும் அதுசீரான பொருளாகவே தெரியும். உப்பு தண்ணீரில் கரைவதற்கும் இதற்கும் வேற்றுமையே இல்லை.செம்பையும்,நிக்கலையும் சேர்த்துப் பயனுள்ளஒரு கலப்பைச் செய்கின்றனர். அது இத்தகையதே.

இரண்டாம் வகைக் கலப்பில், கலந்துள்ள இரு பொருள்களும் ரசாயன முறையில் ஒன்றுகூடி ஒருவகை ரசாயனக் கூட்டை (Compound) அளிக்கின்றன. அலுமினியத்துடன் சிறிதளவு செம்பைக் கலந்து உயர்ந்த சூட்டிலிருந்து சிறிது சிறிதாகக் குளிர்வித்தால் கலப்பிலுள்ள செம்பு வேருகப் பிரிந்து அலுமினியத்துடன் கூடி ஒரு கூட்டைத் தருகிறது. இப்பொருள் இடையுலோகக் கூட்டு (Inter metallic compound) எனப்படும். செம்புடன் கூடாத அலுமினியத்தில் ஒரு பகுதி எஞ்சியுள்ள செம்பைக் கரைத்துவிடும். ஆகையால் கடைசியாக அலுமினியமும் செம்பும் கூடிய கூட்டும், செம்பு கரைந்த அலுமினியமும் பொருளில் இருக்கும் கூட்டுப் பொருள் ரசாயனச் சேர்க்கையால் ஏற்பட்டதாகலின் மிக உறுதியாக இருக்கும். இத்துடன் திண்மைக் கரைவும் சேருவதால் வலிமையும் உண்டாகிறது. ஆகையால் கடைசியாகக் கிடைக்கும் பொருள் வலிமையும், உறுதியும் கொண்டதால் மிகப்பயனுள்ளதாகிறது. கலப்புகளில் இவ்வகையே மிக அதிகம். ஆனல் வேண்டிய அளவு உறுதியையும், வலிமையையும் பெறுமாறு ஒரு கலப்பை இம்முறையில் செய்யத் தனிப்பட்ட கவனம் தேவை.

ஓர் உலோகப் பொருளைப் பெருக்காடியினுலோ, எக்ஸ் கதிர்களின் (X-rays) உதவிகொண்டோ ஆராய்ந்தால் அதில் அணுக்கள் அமைந்துள்ள வகைதெரியும். வேறு பொருட் கலப்பற்ற ஓர் உலோகத்தை ஆராய்ந்தால் அதில் அணுக்கள் மிக ஒழுங்கான முறையில் அடுக்கடுக்காய் அமைந்திருப்பது புலனுகும். சீரான அமைப்புகள் கொண்ட ஓர் உலோகத்துடன் இன்னெரு பொருளைச் சேர்க்கும் போது அப்பொருளின் அணுக்கள் உலோக அணுக்களிடையே புகுந்து அணுவமைப்பின் வடிவையே மாற்றி விடுகின்றன. இதனுல் உலோகத்தின் சீரான தன்மை போய் அதுவேறு அமைப்புக் கொண்டதாகிறது. இவ்வமைப்பில் மாறுதல்கள் விளைப்பது கடினம். ஆகையால் அது மாறுதலை எதிர்த்து நிற்கும் உறுதியான பொருளாக மாறுகிறது, இதுதான் சீரான கலப்புகளுக்கு உறுதியைத் தருகிறது. முதல் வகைக் கலப்புகளான கரைவுகளில் இவ்வாறு நிகழ்வதால் அவை உறுதிகொண்டு விளங்குகின்றன.

இரண்டாம் வகைக் கலப்பிலோ புதுப் பொருளொன்று தோன்றுவது விளக்கப்பட்டது, இதனுல் பழைய அணு அடுக்குகள் முற்றிலும் அழிந்து வேறு அடுக்குகள் தோன்றுகின்றன. இதனுல், கலக்கும் பொருள்களில் இல்லாத புதிய இயல்புகள் கலப்பில் தோன்றவழியுண்டு. ஆகையால் இவ்வகையில் புதுப் பொருள்களைச் செய்ய இயல்கிறது. பொருள்களின் அணுவமைப்பை அறிதல் இப்போது எளிதாகிவிட்டது. ஆகையால் அதைத் தேவையானவாறு மாற்றியமைத்து, நாம் விரும்பும் இயல்புகள் கொண்ட ஒரு கலப்பைத் தயாரிக்க எப்பொருள்களை எவ்விகிதத்தில் சேர்க்க வேண்டும் என முன் கூட்டியே அறிய முடிகிறது.

இக்காரணத்தால்தான் தற்கால விஞ்ஞானம் எண்ணற்ற புதுப் பொருள்களை அளித்துதவும் திறமையைப் பெற்று விட்டது. சென்ற போரின் போது சிறந்த குணங்களையுடைய பல கலப்புகள் கண்டு பிடிக்கப் பட்டன. அவை போரில் பயன் பட்டதோடு இப்போது நமது அன்றாட வாழ்க்கையிலும் வழக்கத்திற்கு வந்துவிட்டன. எஃகில் மட்டும் தற்போது இரு நூறு வகைகள் வழங்குகின்றன. அவற்றில் ஒவ்வொன்றும் தனிப்பட்ட இயல்புகள் கொண்டு பயனுள்ள பொருளாக விளங்குகிறது. துருப்பிடிப்பதால்மட்டும் ஆண்டிற்கு இரண்டு கோடி டன் எஃகு பாழாகி வந்தது. எஃ

குடன் சிறிது குரோமியத்தைக் (Chromium) கலப்பதால் துருப்பிடிக்காத எஃகுக் கலப்பொன்று கிடைக்கிறது. இதனால் அவ்வளவு எஃகும் பாழாவது தடுக்கப் படுகிறது. இக் கலப்பு கரையேறா எஃகு (Stainless steel) என்னும் பெயர் கொண்டு இப்போது எங்கெங்கும் வழங்குகிறது. வெள்ளியைப் போலுள்ள கரையேறா எஃகுப் பாத்திரங்களை இப்போதே அனேக வீடுகளில் புழங்குகின்றனர். டங்ஸ்டன் (Tungsten) கலந்த எஃகுக் கலப்பால் ஆன எந்திர உறுப்புக்கள் மிக வேகமாக இயங்கும் எந்திரங்களில் இன்றியமையாதனவாகி விட்டன. உராய்வினால் சூடேறிப் பழுக்கக் காய்ந்த பின்னரும் இவை முனை மழுங்காது வேலை செய்யும் தன்மை யுடையன. 'ஸ்டெல்லைட்' (Stellite) என்னும் வேறொரு கலப்போ இதை விட அதிசயமான பண்புடையது. அது சூடேறச் சூடேற இன்னும் உறுதி கொண்டதாகிறது. இதுவும் இப்போது எந்திரத் தொழிலில் முக்கியமான பொருளாக விளங்குகிறது.

இவற்றைத் தவிர இரும்பில்லாத கலப்புகள் எத்தனையோ! உலோகங்களில் எஃகு வகித்து வந்த முதலிடத்திற்கு இப்போது அலுமினியம் போட்டியிடுகிறது. அதைப் பலவகைக் கலப்புகளாகச் செய்ய முடிவதே இதன் காரணம். அலுமினியத்துடன் சிறிதளவு செம்பு, சிலிகன் (Silicon) முதலிய பொருள்களைச் சேர்த்துப் பெறும் புதுவகைக் கலப்புகளிற் பல நல்ல வலிமையும், கம்பியாகும் இயல்பும், துருவேறாத தன்மையும் கொண்டன. இவற்றை வார்ப்பது மிக எளிது. மோட்டார் எந்திரங்களிலும் விமான எந்திரங்களிலும் இவை பயன்படுகின்றன. எஃகைவிட இலேசாகவும், ஆனால் அதற்குச் சமமான உறுதியையு முடைய இக் கலப்புகள் விமானத் தொழிலில் பெரும்பங்கு அடைகின்றன. "டுராலுமின்" (Duralumin) என்னும் அலுமினியக் கலப்பு ஒன்றே அலுமனியத்தின் பயனைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்துள்ளது. செம்பு, மக்னீஷியம் (Magnesium) இவ்விரு உலோகங்களையும் கொண்ட இது விநோதமான ஒரு குணமுடையது. நாள் செல்லச் செல்ல இதன் உறுதியும் அதிகரிக்கும். ஆகையால் இது "காலத்தால் உறுதியாகும் பொருள்" எனப்படும். எஃகு மட்டும் பயன்பட்டுவந்த பல தொழில்களில் இது இப்போது பயன்படுகிறது. இத்தகைய வேறு கலப்புகளும் உண்டு.

இவற்றைத் தவிர வேறு உலோகக் கலப்புகளும் பல உள. அவற்றையெல்லாம் ஈண்டுக் குறிப்பிடவும் இயலாது. செம்பு துத்தநாகம் இவ்விரு உலோகங்களிலிருந்து கிடைக்கும் ஒரு கலப்பு மஞ்சள் நிறமும், நிலையான பளபளப்பும் கொண்டு, தங்கத்திற்குப் போலியாய், "மினுர்வதெல்லாம் பொன்னல்ல" என்னும் பழமொழியை நமக்கு நினைவுறுத்துகிறது. "ஆல்நிகோ" (Alnico) என்னும் கலப்பு நிக்கல், கோபால்ட் (Cobalt) இவற்றால் ஆனது. இது மிக வலிவான காந்த சக்தியுடையது. ஓர் அவுன்சு நிறையுள்ள ஆல்நிகோ காந்தம் வாட்ட சாட்டமான மனிதனது நிறையைத் தாங்க வல்லது. காந்தங்கள் பயன் படும் கருவிகளில் இக் கலப்புப் பெரிதும் பயன் படுகிறது.

தேவையான இயல்புகள் கொண்டவாறு ஒரு கலப்பைத் தயாரிக்க அதிலுள்ள பொருள்களையும், அவற்றின் விகிதத்தையும் கட்டுப்படுத்தினால் மட்டும் போதாது. இது அவற்றைச் சேர்க்கும் வகையையும் பொறுத்தது. ஒரு கலப்பின் தன்மையை மாற்ற "வெப்பச் செய் முறை" (Heat-treatment) என்னும் முறையொன்று கையாளப்படுகிறது. ஒரு கலப்பை அதன் உருகு பதனுக்குச் சற்றுக் குறைவாகச் சூடேற்றி அதைக் கட்டுப்பாடான வீதத்தில் குளிர்விப்பதால் அதன் தன்மை மாறி விடும். ஒரே எஃகுத் துண்டைச் சூடேற்றிப் பல்வேறு வீதத்தில் குளிர்விப்பதால் அதன் தன்மை ஒவ்வொரு தடவையும் வெவ்வேறாக இருப்பதைக் காணலாம். இதுதான் "வெப்பச் செய்முறை" யின் தத்துவம். உலோகத் தொழிலில் இம்முறை இப்போது வெகுவாக வழங்குகிறது. இதனால் கலப்புகளின் பயன் பெரிதும் அதிகரித்துள்ளது. இம்முறை கண்டு பிடிக்கப்படுமுன் கனவிலும் கருத இயலாத பண்புகளை ஒரு கலப்பு இம் முறையால் பெறலாம். விரும்பிய உலோகத்தை நாம் பெற இதுவும் உதவி புரிகிறது.

நாணயம் — அனுபவம் — நம்பிக்கையில்
புகழ்பெற்ற

மயிலாப்பூரின் பழமையான பட்டு ஜவுளிக்கடை

வரும் நவராத்திரி, தீபாவளி பண்டிகைகளுக்கும் மற்ற விசேஷங்களுக்கும் அவசியமான உயரிய பட்டுப் புடவைகள், பலவித வர்ணங்களிலும், பலவித நவீன மோஸ்தர்களிலும் எங்களது மேற்பார்வையில் நன்கு தயாரிக்கப்பட்டு, கொள்ளேகால், காஞ்சிபுரம், பெங்களூர் முதலிய இடங்களிலிருந்து 10, 9, 6 கெஜங்களில் ஏராளமாக வந்திருக்கின்றன,

சென்ற 46 வருடங்களாக நிபுணர்களைக்கொண்டு நாங்கள் சிறந்த முறையில், முதல்தரமான பட்டு—உத்தரவாதமான சாயம்—ஜரிகை—இவைகளை உபயோகித்து புடவைகள் தயாரிப்பதே எங்களது புகழுக்கும், பெயருக்கும் காரணம். மேலும் எங்களது வாடிக்கைக்காரர்களின் திருப்தியே எங்களது மகிழ்ச்சி. அதற்காகவே நாங்கள் உழைக்கின்றோம்.

சாதாரண காலத்திற்கு வேண்டும் பலவித நூல் புடவைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள், நவீன வகைகளில் ஏராளமாக வந்திருக்கின்றன.

தாங்கள் ஒருமுறை நேரில் விஜயம் செய்து வேண்டியவற்றைப் பார்த்து வாங்கவும்.

M/s. A. சம்பூர்ண சாஸ்திரியார்

பட்டு ஜவுளி வியாபாரிகள்

வடக்கு மாடவீதி, மயிலாப்பூர். :: மதராஸ்-4

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்

சாதாரண கேஸ்களுக்கு ... ... ரூ. 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு ... ... ரூ. 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு ... ... ரூ. 8

(V. P. Charges Extra)

தயாரிப்பவர்கள்:-

Mrs. P. DEVEE, F.D.S. (C.M.)

Tollygunge, CALCUTTA.

மேற்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

1. ஹாரி & சன், 93, சைனாபஜார் ரோடு, மதராஸ்.
2. ஜே. திராத் & கோ., மங்கல்தாஸ் மார்கெட், ஹனுமான்மந்திர் மேல்புரம், பிரின்ஸஸ் தெரு, பம்பாய்-2.
3. நாதம் & கம்பெனி, மட்டஞ்சேரி, கொச்சி.
4. எல். எம். முகர்ஜி & சன்ஸ் லிமிடெட், 167, தர்மதலா தெரு, கல்கத்தா.
5. ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா தெரு, பங்களூர் கண்டோன்மெண்ட்.
6. கே. வி. மாத்யூ & கோ., கோலாஞ்சேரி, திருவாங்கூர்.
7. பயனீர் பார்மஸி, 183, மெயின் ரோடு, கொழும்பு (ஸிலோன்).



எமது முதல்தரமான சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப்படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

கே. சுவாமிநாதன் & கம்பெனி,

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.

No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.

தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ்: மைலாப்பூர், மதராஸ்.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,

பெரியதெரு, கும்பகோணம்.

LIVER CURE Branch Office,

Parekh Mansion, Sandhurst Road (West),

BOMBAY 4.

காஷ்மீர் [illegible]

மாஸ்லிகன்

மாலையில் பொன்னிறமான வெயில் ஷாஜஹானின் தலைநகரமாகிய தில்லியை மங்கலாக்கிக்கொண்டு வந்தது. தெருவில் நடமாட்டம் துரிதமாயிருந்தது. இருட்டுவதற்கு முன்பு தங்கள் கூட்டை அடைய மக்கள் ஓடிக்கொண்டிருந்தனர். அவர்கள் அவசரத்தில் தூரதேசத்துப் பிரயாணிபோல் காட்சியளித்த ஒருவன் தெருவில் செல்வதைக் கவனிக்கமுடியவில்லை. ஒரு வீட்டைப்பற்றி விசாரித்துக்கொண்டு அவன் சென்றுகொண்டிருந்தான். அவனது நடை, உடை, பாவனைகளிலிருந்து அவன் காஷ்மீர் மலைப் பிராந்தியங்களைச் சேர்ந்தவனென்று ஊகிக்க முடிந்தது. நல்ல உயரத்துடன் வாட்டசாட்டமான தேகமும் கூர்மையான மூக்கும் கண்களும் உடையவனாகக் காணப்பட்டான். ஆனால் அவனணிந்திருந்தது வெகு சாதாரண உடை. அவன் போட்டிருந்த கம்பளிச் சால்வையில் அநேக பொத்தல்கள் இருந்தன. வெல்வெட் ஷெர்வானி, முன்னோர்கள் அளித்ததென்று சொல்லிவிடலாம். இவைகளின்மேல் படிந்திருந்த அழுக்கும் தூசியுமே அவன் நடத்திய கடுமையான பிரயாணத்தை அறிவித்தன. ஆனால் அவன் தேடிவந்த ஆசாமியின் பெயரைக் கேட்டபோதே யாவரும் அவனை இன்னொருமுறை பார்த்தார்கள். ஒருவேளை பைத்தியக்காரனோ வென்று சந்தேகப்பட்டார்கள். இந்தச் சாமான்ய காஷ்மீர் பிரயாணி மொகலாய சங்கீத ராணியான நதிஜாவைத் தேடிவந்தால்? அவன் விசாரித்த ஒருவன் தன் சந்தேகத்தைச்சொல்லியே விட்டான். அதைக் கேட்டதும் பிரயாணி தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான். அந்தச் சிரிப்பில் அர்த்தமும் இருந்தது. வெளியார்க்கு அவனுக்கும் நதிஜாவிற்கும் இருந்த தொடர்பைப்பற்றி என்ன தெரியும்? ஒன்றும் தெரியாது உளறுகிறார்கள் முட்டாள்கள் என்று மனதில் நினைத்துக் கொண்டான். நாளைக்கு நதிஜா அவனை மரியாதையுடன் நடத்திச் செல்லும் போது, இதே மக்கள் தன்னைப் பைத்தியக்காரனென்று நினைப்பார்களா? இதை நினைக்கும் போதுதான் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

தெருவில் போவோர் அவனை அனாவசியமாய் வழிதவறவிட்டார்கள். நதிஜாவின் அழகில் மயங்கிய அனேகர், அவளுக்கு உபகாரம் செய்வதாக நினைத்துக்கொண்டு அவனை வேண்டுமென்றே தவறான வழியில் அனுப்பினார்கள். ஆயிரம் மைல்களும் சலிக்காது நடந்து வந்தவன் ஒரு கணத்தில் சலித்துப் போனான். நதிஜாவைக் காண அவன் உள்ளம் தவித்தது. ஆனால் அவள் இருப்பிடம் அறிய முடியவில்லை. ஆர்வம் கட்டுக்கடங்காமல் போய்விடவே, ஹுக்கா பிடிக்க அமர்ந்தான். ஒரு பெரிய மரத்தின் வேரின்மேல் அமர்ந்து ஜாக்கிரதையாய், பையினுள் வைக்கப்பட்டிருந்த ஹுக்காவை எடுத்துப் பற்றவைத்தான். அந்தப் புகையிலே அவன் எண்ணங்கள் உருவாகி வந்தன. தன் எண்ணத்தை யாரிடமாவது சொல்லவேண்டும் போலிருந்தது அவனுக்கு. ஆனால் அவனைத் தேடிவந்து கேட்பவர்கள் ஒருவரும் இல்லை. சிறிது நேரம் அவன் ஹுக்காபிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த பிறகு, ஒருகிழவன் அவன் அருகில் வந்து அமர்ந்தான். அவன் பிடித்துக்கொண்டிருந்த ஹுக்கா அவனை இழுத்தது. வந்து உட்கார்ந்தவன் தன் கம்பளிச்சால்வையைத் தட்டிப் போர்த்துக்கொண்டு "கொஞ்சம் ஹுக்காவை இப்படித் தள்ளு. ரொம்பவும் குளிர்கிறது" என்று கேட்டான். பிரயாணி ஹுக்காவைக் கிழவனிடம் தள்ளினான். இரண்டு இழுப்பு இழுத்தவுடன் தான் கிழவனுக்கு மற்றைய ஞாபகங்கள் வந்தன. "உன் பெயரென்ன?" என்று கேட்டான். "ஸலீம்" என்று கூறிவிட்டுப் பிரயாணி ஆர்வத்துடன், "பெரியவரே, எனக்கு ஒரு உபகாரம் செய்யவேண்டும்" என்று கேட்டான். கிழவன் சாவதானமாக "என்னப்பா"? என்று கேட்க ஸலீம், "பெரியவரே! இங்கே பாடகி நதிஜாவின் வீட்டை எனக்குக் காட்ட முடியுமா?" என்று கேட்டவுடன் கிழவன் கடகடவென்று சிரித்தான். "நதிஜாவின் வீடா? அதை இங்கு பிறந்தஒரு குழந்தைகூடக் காட்டிவிடுமே? அதுவா ஒரு பெரிய கஷ்டம்!" என்று கூறிவிட்டு மேலும்,

"அது கிடக்கட்டும்; நீ எந்த ஊர்? உனக்குப் பைத்தியம் கியித்தியம் பிடித்திருக்கிறதா? நதிஜாவைஒருமுறை காணமுடியாமல் பெரிய பெரிய பிரபுக்கள் அவதிப்படுகிறார்கள். நீ பார்ப்பதென்றால் சாத்தியப்படுமா? சொல்கிறேனென்று கோபப்படாதே" என்றான். ஸலீமின் கண்களில் ஒரு பிரகாசம் தோன்றி மறைந்தது. "பெரியவரே, உங்களைப்போல் தான், என்னை எல்லோரும் பைத்தியக்காரன் என்று சொன்னார்கள். ஆனால் என் கதையைக்கேட்டால் அவர்கள் அபிப்பிராயம் மாறும். ஆனால் என் கதையைக் கேட்பார் யாருமில்லை. நீங்கள் கேட்பதானால் சொல்லுகிறேன்" என்றான். கிழவன் உற்சாகத்துடன் ஹுக்காவை இன்னும்இரண்டு இழுப்பு இழுத்துவிட்டு நெருங்கிவந்து உட்கார்ந்தான். "வேலையென்ன வெட்டிப்போகிறது. சொல்லு கேட்கலாம்" என்றான். ஸலீமின் வாய் அவன் சரிதத்தை முணுமுணுத்தது.

கதிரவனின் புன்சிரிப்பிலே தவழ்ந்து விளையாடிய ரஸினி கிராமம், இயற்கையன்னையின் இருப்பிடமாகிய காஷ்மீர் பள்ளத்தாக்குகளின் நடுவில் விளங்கியது. மேலும் அது குதூகலத்தின் சின்னமாய் விளங்கியது. சுற்றிலும் பனிமலைகள், விண்ணில் மறைந்து நின்றன. கிராமத்தில் நடுவில் பலமலை அருவிகள் புகுந்து விளையாடின. எங்கும் பழத்தோப்புக்கள். செடிகளில் பழுத்துக் குலுங்கிய பழங்களின் நறுமணம், உள்ளத்தில் இன்ப லாகிரியை உண்டாக்கியது. காச்மீரத்திற்கே பெயர் போன குஸுமாப்பூக்கள் பூத்துக் குலுங்கி நறுமணத்தை அள்ளித் தெறித்தன. கிராமவாசிகள் துன்பம் என்ன என்பதையே அறியாது வாழ்க்கையை நடத்தி வந்தனர். இயற்கைச்செல்வம் தளராது அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்தது. வெய்யில் வெப்பத்தில் கருகி அவர்கள் விழவில்லை. நெற்றி வேர்வை நிலத்தில் விழ அவர்கள் பூமியைத் தோண்டிப் பண்படுத்தவில்லை. சுற்றிலும் பரந்திருந்த பழத் தோப்புக்கள் அவ்வக்காலத்தில் பூத்துக் குலுங்கி, பழங்களாய் மாறின. கதிரவனின் அன்பான ஸ்பரிசத்தினால் நாணமடைந்ததுபோல் ஒவ்வொரு பழமும் செக்கச் செவேலென்று சிவந்தது. வஸந்த காலத்தின் இன்பத்திலே, தெள்ளிய குஸுமாப்பூக்களின் நறுமணத்தை நுகர்ந்துகொண்டே மங்கையர் அவற்றைக் கொய்து கூடைகளில் அடுக்கினார்கள்.

இவ்விதமான இன்ப உலகில் பிறந்து வளர்ந்தவன் ஸலீம். அவன் ஒரு ஏழ்மையான குடும்பத்தில்தான் பிறந்தான். ஆனால் அவன் பெற்றோர் அவனுக்கு அழியாத செல்வத்தை அளித்துவிட்டுச் சென்றனர். எல்லோர் மனதையும் கொள்ளை கொள்ளும் அருமையான சங்கீதம் அவனிடமிருந்தது. அவன் தாய் இளமையிலேயே காச்மீரத்தில் சிறந்த பாடகி யென்ற பட்டம் பெற்றவள், தகப்பன் ஒரு சங்கீதப்பிரியன். அந்த அருமையான கலைக்காகவே உயிர் வாழ்ந்தார்கள். ஸலீம் ஷெனாய் வாத்தியத்தில் மிக்க தேர்ச்சி பெற்றவனென்று பட்டம் வாங்கி விட்டான். அவன் வாத்தியத்தைக் கையில் எடுத்துவிட்டால் போதும். அவசர வேலை இருப்பவன்கூடக் கொஞ்ச நேரம் நிழலில் இளைப்பாறுவதைப் போல், அந்தச் சங்கீத வெள்ளத்தில் மூழ்கிவிட்டுப் போவான். ஆனால் ஸலீம் கொடுத்துவைக்கவில்லை. அவன் சங்கீத ஞானம் நன்றாய் வளர்ச்சியடைவதற்குள், அவன் பெற்றோர் ஒருவர் பின் ஒருவராய்க் காலமானார்கள். நன்றாய் வளரும் மரம் கருகிப் போவதைப் போல் ஸலீமின் சங்கீத ஞானமும் தடைபட்டுப் போயிற்று. அவன் பிழைப்பிற்கு ஒருவழியுமில்லாது திண்டாடினான். கிராமத்தினர் நடத்தி வந்த உழவுத் தொழிலில் அவன் மனம் திரும்பவும் நாடவில்லை. அவன் தந்தையே அத்தொழிலை விட்டு விட்டார். பரம்பரையாய் நடந்து வந்த தொழில் தடைபட்டுப் போயிற்று. இருக்கும் சங்கீதத்தினால் ஒரு பிழைப்புக் கிடைக்குமா என்று ஏங்கிக்கொண்டிருக்கும்போது நல்ல வேளையாக ஒரு வேலை கிடைத்தது. அவ்வூரிலிருந்த ஒரு பிரபுவின் பொழுது போக்கிற்கு ஷெனாய் வாசிக்க ஏற்பாடு செய்யப்பட்டான். பிரபு தம் சினேகிதர்களுடன் ஹுக்கா பிடித்துக்கொண்டு பொழுது போக்குகையில், ஸலீம் ஷெனாய் வாசித்து மகிழ்விக்க வேண்டும். மற்ற விசேஷ நாட்களில் கச்சேரி செய்யவேண்டும், ஸலீமிற்கு இந்தத் தொழில் மிகவும் பிடித்திருந்தது. அவர்கள் கொடுத்த ஊதியம் அந்த ஒண்டிக் கட்டைக்குப் போதுமானதாக இருந்தது.

ஸலீமிற்கு வெகுநாளைய அவா ஒன்றிருந்தது. லாகூரில் பிரசித்தி பெற்ற ஷெர்வாஸ் கானிடம் சங்கீதம் பயில வேண்டுமென்பது தான். அவனிடம் பயின்று நற்சாட்சிப் பத்திரம் வாங்கி விட்டால் அதைவிட வேறு தேவையில்லை. அவன் ஷெனாய் வாசிக்கும்போது ஒவ்வொரு கணமும். இதையே நினைத்துக் கொண்டிருப்பான். அவன் சேர்க்கும் சுருதிகளில்கூட இந்த ஏக்கந்தான் தொனித்ததோ என்றபடி இருக்கும் அவன்பாட்டு. ஆனால் அதைத் தீவிரமாக யோசித்தபோது தான் அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவன் எங்கே? லாகூர் எங்கே? பிழைப்பிற்கே





கல்ச்சர்
முத்துத்தோடு

Sastry & Sastry

நல் முத்துத்
தோடு

JEWELLERS

33, EAST MADA STREET,
MYLAPORE P.O., MADRAS - 4.

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	,,	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	,,	53,00,000
ரிஸர்வ் நிதி	,,	62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும்
நடத்தப்படுகின்றன.

N. கோபால அய்யர்
ஸெக்ரெடரி.



N.P.B.

தி இந்தியன் பாங்க் லி.

லக்ஸ் டாய்லட் சோப்பின் *புதிய* பரிமளத்தைப்பற்றி அழகி பத்மினி சொல்வதைக்கேளுங்கள்!



LTS. 201-23 TM

தாளம் போடும் அவன் அங்கே போவது சாத்யமா? இந்த ஜன்மத்தில் இல்லையென்னும் போது தான் மீண்டும் ஏக்கத்துடன் வாத்தியத்தைக் கீழேவைத்துவிட்டுப் போவான்.

வஸந்த காலத்தில் ஒரு நாள் இயற்கை யன்னை புது மெருகுடன் காட்சியளித்தாள். ஓடைகளில் தண்ணீர் உருகி, பளிங்குபோல், ஓடத்தொங்கியது. வயல்களில் கதிர்கள் தழைத்து நறுமணம் வீசின. தோப்புக்களில் இருந்த மரங்கள் புதிதாய்த் தளிர்விட்டுப் பிரகாசித்தன. இந்தச் சந்தோஷம் ஷெனாய் வாசித்துவிட்டுத் திரும்பிய ஸலீம் மனதில் எதிரொலிக்கவில்லை. பிரபுவின் வீட்டில், புதிதாக விருந்தாளிகள் வந்துவிட்டார்கள். இரவெல்லாம் சங்கீதக் கச்சேரியும், சீட்டாட்டமுமாகப் பெரிய மோக்ளாவாக இருந்தது. ஸலீம் இரவெல்லாம் வாசிக்கவேண்டியிருந்தது. சாலையின் கருக்கிருட்டிலே. கண்களில் தூக்கமும் கவ்வ மெதுவாக வந்துகொண்டிருந்தான் ஸலீம். என்றுமில்லாத ஏக்கம் அவன் மனதில் அப்போது குடிகொண்டிருந்தது. ஷெர்வாஸ்கானிடம் போய், சங்கீதம் பயிலவேண்டுமென்ற அவா என்றுமில்லாதபடி அன்று தலைதூக்கி நின்றது. வேலைக்குச்சென்ற அநேகர் ஸலீமைப்பார்த்து ஸலாம் செய்ததையும் கவனிக்காது சென்றுகொண்டிருந்தான். சாலையின் காற்று அவனை எதிர்த்துக் குளுகுளு வென்று வீசியது. வீட்டை நெருங்கும் சமயம், அப்போது ஸலீம் திடுக்கிட்டு நின்றுவிட்டான். அவன் முழுக்கவனத்தையும் கவர்ந்த ஒரு தெய்விகக்குரல் சாற்றிய மெல்லிய சங்கீதம் ஒன்று தவழ்ந்துவந்து அவன் காதில் விழுந்தது. அதை ஊன்றிக்கேட்க ஸலீம் இருந்த இடத்தில் நின்றுவிட்டான். "ஆஹா, என்ன அற்புதமான சங்கீதம்!" என்று அவன் உள்ளம் கூறியது. குரல் ஒரு பெண்ணினுடையதாக இருந்தது. இரண்டு மூன்று தெருக்கள் தாண்டி வந்திருக்கவேண்டும். அதன் கவர்ச்சியிலே ஸலீம் ஒரு கணம் தன்னைப் பறிகொடுத்தான். அலை அலையாக வந்த அந்த இன்ப வாரிதியில் அவன் ஒருகணம் மிதப்பதைக் கண்டான். வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த அவன் கால்கள் சப்தம் வந்த திக்கை நோக்கிச் சென்றன.

தெருவில் ஒரு பெரிய கூட்டம் பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தது. கிழவர்களும் சிறுவர்களும், பொழுதைப் போக்க வட்டமாகப் பாடகியைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். வேலைக்கு வேகமாகச் செல்பவர்கள்கூடக் கையை ஊன்றிக்கொண்டு வட்டத்தைச் சுற்றி நின்றுகொண்டிருந்தனர். இன்னும் சிலர் ரொம்ப நேரம் பாட்டைக் கேட்க வேண்டும் என்ற அவாவில், தங்கள் ஹுக்காவையும் அங்கே கொணர்ந்து வைத்துக் கொண்டுவிட்டனர். ஸலீம் வந்தவுடன், கிராமத்தினர் மரியாதையாக அவனுக்கு வழிவிட்டனர். வேறு எதற்கு மதிப்பு இல்லாவிடினும், பாட்டு வி.ஷயத்தில் அவர்கள் ஸலீமிடம் மதிப்புக்காட்டவேண்டி யிருந்தது. ஸலீமிற்குக் கிடைக்கும் மரியாதையைப் பார்த்துவிட்டு, பாடகியும் மரியாதைக்காகப்பாட்டை நிறுத்தினாள். 'மேலே பாடு' என்று சொல்வதுபோல் புன்சிரிப்புடன் கையசைத்துவிட்டு, ஸலீம் ஒரு மூலையில்போய் அமர்ந்து கூர்ந்து கவனிக்கலானான். பாடகிக்குப் பதினாறு அல்லது பதினேழு வயதுக்குட்பட்டுத்தான் இருக்கும். காஷ்மீர் தேசத்தினள் என்பது உடையிலேயே தெரிந்தது. நல்ல கவர்ச்சியான முகமும் கண்களும் படைத்திருந்தாள். கூட அவள் தாயும் வந்திருந்தாள். வயிற்றுப் பிழைப்பிற்காகப் பாடுகிறாள் என்பது வெட்ட வெளிச்சமாய்த் தெரிந்தது. ஆனால் பெண்ணின் முகத்திலே உயர்ந்த குலத்தின் ஜாடை யிருந்தது. மேலும் பிச்சைக்காரக் குடும்பத்திலே இவ்வளவு உயர்ந்த சங்கீதம் வந்திருக்க முடியாது. இவ்வாறு யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த ஸலீமின் அருகில் கிராம நாட்டாண்மைக்காரர் நகர்ந்துவந்து உட்கார்ந்துகொண்டார். "என்ன பச்சா! (ஸலீமை, கிராமத்தினர் அவ்வாறுதான் அழைப்பது வழக்கம்) ரொம்ப நல்லாத்தான் குட்டி பாடுரு; பாக்கக்கூட சோக்கா இருக்குரு; ரெண்டு காசுக்குப் பழுதில்லை" என்று தம் பொக்கை வாயைக் குதப்பிக்கொண்டே அபிப்பிராயம் தெரிவித்தார். ஸலீம் ஒன்றும் சொல்லாமல் சிரித்தான். அந்தச் சங்கீதத்தின் மதிப்பைக் கிராமத்தில் ஒருவராவது அறிய முடியாது என்று நிச்சயமாய் அவனுக்குத் தெரியும்.

பாட்டும் முடிந்தது. கிராமத்தினர் அனைவரும் இயன்ற காசை எறிந்துவிட்டுக் கலைந்தனர். சிறுவர்கள் மட்டும் வாயில் விரலைப் போட்டுக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்தனர். பெரியவள் காசைத் திரட்டுவதில் முனைந்திருந்தாள். ஸலீமிற்கு, கிராமத்தினர் கொடுத்த மதிப்பினைக் கண்டு பாடகி மரியாதையுடன் ஸலீமை இரண்டொரு தரம் பார்த்தாள். ஸலீமின் கண்கள் தன்னையே உற்று நோக்குவது கண்டு நாணத்துடன் தலை குனிந்தாள்.

ஸலீம் பெரியவளுடன் பேசி அவர்களைத் தன் வீட்டிற்கு அழைத்துப்போனான். "உங்கள் பெண்ணின் சங்கீதச் செல்வத்தை

அறியச் சரியான ஆட்கள் இங்கே கிடையாது.'' என்று அவன் சொல்லுகையில், பெரியவள் புன்னகை செய்தாள் "சங்கீதமாவது, செல்வமாவது! அவளுக்கு யார் முதலில் சங்கீதம் கற்றுக்கொடுத்தார்கள்? இம்மாதிரி சங்கீதம் எங்கள் உதவிக்கு வரும் என்று தெரிந்திருந்தால், என்றைக்கோ அவளுக்கு உயர்ந்த சங்கீதம் கற்றுக்கொடுத்திருப்போம்; எல்லாம் விதி'' என்று நொந்து கொண்டாள். ஸலீம் அவர்கள் முன் சப்பாத்திகளையும் பழங்களையும் வைத்தான். "சாப்பிடுங்கள்'' என்று அன்புடன் உபசரித்தான். முதலில் வெட்கப்பட்ட அவர்கள் பிறகு அவன் அன்பால் கவரப்பட்டு, சாப்பிடத் தொடங்கினர். கிழவி அவன் வீட்டை ஒருமுறை சுற்றிப் பார்த்தாள். "உங்களுக்கு ...?'' என்று இழுத்தவுடன், ஸலீம் அதைப் புரிந்து கொண்டவன் போல், 'இன்னும் இல்லை; தனிக்கட்டை தான்' என்று சொல்லிவிட்டுக் கடகடவென்று சிரித்தான். "உங்கள் பெண்ணிற்கு எப்படி இந்தச் சங்கீத ஞானம் வந்தது?'' என்று ஸலீம் கேட்டான். கிழவி ஒரு பெருமூச்சு விட்டாள். "ஹூம், அதையேன் கேட்கிறீர்கள்? இந்தச் சங்கீதந்தான் என் வாழ்க்கையையே கெடுத்து விட்டது'' என்று தன் கதையைச் சொன்னாள். இளமையில் அவளுக்கு ஒரு சங்கீத வித்வான்மேல் காதல் ஏற்பட்டு, பெற்றோர்கள் சம்மதிக்காமல் அவனை மணந்தாள். பெற்றோர்கள் வெறுத்துவிடவே, கணவனுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தி வந்தாள். அவன் ஒரு பெரியசங்கீதப் பிரியன். தன் பணமனைத்தையும் சங்கீதத்திற்கே அர்ப்பணம் செய்தான். அவர்கள் இல்வாழ்க்கையின் பயனாய் ஒருபெண் பிறந்தாள், அவளைச் செல்வமென அவர்கள் வளர்த்து வருகையில் கணவன் திடீரென்று இறந்துவிட்டான். தாயும் பெண்ணும் தெருவில் நிற்க வந்து விட்டது. வறுமையில் விழுந்துவிட்டார்கள். "எந்தச் சங்கீதம் என்னை மயக்கிவைத்ததோ, பெற்றவரையும் சுற்றத்தினரையும் துறந்து கணவனைச் நாடிச்செல்லத் தைரியமும் உற்சாகமும் கொடுத்ததோ அந்தச் சங்கீதமே எனக்கு இப்போது விஷமாய்ப் போயிற்று. கேட்கும்போது காதைப் பொத்திக்கொள்கிறேன்.'' என்று சொல்லும்போது அவள் கண்களில் நீர் துளித்தது.

ஸலீமிற்கு அவர்கள்மேல்ஒருபச்சாத்தாபம் பிறந்தது. அவர்கள் வாழ்க்கையும் அவனுடையதே போல் அமைந்ததில் அவனுக்கு ஆச்சரியந்தான். அவன் கண்கள் அவனையறியாமல் அடிக்கடி பெண்ணின் பக்கம் நாடின. அவளும் இவன் கண்களைச் சந்தித்தவுடன் நாணத்துடன் தலையைக் குனிந்தாள். கடைசியில் அவன்பெருமூச்சுடன் எழுந்தான். "பெரியவளே, நான் ஒரு யோசனை சொல்கிறேன். உங்களுக்கு இஷ்டமானால், அதன்படி நடக்கலாம்.'' என்றான். கிழவி ஆர்வத்துடன் தலையை நிமிர்த்தினாள். யுவதியைக் கடைக்கணித்தவாறே ஸலீம் சொன்னான்: "எனக்கு இவ்வுலகத்தில் சுற்றத்தினர் யாரும் கிடையாது. பெற்ற தாயும் தந்தையும் பிரிந்து சென்றுவிட்டனர். எனக்கோசாப்பாட்டிற்குப் போதுமான ஊதியம் கிடைக்கின்றது. உங்களுக்கு இஷ்டமிருப்பின் என்னுடன் நீங்கள் வசித்திருக்கலாம்'' என்றான். ஏழை அனாதைகள் நன்றியறிதலுடன் அவனைப்பார்த்தனர்.

அன்றுமுதல் ஸலீமின் வாசஸ்தலம் அவர்கள் வாசஸ்தலமாயிற்று. ஸலீமின் மாமா வேகமாக வந்தார். "ஸலீம், என்ன இது? கிராமமெல்லாம் ஒரே பேச்சாயிருக்கிறது. ஊர் தெரியாது, பேர் தெரியாது, யாரோ நாடோடிகள், அவர்களைக் கொண்டு வந்து வீட்டில் வைத்துக் கொண்டுவிட்டாயா? நாளைக்கே விரட்டிவிட்டு மறு காரியம் பார்'' என்று கண்டிப்பான புத்திமதி சொன்னார். இதுகாறும் அவர் பேச்சைத் தட்டாத ஸலீம் இன்று அவர் பேச்சைத் தட்டினான். அவரது வெறுப்பிற்கும் ஆளானான், அவர் சொல்லும்போதே பரிதாபமான இரு ஜதைக் கண்கள் அவன் முகத்தை நோக்கின. ஸலீமிற்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை. சரியென்று தலையை ஆட்டிவிட்டுப் போனான். கிராமத்தில் அனேகர் பேசத் தொடங்கிவிட்டனர். "தகப்பன் ஏற்கனவே பைத்தியக்காரன். பாடகி பாடகி யென்று ஒருத்தியைக்கட்டிக் கொண்டான். பிள்ளையோ அவனையும் ஜயித்து விட்டான். ஊர்பேர் தெரியாத இருவரை வீட்டில் கொண்டுவந்து வைத்து விட்டான். நல்ல அழகுதான்'' என்று முடிவு செய்தனர். இவ்வாறு கண்ட இடங்களில் பேசவும் செய்தனர்.

ஊர்ப் பேச்சைத் தாளமுடியாமல் நாடோடிகள் இருவரும் ஒரு நாள் ஸலீமிடம் வந்தனர். "ஐயா! எங்களால் உங்களுக்கு ஏன் இந்த அவதி? எங்கள் கஷ்டம் எங்களுக்கு இருக்கவே இருக்கிறது. அது கடவுளாலன்றி வேறு யாராலும் விடியாது போலிருக்கிறது. நாங்கள் போய்விடுகிறோம்.'' என்றனர். இதைச் சொல்லும் போது நதிஜா மிகுந்த தீர்மானமாய்ச் சொன்னாள். சாந்தமாய் உட்கார்ந்திருந்த ஸலீமின் கண்களில் ஒரு கணத்தில் தீப்பொறி பறந்தது. "யாரது என்னை அதிகாரம் செய்ய? இந்தக் கிராமத்தில் ஒருவரும் எனக்குச் சோறு போடவில்லை, என் கையால் உழைத்து நான் சாப்பிடுகிறேன்.

உங்களுக்கும் போடுகிறேன். நான் யார் கையையும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் பேச்சும் என் காதில் விழாது. நீங்கள் பேசாமல் இங்கேயே இருங்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அவன் வாழ்க்கையிலேயே ஒரு புது மாறுதல் ஏற்பட்டுவிட்டது. பிரபுவின் வீட்டில் கழிந்த நேரம் போக, அவன் நேரம், நதிஜாவின் சங்கீத ஞானத்தை உயர்வு படுத்துவதில் ஈடுபட்டிருந்தது. ஸரளமான அக்குரலில் ராகங்கள் மலையருவி போல் குதித்து ஓடும்போது புளகாங்கிதமடைந்து போனான் ஸலீம். நதிஜா மிகுந்த சாமர்த்தியசாலி. அவளது சாமர்த்தியமும், நற்குணங்களும், ஸலீமின் மனதைக் கவர்ந்து விட்டன. வந்த கொஞ்ச நாளைக்கெல்லாம். தாறுமாறாய்க் கிடந்த அவன் வீட்டில் ஒரு ஒழுங்கு காணப்பட்டது. அவனுடைய வெறுப்பு விருப்பங்களை நன்கு அறிந்துகொண்டு, நதிஜா அதன்படி நடக்கத் தொடங்கிவிட்டாள். நாளடைவில், எது செய்தாலும், நதிஜா செய்தால் தான், ஸலீம் மனதிற்குப் பிடிக்கும் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. பிரபு வீட்டிலிருந்து வரும்போது, முன்பெல்லாம்போல், விரக்தியுடனும், வருத்தத்துடனும் வருவதில்லை: ஆர்வத்துடன் ஓடோடியும் வருவான்; நதிஜாவிற்குக் குஸுமாப் பூக்களில் விருப்பம் ஜாஸ்தியென்று தெரியும்; வரும்போது, பக்கத்திலிருக்கும் நந்தவனங்களில் நுழைந்து கைநிறையப் பூக்களைப் பறித்துக்கொண்டு வந்துகொடுப்பான். அவனால் அதுஒன்றுதான் கொடுக்க முடியும் என்பது நினைவிற்குவந்தால் அவன் மனம் சிறிது துக்கப்படும். தன் கிழிந்த ஆடைகளிலும், நதிஜா கலகலவென்று சந்தோஷத்துடனும் சமாதானத்துடனும் இருந்தது அவன் மனதைப் பெரிதும் கவர்ந்தது. இன்ப வாரிதியில் மிதந்து கொண்டிருந்த அவனுக்கு வருஷங்கள் பல கழிந்தது தெரியவில்லை.

வஸந்தகாலத்தில் ஒரு நாள் பிரபுவீட்டில் விருந்தினர் அனேகர் வந்து இறங்கினர். வீட்டில் ஆட்டங்களும், கேளிக்கைகளும் அதிகமாய் இருந்தன. ஸலீமிற்கு வேலை அதிகமாயிற்று. இரவென்றும் பகலென்றும் பாராமல் கச்சேரி செய்யவேண்டியதாயிற்று. விருந்தினர்களில் ஒருவர், லாகூரிலிருந்து வந்தவர், பெரிய வியாபாரி; பணக்காரர்; சங்கீதப்பிரியரும்கூட. ஸலீமின் நடை அவருக்கு நிரம்பப் பிடித்துவிட்டது. அநேக தடவைகள் 'ஸபாஷ்' கொடுத்து உற்சாகப்படுத்தினர். அடிக்கடி கூப்பிட்டு அன்புடன் உரையாடினர். அவரது பிறந்த நாள் வந்தபோது, கொண்டாட்டங்கள் நடந்தன. அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கச்சேரிக்கு, ஸலீமின் மனதில் ஒரு புது எண்ணம் தோன்றியது. நதிஜாவைப் பாடச்சொன்னால் என்ன? அவள் சங்கீத ஞானம் இப்போது அதிகமடைந்துவிட்டது. அந்தத் தெய்வீகக் குரலைக் கேட்டால் லாகூர் விருந்தினர், சொக்கிப் போவார் என்பதில் ஐயமில்லை. சந்தோஷத்தினால் துள்ளிக் குதித்துக்கொண்டு வீட்டுக்கு ஓடினான்.

வீட்டில் நதிஜா குஸுமாப்பூக்களுக்காக ஆவலுடன் காத்திருந்தாள். ஸலீம் ஆனந்தத்துடன் தன் எண்ணத்தைச் சொன்னான். நதிஜாவிற்குத் தூக்கிவாரிப்போட்டது. தயங்கினாள். ஸலீம் அன்பாகக்கடுமையுடன் "இந்தப் பாட்டை வைத்துக்கொண்டு பயப்படுகிறாயே, கிளம்பு" என்று சொல்லவே கிளம்பினாள். நதிஜாவின் குரலைக்கேட்டு, ஸலீம் நினைத்தபடியே, விருந்தினர்கள் சொக்கிப்போய்விட்டனர். நதிஜாவிற்குப் பாட்டுச்சொல்லிக்கொடுத்தவனாகையால் ஸலீம் வெகு அற்புதமாய்ப் பக்கவாத்தியம் வாசித்தான். 'சபாஷ்' கொடுக்கும்போது நதிஜா நாணத்துடன் தலைகுனிந்தாள். லாகூர் விருந்தினருக்குச் சந்தோஷம் தாங்கவில்லை பிரபுவைப் பார்த்து, "என்ன அமீர் இந்தப் பாட்டை நான் லாகூரில்கூடக் கேட்டதில்லை. இதை நமது ஷெர்வாஸ்கான் கேட்கவேண்டும். கேட்டால் ரொம்பவும் சந்தோஷப்படுவான்" என்றார். பிரபு "நமது ஸலீமிற்குக்கூட ஷெர்வாஸ்கானிடம்போய்ப் பாட்டுக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று ரொம்ப ஆசை. பாவம் பணமில்லாமல் தான் கஷ்டப்படுகிறான்" என்றார். ஷெர்வாஸ்கான் என்ற பேச்சைக் கேட்டவுடன் ஸலீம் ஷெனாயைக் கீழே வைத்துவிட்டுப் பேச்சைக் கூர்ந்து கவனிக்கலானான். லாகூர் விருந்தினர் சொன்னார்: "என்ன ஸலீம்! என்னிடம் உன்னிஷ்டத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லக்கூடாது? நானே ஷெர்வாஸ்கானிடம் சொல்லி ஏற்பாடு செய்து விடுவேனே. நான் புறப்படும்போது என்கூடப் புறப்பட்டு விடு. லாகூரில் நீ தங்கியிருக்க ஏற்பாடுசெய்து விடுகிறேன். ஷெர்வாஸ்கானும் இலவசமாகப் பாட்டுச் சொல்லிகொடுப்பான், எவ்வளவு நாட்கள் வேண்டுமோ அவ்வளவு நாட்கள் கற்றுக்கொள்ளலாம்" என்றார். ஸலீமின் மனதில் பழைய எண்ணங்கள் தோன்றி மறைந்தன. அந்த நாட்களில் ஷெர்வாஸ்கானிடம் போகவேண்டுமென்று எப்படி ஏங்கிக் கொண்டிருந்தான்? அது கைகூடும் சமயம் இச்சந்தர்ப்பத்தில் வாய்த்திருக்கிறது. ஆனால் ஏனோ அவன் மனம் முன்வரவில்லை. ஒருவித ஏக்கம் அவனைத் தடை செய்தது. சட்டென்று பதிலளிக்க முடியாமல் தவித்தான். "சாஹிப், தங்கள் அன்பிற்குரொம்பவும் வந்த



னம்: இரண்டொரு நாட்களில் தீர்மானித்துச் சொல்லிவிடுகிறேன்" என்றான்.

நதிஜா தன் தாயிடம் இச்சங்கதியைச் சொல்லிவிடவே அவள் ஸலீமிடம் வந்தாள்.

"ஸலீம், ஸாஹிப் நீங்கள் லாகூருக்குப்போக ஏற்பாடு செய்துவிட்டீர்களாமே. எங்களுக்காக நீங்கள் தயங்கவேண்டாம் இவ்வளவு நாள் தங்கினது எங்கள் அதிருஷ்டம். தெருப்பிச்சை எங்களுக்கு இருக்கவே இருக்கிறது. அதைத் தேடிக்கொண்டு போகிறோம். உங்களை மறக்கவேமாட்டோம்" என்றாள். ஸலீமிற்கு நிஜமாகவே கோபம் வந்து விட்டது. உரத்த குரலில், "உன்னை நான் போகச் சொன்னேனா? உனக்குப்பைத்தியமாபிடித்து விட்டது? சும்மா உள்ளே போங்கள். உங்களை எப்படி நான் வீட்டிற்குள் அழைத்தேனோ அப்படியே வெளியே அனுப்பத் தெரியும்." என்று கூவினான், இப்படிச் சொன்னானே தவிர, அவன் உள்ளத்தில் அரித்துக்கொண்டிருந்த எண்ணம் இதுதான்: தான் லாகூருக்குப்போய் விட்டால், நதிஜாவையும், அவன் தாயையும் காப்பாற்றுபவர் யார்? ஊரிலுள்ளோர் அவர்களை விரட்டி விடுவார்கள் அவன் தலைமறைந்தவுடன். அப்படியானால் ஷெர்வாஸ்கானிடம் பயிற்சி பெறும் எண்ணத்தை விட்டுவிடுவதா? அது அவன் வாழ்க்கை லட்சியமாயிற்றே? எதைக் கைவிடுவது? எதை வைத்துக்கொள்வது? ஒருபக்கம் கீர்த்தியும் புகழும் வருந்தி அழைத்தன. ஷெர்வாஸ்கான் சிஷ்யனென்றால்போதும். முகலாய தர்பாரிலும், அவனுக்குமதிப்பு உண்டு. ஆனால் மறு பக்கத்தில் இரு அனாதைகள் திண்டாடிப்போவார்கள். இரண்டு நாள் ஒன்றும் தெரியாது அலைந்தான். திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. தனக்குப்பதில் நதிஜாவையே ஷெர்வாஸ்கானிடம் அனுப்பினால் என்ன? தெய்வீகக்குரலைக் கேட்டு ஷெர்வாஸ்கானே திகைத்துப்போவான். தன்னைவிட நன்கு சோபிப்பாள். புகழ் அவளடைந்தாலென்ன? அதில் அவனுக்கு ஏமாற்றமில்லை. நதிஜா அவனுடையவள் தானே. கை நிறையக் குஸுமாப்பூக்களுடன் வீட்டில் நுழைந்தாள். ஆனந்தத்துடன் 'நதிஜா' என்று கூப்பிட்டு அதை அவள் கையில் கொடுத்தான். அவள் முகத்தில் தோன்றி மறைந்த புன் சிரிப்பு அவன் உடல் சோர்வையும் ஏக்கத்தையும் பறக்க அடித்தது. கைகால் கழுவிக்கொண்டபின் நதிஜா அவன் முன் பழத்தட்டையும் பாலையும் வைத்தாள். அவளுடைய மென்மைக்கரங்களால் செய்த சப்பாத்தியை ருசித்துக்கொண்டே ஸலீம் சொன்னான். "நதிஜா கடைசியில் நான் ஒரு தீர்மானம் செய்துவிட்டேன். எனக்குப்பதில் நீ போய் ஷெர்வாஸ்கானிடம்சங்கீதம்பயின்றுவா" என்றான். நதிஜாவிற்கு ஆச்சர்யம் தாளவில்லை. அவள் கண்களில் நீர் ததும்பியது. கிழவி சமாசாரத்தைக் கேட்டுக்கொண்டே வந்தாள். ஸலீமின் முடிவைக் கேட்டதும் சங்கடத்தினால் அவள் முகம்சுருங்கியது. "ஸலீம் சாஹிப், நீங்கள் போகவில்லையா?" என்று கேட்டாள். ஸலீம் திடமனதுடன் "நான் கட்டாயம்போக முடியாது" என்றான். "அப்படியானால் இவள் கூடப் போகவேண்டியது அவசியமில்லை. ஏதோ நீங்கள் எங்களை அன்பாய் நடத்துகிறீர்கள். உங்கள் காலடியிலேயே எங்கள் காலத்தைக் கழித்துவிடுகிறோம்" என்றாள். ஸலீம், சமாதானம் செய்பவன்போல அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான். "பெரியவளே, உன்னைப்போல் நான் பல மடங்கு எண்ணிப்பார்த்து விட்டேன். உங்களைவிட்டு நான் போகமுடியாது. இந்த மாதிரி சந்தர்ப்பம் கிடைக்குமா என்று நான் ஏங்கிக்கிடந்ததை நீங்கள் அறியமாட்டீர்கள். இந்த ஜன்மத்தில் அது எனக்குக் கிட்டாது என்றிருந்த அதிர்ஷ்டம் வாய்த்திருக்கிறது. மற்றைய சமயத்தில் சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்துக்கொண்டு போயிருப்பேன். என்னைவிட நதிஜா இந்தச் சங்கீதப்பயிற்சி அடைவது நல்லது. கடவுள் கொடுத்த குரலை வீணாக்கக்கூடாது. நாளைக்குக் கீர்த்தி எனக்கு வந்தாலென்ன? அவளுக்கு வந்தாலென்ன? மனதைத் திடப்படுத்திக்கொண்டு கிளம்புங்கள். அடுத்தவாரம் நீங்கள் இருவரும் லாகூர் விருந்தினருடன் செல்லுங்கள்." என்று சொல்லிவிட்டு நதிஜாவைச் சுட்டிக் காட்டி, "அவளை மட்டும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லும்போது அவன் கண்களில் நீர்மல்கிற்று.

லாகூர் விருந்தினருடன் நதிஜாவும் அவள் தாயும் பிரயாணமாயினர். வருத்தம் தோய்ந்த மனதுடன் ஸலீம் அந்தக் கூட்டம் மறைவதையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனிடமிருந்து ஒரு அரிய பொருள் பிரிந்து சென்றது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு. ஸலீமின் வாழ்க்கை மறுபடியும் ரஸமற்றதாய்ப் போயிற்று. வீட்டுக்குள் வந்தால் நதிஜாவின் சிரிப்பும் இனிய குரலும் இல்லை. வீடு வெறிச்சென்றிருந்தது. அந்த அமைதி அவனைக்கொன்றது. பழையபடி அவன் சங்கீதம் வறண்டு உற்சாகமற்றுப் போயிற்று. வீட்டுக்குத் திரும்பும் போதெல்லாம் அவளுயிருக்குயிரான குஸுமாப்பூக்களைப் பறித்துக்கொண்டு வருவான். அவளுக்காக வழக்கமாக வைக்கும் இடத்தில் வைத்தால்தான் அவனுக்கு ஒரு திருப்தி ஏற்படும்.

நாட்கள் சென்றன. நதிஜா சௌக்கியமாய் லாகூர் சென்ற செய்தி வந்தது. அடிக்கடி செய்தி சொல்லியனுப்ப நதிஜா ஒரு நல்ல ஏற்பாடு செய்திருந்தாள். லாகூரிலிருந்து வந்த வர்த்தகக்கூட்டங்களிடம் தன் கடிதத்தைத் தவறாது கொடுத்தனுப்பிவந்தாள்

ஸலீமும் தன் கையில் கிடைத்த பணமெல்லாம், அவர்கள் செலவிற்கு அனுப்பிவந்தான். ஷெர்வாஸ்கானிடம் சங்கீதம் நன்கு கற்றுக் கொள்வதைப்பற்றி, அவள் அனுப்பிய செய்திகளைக் கேட்டு, ஸலீம் மனம் மகிழ்ந்தான். அவளது அன்பான கடிதங்களைப் பொழுதுபோக்கிற்காக ஒன்றுவிடாமல் படிப்பான். அதில் சிற்சில சமயம் அவள் நாணத்துடன் தன்னைக் காண ஆவலாக இருப்பதாக எண்ணும்போது அப்படியே போட்டுவிட்டு லாகூருக்கு ஓடிவிடத்தோன்றும். ஆனால் அந்தத் தூரம் நினைவிற்கு வந்தபோதுதான் மனது ஏக்கமடையும். நாளாக ஆக, நதிஜாவின் கடிதங்கள், முன்போல் ரசமாய் இல்லாமல் வெறும்செய்தி சொல்லியனுப்பும் விதத்தில் இருந்தன. இவையும் அடிக்கடி வராமல் தடைபட்டன. அநேக தடவைகள் ஆவலுடன், ஸலீம், வர்த்தகக் கூட்டங்களைப்போய்ச் சந்தித்தபோது அவர்கள், "ஸலீம் ஸாஹிப் இந்தத் தடவை உங்களுக்கு ஒன்றுமில்லை" என்று கையை விரிக்கவே அவன் மனம் பட்டபாட்டை யாராலும் சொல்ல முடியாது. உலகத்தையே பறிகொடுத்தவன்போல் ஏக்கத்துடன் வீடு வந்தான். இரவில் தூக்கம் வரவில்லை. இரண்டொரு தடவை இதைப்பற்றி நதிஜாவிற்குக் கடிதம் எழுதினான், அவள் அதைப்பற்றிக் கவலை கொண்டதாகவே காட்டவில்லை. இன்னும் போகப்போக வர்த்தகக்கூட்டம் கடிதம் கொண்டுவருவது துர்லபமாயிற்று. கடைசியில் கடிதமே வராது நின்றுபோயிற்று. ஸலீமிற்கு ஒன்றுமே புரியவில்லை. நதிஜாவின் மௌனம் திகைக்க வைத்தது. இருக்கட்டுமென்று பேசாமல் இருந்துவிட்டான்.

நதிஜாவிடமிருந்து சமாசாரம் வந்து வெகுநாளாயின. அப்போது ஸலீமிற்கு ஒரு சமாசாரம் கிடைத்தது. நதிஜாவின் சங்கீதத்தை முகலாய சக்ரவர்த்தி கேட்க நேர்ந்ததாகவும், அவள் சங்கீதத்தில் ஆச்சர்யமடைந்து தர்பாரில் கச்சேரிவைக்க அழைத்துச் சென்றதாகவும் செய்தி கிடைத்தது. இதை நதிஜாவே ஒரு கடிதத்தில் எழுதியிருந்தாள். ஸலீமிற்குச் சந்தோஷம் தாங்கவில்லை. எப்படியாவது தில்லியை அடைந்துவிட வேண்டுமென்ற அவா எழுந்துவிட்டது. நதிஜாவின் பாட்டைக் கேட்டு, சக்ரவர்த்தி 'சபாஷ்' கொடுத்தால் அவனுக்கல்லவா பெருமை. கட்டாயம் நதிஜா தன்னை இரண்டு கரங்களாலும் வரவேற்பாள். இவ்வாறு நினைத்தவுடன் நிலை கொள்ளாது தவித்தான். பிரபுவை நாடி, தன் வீட்டை அடகு வைத்துக்கொண்டு ஆயிரம் காசு தருமாறு கேட்டான். நதிஜாவிற்குப் பிடித்தமான குஸுமாப்பூக்கள் ஞாபகத்திற்கு வந்தன. நல்ல பூக்களாகப் பறித்துப் போட்டுக்கொண்டான். அவைகளைப் பக்குவப் படுத்திவைத்தால் வெகுநாள் வாடாமல் இருக்கும் என்று அவனுக்குத் தெரியும்.

தன் ஷெனாய் வாத்தியத்தை வாசித்துக்கொண்டே ஸலீம் தில்லியை நோக்கிப் புறப்பட்டான்.

ஹுக்காவை இரண்டு தரம் இழுத்த கிழவன் சிரித்தான். "பெரிய கதையாகவல்லவோ இருக்கிறது" என்றான். ஸலீம் தன் பையைத்திறந்து காட்டினான். அவன் வாடாமல் இருக்கச்செய்த பக்குவங்களையும் மீறி அவை வாடத்தொடங்கி இருந்தன. இருப்பினும் அதன் மணம் கம்மென்று மனதைக் கவர்ந்தது. கையில் இருந்த பணமனைத்தும் வண்டிச்சத்தத்திற்கே செலவழிந்துவிட்டது. அவன் தான் திரும்பும் எண்ணத்துடன் வரவில்லையே! கிழவன் ஒரு கொத்தை எடுத்து ரஸித்துக்கொண்டே, "என்னவோ அப்பா கிழவன் சொல்லுகிறேன். நதிஜாவை விட்டுவிட்டாய். அவள் அந்தஸ்து எட்டிப்பிடிக்க முடியாதபடி ஆய்விட்டது. அவள் உன்னிடம் பழைய நதிஜாவாக இருப்பாளா?" என்று கேட்கும் போது ஸலீம் இடைமறித்து, "என்ன இருந்தாலும், என்னை நதிஜா ஒரு நாளும் மறக்க மாட்டாள். நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்" என்றான். கிழவன் ஒரு பெரிய வீட்டைக்காட்டி, "இதுதான் பாடகி நதிஜா வீடு. ஸாஹிப், நாளைக்கு இந்த வீட்டிற்கு வந்து பிச்சை எடுப்பேன். கை நிறையப் பணம் போடவேண்டும்" என்று கூறிக்கொண்டே போய்விட்டான்.

தன் முன் நின்ற பெரிய மாளிகையைக் கண்டு கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தான் ஸலீம். அம்மாளிகையின் ஒரு அறைக்குக்கூட காணாது அவன் வீடு. பிரமித்துக்கொண்டே வாயிற்படியில் ஏறினான். அங்கு ஒரு காவலன், ஸலீமின் நிலையைக்கண்டு "யாரும் வீட்டில் இல்லை போ; கண்டநேரத்தில் பிச்சை எடுக்க வந்துவிட்டாய் போபோ" என்று விரட்டினான். ஸலீமிற்கு நிஜமாகவே கோபம் வந்தது, யாரைப் பார்த்தய்யா அப்படிச் சொல்லுகிறாய்? நான் பிச்சை எடுக்க வர்வில்லை? நதிஜா வீடு இதுதானே. அவளை நான் பார்க்கவேண்டும்" என்றான். காவலனுக்குச் சந்தேகம் வந்தது. அவன் உடை ஸலீம் அணிந்ததைவிட உயர்ந்ததாய் இருந்தது. அப்படியிருக்கையில் அவன் எஜமானியைத் தேடுவதில் சந்தேகமடைந்தான். "எஜமானியம்மா வூட்டுலே இல்லே; தர்பாருக்குப் போயிருக்காங்க" என்றான். ஸலீம் மேலும் தொடர்ந்து, "அப்படியானால் அவள் அம்மாவாவது இருக்கிறார்களா? கட்டாயம் நான் பார்க்கவேண்டும்" என்றான். "அவங்களும்

கூடத்தான்போயிருக்காங்க. வேண்டுமானால் உள்ளே வந்து குந்தியிரு" என்று ஒரு அறைக்கு அழைத்துச் சென்றான்.

இருள் நிறைந்த அந்த அறையில் போய் உட்கார்ந்தவுடன்தான் ஸலீமிற்கு மனம் நிம்மதியடைந்தது- களைப்புடன் பையைக் கீழே வைத்துவிட்டு உட்கார்ந்தான். அவனுக்கோ அகோரபசி. இதைக் கிளறுவது போல் ரம்யமான உணவு வாசனை வீட்டிலிருந்து வந்துகொண்டிருந்தது. வீட்டு வேலைக்காரர்கள் ஓடுவதிலிருந்தும், பேச்சிலிருந்தும், ஸலீம் அன்றிரவு அவ்வீட்டில் ஒரு விருந்து இருக்கிறது என்று ஊகித்துக் கொண்டான். அதிர்ஷ்டம் வந்தால் ஆள் அடையாளம் தெரியாதபடி போய் விடுகிறது. பின் நதிஜா சொற்பகாலத்தில் எவ்வளவு பணக்காரியாகிவிட்டாள்? என்ன அந்தஸ்து? நதிஜா வந்தால் என்ன செய்வாள் என்பதைப்பற்றி மனம் கற்பனை செய்தது: அன்று கிராமத்தில் தோப்பில் தன்னைக் கட்டிக் கொண்டாளே அதைப்போல் கட்டிக்கொள்வாள்; ஆனந்தக் கண்ணீர் சொரிவாள். இவ்வாறு நினைக்கும் போது தன் உடையைத்தானே பார்த்துக் கொண்டான். தன் கிழிந்த ஷெர்வானியைப் பார்த்ததும், அவனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. அதைக் கழற்றுவோமென்றால் உள்ளே அழுக்குச்சட்டை?

வாயிலில் குதிரைகள் வந்து நின்ற ஓசை கேட்டது. வண்டி வந்து நின்றது. எஜமானி அம்மாள் வத்து விட்டாள் என்று வேலைக்காரர்கள் ஓடினார்கள். ஸலீம் ஆவலுடன் எட்டிப் பார்த்தான். அவன் நெஞ்சம் துணுக்குற்றது. அவனுடைய நதிஜா இறங்கி வந்தாள். ஆனால் அவனுக்கும் இவளுக்கும்? இவள் நடையில் மிடுக்கு இருந்தது; கவர்ச்சியிருந்தது; அவன் எதிர்பார்த்த அடக்கம் காணவில்லை. செல்வம் என்னதான் செய்யாது. உடல் முழுவதும் பட்டாலும் வைரத்தாலும் அலங்கரித்துக் கொண்ட நதிஜா சௌந்தர்ய தேவதையாகத் திகழ்ந்தாள். அவளைப்பார்க்கவும் ஸலீமின் கண்கள் கூசின. அவன் தைரியம் ஆர்வம் ஒவ்வொன்றாக நழுவ ஆரம்பித்தன. பின்னால் விருந்தினர் பலர் பின் தொடர வந்துகொண்டிருந்தாள் நதிஜா. பிரபுக்கள் சிலர் அவள் காலடியைத் தாங்கக் காத்திருப்பவர்போல் பின்தொடர்ந்து வந்தனர்· ஸலீமிற்குப்பெரிய பிரச்னையாகிவிட்டது, பலர் முன்னிலையில் தன் கிழிந்த அலங்கோலத்தைக் காட்டுவதா இல்லையாவென்று. அவன் எந்தக் குரலில் மனதைப் பறிகொடுத்தானோ அந்தக் குரலினால் பேசிக்கொண்டே நதிஜா வந்தாள், ஸலீம் திடப்படுத்திக்கொண்டு வெளியே வந்தான்.

நதிஜா தன் முழுக்கண்களால் அவனைப் பார்த்தாள். ஏறிட்டுப்பார்த்தாள், முகத்தை அப்புறம் திருப்பிக்கொண்டு மேலே நடந்தாள். ஸலீம் ஒரு கணம் தடுமாறினான். அவன் மனக்கண்முன் கோட்டைகள் தகர்ந்து விழுந்தன. இருட்டில் திரும்பவும் உட்கார்ந்துகொண்டான். மனதில் பெரிய குழப்பம் உண்டாய்விட்டது.

"ஸலீம் ஸாஹிப்!" என்ற குரலைக்கேட்டுத் தலையைத் தூக்கினான். முதியவள் நின்று கொண்டிருந்தாள். "எப்பொழுது வந்தாய் நானும் நதிஜாவும் உனக்கு ஆளனுப்பவேண்டுமென்றிருந்தோம்; நீயாகவந்து விட்டாயா? நீ எழுந்து சாப்பிடவா. நதிஜா இன்று விருந்தினருடன் சாப்பிட வேண்டும். அதுதான் போய்விட்டாள். நாமிருவரும் சாப்பிடலாம் வா" என்று கூப்பிட்டாள். ஸலீம் எழுந்து போய் உட்கார்ந்து கொண்டான். கிழவி பேச்சை ஆரம்பித்து, "ஸலீம்! நதிஜா முன் போன்றவள் என்று நினைக்காதே; பெரிய பாடகியாய்விட்டாளல்லவா? என்னைக்கூட மதிக்கிறதில்லை" என்றாள். ஸலீம் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு, "அதனாலென்ன? நதிஜா என்றுமே நல்லவள்தான். நான் நினைத்தபடியே பெரியபாடகியாய்விட்டாள். ஒன்றும் குறைவில்லை. அவளுக்கு ரொம்பவும் பிடித்தமான குஸுமாப் பூக்கள் கொண்டு வந்தேன். அதை அவளுக்குக் கொடுங்கள்" என்று பூக்களை எடுத்து வைத்தான், அதன் மணத்தைக் கண்டு வந்தவள் போல் நதிஜா உடனே வந்தாள். தாய் "நதிஜா இதோபார்; ஸலீம் ஸாஹிப் உனக்காகக் குஸுமாப் பூக்கள் கொண்டுவந்திருக்கிறார். நீ கவனிக்காமல்உள்ளே ஓடிப் போய்விட்டாயே" என்று கடிந்தாள், ஸலீம் நதிஜாவை ஒரு தரம் ஏறிட்டுப் பார்த்தான். அவளுடைய கண்கள் அவன் நோக்கைச் சந்தித்தன. அதைத் தாங்கமுடியாதவள்போல் நதிஜா பார்வையைத் திருப்பினாள். அவன் எதிர்பார்த்த அந்த ஆலிங்கனம் எங்கே? அன்பு முத்தம் எங்கே? அவை எங்கே பறந்துபோயின? அவனுக்கே புரியவில்லை. ஸலீம் பெருமூச்சுடன் தலை குனிந்தான். அவளது பிரகாசம் அவன் கண்ணைக்கூசச்செய்த, அவளணிந்திருந்த ஒவ்வொருபட்டாடையும், வைரமும்அவன்செய்த உபகாரத்தினால் தான். ஆனால் அவன் பிச்சைக்காரநிலை அவனை அச்சப்படுத்தியது. குஸுமாப்பூக்களில் ஒரு கொத்தை எடுத்து ஆனந்தமாக முகர்ந்து கொண்டே நதிஜா, "பிரேஸ் இளவரசருக்குக் காஷ்மீர் குஸுமா ரொம்பப் பிடிக்கும்; அதைக் காட்டுகிறேன் அவருக்கு" என்று கூறிக்கொண்டே மறைந்தாள். தாய் பரிதாபமாக ஸலீமைப் பார்த்

32
m 211, N41KV
N48.8.12
198052

தாள். "ஸலீம் ஸாஹிப், நீங்கள் செய்த உபகாரத்தை நாங்கள் மறக்கவேமாட்டோம். அதற்கு உங்கள் காலில் விழுந்தாலும் தகும்'' என்று வருத்தத்துடன் கூறினாள்.

ஸலீம் வறண்டசிரிப்பொன்று சிரித்தான். அவனதுஆண்மை எங்கேயோ ஓடி மறைந்தது. வீட்டு வேலைக்காரர்கள்கூட அவனை விட நல்ல உடை அணிந்து சென்றனர். அது அவனைத் தலைகுனிய வைத்து விட்டது. அச்சமயத்தில் சாலையோரக் கிழவன் சொன்னவாக்கியங்கள் அவன் காதில் ஒலித்தன. "நீ அவளைக் கைவிட்டு விட்டாயப்பா. அவளிருக்கும் உயர்வுக்கும் நீயிருக்கும் தாழ்விற்கும் இணை காட்ட முடியாது.'' அத்தனையும் உண்மை. செல்வம் என்ன் தான் செய்யாது? தன் உயிருக்குயிரான நதிஜாவை அவனிடமிருந்து பிரித்து விட்டதே. அவள் ஏக்கத்துடன் தன் கைகளை அவன் கைகளில் வைத்தநாட்கள் மீண்டும் வருமா? இப்போது பிரபுக்கள் வீட்டு வாயிலில் காத்திருக்கிறார்கள். பெரிய பட்டணத்தில் அவள் பெயர் முழங்குகிறது. தான் என்றும் நாட்டுப்புறத்தான், ஒன்றும் தெரியாதவன். அன்று நதிஜாவிற்குப் பதில் தான் புறப்பட்டு வந்திருந்தால்?

பக்கத்து அறையில் நதிஜா விருந்தினர்களுக்காகப் பாடத் தொடங்கி விட்டாள். அக்குரலைக் கேட்டதும் ஸலீமிற்கு அந்நாட்களில் மலர்ச் சோலைகளில் அவனின்பத்திற்காக அவள் பாடிய சம்பவங்கள் நினைவிற்கு வந்தன. அவள் முதல் முதல் தெருவில் பிச்சைக்காகப் பாடியதும் நினைவிற்கு வந்தது. இந்தக் குரல் இனிமேல் அவனுக்கில்லை. பெரிய அரசர்களும் பிரபுக்களும் போட்டிக்கு வந்து விட்டார்கள். ஸலீம் கண்களில் இரு பெரிய துளிகள் ததும்பி நின்றன. தனது கிழிந்த சட்டையினால் அதைத் துடைத்துக் கொண்டான்.

முடிவில் ஸலீம் "அம்மா! உங்களைப் பார்க்க வந்தேன்; பார்த்தாய் விட்டது; கிளம்பட்டுமா?'' என்றான். மௌனமாய் உட்கார்ந்திருந்த கிழவி திடுக்கிட்டு, "எங்கே ஸலீம் ஸாஹிப், இதற்குள்?'' என்றாள். ஸலீம் சாவதானமாக "என்னுடைய கிராமத்திற்கு'' என்றான்.

"கொஞ்ச நாள் இங்கேயே இரேன். நீ வந்த சுருக்கில் கிளம்பிப் போனால் நதிஜா மிகவும் வருத்தப்படுவாள். அவளுக்கு என்ன இருந்தாலும் நல்ல மனது உண்டு''

ஸலீம் தன் மனதிலிருப்பதை வெளியிட முடியாமல் தவித்தான். "இல்லை இல்லை. நான் என்னென்னவோ நினைத்துக் கொண்டு வந்தேன். அது வெறும் பகற் கனவாய் விட்டது. இப்போது இருக்கும் நிலையில் நான் திரும்புவது தான் உசிதம்'' என்றான்.

கிழவி அவனது மனதை நன்றாக அறிந்து கொண்டவள்போல் துக்கத்துடன் 'என்னவோ அப்பா! அந்த நாளில் இந்தப் பயிற்சி மண்ணாங்கட்டி ஒன்றும் வேண்டாம். நீ கலியாணத்தைப் பண்ணிக் கொண்டு சுகமாயிரு என்று முட்டிக் கொண்டேன். நீ கேட்காமல் செய்ததினால்தான் இந்த வம்பெல்லாம். வந்தது. நான் சாகிற வரைக்கும் உன் பேரைச் சொல்லிக் கொண்டு தான் இருப்பேன்'' என்றாள்.

ஸலீம் அவளைத் தேற்றுவதைப் போல், 'வருத்தப்படவேண்டியவன் நான். நீ சௌக்கியமாய் இரு. காரியம் மிஞ்சிப் போன பிறகு வருத்தப்பட்டு என்னபயன்? எப்படியோ, அவள் கீர்த்தியின் உச்சஸ்தானத்தை அடைந்துவிட்டாளல்லவா? அது தான் வேண்டியது'' என்று கிளம்பினான்.

கிழவி "நாளைக் காலையிலாவது போயேன் ஸலீம்.வண்டிவேணுமானால் அனுப்பட்டுமா?'' என்று கேட்டுக்கொண்டேயிருக்கையில் ஸலீம் படியிறங்கி நடந்து கொண்டிருந்தான். அவனது கிழிந்த ஷேர்வானி வேடிக்கையாய் ஊசலாட வழியில். சேவகன் ஏளனமாய் ஏதோ முணு முணுத்தது அவன் காதில் விழுந்தது.

மறுநாள் காலையில் கிழவன் ஸலீமை மரத்தடியில் விரக்தியுடன் உட்கார்ந்திருக்கக் கண்டான். "என்னப்பா போன சுருக்கிலே திரும்பிட்டே; மாளிகையிலேன்னா இருக்கணும் நீ'' என்றான். ஸலீம் சிரித்துக்கொண்டே "பெரியவரே, என் ஊர் என்னைத் திரும்பக் கூப்பிடுகிறது போகிறேன். மாளிகை எனக்குப் பிடிக்கவில்லை'' என்றான். விஷயத்தை அறிந்துகொண்ட கிழவன், "அதுதான் நேத்தேசொன்னேனே: அவளைக் கைவிட்டாச்சு. இனி பிடிக்கமுடியுமா; நீ செய்யறதுதான் சரி'' என்றான்.

உதய ராகத்தை ஷெனாயில் வாசித்துக் கொண்டே வயல் வரப்பில் நடந்து சென்றுகொண்டிருந்தான் ஸலீம்.

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்களை

உபயோகப்படுத்தி உணவைப் பெருக்குங்கள் !!!



Use Fordson MAJOR TRACTORS

நேரப் போக்கைச் சமாளிக்க உழைத்து வரும் இந்நெருக்கடியான வருடத்தில், வேலையைத் துரிதப்படுத்தவும் போதிய வேலையாட்களில்லாமையைச் சமாளிக்கவும் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் விவசாயிகளுக்கு மிகவும் உதவியுள்ளது. சுலபமாகக் கையாளக்கூடிய இந்த மேஜர் சிக்கன முறையில் பெரிய அல்லது சிறிய நிலப்பரப்பை உழுவதற்கு உதவுவதோடு போரடிக்கும் கருவியை இழுக்கவும் போதிய சக்தி பெற்றிருக்கிறது. ஹைடிராலிக் முதலிய பிரத்தியேக சாதனங்களோடு கூடிய இந்த மேஜர் உழவுத்தொழிலுக்குத் தேவையாயுள்ள ஒவ்வொரு வேலைக்கும் விசையளிக்க வல்லது.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202 - 203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: **பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (டெக்கான்)**

டெப்போ:— **கோயம்புத்தூர்.**

லக்ஷியக் கனவு

கே. சுந்தரம்மாள்

"அடடா. உத்தம நண்பர்கள் என்றால் இப்படி யிருப்பார்கள் போலும். எந்த விஷயத்திலும் அவர் உங்களை நினைக்காமலிருந்ததில்லை, கூடிய சீக்கிரம் உங்கள் சந்திப்பு ஏற்படலாம். ....ஊரில் காங்கிரஸ் மகாசபை கூடப் போகிறதாம் ஏப்ரல் மாதத்தில். அதற்குக் காமாக்ஷி, பாட்டும், ஆட்டமும். ஏற்பாடு செய்வதாகச் சொல்லுகிறார்கள். இவர் பணம் கட்டி, மெம்பராக வருவார் போலிருக்கிறது. அப்பொழுது சந்திக்கும் சந்தர்ப்பம் தானாகவே ஏற்பட்டுவிடும்"

''எப்படியோ எல்லாம் நன்மையாக முடிந்தால் சரி'' என்ற பொழுதே ரயில் வரும் அறிகுறியாக மணி அடிக்கப்படவே இருவரும் பிளாட் பாரத்திற்கு வந்தார்கள்.

அத்யாயம் 3

கதிரவன் உதயங்கண்டு கமலங்கள் முக மலர்ந்தன. அந்த ரயில்வேஸ்டேஷனையே அழகுறச் செய்தது அத் தாமரைக் குளம். கதிரோனின் இளங் கதிர்கள் மரங்களின்மீதும் கம்பங்களின்மீதும் மெல்லடி வீசிப் பரவலாயின. கட்டடங்களின் இடைவெளியின் வழியாக வீசின கதிர்கள் பலவித கோலங்களைப் போல் காட்சி யளித்தன. கதிரவன் வரவு கண்டு தங்கள் ஆனந்தத்தை வெளியிடுவது போல் மரங்களிலும் குரோட்டன்ஸ் செடிகளிலும், தண்டவாளங்களிலும், பனி நீர்த்திவலைகள் நின்றன. டிசம்பர் மாதத்துக் குளிரால் ஒடுக்கப்பட்டாலும் "தங்கள் கடமையைத் தவறவிடக்கூடாது" என்பது போல், தலையில் முண்டாசும் உடம்பில் ஸ்வட்டர் அல்லது கம்பளியும் போட்டு மூடிய வாறு சிப்பந்திகள் தங்கள் காரியங்களில் கருத்தைச் செலுத்திய வண்ணம் நடந்து கொண்டிருந்தார்கள்.

"பூதலம் புகழ் போற்றிடும் ஆதவா நீ வா" என்று பூபாள ராகத்தில் பாடிக்கொண்டு போன பிச்சைக்காரியின் குரல் பெஞ்சியின் மீது உட்கார்ந்து சிந்தனையிலாழ்ந்திருந்த லக்ஷ்மணனின் கவனத்தை, தமிழ் மொழியே காதில் படாமலிருக்கும் இடத்தில், சுத்தமான தமிழில், கர்னாடக ராகத்தில் பாடின பாட்டானது சட்டெனத் திரும்பிப் பார்க்கும்படி செய்தது. "ஆஹா, தேவாம்ருதம் போலிருக்கிறது" என்று சொல்லிய வண்ணம் அரை ரூபாயை அவள் கையில் கொடுத்தான். பிரமித்துப் போய் நின்றாள், ஓரணா காசை முழுசாகப் பார்க்காத அப் பிச்சைக்காரி.

"தாய்ப் பாஷையபிமானத்திற்கான பரிசு, போய்வா'' என்றான்,

வறுமையின் அபிமானத்தைப் பெற்றிருந்த அவளுக்குப் பாஷாபிமானத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளச் சக்தியில்லாத நிலைமையில் கையெடுத்துக் கும்பிட்டுவிட்டுச் சென்றாள். ரயில் வரும் மணியடிக்கவே எழுந்து வரவேற்கத் தயாரானான் லக்ஷ்மணன்.

விடிய விடியப் பனியில் நனைந்து வந்து, வெயிலைக்கண்டதும் "அப்பாடா" என்ற நீண்ட மூச்சு விடுவதுபோல் ''உஸ்'' என்ற சப்தத்துடன் நின்றது ரயில்.

லக்ஷ்மணன் நின்ற இடத்திற்கு நேராக நின்ற வண்டியிலிருந்து,

''லக்ஷ்மணா" என்ற குரல் வந்தது.

"கிட்டா!" அடுத்த கணம் இருவரும் கட்டித்தழுவியவாறு பிளாட்பாரத்தில் நின்றார்கள். சாமான் எடுக்கவந்த போர்ட்டர் இன்ன சாமான் என்பது தெரியாமல், நிற்பதைக்கூடக் கவனிக்காமல் இருவரும் அளவளாவுவதைக் கண்ட போர்ட்டர் ஒன்றும் புரியாமல் நின்றான். பதினைந்து நிமிஷம் பொறுமையைக் கடைப் பிடித்த போர்ட்டர், "என்ன ஐயா, எது உங்கள் சாமான்?" என்று ஹிந்தியில் கத்தினான்.

"தன் சாமான்களைக் காட்டி எடுத்துக் கொள்ளச் செய்து விட்டு வரும் பொழுது

டாங்கா பேசப் போன லக்ஷ்மணனை "லக்ஷ்மணா" இப்பொழுது வீட்டிற்குப் போக வேண்டாம். ஹோட்டலில் ஏதாவது சாப்பிட்டுவிட்டுச் சற்று நாழிகை பேசிக்கொண்டிருந்து விஷயங்களைத் தெரிந்துகொண்ட பின்தான் அவர்களைப் பார்க்க வேண்டுமென்பது என் அவா. உன் இஷ்டம் என்ன?" என்றான் கிட்டா.

"அப்படியே செய்வோம்" என்றான் லக்ஷ்மணன்.

ஏதோ ஹோட்டலில் ஒருவிதமாகக் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு, அருகிலுள்ள பார்க்கில் சென்று ஒதுக்கமாக இருந்த ஒரு சிமிண்ட் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டார்கள். பெட்டியையும் படுக்கையையும் அவர்கள் பக்கத்தில் வைத்துவிட்டுக் கூலியைப் பெற்றுக்கொண்டு சென்றான் போர்ட்டர்.

தன் கையிலிருந்த பீடாவிலொன்றைக் கிட்டாவின் கையில் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை வாயில் போட்டுக்கொண்டு சொன்னான்; "என்னவெல்லாம் கேட்க வேண்டுமோ அவைகளையெல்லாம் கேள். பதில் சொல்ல அடியேன் சித்தமாக இருக்கிறேன்"

"உன்னைப்பற்றி என் அம்மா கேட்டதற்கு லக்ஷ்மிக்கு வந்த கோபமானது, உன் செய்கை சுயநலத்தைப் பற்றியதல்ல என்பதை நிரூபணம் செய்தது" என்று, (அன்று லக்ஷ்மி தன் வீட்டிற்கு வந்த விஷயம் முழுவதும் சொல்லிவிட்டு) "தற்சமயம் இந்த ஊருக்குக் காங்கிரஸ் மஹாநாட்டிற்காகக் குடிவந்திருக்கிறாயா? நிரந்தரமாகவே வந்து விட்டாயா?"

"நிரந்தரமாகவே வந்துவிட்டேன்?

"ஏன்? சுதர்மாவின் சிக்ஷை முடிந்துவிட்டதா? அஞ்சலிதேவி போக அனுமதித்தாளா? இப்பொழுதைய லக்ஷ்யம் சுற்றுப் பிரயாணத்திலிருக்கிறதா?"

"அஞ்சலி தேவியும் காங்கிரஸின் நிமித்தம் இவ்விடம் வந்திருக்கிறாள். இவ்வருஷம் மஹாத்மா காந்தி அக்கிராசனம் வஹிக்கப் போகிறாரல்லவா? அதனால் ஏற்பாடுகள் மிகவும் விமரிசையாக நடக்கின்றன. அஞ்சலி தேவியின் பணியானது காங்கிரஸை மிகவும் ஆகர்ஷணம் செய்திருக்கிறது. ஒரு தனவந்தரே இதற்காகும் செலவைப் பூராவும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். அஞ்சலியின் புருஷன் அவருக்கு வேண்டியவர். காரியதரிசிப் பதவி அளிக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷம்......சமஸ்தானத்தில் காமாக்ஷியின் நாட்டியமும் பாட்டும் நடந்தபொழுது, "கானமோஹினி" என்ற பட்டம் வழங்கினார்கள். கானமோஹினி காதம்பரி என்ற பெயரைச் சூட்டினாள் அஞ்சலி தேவி. அதனால் இனிமேல் காமாக்ஷியல்ல, காதம்பரி."

"சரியான பெயர்தான் கொடுத்திருக்கிறார்கள். இது இரண்டாவது ஜன்மம் போலும்"

"விளையாட்டு அல்ல கிட்டா. அவள் தெய்வாம்சம் பொருந்தியவள்தான். சம்ஸ்கிருத சுலோகங்கள் சொன்னால் இவ்வுலக கவனமே அற்று விடுகிறது. கலைகள் அவ்வளவு சீக்கிரம் அவளுக்கு அடிபணிகின்றன. வீணை வாசிப்பதில் சுதர்மாவையே மிஞ்சிவிட்டாள்."

"சுதர்மாவும் உங்களுடன் வந்திருக்கிறாரா? அவரை அவசியம் பார்க்கவேண்டும்."

"வரவில்லை" என்று சொல்லும்பொழுதே குரல் கம்மிற்று.

"ஏன்? சொல்லும்பொழுதே உன் முகம் மாறுகிறதே விஷயம் என்னவோ?"

"அது பெரிய கதை. சென்ற வருஷம் என்னுடைய லக்ஷியமானது கனவாகி விடுமோ? என்ற பிரச்னைக்கு வந்துவிட்டது. அது நனவாக மாறியதில்தான் காதம்பரியைச் சக்தியென்று போற்றுகிறேன்"

"என்னப்பா, கேட்கவேண்டியது ரொம்ப விஷயம் இருக்கும் போலிருக்கிறதே? சொல்லு. கேட்போம்."

"மூன்பாதி லக்ஷ்மி சொல்லத் தெரிந்து கொண்டிருப்பாய். அதே ரீதியில் நான்கு வருஷங்கள் அமைதியாகச் சென்றன. சுதர்மா கவலை நீங்கிச் சந்தோஷமாகக் காணப்பட்டான். எங்களுடனேயே சாப்பாடு முதலியவைகளை வைத்துக்கொண்டான். அதற்காக, அரிசியும் ரூபாயும் கொடுப்பதாகக் கொடுத்துவந்தான். ஆனால் அவன் கொடுப்பது எங்கள் குடும்பம் முழுவதற்குமே முக்கால் வாசிக்குப் போதும்படியான அளவு இருந்தது. இரக்கச் சித்தத்தினால் செய்கிறானென்று முதலில் நினைத்துவந்தேன். காதம்பரி, என்னிடம் பாடங்கேட்கும் சமயம் தவிர, மற்றைப் பொழுதைச் சுதர்மாவுடனேயே கழிக்க ஆரம்பித்தாள். ஆனால் வீண் பொழுதுபோக்குவது கிடையாது. எந்நேரமும் இருவரும் வீணை வாசித்துப் பாடிக் கொண்டேயிருப்பார்கள். அவ்வளவு அப்யாசம் செய்து வந்ததினால்தான் இன்று இவ்வளவு உன்னத நிலைமையை அடைந்தாள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. கலையை

மட்டும் அனுபவிப்பது என்பது, எவ்வளவோ அசாத்யமான விஷயம் போலும். குருசிஷ்யை பாவம் போய், காதல் பாவம் ஏற்பட்டுவிட்டதுபோலும். முன்னதாக அவர்கள் காதல் நாடகம் ஆரம்பமான விதம். காதம்பரியின் வாயினுலேயே சொல்லக் கேட்டதை அப்படியே சொல்லுகிறேன்:

''மூன்று வருஷம் வரையிலும் ஒருவிதச் சலனமுமின்றிக் கருமமே கண்ணுகக் கலையைப் பயின்றுவந்தாள். கலை பூர்த்தியாக வந்துவிட்டது என்ற நிலைமையில் இதர விஷயங்களில் கவனம் செல்லத் தொடங்கிற்று. மெள்ளக் கண்கள் உறவாடலாயின. சாதாரணமாக உலக விவகாரமாக அநேக மணி நேரம் பேசிக்கொண்டிருந்தாலும், தங்கள் மனதைத் திறந்துபேச இருவருக்கும் தைரியம் ஏற்படவில்லை. இந்த மாதிரி நிலைமையில் ஒரு மாதம் சென்றது.

''ஒருநாள் பாடி முடிந்ததும் இனிமேல் உனக்குச் சொல்லக் கூடியது எதுவும் என்னிடமில்லை. எனக்குத் தெரிந்த யாவையும் உனக்குக் கற்பித்து விட்டேன். நீயோ என் வித்யையைப் பூர்ணமாக அப்யசித்த தோடுநின்றுவிடவில்லை. கற்பனு சக்தி அபாரமாக இருக்கிறது. இக்கலையில் மட்டும் நீ பூர்வ ஜன்ம சுகிர்தத்தினுல் கிடைத்த சக்தியுடையவளாக இருக்கிருய். சரஸ்வதி தேவியின் அம்சமோ வென்றுகூட எனக்குச் சில சமயம் தோன்றுவதுண்டு'' என்ருனும்.

''நான் மிக்க பாக்யசாலியே. கஷ்டகாலத்திலும் ஓர் நல்ல காலம் என்று சொல்லுவார்களே அது என் விஷயத்தில் உண்மை. சமூகத்திலேயே மிகவும் கேவலமானவள் என்ற நிலைமையில் இருந்த என்னை அண்ணுவானவர் சமூகத்தில் சமமாக நடக்கும் நிலைமைக்குக் கொண்டுவந்தார். தாங்களோ சமூகத்திலேயே மிக உன்னத நிலைமையை அடையக்கூடிய வழியைக் காண்பித்துவிட்டீர்கள், உங்கள் உதவிக்குக் கைம்மாறு நான் என்ன செய்யப்போகிறேன். ஆனுலும் குரு தக்ஷிணையாக ஏதேனும் ஒன்றை என்னிடமிருந்து பெற்றுக்கொண்டால் எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கும்'' என்ருளாம்.

''குருதக்ஷிணை!'' என்று சொல்லிவிட்டு அவளையே உற்றுப் பார்த்தவண்ணமிருந்தானும்.

''ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்'' என்ருளாம் புன்சிரிப்புடன்.

''குரு தக்ஷிணையை எப்படிக் கேட்பது என்று யோசிக்கிறேன்''

''யோசனைக்கு அவசியமேயில்லையே''

''அவசியமில்லை தான். உன் மனம் கண்ணில் தெரிகிறது என்ருலும் எச்சரிக்கை நல்லதல்லவா? நான் கேட்பது எதுவாஞலும் கொடுத்து விடுவாயா?''

''என்னிடம் உள்ளதை, என்னுல் கொடுக்கக்கூடியதாக உள்ள எதைக் கேட்டாலும் எனது பாக்யமென்று கொடுப்பேன். என் தேகத்தைச் செருப்பாகத் தைத்து உங்கள் காலில் போட்டாலும் போதாது உங்கள் உதவிக்கு''

''உன்னிடம் இல்லாததைக் கேட்பேனு? உன் தேகத்தைச் செருப்பாக உபயோகிக்க என் மனம் இடம் தருமா? உன்னையே எனக்கு அர்ப்பணம் செய்யுமாறு விரும்புகிறேன். இவ்விஷயம் உன் மனதிற்கு ஒவ்வாத விஷயத்தில் நான் இப்படிக் கேட்டதற்காக மன்னித்து விடு.''

''சுவாமி நான் உங்களை மன்னிப்பதா?'' என்ருளாம் பூமியை நோக்கியவாறு.

சற்று நேர மௌனத்தைக் கலைத்தது, ''என்ன கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லையே'' என்ற சுதர்மனின் கேள்வி.

''மனதில் நினைக்கலாம். ஆனுல் செய்கையில் நடக்கக் கூடிய விஷயமில்லையே. என் நிலைமை தாங்களறிந்ததே. ஹிந்துப் பெண் ஒருத்திக்கு இரு கணவர் உண்டா?''

''ஒத்த மனத்துடன் வாழ்க்கை நடத்தினுல் கிடையாது தான். உன்னை அவன் புறக்கணித்து மறு விவாகம் செய்து கொண்ட பொழுது, நீ ஏன் இழந்த வாழ்க்கையை மீண்டும் பெறக்கூடாது? இந்து சமூகத்தில் ஆணுக்கொரு நீதி, பெண்ணிற்கொரு நீதி என்று தானே நடந்து வருகிறது.

''நம்மைப் போன்றவர்கள் அதை எதிர்த்துப் போராடலாமல்லவா? என் மனைவி சரஸாவை அழகுத் தெய்வம் என்றே சொல்லலாம். வீணை வாசித்துப் பாடுவதில், அவளுக்குப் பிறகு நீ தான் உவமை சங்கீத உலகிலேயே. ஆனந்த வாழ்க்கை நடத்தினேம். திடீரென்று காலன் என்னிடமிருந்து அவளைப் பிரித்து விட்டான். அந்தச் சமயம் உலகமே இருண்டது. யாவற்றையும் உதறித் தள்ளி விட்டு மனம் போனபடி சுற்றினேன். இவ்விடம் வந்த பிறகு ஏதோ ஒரு மாதிரி மன அமைதி ஏற்பட்டது போல் தோன்றினதினுல் இவ்விடம் நிரந்தரமாக வசித்தேன்; எ ருலும் மனம் பூர்ண சாந்தியைக் காணவில்லை. நீ என்னிடம் சிக்ஷை பெற வந்ததானது இருண்ட வாழ்வில்

ஜோதி உதயமானது போலிருந்தது. எந்த விதமான சாந்தியைத் தேடி அலைந்தேனோ அந்தச் சாந்தியானது உன்னுடன் பழகத் தொடங்கினதுமே கிடைத்து விட்டது. வித்தை பூர்த்தியாகும் வரை மனதைக் கட்டிப் பிடிக்க வேண்டுமென்ற உறுதியில் காலம் கழித்தேன். உன் மனம் எப்படியென்பதையும் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? எனக்குச் செய்யும் பணி விடைகளிலிருந்தும் உனது கண்களினின்றும் உனது மனநிலைமை தெள்ளெனத்தெரிந்து வருஷம் ஒன்றும் ஓடிவிட்டது. சமயத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன். காலமானது இன்றைய தினத்தையே தேர்ந்தெடுத்தது போலும். உனது அபாரமான கற்பனைத் திறம் வீணையில் பிரதி பலிக்கவே, என் மனம் சொல்ல



அரை ரூபாயை அவள் கையில் கொடுத்தான்

வொணா ஆனந்தத்தை யடைந்தது. வார்த்தைகளும் வெளிப்பட்டன. உன் பூர்ண சம்மதம் எனக்குக் கிடைத்து விட்டால் போதும். மற்ற விஷயங்களை நான் தகுந்தபடி ஏற்பாடு செய்து கொள்ளுகிறேன். நீ இல்லையேல் எனது வாழ்வுமில்லையென்று ஆகிவிட்டது எனது தற்போதைய நிலைமை. உன் மனதை உன் வாயினால் அறிய விரும்புகிறேன்."

"மனம் பேய். ஆட்டங்காணுவதும் இயல்பு. அது சென்ற வழி நடப்பதானால் நன்மை ஏற்படுமா? ஹிந்து தர்ம விதிப்படி ஒருவர் அணிவித்த மாங்கல்யம் என் கழுத்திலிருக்கும் பொழுது மற்றொன்றை ஏற்பது எப்படி? அதற்கு வசதி கிடைக்குமா? மனைவியை வேண்டாம் என்று ஒதுக்கி விட்டு மற்றொருத்தியை மனைவியாக்கிக் கொள்வதைச் சமூகம் வரவேற்கிறது. 'வேண்டாம்' என்று ஒதுக்கப்பட்டவள் மற்றொருவரை அடைந்தால் சமூகம் அவளைப் புறக்கணிப்பது மட்டுமா? பிறகு எந்த விதத்திலேயும் முன்னேறுவது என்பதை ஜன்மாவிலேயே காண முடியாது. விதியை நொந்து கொண்டு தனிமையில் உற்றார் உறவினர் கட்டுப்பாடுகளுக்கும் திட்டு வசைகளுக்கும் தலை வணங்கி நடந்துகொண்டால் சமூகம் வசையில்லாது ஒருமாதிரியாக வாழ அனுமதிக்கும். என் வழி அப்படி மோசமான நிலைமைக்குக் கொண்டு போகாமல் உங்களாலும் அண்ணாவினாலும் வகுக்கப்பட்டது. இன்று நான் ஒருவருக்கும் அடிமையாகாமல் சுதந்திரமாக, கௌரவமான முறையில் வாழ்க்கை நடத்த முடியும்: அத்துடன் திருப்தி யடையாமல் மேலும் மேலும் மனம் சென்றவழி ஆசைப் பேய்க்கு அடிமையானால், உன்னத லக்ஷியமாக மேலே போகாமல் அதப்பாதலத்தில் இறங்க ஏதுவாகிவிடும். தயவு செய்து இவ்வெண்ணத்தை விட்டு விடுங்கள். நடக்கக் கூடியதைச் சொல்லுங்கள்."

"நடக்கக் கூடியதையே சொல்லுகிறேன். சட்டப்படி மணம் என்பதைச் சமூகம் ஏற்காது. கள்ள நட்பிற்குத் தாராளமாக இடமளிக்கும். சமூகத்தின் அசட்டுக் கொள்கையினால்தான் கள்ள நட்பிற்கே இடமேற்படுகிறது. ஆண்பிள்ளை செய்யும் அக்ரமத்திற்குத் தலை வணங்காமல் பதிலுக்குப் பதில் நம்மைப் போன்றவர்கள் துணிந்து, செய்தால்தான் இந்த ஒருதலை நியாயம் நீடூழி வாழாமலிருக்கச் செய்ய முடியும்."

"தாங்களும் அவ்வாணினத்தைச் சேர்ந்தவர்தானே" என்றாள் புன்சிரிப்புடன்.

'இனத்திற்காக அக்ரமத்தை வரவேற்க முடியுமா? ஸ்திரீகளிடத்தும் எவ்வளவோ தவறுதல் இருப்பது சகஜம். ஆண்களிலும் நேர்மையான தர்மத்தைக் கடைப்பிடிப்பவரும் உண்டு. அதனால் எந்த இனமானாலும் நியாய விரோதமாக நடந்தால் இரு இனமும் கண்டிக்கக் கடமைப் பட்டனவே. நாம் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்துகொள்ள முடியாது, விவாகரத்து என்பது நம்மவரில் இல்லாத நிலையில். உன் கணவன் அங்கு மற்றொருத்தியுடன் ஆனந்த வாழ்க்கை நடத்தும் பொழுது நீ மாத்திரம் ஏன் அமங்கள வாழ்க்கை நடத்த வேண்டும். நாம் துணிந்து இச் செய்கையிலிறங்குவோம். சமூகத்திற்கு வழிகாட்டியாக நடப்போம், இந்தக் கோவில் ஸ்ரீ கிருஷ்ணன் முன்பாக நாம் கணவன் மனைவி" என்று அவர் சாக்ஷியாகச் சத்தியம் செய்வோம். சமூகத்தினின்று கொஞ்சகாலம் பிரிந்து இருக்க வேண்டி வரும். நம்மிடம் அருமையான கலையிருக்கிறது. கலையும் காதலும் துணையாக ஆனந்த வாழ்க்கையை நடத்துவோம்"

"நீங்கள் சொல்லுவதெல்லாம் உண்மையான விஷயங்களே. ஒப்புக்கொள்ளக்கூடியவை. ஆனால் என் மனத்தில் நீங்கள் நினைக்கிறபடி உங்களிடம் ஏற்பட்ட அன்பானது காதல் என்று சொல்ல முடியாது" என்றாள் தலைகுனிந்தவாறு.

"காமாக்ஷி! எங்கே என்னைப் பார்த்துச் சொல்லு. உங்கள்மீது காதலில்லையென்று" என்று கேட்டவண்ணம் அவள் மோவாய்க் கட்டையைப் பிடித்து முகத்தை நிமிர்த்தி, "உன் ஹ்ருதய பூர்வமாகச் சொல்லு" என்று உற்றுப்பார்த்தபடி கேட்டான்.

ஒருவர் ஹ்ருதயத்தை அவர்கள் கண்களில் கண்டுபிடிப்பது போல் உற்று நோக்கியவண்ணமிருந்தார்கள். மௌனத்தில் சென்றன சில விநாடிகள்.

"சுவாமி! என்னையேன் சோதனைக்குள்ளாக்குகிறீர்கள். உங்களை வெறுக்கும் சக்தி எனக்கேது?" என்று நீண்ட மூச்சிற்குப் பின் சொல்லிவிட்டு மோவாயிலிருந்த அவன் கையை எடுத்துக் கீழேவிட்டாள்.

"பின் எதைப்பற்றி ஆக்ஷேபனை.?'

"அது எனக்கே தெரியவில்லை. ஏதோ ஒன்று நான் இப்படி நினைப்பது, நடப்பது. தவறு என்று சொல்லுவது போலிருக்கிறது. துணிவு ஏற்படவில்லை. அதனால் தான்............"

"சே, இவ்வளவுதானா? இது சகஜமே. துணிந்து செய்கையிலிறங்கவேண்டும். எல்லாம் தானே சரியாகப் போய்விடும். முதலாவதாக உன் அனுபவத்திலேயே இதைத்

தெரிந்துகொள்ளலாம். ஒருவருக்கும் சொல்லாமல் நீ புறப்பட்டு வந்தது நம்மில் எவ்வளவு கேவலம்? முதலில் உனக்குச் சற்றுப் பதற்றமாகவே தான் இருந்தது. தற்சமயம் அவ்விதம் வந்ததினால்தானே இவ்வளவு நன்மைகளையடைந்தோம் என்று நினைப்புத் தோன்றுகிறது. இப்பொழுது ஒரு மாதிரியாகத்தான் தோன்றும். பிற்காலத்தில் நாம் உலகம் போற்ற ஆனந்த வாழ்க்கை நடத்தும் பொழுது எவ்வளவு புத்திசாலித்தனமான காரியம் செய்தோம் என்பது தெரியும்."

"அது சரி: எனக்காக உத்யோகம் உற்ற குழந்தை இவைகளைத் தியாகம் செய்துவிட்டு வந்திருக்கும், அண்ணாவிற்கும் மன்னிக்கும் துரோகம் செய்ததுபோலாகாதா?"

"இதிலென்ன துரோகம்? உன்னை ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமென்பதுதான் அவர்களின் தியாகத்தின் லக்ஷியம். அது கைகூடிவிட்டது. பிறகு அவர்கள் குழந்தையுடன் போய்ச் சேர்ந்து வசிக்கலாம்; அல்லது இப்பொழுதிருக்கும் உத்யோகத்துடன் இக்கோவில் பொறுப்பையும் அவனிடம் ஒப்படைத்துவிடுகிறேன். குழந்தையைத் தங்களுடன் அழைத்து வைத்துக் கொள்ளட்டும். அவன் மனப் போக்கிற்கு ஏற்ற இடம் இது."

"நமக்குச் சரி யென்று தோன்றுகிறது. அவர் ஒத்துக்கொள்ள வேண்டாமா?"

"நான் சொன்னால் கட்டாயமாக ஏற்றுக் கொள்வான். அவனைப்பற்றிய கவலையை எனக்கு விட்டு விடு. உன் விஷயத்தைச் சரி செய்துகொண்டால் போதும். சம்மதம் என்று சொல்லு. மற்ற விஷயங்களை நான் ஒழுங்காக ஏற்பாடு செய்துவிடுகிறேன்."

"என் மனம் தெளிவற்றிருக்கிறது. ஒன்றுமே புரியவில்லை. அதனால் அவகாசம் கொடுங்கள். சிந்தனை செய்து பதில் கூறுகிறேன்"

"லக்ஷ்மணனைப்பற்றித்தான் உனக்குச் சிந்தனை என்பதும் என் மீது உனக்கு எத்தகைய அன்பு ஏற்பட்டிருக்கிறதென்பதும் எனக்குத் தெரிந்த விஷயம் தான். எனக்கு அனுகூலமான விடையே கிடைக்குமென்பதிலும் சந்தேகமில்லை. தாராளமாக நன்றாகச் சிந்தனை செய்து நாளைக்கு விடையளித்தால் போதுமானது"

"உன்னிடம் வந்து யோசனை கேட்டாலாக்கும்" என்றான் கிட்டா. "அதுதான் இல்லை. இயற்கையானது மனித சக்தியை எவ்வளவுதூரம் ஆகர்ஷணம் செய்துவிடுகிறது தெரியுமா? மறுநாள் காலையிலிருந்து மிக்க குதூகலமாகக் காணப்பட்டாள் காதம்பரி. "என்ன காதம்பரி, மிக்க உற்சாகமாகக் காணப்படுகிறாயே? என்ன விசேஷம்?" என்றேன்.

"ஒன்றுமில்லை; நான் கற்கவேண்டியது இனி பாக்கியில்லை. 'எனக்குத் தெரிந்ததை முழுதும் உனக்குக் கற்பித்துவிட்டேன். உனக்கு அபார கற்பனா சக்தி இருக்கிறது' என்று அவர் உங்கள் நண்பர் நேற்றுச் சொன்னார். ஆஹா, நான் எவ்வளவு பாக்யவதி. இதற்குக் காரணகர்த்தா அண்ணா என்று நினைக்கும்பொழுது என்னையறியாத ஆனந்தமேற்படுகிறது" என்றாள்.

"அப்படியா? மிக்க சந்தோஷம். இனிப் பிரவர்த்திக்குரிய மார்க்கங்களைத் தேட வேண்டும். அதற்கும் சுதர்மனே வழி காட்டுவான்" என்றேன்.

"ஆம், அவர் ஏதோ திட்டம் வகுத்திருப்பதாகவும் பிறகு உங்களிடம் சொல்லப் போவதாகவும் சொன்னார்" என்றாள்.

"மிகவும் நல்லதாய்ப்போயிற்று" என்றேன்.

அன்று சந்தியாகாலம், பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன், டிபனை முடித்துக் கொண்டு, சுதர்மாவிடம் என்ன விஷயமென்று கேட்கலாமென்று நினைத்து அவன் அறையை நோக்கிச் சென்றேன்.

காதம்பரியின் பேச்சுக்குரல் கேட்கவே சற்றே தயங்கியபடி நின்றேன்.

"என்ன நான் கேட்டதற்கு விடையளிக்காமல் என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டு வருகிறாயே?"

"அப்பா என்ன அவசரம்?"

"என் மனம் படும் பாட்டை அளவுகோல் கொண்டு அளக்கப் பார்க்கிறாய்போலும்?"

"மன்னித்துவிடுங்கள், ஸ்வாதீனத்திலேயே அவ்விதம் பேசினேன். அண்ணா சம்மதியளித்துவிட்டால் உங்கள் விருப்பத்தைப் பூர்ணமனதுடன் வரவேற்கிறேன்" என்றாள்.

விஷயத்தை அறியவேண்டுமென்ற ஆவல் தோன்றவே மறைந்து நின்று ஜன்னலின் இடை வெளியினால் உள்நடப்பதைப் பார்க்கலானேன்.

"ஆஹா! நான் மிக்க பாக்யசாலி. உன் பூர்ண சம்மதம் கிடைத்துவிட்டது. இனி அண்ணாவை என்னிஷ்டப்படி நடக்கச்செய்வது அவ்வளவு கஷ்டமில்லை." என்று அவள் இரண்டு கைகளையும் பற்றிக்கொண்டான்.

"சரி, மேலே என்ன திட்டமிட்டிருக்கிறீர்கள்?" என்றாள் அவன் கைக்குள்ளிருந்த தன் கைகளை விடுவித்துக்கொண்டு "இக் கோவில் நிர்வாகத்தின் பொறுப்பு, பள்ளிக்கூடம் இவைகளை லக்ஷ்மணனின் உரிமையாக்கிவிடுகிறேன். பாங்கியில் ரூ பதினாயிரம் இருக்கிறது. அதையும் அவன் பேருக்கு மாற்றிவிடுகிறேன். குழந்தையைக் கூட்டிவந்து இவ்விடமே சுகமான கால க்ஷேபம் செய்யலாம். அவன் மனப்பான்மைக்கு உகந்த உத்தியோகம் இது. மீனாக்ஷிக்கோ அஞ்சலிதேவியின் ஆசிரமமிருக்கிறது. தனியாக இரண்டாயிரம் ரூபாயை அவள் பேரில் பாங்கியில் கட்டி விடுகிறேன், அல்லது உன்னிடம் இருக்கப் பிரியப்பட்டாலும் கூடஅழைத்துச்செல்லுவோம்."

"என்பொருட்டு எவ்வளவு தியாகம்? மீனாக்ஷி இவ்விடமிருக்கவேதான் விரும்புவாள். ஆனால் நாம் எங்கே போகப்போகிறோம்?"

"காசியில் எனது குருநாதரின் இல்லமிருக்கிறது. தற்சமயம் அவரது புதல்வனே இருந்துவருகிறான். எனக்கு மிகவும் வேண்டியவன். அங்கே சென்றால் நமக்கு உண்மையான அன்பு வரவேற்பு நிச்சயம். உனது கலை பிரகாசமடையத் தகுதியான இடம் காசியை இருப்பிடமாகக்கொண்டு, ஊர் ஊராகச் சுற்றி வரலாம். அனேக சமஸ்தானங்கள் நம்மை ஆதரிக்க முன் வரும். கவலையில்லாமல், கலையும் காதலும் ஒன்றுபட ஆனந்த வாழ்க்கை நடத்தலாம். 'நம்மைப் போன்ற தம்பதிகளை இனி காண்பதரிது' என்று ஆச்சர்யப்படும்படியான வாழ்க்கை நடத்துவோம்."

"ஸ்வாமி, நிச்சயமாக இவை நடக்கக்கூடிய விஷயங்கள் தானா?"

"ஏனிந்தச் சந்தேகம்?"

"அபாக்யவதியான எனக்கு அவ்வளவு சுக வாழ்வு ஒத்துக்கொள்ளுமா? என்ற சந்தேகம்தான்."

"யார் அபாக்யவதி? பைத்தியம், பாக்யசாலியானபடியினால்தான் இவ்விடம் வந்து சேர்ந்தாய். நான் பாக்கியத்தை இழந்தேன். மீட்கச் சமூகம் எனக்கு இடமளிக்கும். உன்னைப் பாக்யத்திலிருந்து பிடிவாதமாகத் தள்ளினார்கள். ஆனால் சமூகமானது அதை உனக்களிக்க உதவி செய்யாது. பாக்யம் இழந்தவன், பாக்யத்திலிருந்து தள்ளப்பட்டவளுடன் சேர்ந்து பாக்கியத்தை உண்டாக்குவதுதான் சமூக சேவையாகும்"

"எப்படி? சுயநலத்திலீடுபடும் செய்கையா சமூக சேவையாகும்?"

"வாயால் பேசிப் பேசி அப்பேச்சுடன் நிற்கும் சமூக சேவையை விட, சுய நலத்திற்கோ, பிற நலத்திற்கோ, துணிந்து செய்கையிலிறங்குவதுதான் சமூகத்திற்கு வழி காட்டியதாகும். நம்மை நாலு பேர் பின் பற்றி நடப்பதற்கும் உதாரணமாவோம்."

"உங்களதும் அண்ணாவினுடையதும், லக்ஷியம் ஒன்றானாலும், அதை அடையும் பாதையானது வெவ்வேறானதாக இருக்கிறது. எனக்கு இவ்வளவு பாக்யம் கிடைக்குமென்று கனவிலும் கருதினதில்லை. கலாரசிகருடன் ஒன்றுபட்ட வாழ்க்கை நடத்த விதி ஏற்படுத்தியிருப்பதினால்தான், சாதாரண பழக்க வழக்கமும், சுய நலமும் கொண்ட எனது கணவருடன் ஒன்று சேர அவ்விதி இடமளிக்கவில்லை. நீங்கள் சொல்லுகிறபடி காசி சென்று கலையுலகில் மஹோன்னத ஸ்தானத்தை யடைந்து, கலா விற்பன்னரான தங்களுடன் வாழ்க்கை நடத்துவதானது, நினைத்துப் பார்க்கும் பொழுதே எவ்வளவு ஆனந்தம்! ஸ்வாமி, உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். அண்ணாவிற்குக் கொடுக்க எதுவுமே ஈடாகாது" என்று ஆனந்த மிகுதியினால் படபடவெனச் சொல்லிக் கொண்டே வந்தவள் சட்டென யோசனையிலாழ்ந்து விட்டாள்.

"என்ன காமாக்ஷி! அமிர்த தாரை போல் வர்ஷித்த உன் சொற்களைக் கர்ணமிருதமாகக் கேட்டு வந்த நான் ஆனந்த சாகரத்தில் மிதந்து கொண்டிருந்தேன். உனது திடீர் மௌனம் என் மனதில் சூறாவளியை எழுப்புகின்றதே; காரணம்?"

"ஒன்றுமில்லை; மட்டற்ற ஆனந்தத்தினால் மனம் துள்ளி விளையாடுகிறது. ஆனால் அண்ணாவின் திட்டம் வேறு விதமாக இருந்தது. அதனால் அவர் இதற்குச் சம்மதம் கொடுப்பாரா? என்ற பிரச்னை என்னை யறியாமலே தோன்றலாயிற்று. அதனால் தான்........."

"இயற்கைக்குப் புறம்பான அவன் லக்ஷியத்திற்கு உன்னைத் தேர்ந்தெடுத்தான். ஆனாலும் என் சொல்லைத் தட்ட மாட்டான். எனது சந்தோஷ வாழ்க்கையைத் தடை செய்ய மாட்டான். அவனைச் சம்மதிக்கச் செய்வது எனது பொறுப்பு. அவனது சுக வாழ்விற்கு நான் என்றென்றும் கடமைப்பட்டவன். வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே. அவன் உன்னை எனக்களித்த நன்றியை ஒரு நாளும் மறவேன்."

"நீங்கள் என்ன உறுதி சொன்னாலும் அவர் சம்மதம் பெறும் வரை என் மனம் நிம்மதி யடையாது,"

வீட்டில் தயாரித்த

பனீர் கட்லெட்

டால்டாவில் செய்தால்

சுவைமிக்கதாயிருக்கும்!

5 கப் பாலை கொதிக்கவைத்து சில சொட்டுகள் எலுமிச்சஞ் சாறை பிழியவும். பால் பிரிந்ததும் அடுப்பிலிருந்து எடுத்து தனியாகவைக்கவும். உறைநீர் தெளிந்ததும் வடித்துவிட்டால் கெட்டியான பனீர் கிடைக்கும். (புளித்துப்போன பாலிலிருந்தும் மேற்கூறியபடி பனீர் எடுக்கலாம்). பனீரை மஸ்லின் துணியில் கட்டித்தொங்கவிடவும். சுமாருக உலர்ந்ததும் பச்சைமிளகாய் அல்லது மிளகு, பொடித்த சீரகம், ருசிக்குத் தகுந்த உப்பு இவைகளை கலக்கவும். கலவையின்மேல் பளு வைத்து சமமாக பரத்தவும். பனீர் கெட்டியானதும் சதுரம் சதுரமாக கத்தியால் நறுக்கவும். குழிவு குறைந்த வாணலியில் டால்டாவை சூடாக்கி சதுரக்கட்டிகளை சீக்கிரமாக பொரித்தெடுக்கவும். பனீர் கட்லெட்களை பொரித்த வெங்காயம், எலுமிச்சந்துண்டுகள் இவையோடு சூடாக பரிமாறவும். இதைப்போட்டு குழம்பு தயாரித்து சாப்பிட்டால் மிக ருசியாயிருக்கும்.

எந்த உணவுகள் எளிதில் ஜீரணமாகின்றன?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானுலும்—எழுதுங்கள்!

தி டால்டா
அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM 100-23 TM

"இன்றிரவே உனக்கு நிம்மதியை ஏற்படுத்தி விடுகிறேன், சரி தானே?"

"உங்கள் சித்தம் என் பாக்யம்" அப்படியானால் நமது புறப்பாடு மஹாநாட்டிற்கு முன்னதாகவா பின்னதாகவா? மஹாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ளுவதாகவும் வேறு ஒப்புக் கொண்டிருக்கிறோம்"

"மஹாநாடு இன்னும் பத்துத் தினங்களே இருக்கின்றன. ....சமஸ்தானபதி முன்னிலையில் நாம் சேர்ந்து பாடும் வசதியை இழந்து விடுவேனா? அவர் தந்தை என் தந்தைக்கு மிகவும் வேண்டியவர். அவரையும் எனக்குப் பழக்கமுண்டு. என் விருப்பத்தை வெளியிட்டேனானால் வேண்டிய உதவி செய்வார். இன்றைக்குப் பதினைந்தாம் நாள் வெள்ளிக்கிழமை ஸ்ரீ ராதாகிருஷ்ணன் முன்பாக நாம் தம்பதிகளாக உறுதி செய்து கொள்ளுவோம். மறு தினமே காசி பிரயாணம். பிறகு ஒரு மாதம் வெளியுலகச் சிந்தனையின்றி, காதல் உலகில் உல்லாஸ யாத்திரை. பிறகு நமது கலையின் முன்னேற்றத்திலீடுபடுவோம். சரி தானே? ஏதாவது மாறுதல் வேண்டுமானாலும் சொல்லு. செய்யச் சித்தமாக இருக்கிறேன்."

"உங்கள் ஏற்பாடு சாதாரணமாக இருக்க முடியுமா? நாம் எண்ணியபடி யாவும் நடக்க ஈசன் அருள் செய்ய வேண்டும். நடந்து விட்டால் என்னைவிடப் பாக்யசாலி உலகில் ஒருவருமில்லை யென்று மகிழ்வேன்" என்று முடிக்கும் சமயம், "எண்ணியபடி யாதும் நடக்காதே, எதுவும் ஈசன் செயல் மனப்பால் குடிக்காதே" என்று பிச்சைக்காரனொருவன் வீதியில் பாடிக்கொண்டு போனதானது எங்கள் மூவர் மனதையும் ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது என்றே சொல்லலாம்.

"இதென்ன? அபசகுனம்போல் காதில் விழுகிறதே. என்ன செய்ய?" என்றாள் காமாக்ஷி.

"இதெல்லாம் சும்மா. வீண் மனப்ராந்தி... அப்படியே எடுத்துக்கொண்டாலும் நீ பயப்படுகிறாயே அதன்படி நடக்காது என்பதற்காகவே இருக்கும்" என்றான்.

"அப்படியானால் மிகவும் சந்தோஷம். நான் சென்று வரட்டுமா?" என எழுந்தாள்.

"என்ன அவசரம்? சற்று நேரம் ஆனந்தமாகக் கழிக்கக் கூடாதா? வீணையை எடு. இருவரும் வாசிப்போம்" என்றான் அவள் கையைப் பற்றிய வண்ணம்.

"இல்லை. இப்பொழுது விட்டுவிடுங்கள். அஞ்சலி தேவி சற்று வந்து போகும்படி சொல்லி யனுப்பி யிருக்கிறாள். போய்வந்த பின் வருகிறேன். வீணை வாசிக்கலாம்" என்றாள்.

"அப்படியானால் சரி. அவசியம் சாப்பாட்டிற்குப்பின் உன்னை எதிர்பார்ப்பேன். ஏமாற வைத்துவிட மாட்டாயே" என்று எழுந்து அவன் மூச்சுக்காற்று அவள் முகத்தில் படும்படியாக நின்றான்.

அந்தச் சமயம் என் மனம்பட்ட பாடு? இலவுகாத்த கிளியின் நிலைமையை யடைந்தேன். சட்டென நுழைந்து இருவர் கன்னத்திலும் பளீரென்று அடிக்க வேணும்போல் தோன்றினது. ஆஹா! யௌவன உள்ளங்கள் ஆண் பெண் இச்சையின்றிப் பழக முடியாது போலும். நான்கூட லக்ஷ்மிகூட இல்லாவிடில் இவ்விதத் தவறுதல்களுக்கு ஆளாகி யிருப்பேனே என்று திகைத்தேன். என்ன செய்வதென்று புரியாமல் சற்று மயங்கினேன். சரி, அவள் சுகவாழ்வைத் தானே நாம் விரும்பினோம். சுதர்மனுடன் வாழ்க்கை நடத்தினால் தப்பென்ன? அவர்களின் திட்டத்தை ஆமோதித்து விடலாமா? என்று ஒரு சிந்தனை ஓடிற்று. மறுகணம் சே, நமது லக்ஷியம் என்னவது? இவ்வளவு பாடும் விழலுக்கிறைத்த நீராகவா போவது? என்ற சிந்தனை ஓடிற்று. இன்னும் நிலைமை மோசமாவதற்குள் தடுத்துவிட வேண்டும். இவ்வளவிலும் காதம்பரி என் சொல்லைத் தட்டமாட்டாள் என்ற நம்பிக்கை யுண்டானபடியினால் எப்படித் தடுப்பது? என்ற பிரச்னையிருக்கும் சமயம் அவர்கள் சம்பாஷணை சற்று நிம்மதி யளித்தது.

"உங்களுடன் பொழுதைக் கழிப்பதுபற்றித் தவங் கிடக்கும் நான் எப்படி ஏமாற்ற முடியும்" என்றாள் புன்சிரிப்புடன்.

"அண்ணா ஏதாவது படிக்கச் சொல்லிவிட்டால்?"

"ஏதாவது தந்திரம் செய்து தப்பிவிடுவேன். நான் வரட்டுமா?" என்றாள்.

அவள் முகத்தருகில் குனிந்தான். சட்டெனப் பின்னால் ஓர் அடி தள்ளி நின்று கொண்டாள் அவன் நோக்கத்தைப் புரிந்து கொண்டவளாக.

"ஏன்" என்றானவன்.

"பகலில் பக்கம் பார்க்கவேண்டும். மேலும் நமது பிணைப்பு ஊர்ஜிதம் செய்த பிறகுதான் இவையெல்லாம்" என்றாள்.

"இன்னும் பயமும் சந்தேகமும் தெளியவில்லையா? சரி. உன்னிஷ்டம். கசக்கி மோக்க நான் விரும்பமாட்டேன்"

"கிணற்றுநீரை வெள்ளமா கொண்டு போய்விடும். பொறுத்துக் கொள்ளுங்கள். என்னை மன்னித்து விடை கொடுங்கள்" என்றாள்.

"சரி. சென்றுவா" என்று லேசாக அவள் கன்னத்தைத் தட்டினான். பிரியா விடை பெற்றுச் சென்றாளவள்.

உள்ளே சென்று அவனிடம் நீ நினைப்பது நடக்காத விஷயம் என்று சொல்லிவிடலாமா? என்று நினைத்தேன். துணிவு ஏற்படவில்லை. திரும்பி என்னறைக்குச் சென்றுவிட்டேன்.

"உனக்குக்கூட கலக்கம் ஏற்படும்படியாகிவிட்டது ஆச்சர்யம்தான்" என்றான் கிட்டா.

ஓர் லக்ஷியத்தை அடைய எவ்வளவு இடையூறுகள்? அதிலும் என்னுடைய லக்ஷியமானது இயற்கைக்குப் புறம்பானது, கேட்பானேன் தடைகளுக்கு? பிறகு தனியே உட்கார்ந்து சிந்தனைத் தேரைத் தட்டிவிட்டேன்.

என் ஆருயிர் நண்பன், இழந்த வாழ்க்கையைப் புதுப்பிக்கப் பிரயத்தனப் படுவதை நானே தடுப்பதா? நிராதரவாக வந்த சமயத்தில் கைகொடுத்துக் காப்பாற்றிய உத்தமன் மனம் நோகச் செய்வதா? காதம்பரியின் அபூர்வ சக்தியின் பலன் வியர்த்தமாகக் கூடாது என்றால் அவனுடைய சேர்க்கையானது அவள் கலை பிரகாசிக்க ஹேதுவாக இருக்கலாம். எப்படியாவது அவள் நல்ல நிலைமையிலிருந்தால் சரி என்ற மனப்பான்மையில் அவர்கள் இஷ்டப்படிதான் நடந்து கொள்ளட்டுமே என்றது ஒரு பக்கம். சே, எல்லோரையும்போல அவளும் காதல் வசமாகவா நாம் இவ்வளவு தியாகம் செய்தோம். அவளுடைய அபூர்வ சக்தியை விரயமாக்கிவிடுவதா? ஒருநாளுமில்லை. ஏதோ மயக்கத்தில் இவ்விதம் சொல்லுகிறான். வேண்டுமானால் பெண்களா கிடைக்கமாட்டார்கள் என்று ஒருபக்கம். இப்படியாக அவள் வாழ்க்கைப் பாதையை திருப்பும் வகை பற்றிய போராட்டத்தில், 'என் லக்ஷியப் பெண்ணாகத்தானிருப்பது மேல், சுதர்மனின் காதலியாகக் கூடாது' என்ற முடிவில் என் பக்கமே ஜயமேற்பட்டது.

உடனேயே உடுத்திக்கொண்டு அஞ்சலி தேவியின் ஆச்ரமம் பக்கம் சென்றேன். வெளி வாசலில் காதம்பரியின் வரவிற்காகக் காத்துக்கொண்டிருந்தேன்.

ஆச்ரமத்தின் தோட்டத்தில் அன்ன நடை நடந்துவரும் காதம்பரியின் முகத்தில் தாண்டவமாடும் குதூகலத்தையும் நடையில் காணும் மிடுக்கையும் பார்க்கும்பொழுது "ஆஹா! இயற்கையின் வெற்றி அற்புதமானது. யௌவனத்தின் தாபம் மாந்தர்களின் மதியைக் கவர்ந்து விடுகிறது. காதலின் வெற்றிகண்ட காதம்பரியின் ஒவ்வொரு அங்கத்திலும் காதல் ஒளி தேஜோமயமாகப் பிரகாசிக்கின்றது. இதைத் தடுத்தால்?" என்ற சிந்தனையுடன் அவள் நடையின் நளினத்தை உற்றுப் பார்த்தபடி நின்றேன்.

"என்ன அண்ணா விசேஷம்?" என்றாள் என்னருகில் வந்து நின்ற வண்ணம்.

"ஒன்றுமில்லை. இப்படி உலாவ வந்தேன். நீ இவ்விடம் வருவதாகச் சொல்லியிருந்தாயல்லவா? அப்படியே உன்னையும் அழைத்துச் செல்லலா மென்று வந்தேன். வேலை முடிந்துவிட்டதல்லவா, போகலாமா?" என்றேன்.

"உம், போகலாமே" என்றாளவள்.

இருவரும் சற்றுநேரம் மௌனமாகவே நடந்தோம்.

எப்படிப் பேச்சைத் துவக்குவது என்று சிந்தனையிலிருக்கும் பொழுது பார்க்குக்கு வந்துவிட்டோம். "காதம்பரீ, சற்றே பார்க்கில் உட்கார்ந்து சில விஷயங்களை உன்னிடம் சொல்லலாமென்று நினைக்கிறேன்" என்றேன்.

"நான் அவரிடம் வீணை வாசிக்க வருவதாக வாக்களித்து வந்தேன். சீக்கிரமாக முடியுமென்றால் ஆக்ஷேபணை யில்லை" என்றாள்.

"மறுமுறை நீ சுதர்மனைப் பார்க்குமுன்பு உன்னிடம் சில முக்யமான விஷயங்கள்பற்றிப் பேச வேண்டும்" என்றேன்.

"அப்படியானால் சரி" என்று சொல்லும் பொழுதே பிரகாச வதனத்தில் சற்றே சலன ரேகை படர்ந்தது.

சற்று ஒதுக்கிடமாக உள்ள சிமிண்ட் பெஞ்சியில் இருவரும் உட்கார்ந்தோம். எப்படிச் சொல்லுவது என்ற தயக்கத்தில் சில நிமிஷம் மௌனத்தில் சென்றது.

"என்ன அண்ணா விஷயம்? ஏன் தயங்குகிறீர்கள்?"

"தயங்கக் கூடிய விஷயமாதலால்தான்"

"என்ன அண்ணா அப்படிச் சொல்லுகிறீர்கள்? நீங்கள் என்னிடம் சொல்லத் தயங்கு

வது நியாயமாகுமா? உங்கள் சகோதரி உங்கள் சொல்லைத் தட்டுவாளா?''

''தட்ட மாட்டாய் என்ற நம்பிக்கையினால் தான் சொல்லத் துணிந்தேன். ஆனால்......''

''ஆனால் என்ன? அண்ணா, நீங்கள் தயங்குவதால் விஷயம் ஏதோ முக்யமானது என்று தோன்றுகிறது. தாங்கள் என் தெய்வம். பேதைப் பெண் எனக்காகச் சகல ஸௌபாக்யங்களைத் துறந்து, கண்ணினுமினிய கண்மணியைப் பிரிந்து வந்தீர்கள். இன்று ஓர் சுதந்திரப் பெண்ணாக வாழ, தைரியமும் வசதியுமளித்தது தங்களது தியாகம். அதற்காக நான் செய்யக்கூடிய கைம்மாறு எதுவும் ஈடாகாது. நீங்கள் சொல்லும் விஷயத்தைக் கேட்டு நடப்பதாவது வேண்டாமா? தயக்கமில்லாமல் வெளியிடுங்கள். எதுவானாலும் அமைதியுடன் ஏற்றுக்கொள்ளுவேனென்றாள்''

''காதம்பரி! உன்னைக் காமாக்ஷி? என்று அழைத்தால்கூட பழைய நிலைமை நினைவில் தோன்றும் என்று காதம்பரீ என்று அழைத்து வருகிறேன் என் கோரிக்கை யாதாக இருந்தாலும் நிறைவேற்றும் சக்தி உன்னிடமுண்டா?''

''எதுவாக இருப்பினும் செய்வேன் அண்ணா. என்னிடம் நம்பிக்கை ஏற்படாமல் போனது எனது தௌர்ப்பாக்கியந்தான்''

''அப்படியல்ல அம்மா! நான் கேட்கப் போவதால் உனது வாழ்க்கையே பாதிக்கப் படலாம். உன் மனம் தாங்க முடியாத வேதனைக்குள்ளாகலாம் அதனால் என் நாவு தயங்குகின்றதே தவிர, உன்மீதுள்ள நம்பிக்கைக் குறைவினாலல்ல''

''ஒரே அந்தகாரமாக இருந்த எனது வாழ்க்கையில், இன்பவொளி தோன்றச் செய்த தாங்கள், எது சொன்னாலும் என் மனம் ஏற்கத் தயங்காது. வேதனையும் சஞ்சலமும் அடைந்த காலம் மலையேறி விட்டது. வேதனை யிருள் என்பது இனி எந்த விதத்திலும் உண்டாகாது என்பது எனது துணிபு.''

''ஒன்றுமில்லை. இன்று மத்தியானம் நீயும் சுதர்மனும் பேசிக்கொண்டிருந்ததைத் தற்செயலாகக் கேட்க நேர்ந்தது.''

இதுவரை என்ன விஷயம் சொல்லப் போகிறாரோ? சுதர்மனின் இஷ்ட விரோதமாக நடக்கமாட்டான். அதனால் ஏதாவது பிரவிருத்தி மார்க்கம்பற்றிப் பேசுவானென்று எதிர்பார்த்தாள் போலும். நேராகச் சுதர்மனின் விஷயத்திற்கு வரவே திடுக்கிட்டவள்போல் தோன்றினாள். நான் மேலே பேச்சைத் தொடரத் தயங்குகையில்,

''அதைப்பற்றி அவரே சொல்லுவதாகச் சொன்னதினால் நான் சொல்லவில்லை. தாங்களே தெரிந்துகொண்டதானது தாங்கள் என்மீது வைத்திருக்கும் அன்பிற்கு அத்தாக்ஷியாகின்றது. அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்னவோ?''

''அதைச் சொல்லத்தானே உன்னை இவ்விடம் அழைத்து வந்தேன்'' என்று நிறுத்தினேன்.

''மேலே என்ன?'' என்பதுபோல் என்னை உற்று நோக்கினாள்.

''என் அபிப்ராயம் என்னவென்றால் நீங்கள் நினைக்கிறபடி நடைபெறாது என்பதுதான்.''

''ஏன்?'' என்றாள் பதற்றத்துடன்.

''காதம்பரீ! நாம் புறப்படும் பொழுது என்ன தீர்மானத்துடன் கிளம்பினோம். என்பது மறந்துவிட்டது போலும்''

''மறக்கவில்லையண்ணா. உலகில் விதியானது கால மாறுபாட்டில் வாழ்க்கையில் பல விசித்ரஜாலவர்ணச் செய்கையைக் காண்பிப்பது என்பது சர்வ சாதாரணமல்லவா? அதுபோல் என் வாழ்க்கையிலும் விதி குறுக்கிட்டது என்று நம்பினேன்.''

''ஆம். உண்மை விதியே என் மூலமாகக் குறுக்கிடுகிறது. உலகில் ஆனந்தமாகவோ ஆனந்தக் குறைவாகவோ, முறையாகவோ முறைத் தப்பாகவோ, காதல் வாழ்க்கை நடத்துவது என்பது அதிசயமல்ல. சமூகத்திற்குப் புறம்பானதுமல்ல. ஆனால் உன்னத லக்ஷியம் என்பது அதிலடங்கியது அல்ல. சமுதாயம் என்பது சமுத்திரம் போன்றது. சமுத்திரத்தில் விதவிதமான கப்பல்களும் தோணிகளும் செல்வது இயற்கை போல் சமுதாயத்திலும் வாழ்க்கைத் தோணி நடத்துவது சர்வசகஜம். ஓடும் கப்பலிலிருந்து தவறி விழுபவர்களைக் கப்பலிலிருப்பவர் காப்பாற்றுவதைவிட, தனியான படகோட்டி, சுயேச்சையாகத் திரிபவன் சட்டெனக் காப்பாற்றுவது எவ்வளவு சுலபம்? சமுதாயச் சுழலில் சிக்குபவர்களைக் குடும்ப பாரத்துடன் மீட்கப் பிரயத்தனப்படுவதைவிட, குடும்பத் தியாகத்தினால் மீட்கப் பிரயத்தனப்படுவது சுலபம். தியாகத்தின் ஜகஜ் ஜோதியான பிரகாசத்தில் உன் வாழ்க்கைப் பாதையைப் பார். சிந்தனையின் க்ஷணநேர அலை என்பது மின்மினிப் பூச்சியின் ஒளி. அதனால் இருள் நீங்குவதற்குப் பதிலாகப் பின்னும் அதிக பயங்கரமான தோற்றம் தான் பெரும்பாலும் சாத்யம். காதம்பரீ புரிந்ததா? நான் சொல்வது?''

"உங்களுடைய உபதேசத்தில் ஊறிய என்னுள்ளம் இவைகளைப் புரிந்துகொள்ளாமலிருக்க முடியுமா? விதியினால் குடும்ப வாழ்க்கையினின்றும் பிரிக்கப்பட்ட என் போலுள்ளவர்கள், தங்களுடைய முழுச்சக்தியையும், பொதுநலத் தொண்டிற்கே அர்ப்பணம் செய்யவேண்டுமென்பது ஈசனது ஆக்ஞை என்று எண்ணவேண்டும். காதல் வாழ்க்கையிலீடுபட்டு விட்டால், சேவை மனப்பான்மை குறைந்து விடலாம். சுயநலம். மேலோங்கலாம். அதனால் இயற்கையின் வெறியாட்டத்திற்குத் தலைவணங்காமல் எதிர்த்துப் போராடி, பொது நலனுக்கே நமது வாழ்நாள் அர்ப்பணம் என்ற வழிக்கு மனதைக் கொண்டுவரவேண்டும் என்ற மனப்பான்மையால் தான் நடக்கப் பிரயத்தனப்பட்டேன். ஆனால் இயற்கையும் வாழ்க்கையின் ஏமாற்றமும் சேர்ந்து என்னைத் தன்வழியில் இழுத்துவிட்டன. அண்ணா, நான் இப்படிக் கேட்பதற்காக மன்னிக்க வேண்டும். உங்கள் நண்பர் சொல்லும் ஏற்பாட்டினால் உங்கள் லக்ஷியம் சிதைவுறுமென்று நினைக்கிறீர்களா? தன்னலமற்ற தியாக குணம் படைத்தவரான அவருடன் சேர்ந்து பொது நலத்தில் பாடுபட முடியாதா? ஹ்ருதயபூர்வமான காதல் தெய்வ சான்னித்தியம் பெற்றதென்று அறிஞர்கள் கூறுவது மிகையா? என்னைக் கைவிட்டு மற்றவளுடன் என் கணவர் என்பவர் வாழ்க்கை நடத்தலாமானால் நான் மட்டும் ஏன் அதை மேற்கொண்டு நடக்கக் கூடாது.? உங்கள் நண்பரின் பிளான்படி நடந்தால் நாம் எல்லோரும் சந்தோஷ வாழ்க்கை நடத்துவது நிச்சயம். ஈசுவரனையே தியானம் செய்துகொண்டிருந்த என் மனமானது சுதர்மனைத் தியானம் செய்யத் தொடங்கிவிட்டது. தாங்கள் எனது வாழ்க்கையானது அற்புதமான வழியில் சிறப்புற்றோங்க வேண்டுமென்று விரும்பினீர்கள். கலையும் காதலும் ஒன்று சேர்ந்த வாழ்க்கையானது உலகஅரங்கில் அநேக விசித்திர உண்மைகளைக் கையாளும் திறமையை அளித்து, சுயநலமற்ற பாதையில் நடக்கும்படி செய்யாதா? அண்ணா, உங்கள் சகோதரி இழந்த வாழ்வை மீண்டும் பெறுவதில் உங்களுக்குப் பெருமையில்லையா? சந்தோஷமில்லையா?" என்று அவள் கண்களில் நீர் முட்டி நின்று எந்தச் சமயம் உருண்டுவிடுமோ என்ற நிலைமையில் கேட்கும்பொழுது, "சரி அவளிஷ்டத்திற்குத்தான் ஒத்துக்கொள்வோமா," என்று கூடத் தோன்றினது. ஆனால் மறுகணம், "அது சரியாகாது. உன் தியாகத்தின் லக்ஷியம்என்னவது?" என்று மனச்சாக்ஷி குத்திக் காட்டினது. அதனால்,

"காதம்பரி! யௌவனகாலக் குமுறலை அடக்குவது என்பது சற்றே சிரமமே. ஆனால் ஆழ்ந்த சிந்தனையுடன் ஆராய்ந்து பார்த்தால் புத்தியானது தானாகவே நம்வழிக்கு வந்துவிடும். ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி யென்பது அநீதிதான். ஆனால் தவறான பாதையில் செல்லுபவர்களைப் பின்பற்றாமல், நம் பாதையில் அவர்கள் பிரவேசிக்குமாறு நடப்பதுதான் உண்மையான நீதியாகும். சமூகமும் சட்டமும் அனுமதியளிக்காத பாதையில் பெண் நடப்பதற்கு உரிமையில்லை. சமூகமும் சட்டமும் அனுமதியளிக்கும் பாதையில் நடக்க மறுப்பதற்கு ஆண்களுக்கு உரிமையுண்டு. அதை உபயோகித்து, இருவருக்கும் ஒரே நீதியை ஏற்படுத்திக்கொள்ள வழிகாட்டலாம் ஆண் இனம். உலகத்தில் தாம்பத்ய வாழ்க்கை என்பது சர்வ சாதாரண விஷயம். ஆனால் அது யாவும் அமையப்பெற்று ஒற்றுமையுடன் நடந்து வந்தால் அதுதான் சுவர்க்கம், தேசப்பணி, பொதுநலத் தியாகம், எல்லாம். அதன்றி விதியினாலோ, மதிக்குறைவினாலோ பிரிவு என்ற நிலைமை ஏற்படும் பொழுது இருபாலாரும் ஒரே நீதியைக் கடைப்பிடிப்பது தான் உத்தமம். பெண்ணினம் மீளாத் துன்பத்தை விதியின் பெயரால் அடிமை வாழ்வில் நடத்துவதைத் தவிர்த்து "தாம்பத்யம்" என்ற பாதையைத் தவிர மற்ற வாழ்க்கையின் எல்லாப் பாதைகளிலும் நடக்க வசதியேற்படுத்த வேண்டும். இருபாலாரிலும், மனதை யடக்கச் சக்தியற்றவர்கள் வேண்டுமானால் இழந்த வாழ்வை மீட்க வசதி கிடைக்கும் பக்ஷத்தில், தாம்பத்யம் மேற்கொள்வதில் சிறிது நன்மையுண்டாகலாம். சமூகத்தையும் சட்டத்தையும், எதிர்த்துப் போராடினாலும் பலன் உண்டு. ஆனால், நீ கேட்கலாம்: 'எனக்கு அவ்விதமான வசதி கிடைத்திருக்கிறதே. கலையும் காதலும் என்னிடம் அடிமை கொண்டுள்ளவே' என்று. உன் விஷயத்தில் நான் பாடு பட்டது உன்னுடைய அபூர்வ சக்தியை உலகிற்கு அர்ப்பணம் செய்யவே. இயற்கையாகவே, உன்னிடம் காந்தி மஹாத்மா, உபதேசிக்கும் குணங்கள் அமைந்திருக்கின்றன. ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தைக் காட்டுவது, யாவரிடத்தும் ஒரே விதமான அன்பு, நம்மால் உதவி செய்ய முடியாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமலிருத்தல், உன் சுகம் கருதாது பிறர் நன்மைக்குப் பாடுபடல், உழைப்பு மனப்பான்மை, சஹிப்புத்தன்மை, எந்த விஷயத்தையும் சட்டெனக் கிரஹிக்கும் அபூர்வ சக்தி, யாவரிடத்தும் சமமாகப் பழகுதல்— இவைகள் தான்

பொது நல சேவைக்கு ஏற்ற குணங்கள். பலபேர்கள் அடையும் நன்மையைவிட ஒருவன் அடையும் நன்மையா பெரிது? சுயராஜ்யத்திற்காகப் பாடுபடும் தலைவர்களில் நீயும் ஒருத்தியாக வேண்டும். அடிமை வாழ்வைத் தகர்த்தெறியும் தொண்டில் நீயும் பங்குபெறவே உன்னை அடிமை விலங்கிலிருந்துவிடுதலை செய்து அழைத்து வந்தேன். காதம்பரீ! கடைசியாக நான் உன்னைக் கேட்டுக்கொள்ளுவது, காதல் என்ற பந்தத்தில் நீ அகப்படக் கூடாது. வரப் போகும் மஹாநாட்டில் உன் கலையினால் அறிமுகப்படுத்தி, பணியாற்றுவதில் மாபெருந் தலைவர்களுடன் பங்கு பெறவேண்டும் என்பதே. உனது இந்தவிதமான வாழ்க்கைக்காக, என்னுடைய பணம், பதவி, குழந்தை, சுற்றத்தார், தெய்வமாகப் போற்றப்படவேண்டிய தாயார் இவ் யாவற்றையும் தியாகம் செய்தேன். லக்ஷ்மி, அவளை நினைத்துப் பார். எவ்விதமான வாழ்க்கை நடத்துகிறாள்? இவைகளைச் சிந்தனை செய்து பார்த்துவிட்டு உன் வழிதான் சரியென்று தோன்றினால் அதன்படி நடந்து கொள். எனது லக்ஷ்யம் கனவு என்ற எண்ணத்துடன் என் வழியில் நான் சென்று விடுகிறேன். உன் மனோபீஷ்டத்தைத் தடுக்க எனக்கு உரிமையில்லை. அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்"

"ஐயோ, அண்ணா! அவ்விதம் சொல்லாதீர்கள். நன்றி கொன்ற பாதகத்திற்கு நான் ஆளாக மாட்டேன். ஏதோ மயக்கத்தினால் அவ்விதம் தீர்மானித்தேன். தற்சமயம் தாங்கள் எடுத்துச் சொன்ன ஒவ்வொரு வாக்யமும் என் ஒவ்வோரு உள்ளத்துடிப்பிலும் கலந்து என் அறிவை விழிப்படையச் செய்துவிட்டது. க்ஷண நேர இன்பத்தைவிட, கல்பகாலத் தியாகம் எவ்வளவு மதிப்புடையது என்று இப்பொழுது தான் என்னறிவுக்கெட்டியது. தியாகியான உங்கள் மனம் நோக நடந்தால் எனக்கு நன்மையென்பது கிட்டுமா? இன்றே அவரிடம் இது நடக்கக்கூடாத விஷயம் என்று சொல்லிவிடுகிறேன். என்னை மன்னித்து ஆசீர்வதியுங்கள்" என்று கண்ணீர்விட்டு அழுதவண்ணம் என் காலைப்பிடித்துக்கொண்டு நமஸ்காரம் பண்ணினாள். (தொடரும்)

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :— 15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

தந்தச் சிலை

(வே. ரங்கராஜன்)

அந்தி வானச் செம்மை மெல்ல மங்கிய நேரம் அது. மலையடிவாரத்திலே வானளாவி நின்ற விருட்ச ராசிகள் தென்றலில் இலேசாக அசைந்தாடிக் கொண்டிருந்தன. வானத்தில் சிறு சிறு அன்னப் படகுகளென மேகங்கள் மிதந்து சென்றன.

ராஜக் கிருஹத்திற்கே பெருமையளிக்கக் கூடியது அந்தக் கிரிதரகூட மலை. பிம்பிசார மன்னனின் பெருமை உயர்ந்து பரவ நின்றது அது. அரசனின் வெற்றிக்கொடியைத் தாங்கிப் பறக்க விட்டு நின்றதில் அதற்கு ஒரு தனிப் பெருமை. கிரிதரகூட மலையின் இந்தச் சிறந்த ராஜ சேவைக்குப் பிரதியாகத்தானோ என்னவோ, பிம்பிசாரன் அதன் பெயர் அழியாது நிலவும் ஒரு காரியம் செய்தான். புத்த பகவான் தம்முடைய வாழ்வின் அஸ்தமன காலத்திலே ஆசிரமம் அமைத்ததற்குப் பிம்பிசார மன்னனே காரணமாவான். இதனால் மலையும் பெருமையடைந்தது, அரசனும் ஆத்ம சாந்தியடைந்தான்.

* * *

மலைவாயில் விழ விருந்த பகலவனை நோக்கிய வண்ணம் மோனத்திருந்தார் புத்த பகவான். முத்துக் குளித்தபின் உளம் மகிழ்வுற்று விகசிக்கும் தன்மை போல், புத்த பகவானின் வதனத்திலே சாந்தி நிலவியது. சத்யம், அன்பு, ஆசையின்மை இவைகளைப் பரப்பும் இலட்சிய உறுதியுடன் பல துறவிகள் உலகெங்கும் பிரயாணம் செய்தனர். செல்லுமிடமெங்கும் புத்த பகவானின் தர்மோபதேசங்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவருக்கு வேறு என்ன விருப்பம் இருக்க முடியும்? அவர் கனவு பலித்து வந்தது.

நின்ற நிலையிலே மின்னலென ஒரு தெய்வீக அழைப்பு அவர் மனதில் உதித்தது. மெய்யுணர்வால் தெளிந்த புத்த பகவான் திரும்பி நடக்கலானார். ஆசிரமத்தை நெருங்கி வந்தபொழுது அவர் இதழ்க் கொடியிலே ஒரு மென்னகை அரும்பியது. அதைத் தொடர்ந்து அவர் வதனத்திலே ஒரு ஒளி ரேகை மின்னி மறைந்தது, ஞானம் பெறப் புதிதாக வந்திருந்த அதிதி ஒருவர் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். புத்த பகவானின் பாதங்களில் முகத்தைப் பொருத்திக் கண்ணீர் வடிக்கத் தொடங்கிவிட்டார். ஆசிரமத்தில் தவம் செய்யும் மற்ற இளம் சாதுக்கள் பலரும் சூழ்ந்து நின்றனர்.

தம் பாதங்களில் கண்ணீர் பட்டதும் கண்களை மூடிக்கொண்டார் புத்த பகவான். ஞானத்தின் எல்லையில், பரமோன நிலையிலே லயித்து அப்படியே சிலையென நின்றுவிட்டார். இது ஒரு முகூர்த்த காலம் நீடித்தது.

தம்முடைய இதயத்தில் இருந்த மாசு முழுதும் நெக்குருகிக் கண்ணீர் வழியே வெளியேறி, புத்த பகவானின் பாதங்களில் விரவி நசித்துப்போகட்டும் என்று நினைத்தாரோ அந்த அதிதி? உள்ளக் குமுறல் சற்றே தெளிந்ததும் எழுந்து வணங்கி நின்றார். தவ வலியால் பனிக்கட்டியைப் போல் திண்மை பெற்றிருந்த சித்தார்த்தரின் மனம் அன்பின் மிகுதியால் சற்றே இளகியது. அதிதியை அழைத்துக்கொண்டு ஆசிரமத்தின் உள்ளே போனார்.

புத்த பகவான் என உலகம் அவரை முழுதும் உணராத காலம் அது. அரச போகங்களைத் துறந்து துறவு பூண்டு நவமான ஞான மார்க்கத்தைக் கண்ட முனிவர் அவர்; அவ்வளவே. புதிதாக வந்தவரும் அவரை நேரில் கண்டது அதுதான் முதல் தடவை. அவரும் அவரது ஞானப் பெருமையைக் கேள்விப்பட்டுத்தான் வந்தாராம். குருதேவர் அமர்ந்தார். அதிதியும் அவர் முன்னே உட்கார்ந்தார்.

"அப்பா நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?" என வினவினார் புத்த தேவர்.

"தேவரே, நான்...... நான்...... ஒரு சிற்ப சாஸ்திரி; பாரவி என்று பேர். சாவகத் தீவிலிருந்து வருகிறேன். துறவு பூண்டு ஞானமடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் தேவரைத் தேடி வந்தேன். அருள் புரிய வேணும்!......"

"நல்லது. ஏன்? என்ன முகாந்தரம்? வாழ்வுக்குப் பயந்த துறவு பலிக்காதே அப்பா! உன் பூர்வாசிரம வாழ்வை நான் தெரிந்து கொள்ளலாமா? உன் மனம் இப்படி நொந்து போகக் காரணம் என்ன?" என அன்புடன் வினவினார் சித்தார்த்தர்.

"தேவரே, பூர்வாசிரமத்தை மறக்க வேண்டித்தானே தங்களை நாடி வந்தேன் நான். கந்தையை விரிப்பானேன்? மன்னித்து விடுங்கள்; தங்களைத் தரிசித்தபின் இந்த அதம ஜடலம் புனிதமாயிற்று, இனிமேல் புது வாழ்வு வாழ வழி காட்டுங்கள்!"

"சிஷ்ய, சலனம் வேண்டாம். பூர்வாசிரமத்தைக் குறித்த மனோ விகற்பங்கள் உன்னுள் இன்னும் இருக்கின்றன. நீ முன் வருந்திய வியாதிகளை அறிந்தல்லவோ உனது சுகத்துக்கான மருந்துகளைக் கொடுக்க வேண்டும். உன் விருத்தாந்தத்தை ஒன்று விடாமல் சொல்!" என்றார் புத்த பகவான். பிறகு, சூழ்ந்து நின்ற துறவிகளை விளித்து, "அமருங்கள், நம் அதிதியின் கதையைக் கேட்போம்!" என்றார்.

* * *

"சிற்பி பாரவி என்றால் தென் குமரிப் பிராந்தியத்திலே பலருக்குத் தெரியும். தென் நாட்டின் முடியுடை வேந்தர் மூவரும் ஏனைய குறு நில மன்னர் பலரும் சிற்பி பாரவியை நன்றாக அறிவார்கள். என்னை அவர்கள் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கக் கூடிய சிற்பப் பொருள்கள் அவர் வசமுள்ளன. பாரவி என்னும் பெயருக்கு உரித்தான இந்த உடல் மண்ணுடன் நசித்து விட்டாலும், சிற்பி பாரவியின் பெயர் நிலைத்து நிற்கும்!........."

அந்தி வானச் செம்மை திடீரென மறைந்து கரு நீலம் படர்ந்ததால் ஆசிரமக் குடிலுள் இருள் சூழ்ந்தது. வீற்றிருந்த சாதுக்களுள் ஒருவரைக் குறிப்பாக நோக்கினர் குரு. குறிப்பை உணர்ந்த சிஷ்யர் எழுந்து சென்றார். ஒரு மூலையில் இலேசாகப் புகைந்து கொண்டிருந்த அக்கினி குண்டத்தைக் கிளறி விட்டு, உலர்ந்த சமித்துக்களைப் பரப்பினர். இதன் விளைவால் எழுந்த புகை சுற்றிலும் பரவி, குடிலின்மீது எழுந்து சென்றது. நெய் வார்த்துத் திரியிட்ட கை விளக்கொன்றை எரிய விட்டு ஏந்தி வந்த சிஷ்யர், குரு பீடத்தின் அருகில் இருந்த அகல் விளக்கை ஏற்றி வைத்து, உள்ளே சென்றார்.

"சிஷ்ய, மேலே சொல்!" எனவும் பாரவி தம்முடைய கதையை மேலும் தொடர்ந்தார்:

"ஆமாம்! நிலைத்து நிற்கும் என்றல்லவா சொன்னேன்! அதை எப்படி அவ்வளவு உறுதியாய்ச் சொல்ல முடியும்! நிலையாக இருக்கவேண்டியவை எத்தனையோ உலகில் அழிந்துபோகின்றன. குமரிக்குத் தெற்கே இருந்த தமிழ் வளர்ந்த நல்லுலகம் கடலுக்கிரையாய்விட்டதே! எத்தனை சிற்பிகள், ஓவியர், புலவர் சிருஷ்டித்த கலைப் பொருள்கள் யாவும் கடலுக்கிரையாய்விட்டன! தேவரே, எல்லாம் அநித்யம் என்ற ஞானம் வருவதற்கு இவ்வளவு நாட்கள் ஆயின. இது முன்னமே வந்திருந்தால் இந்தக் கைகளால் உளி பிடித்து இவ்வளவு நாட்களை வீணாக்கியிருக்கமாட்டேன். ஆ! என் இவ்விரு கைகளால் உருவான சிற்பங்கள் எத்தனை? யாவும் மிகவும் நுண்ணிய வேலைப் பாடமைந்தவை; ஒப்பு உயர்வற்றவை. என்னுடைய சிற்பங்களுக்குக் கருப்பொருள் தந்தம். கேரள மன்னர் நான் விரும்பும் தந்த ராசியைப் பரிசாகக் கொடுத்து உதவுவார். நானும் வருஷந்தோறும் ஒரு அரிய சிற்பத்தை அவருக்கு அளித்து மகிழ்வேன்.

எனக்கு வினைத் தெரிந்த நாள் முதல் தந்தங்களைக் குடைந்து செதுக்கிச் சிற்பங்களைச் செய்வதில் ஈடுபட்டுவிட்டதால் என்னுடைய ஓட்டைக் குடிசையே எல்லாம் என இருந்துவிட்டேன். என்னுடைய விதவைத் தாய் என் நாவிற்கினிய உணவளித்து வந்தாள். அரசர் அவ்வப்போது அளிக்கும் சன்மானம் குடும்ப நிர்வாகத்திற்குப் போதியதாய் இருந்தது......

கிரிதரகூட மலையை மருவி வீசிய காற்று குடிசையுள்ளும் வீசிற்று. சந்தனமும் அகிலும் இடப்பட்ட தூப கலசமொன்றைக் குருவின் முன்னே வைத்துச் சென்றார் சிஷ்யர்.

"தேவரே, மன்னரது சினத்திற்குக் கலைஞன் இலக்காவது எப்போதும் நிகழ்ந்து வரும் காரியமாக இருக்கிறது. என்னுடைய மூதாதையர் சிலரும் இந்த நிலைக்கு இலக்காகியிருக்கிறார்கள். தன்னுடைய உலாவனத்திலே நீர்வார்த்து வளர்க்கும் செடி கொடிகளிலிருந்து மலர் கொய்வதைப்போல, தன்னுடைய ஆதரவில் கலா சிருஷ்டி செய்யும் கலைஞனது உணர்ச்சிகளையும் கிள்ளி விடுகிறான் மன்னன். மலர்ச் செடிகளுக்குக் கண்ணும் காதும் இருந்தால், 'என்னுடைய விருப்பத்திற்கு உகந்த மலரையே மலர்விக்க வேண்டும்!' என்றுகூட அரசன் கட்டளையிடக்கூடும்! நல்ல வேளையாக அவைகள் பிழைத்தன. ஆனால், கண்ணும் காதும்—அத்துடன் தனக்கே தனக்கென உரித்தான ஒரு மனமும்— உள்ள கலைஞன் தான் துர்ப்பாக்யசாலி!

ஒருநாள், ஆம்!— அன்று விஜயதசமி மன்னர் என்னை அழைத்தார். வெண்தாமரையிலமர்ந்த கலைவாணியின் சிற்பத்தை விஜயதசமிக்கு முதல் நாள் தான் நான்

முடித்தேன். அதை ஒரு விதமாக முடித்தேன் என்றாலும் எனக்குப் போதிய திருப்தி இல்லை. இன்னும் ஏதோ சில சிறு திருத்தங்களையும் குழிவுகளையும் செய்யவேண்டுமென எனக்குத் தோன்றியது. சிலையைப் பல கோணங்களிலிருந்து பார்த்தவண்ணமிருந்தேன். ஆனால் பாராளும் மன்னருக்கென்னவோ பொறுமையில்லை. ஏவலாளர் ஒருவர் பின் ஒருவராக என் குடிசையைச் சூழ்ந்துகொண்டனர். சிற்பக் கலையின் நுணுக்கங்களைக் கண்டு விட்டவர்களைப் போல, "போதும்! இன்னும் உளிவைத்தால் திருஷ்டி பட்டு எங்கேனும் மூளியாகப் போனாலும் போகும்! போதும் எடுத்து வாருங்கள்! அரசர் சிலையுடன் உங்களை அழைத்து வரச் சொன்னார்!" என்று பதைபதைத்தனர். அவர்களுக்கென்ன, அரசரது மனதை அலைபாயச் செய்யும் அந்தக் காரியத்தைச் செய்து முடித்து விட்டால் தங்கள் நடையும் ஓட்டமும் தீர்ந்தது என்ற எண்ணம்.

நீண்ட நேரம் வரை பொறுமையுடன் சிற்பத்தின் எழில் வளர்ச்சிக்கான திருத்தங்களில் ஈடுபட்டிருந்த எனக்குச் சற்றே சினம் வந்து விட்டது. "சரி, எடுத்துச் செல்லுங்கள்!" என அவரிடம் சிலையைக் கொடுத்து விட்டேன்.

"இல்லை, பாரவி சிற்பியாரே? நீங்களே எடுத்துக் கொண்டு பல்லக்கில் ஏறி வாருங்கள்! அது தான் முறை!" என்றனர் ஏவலாளர். எனக்கென்னவோ மனம் ஒரு நிலையில் இல்லை. சினம் மேலோங்கியது. "அரசரது கட்டளையை நிறைவேற்றுங்கள். எனக்கு உடல் நலமில்லை, வர இயலாது" எனச் சொல்லி அவர்களைச் சிலையுடன் அனுப்பி விட்டேன்.

அவர் மூலம் கலைவாணி சிலையைப் பெற்ற அரசர், அதன் எழிலிலும் கவர்ச்சியிலும் ஈடுபட்டு என்னை மறந்து விட்டார் போலும்! பூஜை செய்ய அவர் விரும்பிய தோற்றத்தில், விஜயதசமி யன்று பிரதிஷ்டை செய்வதற்கு ஏற்ப, சிலை கிடைத்து விட்டதில் அரசருக்குச் சந்தோஷமாக இருக்கலாம். சேர மன்னர் கொண்டாடும் திருவிழாக்களிலே விஜயதசமி முக்கியமானது. புதிய கலைவாணி சிலையைப் பிரதிஷ்டை செய்யும் இவ்வருஷத் திருவிழாவை வெகு ஆடம்பரமாகச் செய்து முடிக்க ஏற்பாடுகள் செய்திருந்தார் மன்னர்.

முப்பழ வகையும் நவதானியங்களும் கரும்பொன் எனப்படும் மிளகும் விளையும் காடு எங்களுடையது. அக்காவும் தங்கையுமென, தென்னையும் கமுகும் தழுவி வளர்ந்திருக்கும் தோப்புகளிலே மிளகுக் கொடி படர்ந்தோடும் அழகைப் பார்த்துக் கொண்டே நாளைப் போக்கி விடலாம்.

உயிரளிக்கும் தென்னங்காற்றிலே இனிமையும் சாந்தியும் எப்போதும் உண்டு. என் குடிசை இத்தகைய தென்னந் தோப்பின் நடுவேதான் உள்ளது. அங்கு நிலவிய அமைதிதான் என் கைகளுக்குத் தெம்பைக் கொடுத்தது என்று சொன்னால் அது மிகையாகாது......"

"கிரிதரகூட மலைச் சாரல் எப்படி இருக்கிறது, பாரவி? இந்த ஆசிரமும் சூழ்நிலையும் உனக்குப் பிடித்திருக்கிறதா" என வினயத்துடன் கேட்டார் புத்த பகவான்.

"...தேவரே, க்ஷமிக்கவேண்டும். கேரள பூமியை உயர்வாகச் சொல்லவேண்டும் என்ற நோக்கமில்லை எனக்கு. நான் பிறந்து வளர்ந்த இடம் என்பதால் அதனிடம் எனக்கு விசேஷப் பற்று இருக்கிறது என்றும் நினைத்துவிடக் கூடாது. நீண்ட நாள் வரை நாடோடியாக இருந்த தாங்கள் பல இடங்களைப் பார்த்திருக்கக்கூடும். பொதிகை மலைச் சாரலிலும் தாங்கள் வாசம் செய்திருக்கலாம். ஆகவே, தாங்கள் அறியாத ஒன்றைப் புதிதாகச் சொல்லும் நோக்கம் எனக்கில்லை. இந்தக் கிரிதரகூட மலைச் சாரல் தவத்திற்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. உதயக் காட்சியும் அஸ்தமனக் கோலமும் இங்கிருந்து நோக்க ரம்மியமானவையாக இருக்கின்றன. எனக்கு இந்த இடம் மிகவும் பிடித்திருக்கிறது. இவ்விடத்தில் காலடி வைத்ததுமே என் ஆத்மா புனிதமடைந்து விட்டதைப் போன்ற உணர்ச்சி உண்டாகிறது......"

பாரவியின் உணர்ச்சி பரவசத்தைக்கண்ட புத்தர் அகமகிழ்வெய்தினார். அதன் அறிகுறியாகப் பாரவியின் அபிப்பிராயத்தை ஊர்ஜிதம் செய்யும் பாவனையில் தலையை அசைத்தார்.

"...............கேரள மன்னர் சினம் கொண்ட வரலாற்றைச் சொல்ல வந்த நான், வர்ணனையில் இறங்கி, நழுவிவிட்டேன்! சினத்தின் மிகுதியால் ஏவலாளரிடம் சிலையைக் கொடுத்தனுப்பி விட்டபோதிலும், என்னுடைய நினைவு முழுவதும் அதன்மீதே இருந்தது. எனக்கு உடல் நலமில்லை என்று கேள்வியுற்ற அரசர் பல்லக்கு அனுப்பக் கூடும் என நான் எதிர்பார்த்தேன். நான் முன்பு நோயுற்ற சமயங்களில் பல்லக்கில் என்னை அரண்மனைக்கு அழைத்துச் சென்று தமது வைத்

தியரைக்கொண்டு சிகிச்சை செய்வித்தார். ஆனால் இந்தத் தடவை அரசர் என்னைக் குறித்துக் கவலை கொண்டவராகவே தோற்றவில்லை. மறுநாள் விஜயதசமி. அரசர் என்ன செய்கிறார் பார்ப்போம்! என இருந்துவிட்டேன் நான்.

ஆம், மறுநாள், உஷையின் வரவுக்கு இரு நாழிகை இருக்கும் பொழுது அரண்மனையிலிருந்து ஏவலாளர் வந்தனர். அவர்களுடன் பல்லக்கும் வந்தது. எதிர்பாராத இந்த வரவேற்பு ஒருவகையில் என்னைத் திகைக்க வைத்தது. துயிலுணர்ந்த நான் தலைமுழுகி நல்லுடை தரித்துப் புறப்பட்டேன். நான் எவ்வளவு துரிதமாகக் கிளம்பியபோதிலும் சற்றே நேரம் கடந்துவிட்டது. நான் அரசர் மாளிகையை நெருங்கிய சமயம் உதயமாகிக் கொண்டிருந்தது. அரசர் தம்முடைய பூஜையையும் சிலைப் பிரதிஷ்டையையும் முடித்து விட்டதாகக் கேள்வியுற்றேன். அந்தணர் பலரும் பெருங்குடி மக்கள் சிலரும் என்னை இரக்கத்துடன் பார்த்தவண்ணம் அரண்மனையினின்றும் சென்றனர்.

நான் சிந்தித்தேன். இது என்ன? என்னைத் தமது பெருங்குடி மக்கள் முன்னிலையில் அவமதிக்கவா நேரம் கடந்து அழைத்தார் மன்னர்? பூஜா நேரத்தை முதல்நாளே எனக்கு அறிவித்திருந்தால் நான் நேரத்துடன் வந்திருக்கமாட்டேனா? அல்லது பல்லக்கை இன்னும் ஒரு நாழிகை முன்பு அனுப்பியிருக்கலாகாதோ! — நான் அப்போது ஒரு இளம் சிற்பிதான். இருந்தபோதிலும் எனக்கும் சினம் வந்தது. "திருப்புங்கள் பல்லக்கை. சிலைப் பிரதிஷ்டையான பின் சிற்பிக்கு அங்கே என்ன வேலை? மீண்டும் என்னைக் குடிசைக்குள் விட்டுச் செல்லுங்கள்!" என்று ஏவலாளரிடம் சொன்னேன். அவர்களும் அப்படியே செய்தனர். கலைமகளின் விசேஷ தினமான விஜயதசமியன்று கலைஞன் அவமதிக்கப்பட்டான்! என என் மனம் சுட்ட, இதயம் வேதனைக்குள்ளாகியது. அந்த நிலையை மறக்க வேறு காரியத்தில் மனதைத் திருப்பினேன். முடியவில்லை, மனம் மீண்டும் மீண்டும் அந்த நினைவையே எழுப்பி அறிவை அலைபாயச் செய்தது.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*

For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*

A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*

Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*

A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

* * *

என்னைக் குடிசையுள் இறக்கிவிட்டுச் சென்ற ஏவலாளர் அரசரிடம் என்ன புனை மொழிகள் புகன்றனரோ தெரியவில்லை. அரசரது சினம் பன்மடங்காகியிருக்கும் என்பதைமட்டும் நான் உணர்ந்தேன். குறித்த காலத்திற்குள் சிலையை முடிக்காது சற்று ஆலசியம் செய்தது ஒரு குற்றம்; நானே நேரில் சிலையுடன் பல்லக்கில் சென்று அரசரிடம் சமர்ப்பிக்காமல் ஏவலாளரிடம் கொடுத்தனுப்பி விட்டது இரண்டாவது குற்றம்: பூஜா நேரம் கடந்து சென்றதும் இடையிலேயே திரும்பிவிட்டதும் மூன்றாவது குற்றம்! அரசரது மனப் போக்கிலே குற்றங்கள் யாவும் இப்படித்தான் பெரியனவாய் உருவாகியிருக்கவேண்டும்!

மன்னர் மாண்புடையவர். இடையே வந்து சென்ற ஏவலாளர்களும் நல்லவர்களே. அவர்கள் மீது நான் மனக்குறை கொள்ள ஒன்றுமில்லை. விதி என்ற ஒரு அதித சக்தி தன்னுடைய செயலைத் தொடங்கி விட்டது! அப்போது இதை நான் உணரவில்லை. விதி என்பதில் இப்போது தான் எனக்குப் பரிபூரண நம்பிக்கை உண்டாய்விட்டது. ஏனெனில் அதன் கூரான நகங்களில் சிக்குண்டு திக்கு முக்காடி ஓரளவு கடைசியில் விடுபட்டுத் தங்கள் முன் வந்துள்ளேன். தங்களை அரச போகங்களிலின்றும் விரட்டியனுப்பியது அந்த விதி என்னும் அபாரச் சக்தி தானே! தாங்கள் துறவு பூண்ட பிறகு பட்ட இன்னல்களை யார் பட்டிருக்கக் கூடும்?

மறு நாள் பிற்பகல் நேரத்திலே, பகல் போஜனத்திற்குப் பின், சற்று துயின்று எழுந்து, தந்த மொன்றைச் சீர்படுத்திக் கொண்டிருந்த சமயத்தில், அரசரது ஏவலாள் ஒருவன் என் குடிசையுள் நுழைந்து முத்திரை திட்டிய ஒரு ஓலைச் சுருளைக் கொடுத்து விட்டுச் சென்றான். அரச ஆஞ்ஞை! நான் அந்த ஓலைச் சுருளை வைத்துக்கொண்டு திண்டாடினேன். எனக்கு அக்ஷராப்பியாசமே நடக்கவில்லை. நான்கு வயது ஆவதற்குள்ளேயே இங்கும் அங்கும் ஊர்திரிந்து விளையாட ஆரம்பித்து விட்டேனும். சோலைகளிலும் சிறு ஊருணிகளிலும் உணவை மறந்து வீற்றிருப்பேனும்! பறவையினங்களையும் மிருக ஜாதிகளையும் பார்த்துப் பரவசமடைவதில் எனக்கு ஆசையாம். நான், என் குலத்தொழிலைச் செய்தால் போதும் என்ற எண்ணத்துடன் என் தந்தையும் தாயும் எனக்கு எழுத்தறிவு புகட்டுவதில் கவனம் செலுத்தவில்லை. பத்து வயது வரை விளையாட்டுப் பிள்ளையாக இருந்த நான்; அதன்பிறகுதான் என் அப்பாவுடன் உட்கார்ந்து சிற்பம் பழக ஆரம்பித்தேனும்! இவையெல்லாம் என் அன்னை சொல்லித் தான் எனக்குத் தெரியும்.

ஆகவே ஓலையில் குறித்துள்ள அரசரின் கட்டளை என்னவோ என நான் பதறிப் போனேன். என்னுடைய பதட்டத்தைக் கண்ட வயதான எனது அன்னை பெரும் பீதிக்குள்ளாகி, மடை விண்டதைப்போல் கண்ணீர் விடத் தொடங்கிவிட்டாள். ஓலையும் கையுமாக நான் என் குடிசையை விட்டு ஓடினேன், கிராமக் கணக்கரிடம். மனத்துள் ஓலையைப் படித்த அவர் பிரமித்துவிட்டார். கலங்கிய விழிகளுடன் என்னைப் பார்த்து, "என்ன இது? பாரவி சிற்பியாரே! அரச நிந்தனைக்குரிய என்ன காரியத்தைச் செய்தீர்? அரசர் உம்மை நாடுகடத்தியுள்ளாரே! அவரது அரண்மனை சென்று அரசரை அவமதித்ததற்காக மன்னிப்பைப் பெறுவதுடன் உமது சிலைக்கான சன்மானத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுமாம். இல்லாவிட்டால் ஒரு திங்களுக்குள் சேர நாட்டை விட்டு அகலவேண்டுமாம்!" எனக் கணக்கர் சொன்னார்.

நான் விநயத்துடன் ஒரு புன்னகை பூத்தேன். என்னிடம் அனுதாபம் கொண்ட கணக்கரிடம் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லிவிட்டு, என் குடிசைக்கு மீண்டும் வந்தேன்.

அரசரது ஆக்ஞையைக் கேட்ட என் முதிய தாய் மூச்சற்றுச் சாய்ந்தாள். உடனே நான் அவளுக்குச் சைத்யோபசாரங்கள் செய்தேன். சற்றே தெளிந்த பின் அரசரிடம் சென்று அவரது மன்னிப்பைப் பெறும்படி தூண்டினாள். எனக்கென்னவோ அதில் விருப்பமில்லை. ஏன்? ஏதற்காக?—என்றது என் கர்வம். நான் பிடிவாதமாய் இருப்பதைக் கண்டு அவள் மனம் உடைந்தது. அதுவே மன நோயாகப் படுத்த அவள் பதினான்கு நாட்கள் அதனுடன் போராடினாள். பிறகு அவள் ஆத்மா விடுதலை யடைந்தது.

தாய் இறந்த செய்தி எட்டி உறவினர் சிலர் வந்தனர். எஞ்சியிருந்த அரச சன்மானங்களை எல்லாம் திரட்டி, தாயின் ஈமக் கடன்களை எல்லாம் பழுதின்றிச் செய்து முடித்தேன். அதன் பிறகு அந்தக் குடிசையும் சூழ் நிலையுமே சூன்ய வெளியாகத் தோற்றியது. என் அன்னையின் அன்புக் குரல் எங்கும் ஒலிப்பதாகப் பிரமை உண்டாயிற்று. மன அமைதி குலைந்து போயிற்று.

சாவகத் தீவிற்குக் கப்பல் ஒன்று போவதாகக் கேள்விப்பட்டேன். மிளகு ஏற்றிச்

சென்ற அந்த வியாபார மரக்கலம் எனக்கும் இடமளித்தது. கொஞ்சம் தந்த ராசியை உடன் எடுத்துக்கொண்டு என்னுடைய சிற்பக் கருவிகளுடன் புறப்பட்டுவிட்டேன். அகன்று பரந்த கடலிலே கப்பல் மிதந்து சென்றது. அரச ஆக்கினை எல்லையைக் கடந்து விடுபட்ட என் கலை உள்ளம் கற்பனை உலகிலே எக்காளமிட்டுச் சஞ்சரித்தது......''

புத்த பகவான் ஒரு ஆழ்ந்த பெரு மூச்சு விட்டுக் கண்களைச் சற்றே மூடினார். உஸ்ஸ்... என்ற சப்தத்துடன் ஆசிரமத்திற்குள் நுழைந்த வாடைக் காற்று நெய் விளக்கைச் சற்று அலக்கழித்தது. சிஷ்யர் விளக்கின் திரியைத் தூண்டிவிட்டு, ஆசிரம வாயிலின் ஓலைக் கதவை மூடிக் கட்டினார். பிறகு, தூப கலசத்தில் சந்தன அகில் சுள்ளிகளை இட்டு மெல்ல விசிறிவிட்டார்.

பாரவி சிற்பி புத்த பகவானை உற்று நோக்கினார். அவரும் சிற்பியை ஊடுருவிப் பார்த்தார். ஒரு கணம் இருவர் கண்களும் சந்தித்தன. பிறகு பாரவி சிற்பி, ''தேவரே, ஆசிரமத்தின் நியமம் தவறலாகாது. என் கதை இன்னும் இருக்கிறது. அதை நாளை உதயத்திற்குப் பின் சொல்கிறேன்?'' என்றார்.

''பாரவி சிற்பி! ஆம், அதுதான் சரி. நானும் அதைத்தான் சிந்தித்தேன்.!'' என்று சொல்லி எழுந்தார். மற்றத் துறவிகளும் எழுந்தனர்.

* * *

மறுநாள் காலை உஷை தன் மலரடி பரப்பி, உலக சஞ்சாரம் தொடங்க மூன்று நாழிகைக்கு முன்னமே கண்விழித்த ஆசிரம வாசிகள், தங்களுடைய காலைக் கடன், நியம நியதிகளை எல்லாம் முடித்துக்கொண்டு மீண்டும் குருபீடத்தின் முன்னே கூடினர். புத்த பகவான் என்றுமில்லாத புதிய உற்சாகத்துடன் அன்று காணப்பட்டார். காலைக் கதிரவனின் பொன்மய கிரணங்கள் கிரிதரகூட மலையைத் தங்க மலையெனப் பிரமிக்கச் செய்துகொண்டிருந்தன. சாந்திக்கு ஹிதமான தென்றல் காட்டு மல்லிகை, மலைத் தாழை இவைகளின் மணமேந்தி வீசியது. பாரவி தம் கதையைத் தொடர்ந்தார்.

''......என்னுடைய வாழ்நாட்களில் தந்த ராசியைக் குடையாமல் கைகள் ஓய்ந்து கிடந்த நாட்கள், நான் கப்பலில் பிரயாணம் செய்த அந்த நாட்கள்தான். உலகமறியாது வளர்ந்துவிட்ட நான் அதற்கு முன் கடல் பிரயாணம் செய்ததில்லை. விரிந்து பரந்த கரு நீலக் கடலிலே கண்ணனைக் கண்டேன். எல்லையற்ற பரம்பொருளை எண்ண எண்ண என் கர்வ முழுதும் தலைகுனிந்தது. வானத்தை நோக்கியபொழுது சுடலைப் பொடி பூசிய நீலகண்டனின் நினைவு எனக்கு உண்டாயிற்று. விண்ணையும் கடலையும் கவ்விக்கொண்டு இருள் சூழ்ந்த இரவுக் காலத்திலே விண்மீன்கள் தெய்வ உண்மைகளை என் இதய நாளங்களிலே புகுத்திவிட்டன. ஓலைச் சுவடிகளையே கையால் தொட்டு அறியாத என்னை, அகன்று பரந்த பெருங்கடலும், ஓங்கி விரிந்த ஆகாயமும், குலுங்க நகைத்துத் திரிந்த விண்மீன்களும் ஒரு வேதாந்தியாக்கிவிட்டன. அப்போதுதான் சேர மன்னரின் பெருந்தன்மை எனக்குப் புலனாயிற்று.

அவரது மனம் நோகும்படி அசட்டுத்தனமாக நடந்துகொண்டது தவறு என உணர்ந்தேன். எனது கர்வத்திற்குக் காரணமான சிற்பக் கலை தெய்வீகத் தன்மை வாய்ந்ததுதானா? மின்னல் வெட்டைப் போன்றதோர் உண்மை எனக்குத் தெளிவாயிற்று. கப்பல் பிரயாண நாட்கள் நீண்டுகொண்டே சென்றதைப்போல என்னுடைய சிந்தனையும் விரிந்தது.

என்னுடைய கர்வத்திற்குப் பிராயச்சித்தமாக, சாவகத் தீவை அடைந்ததும், அதனை ஆளும் அரசனை அண்டியிருந்து கலைப்பணி செய்யவேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன். கொந்தளிக்கும் கடல் அலைகள் எழுந்து ஆழும்பொழுதெல்லாம் ஆனந்த நடனம் செய்யும் சிவபிரானின் திருவுருவம் என் கற்பனையில் உருவாகும். அதைத் தந்தத்தில் சிலையாகச் செய்து முடித்தால் தான் என் மனம் நிம்மதி அடையும்போல் தோன்றியது. கப்பல் சாவகத் தீவை அடைந்ததும் ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டுக் கரை சேர்ந்தேன்.

சாவக மன்னனது அரண்மனைக் கலா மண்டபத்திலே, என்னுடைய கற்பனையிலே பதிந்துவிட்ட ஆனந்த நடனத் திருவுருவத்தை சிருஷ்டிக்கத் தொடங்கிவிட்டேன். மன்னன் சிறந்த கலா ரசிகன். எனக்கு வேண்டிய சௌகர்யங்கள் அனைத்தையும் செய்து கொடுத்தான். ஜீவனற்றுக் கிடந்த மண்ணிலே வித்து வெடித்து முளைகிறிக் கிளம்புவதைப் போல, தந்த ராசியிலே ஜீவத் துடிப்புடன் சிலை உருவாவதைக் காணக்காண மன்னன் பேருவகை பூண்டான். சேரமன்னரைப் போல இவன் அவசரப் படவில்லை. தானே பழுத்து உதிரும் கனியின் சுவையை உணர்ந்தவன் போலும். நாட்கள் ஓடின. ஆறு பூர்ண சந்திரனைக் கண்ட பிறகு ஒருநாள் என் சிலையும் முழுமை பெற்றது. கற்பனை

யில் கண்ட அதே உருவம்! தில்லையில் நடனமாடியதாகச் சொல்லும் அதே ஆனந்த நடனத் திருக்கோலம்! சிலையைக்கண்ட சாவக மன்னன் பெருமகிழ்வெய்தினன். பாரவி சிற்பி என்ற இக் கட்டையின் பூர்வாசிரமப் பெயர் சாவகத் தீவு முழுமையும் பரவிவிட்டது.

ஆனால் தேவரே, நான் கடல்கடந்து வந்து விட்டபோதிலும், விதி என்ற அந்த மாய சக்தி என்னைவிட்டு அகலவே இல்லை. மன்னன் சன்மானித்த பொற் காசுகள் என் ஆயுதப் பெட்டியுள் கலகலப்பதைக் கண்ட அரண்மனை ஏவலாள் ஒருவன் என்னை வஞ்சித்து விலைமகள் ஒருத்தியின் நேசத்தை உண்டாக்கி வைத்தான். அதுவும் கலைத் தொடர்புடனே தான் உருவாயிற்று.

அழகிலே அவள் அன்றலர்ந்த தாமரை மலரைப்போல் இருந்தாள். சாவகம் முழுவதும் அவள் பெயர் பரவியிருந்தது. பெருங்குடி வணிகர் பலர் அவளது தொடர்பை வேண்டித் தவங் கிடந்தனர். பொன்னும் நவமணிகளும் அவள் மாளிகையுள் குவிந்து கிடந்தன. அவள் தாசி; ஆனால் சகல கலா பண்டிதை. காலைக் கதிரவனின் வரவுடனே வீணையின் இனிய நாதம் அவள் மாளிகையினின்றும் எழும். மாலையிலே, மாளிகையெங்கும் சுகந்த மணம் விரிந்து பரவ, ஜல், ஜல், என்ற சலங்கை ஒளியுடன் அவள் பரத நாட்டியம் ஆடத் தொடங்கிவிடுவாள், தாசியின் உரிமைகளையும் கடமைகளையும் உணர்ந்ததுடன் கலைச் செல்வியாகவும் இருந்தாள், மஞ்சுகி.

மன்னனின் மாளிகையிலே உருக் கொண்டு நிற்கும் சிவகாம நேசரின் சிலையைப் பற்றிய புகழுரையை மஞ்சுகியும் கேள்விப் பட்டாளாம்! ரதி தேவியின் சிலையொன்றைச் சிருஷ்டி செய்வித்துப் பூஜிக்க வேண்டுமென்பது அவளது நீண்ட நாளைய விருப்பமாம். இதயத்தை ஊடுருவும் நயனங்களால் மயக்கி அவள் விநயத்துடன் அதைச் சொன்னாள்.

'ரதி தேவியின் சிலை?'— நான் என் ஆண்மை முழுவதையும் ஒன்று திரட்டி அவளை நிமிர்ந்து நோக்கினேன். அவளே ரதி தேவியின் நடமாடும் சிலை தானே!

"பாரவி சிற்பியாரே, என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"தானே ரதி தேவி தானே...... தனது உருவத்தையே சிலையாகச் செய்து விடுகிறேனே?" என அசட்டுச் சிரிப்புடன் சொன்னேன். அவள் கலகலவென நகைத்தாள். அந்தச் சிரிப்பிலே அம் மங்கை என் துள்ளிய காளை உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டாள்.

* * *

சுக்கில பக்ஷ சதுர்த்தசி யன்று ஆரம்பமான எங்கள் இன்ப சுக வாழ்வு பௌர்ணமி வரை நீடித்தது. நான் சாவக மன்னனை மறந்தேன், அவன் அன்பை மறந்தேன். உலகையே மறந்த இன்ப வாரிதியில் முக்குளித்துக் கொண்டிருந்தேன்.

அதன் பின் ஒரு நாள் மஞ்சுகி ரதியின் சிலையை என் நினைவிற்குக் கொண்டு வந்தாள். அவளது கண்ணசைவிற்கு உயிரையும் கொடுக்க ஆசை கொண்டுவிட்ட அந்த நிலையிலே நான் சிலையைச் சிருஷ்டிக்கத் தொடங்கினேன்.

ஒரு வருஷம் ஓடி மறைந்தது. சிலையைச் சிருஷ்டித்து முடித்தேன். தனது மாளிகையின் ஓர் பகுதியில் அழகான பூஜையறையைக் கட்டுவித்தாள் மஞ்சுகி. அதன் நடுவிலே கல்லிழைத்த தங்க விமான மொன்றையும் அமைத்தாள். தன் செல்வம் முழுதையும் ரதி தேவியின் சிலைக்கே செலவிட்டு விடுவாளோ என்று ஐயப்படக்கூடத் தோன்றியது எனக்கு!

சிலை முழுமை பெற்ற சமயம் வஸந்தருது. சுக்கில பக்ஷ தசமி. அன்று ரதியின் சிலை பிரதிஷ்டை ஆயிற்று. பாமர மக்கள் வியந்து போற்றும் ஒரு விழாவாகவே அது நடந்தது.

அதன் பின்னரும் நீண்ட நாள் தேனில் விழுந்த ஈயென அவளது மாளிகையிலே அடைந்து கிடந்த அந்த நாட்களை இப்போது நினைக்கும்போது என் மனம் கூசுகிறது. அந்தக் காளைப் பருவத்திலே அதுவே நிலையான இன்பம் என நினைத்திருந்தேன். தேவரே, அதன் விளைவாக, கலையின் உயர் சிகரத்தை எட்டித் தொட்டுவிட்ட நான் எவ்வளவு அதலபாதளத்தை அடைந்து விட்டேன்! மனம் ஒரே விரக்தியில் ஆழ்ந்து விட்டது.

மனம் இவ்வாறு கசந்துவிட்ட மறுநாள், இரவின்முன் ஜாமத்திலேயே, நான் மஞ்சுகியின் மாளிகையை விட்டு வெளியேறினேன். குறிப்பாக எங்கே போவது?— என் கால்கள் இட்டுச் சென்ற திசையில் சென்றேன். இரவுப் பொழுதை ஒரு கோவில் பிராகாரத்திலே படுத்துக் கழித்துவிட்டு, காலையிலே மீண்டும் மனம் போன வழியிலே நடக்கத் தொடங்கினேன். சூரியன் உச்சிக்கு வர இன்னும் ஒரு நாழிகை இருக்கும். நல்ல பசி எடுத்து வயிற்றைப் புரட்டியது. ஒரு

சோலையில் உட்கார்ந்து விட்டேன். அப்போதுதான் நான் மீண்டும் சேர மன்னனையும் சாவக அரசனையும் பின்னர் மஞ்சுகியையும் நினைத்துக் கொண்டேன். மீண்டும் மஞ்சுகியின் மாளிகைக்குச் சென்றுவிடலாமா என்றுகூட என் வயிற்றுப் பசி நினைக்கத் தூண்டியது. ஆனால், என் கலைக்காகவே தன் பெண் நலத்தை வாரி வழங்கிய அவளிடம் சொல்லிக் கொள்ளாமல்கூட, கள்வனைப்போல், இரவுக்கு இரவே ஓடி வந்து விட்டதை நினைக்க எனக்கு வெட்கமாயிருந்தது. அவள் முகத்தில் மீண்டும் எப்படி விழிப்பது? மர நிழலிலே மேல் துண்டை விரித்துப் படுத்தேன். பசியின் விளைவால் நல்ல தூக்கம் வரவே கண்ணயர்ந்து தூங்கிப் போனேன்.

நான் கண் விழித்தபோது அரசரின் படை வீரர் இருவர் என் ஆயுதப் பெட்டியைச் சோதனையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டேன். "என்ன சிற்பியாரே! இன்னும் கொஞ்சம் தூக்கம் பாக்கி யிருந்தால் நல்லா தூங்கிவிடுங்கள்! சிறைச் சாலையில் கொசுக்களின் உபத்திரவம் அதிகம்!" என்று சொல்லி நையாண்டி செய்தான் ஒருவன். "பரவாயில்லையப்பா, அவர் தான் இன்னும் கொஞ்ச நாட்களுக்குள்ளே தன்னுடைய மஞ்சுகியம்மாவைத் தேடிக் கொண்டு சொர்க்க லோகத்திற்கே போய் விடப் போகிறாரே! அங்கே போய், ஹாய்யா அமிர்தம் சாப்பிட்டுக் கொண்டு, மந்தார விருட்சங்களின் மணமான காற்றிலே தம்மை மறந்து இருக்கப் போகிறாரே! அது இருக்கட்டும். முதலில் போடப்பா போடு; விலங்கை மாட்டு! மனுஷன் எங்காவது கம்பி நீட்டிவிடப் போகிறான்!" என்று எக்காளத்துடன் பேசினான் மற்றவன்.

நான் பிரமித்துப் போய் உட்கார்ந்தேன். அவர்கள் கூடார்த்தமாகப் பேசுவது எனக்குப் புரியவில்லை. அந்த நிலையில் என் கையில் விலங்கை மாட்டினான் ஒருவன். "அப்பா, இது என்ன? ஏன் எனக்கு விலங்கிடுகிறீர்கள்? என் குலதெய்வமறிய நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே!" என்று கம்மிய குரலில் சொன்னேன்.

"சரிதான், ஆஷாடபூதி வேஷம் போட இங்கே வந்த பிறகுதான் கற்றுக்கொண்டீரா, அல்லது உமது தாய் நாட்டில் செய்து செய்து பழகிய பழம் வித்தையா அது? அந்தப் பகடிக் கூத்தெல்லாம் இந்த நாட்டில் பலிக்காது அப்பேன்!" என்றான் அவன் கொஞ்சமும் இரக்கம் இல்லாமல்.

அவர்களுடன் பேசுவதில் பயன் ஒன்றுமில்லை என்று உணர்ந்த நான், விதியை நொந்துகொண்டு, மௌனமாக அவர்களைப் பின்தொடர்ந்தேன். நல்ல பகல் பொழுதில், தலை நகரின் ராஜவீதி வழியாக, என்னை விலங்கிட்டபடி அழைத்துச் சென்றனர். சாவக மன்னனது கலைக்கூடத்திலே ஆனந்த நடராஜர் சிலையை நிர்மாணித்துப் புகழ் பெற்ற சிற்பி பாரவி எங்கே, இப்போது அந்தச் சிற்பத்தை உளித்து எடுத்த கைகளில் விலங்குடன் தலை கவிழ்ந்து செல்லும் பாரவி எங்கே? என் எண்சாண் உடலும் ஒரு சாணாகக் குன்றியது. அந்தக் கோலத்துடன் அரசனது மாளிகையை அடையுமுன் என் உயிர் போய்விடக்கூடாதா? என்று தெய்வங்களை எல்லாம் வேண்டினேன். ஆனால் விதி என்ற அந்த இரக்கமற்ற சக்தியை மீறத் தெய்வம் எதுவும் முன் வரவில்லை.

அரசரது சிறைக் கூடத்தை அணுகும் போது மாலை நேரம். மறு நாள் அரச சபையிலே குற்ற விசாரணை நடக்கும் என்று சொல்லிச் சிறையுள் காவலில் வைத்தனர். அரசருக்கு அறிமுகமான சிற்பி, அரசரின் கலைக் கூடத்தில் நீண்ட நாள் தங்கியிருந்த அதிதி என்ற சலுகைகளை நான் உபயோகப் படுத்திக் கொள்ள விரும்ப வில்லை. என்னுடைய மன ஓட்டம் ஸ்தம்பித்துவிட்டது. என்ன நடந்த போதிலும் சரி என்ற மனக் கசப்பு அதிகமாய் விட்டது. மானம் போன பின்பு இவ்வுடலை வைத்துக் கொண்டு ஜீவித்து என்ன பயன்? ஆகவே என்ன குற்றம்? யார் செய்தது? என்னைச் சிறை செய்வானேன்? என்ற விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் கூட எனக்கு உண்டாகவில்லை. மனோ விரக்தி எல்லை கடந்து பெருகியது.

* * *

ஊரடங்கி ஒரு நாழிகை நேரம் இருக்கும். கைதிகள் பலர் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தனர். சிறைக் கூடத்தின் தூக்கு மேடைக்கு அருகே இருந்த வானளாவிய அரச மரம் மட்டும் காற்றில் சலசலத்துக் கொண்டிருந்தது. அதில் வாசம் செய்த ஆந்தைகள் அவ்வப் போது கர்ண கடூரமான குரலில் அலறின. சூழ்ந்து நிலவிய மோனத்தின் நடுவே சாவின் பீதியைக் கிளப்பியது அந்தச் சப்தம்.

எனக்கு உறக்கம் வரவில்லை. தற்கொலைக்கான பல வழிகளையும் சிந்தித்த பிறகு ஒரே வழி தான் தோன்றியது. இடையில் ஒன்பது முழ வேஷ்டியும் உடலில் அங்கியும் தரித்திருந்தேன். இடை வேஷ்டியை

அவிழ்த்து நன்றாக முறுக்கிச் சுருக்கிட்டேன். சிறைக் கூடத்தின் கூரையைத் தாங்கியிருந்த தண்டியத்தின் மேல் ஏற முயன்றேன். அதற்கு இடையில் இருந்த சாளரத்தைத் தாவிப் பிடித்து அதன்மேல் ஏறினேன். அப்போது திடீரெனச் சிறைக் கதவைத் திறந்து கொண்டு காவலாளி ஒருவன் உள்ளே வந்தான். என் உடல் நடுங்கியது. குப்பென ஒரு பாட்டம் வியர்த்துக் கொட்டியது.

"சரிதான்! நல்ல யோசனை பண்ணினே! கீழே இறங்கப்பா!" என அவன் கொச்சை மொழியில் பேசினான். அவனைப் பார்த்தால், சாவகத்தில் பிறந்து வளர்ந்தவன் என்று தோன்றவில்லை. யவனர் நாட்டிலிருந்து வந்து அரசர் ஊழியத்தை ஏற்றுத் தங்கி விட்டவனைப் போலக் காணப்பட்டது. "நல்ல வேளை! நான் இன்னும் கொஞ்ச நேரம் கழித்து வந்திருந்தால் நீ செத்துப் போன சமாசாரத்தைப் போய் அரசரிடம் சொல்ல வேண்டியிருக்கும். முறுக்கிச் சுருக்கிட்டுள்ள வேஷ்டியைப் பிரித்துக் கட்டிக் கொண்டு வா. அரசர் உன்னைத் தம்முடைய அந்தரங்க மந்திராலோசனைச் சபைக்கு அழைத்து வரச் சொன்னார்!" என்றான் அவன்.

சாவக மன்னர் நன்றி மறக்காதவர். அவரது பெருந்தன்மை என்னை வியப்புக்குள்ளாக்கியது. இருந்த போதிலும், 'அவர் நாட்டில் நடக்கும் அநீதிகளை விளக்கிக் காட்ட வேண்டும். நிரபராதியான என்னைக் கைது செய்யக் கட்டளையிட்டது அரசர் தானா என்று கேட்கவேண்டும்!' என்ற எண்ணத்துடன் காவலாளியைப் பின் தொடர்ந்தேன்.

அரசரிடம் கலந்து பேசிய பின்புதான் எனக்கு விஷயம் விளங்கிற்று. நான் மனோவிரக்தியடைந்து வெளியேறி விட்ட அன்று இரவு மஞ்சுகி விஷமிட்டுக் கொல்லப்பட்டாளாம்! அவளது பொக்கிஷத்திலிருந்த பொன்னும் மணியும் களவு போய்விட்டனவாம்!

நான் நடந்தவைகளைச் சொன்னேன். அரசர் நான் நிரபராதி என்பதை நம்பினார். இருந்தபோதிலும் உண்மைக் குற்றவாளிகள் அகப்படும் வரையிலும் நான் சிறையுள்தான் இருக்கவேண்டும் என்றார். அதன் பிறகு அரசர் தமது பிரத்யேக ஒற்றர்களைப் புலன் விசாரிக்க ஏவினார்.

மூன்று மாதங்களுக்குப் பின் புலன் துலங்கியது. மஞ்சுகியின் மாளிகையிலேயே அவளுக்கு அந்தரங்கமாக இருந்த தோழிப் பெண்தான் அந்தக் காரியத்தைச் செய்தாளாம்! மஞ்சுகியின் திரண்ட செல்வத்தின் மீது பொறாமை கொண்ட அவள் நீண்ட நாட்களாகச் சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறாளாம்! நான் மாளிகையை விட்டு அகன்றது அவளுக்கும் தெரியாது போலும். பழி முழுவதையும் என்மீது சுமத்தி விடலாம் என்ற எண்ணத்துடன் பாலில் விஷம் கலந்து மஞ்சுகியைக் கொன்று விட்டு, செல்வத்தை அபகரித்துப் பதுக்கிய பிறகு, ஒன்றும் அறியாதவளைப் போல் பாசாங்கு செய்தாளாம்! அவள் கைதியானாள். வழக்கு நடந்தது. உண்மைக் குற்றவாளிக்கு ஆயுள் சிறைவாச தண்டனையும் எனக்கு விடுதலையும் கிடைத்தன.

இருந்தபோதிலும் சிறைவாசம் என் மனத்தை மிகவும் பாதித்து விட்டது. பித்துப் பிடித்தவனைப்போலச் சாவக நகரின் வீதிகளில் சுற்றித் திரிந்தேன். அப்படிப் பித்தனென நான் நாடோடியாகத் திரிந்த காலத்திலே தங்கள் சிஷ்யர்களுள் ஒருவரான ஆனந்த குமார பிக்ஷுவைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதன் பிறகுதான் என் மனம் சாந்தியடைந்தது. "ஆசையே துக்கத்திற்குக் காரணம். "ஆசையை ஒழித்துவிட்டால் யாவும் ஆனந்த மயம்"" என்றார் அவர். தங்களையும் இந்த ஆசிரமத்தையும் பற்றிக் கேள்வியுற்ற பிறகு என் மனம் கிரிதரகூட மலையையும் அதன் சூழ் நிலையையும் கற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டது. கடைசியில், சூறாவளியில் சிக்குண்ட மரக்கலம் கரை சேர்வதைப் போல், தங்கள் பாதாரவிந்தங்களில் இக்கட்டையைக் கிடத்துகிறேன்!" என்று சொல்லி முடித்தார் பாரவி சிற்பி.

கிரிதரகூட மலையடிவார விஷ்ணு ஆலயத்தில் பிராதக் கால பூஜை நடந்தது. "ஓம்! ஓம்!" என்ற மணியோசையுடன் சங்கநாதமும் எழுந்து பரவியது. புத்த தேவர் உள்ள உவகையுடன் பாரவி சிற்பிக்கு ஞானோபதேசம் செய்தார். பாரவி சிற்பி புத்த பிக்ஷுவானார்.

பற்றற்ற தமது துறவு வாழ்க்கைக்கு இடையிலேகூட, பாரவி பிக்ஷு தம்முடைய முப்பெரு தந்தச் சிலைகளான கலைமகள், நடராஜா, ரதிதேவி; சிலைகளையும் நினைத்து நெட்டுயிர்ப்பது வழக்கம். 'அந்தத் தந்தச் சிலைகளுக்கு நிகரானதொன்றை இனி, சிருஷ்டிக்கக் கூடுமோ' என்ற ஏக்கமும் அவர் அகத்தில் எழும்.

தொடர் கதை

கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு—"சேதி"

கம்பீர மல்லன் கவலை கொண்டான். ஆட்டத்தில் காய்கள் மாறி விழுந்து விட்டன. மண்டலேசுவரன் இனி இவ்விடத்தைவிட்டுக் கிளம்பமாட்டான். கீழே நிற்கும் சிற்றரசர்கள் ஆத்திரப் படுவார்கள். நாயகன் இல்லாமல் போன சேனையும் உபயோகமில்லாமல் போய்விடும். உடைந்த மனதுடன் வந்த அவன் அங்கேயுள்ள சிற்றரசர்களிடம்—தேவப்ரஸாத் அவர்கள் முஞ்ஜால் மந்திரியை இங்கே அழைத்துவரச் சொல்லியிருக்கிறார்கள் என்றான். கம்பீர் எதிர்பார்த்தபடி எல்லோரும் மனம் ஒடிந்தனர்.

இவ்வளவு பேர் ஹம்ஸாவுக்கு உபசாரம் செய்வது மண்டலேசுவரனுக்குப் பிடிக்கவில்லை. எல்லோரையும் அனுப்பிவிட்டு முன் கதவைத் தாழிட்டான். தனியே ஹம்ஸாவுடன் தங்கி விட்டான்.

மெதுவாக ஹம்ஸா மயக்கம் நீங்கினாள். கண்திறந்தாள். முன்பின் அறியாத ஓர் அறையில், கால்மாட்டில் யாரோ ஒருவர்; தலையை ஏந்தும் கட்டிலில் தான் படுத்திருப்பதை உணர்ந்தாள். அவள் மெல்லிய குரலில்—நாதா! என்று விளித்தாள்.

மண்டலேசுவரன் குதித்து அவளிடம் ஓடி வந்தான். முத்தங்களால் அவளைத் திகைக்க வைத்துவிட்டான். 'ஹம்ஸா! என் ஹம்ஸா! பிரியே!' எல்லையற்ற இன்பத்தை உண்டு மயங்கி ஹம்ஸா ஒன்றும் தோன்றாமல் மண்டலேசுவரரின் தலையைத் தடவிக் கொண்டேயிருந்தாள். ஒரு மணி நேரம் காதல் தாகம் தணியாமலேயே இருவரும் பேசாதிருந்தனர். பிறகு தேவப்ரஸாத் கேட்டான். உன்னை மீனல் சின்னம்மா அனுப்பினாளா? இவ்வளவு உபகாரம் செய்தாளா? கடைசியில் அவளும் இவ்வளவு நல்லவளா?"

"மகாராஜ். அதைச் சொல்லாதீர்கள்.. இது என்ன சூழ்ச்சியோ?"

"ஏன் சூழ்ச்சி என்ன?"

"நாதா. இங்கே நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?... ஒன்றுமறியாத என் ராஜாவே! அப்பொழுது இருந்தது போலத் தானே இன்றும் இருக்கிறீர்கள்" கைகளால் அவன் கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள்.

"நான் உன் தமையனைச் சந்திக்கப் போவதற்காக இருந்தேன்.!"

"ஐயையோ!"

"ஏன்?"

"சரி," கண்டிப்பாய் அவள் சூழ்ச்சிதான் செய்துவிட்டாள். அவள் என்னிடம் சொன்னாள்: உன் சகோதரன் வெறுத்து

(ஹிந்திப்பிரதி பிரசுர கர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர காரியாலயத்தைச் சார்ந்த க. ஸ்ரீ நாதூராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

ஹம்ஸா ! என் ஹம்ஸா ! பிரியே !

உதறிப் போய் விட்டான் என்று. சரிதான். உங்கள் இருவரையும் சேராமல் பார்த்துக் கொள்ளவே என்னை அனுப்பியிருக்கிறாள். இனி மீனல்தேவி காட்டில் மழைதான்!''

தேவப்ரஸாதும் அறிந்துகொண்டான். "ஆனால் அவள் என்ன செய்ய முடியும்? அதிகம் ஆனால் இரண்டு நாட்கள் வீணாகும். பின் என்ன ஆகிவிடும். நான் கம்பீர மல்லரை அனுப்பியிருக்கிறேன். முஞ்ஜாலே இங்கே வந்து விடுவான். உனக்கு எப்பொழுதுமே பயம் தானே!''

"என்ன செய்வது? எப்பொழுதும் கணவன் நிழலடியில் இருந்தால் அச்சமிருக்காது. ஆனால் ஒன்று. எனக்காக நீங்கள் உங்கள் பெருமைக்கு இழுக்குத் தேடிக் கொள்ளாதீர்கள்; ஒரு வாக்கையும் இழந்து விடாதீர்கள்''

"இந்தா, ஹம்ஸா! பிதற்றாதே. இப்பொழுது நான் உன்னை விட முடியுமா? இந்தக் குறுகிய மனித வாழ்க்கையில் நாம் இருவரும் வெகு காலம் பிரிந்திருந்து விட்டோம். இப்பொழுது யாருக்கு என்ன நேர்ந்தாலும் நேரட்டும். நாம் இருவரும் இனி ஒன்றாய் வாழ்வோம் ஒன்றாய் மடிவோம்.'' தேவப்ரஸாத் விரல்கள் ஹம்ஸாவின் கையின் பலத்தைப் பரிசோதனை செய்து கொண்டிருந்தன.

"ஆனால் நம் குழந்தை, நம் தேஹஸ்தலம் எனக்கு ஒன்றுமே தெரியாது. என்னால் ஏதாவது கெடுதல் நேரிட்டு விடப் போகிறதே! அவள் ராக்ஷஸியாயிற்றே!''

"ஹம்ஸா பயப்படாதே! எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளலாம். திரிபுவனும் சிங்கக் குட்டியல்லவா?''

"நான் இந்தக் கண்களால் அவன் சண்டையிடும் போது பார்த்தேன். நாதா, தங்களைப் போலவே தோற்றம்......''

"எங்கே பார்த்தாய்? சந்தோஷமாயிருக்கிறானா?''

ஹம்ஸா, முழுக் கதையையும் சொன்னாள். தேவப்ரஸாதின் முக பாவங்கள் ஏங்கிப் பொங்கி வந்தன. பிறகு "சரி பரவாயில்லை. சொந்தப் புய வலியால் அவன் தன்னைப் பார்த்துக் கொள்ளட்டும். ஆனால் அந்தப் பெண் யார் என்று சொன்னாய்? எனக்கு அப்பொழுதே தோன்றிற்று. திரிபுவன் அடிக்கடி திருட்டுத்தனமாய்ப் பட்டணுக்குப் போய் வந்து கொண்டிருந்தான். காரணம் இருக்குமே என்று நினைத்தேன். தந்தை போல் தானே பிள்ளையும்......!'' தேவப்ரஸாத் சிரித்தான்.

"ஞாபகம் இருக்கிறதா! முதன் முதலில் நாம் பீமநாத் மஹாதேவன் கோவிலில் சந்தித்தோமே.........!''

தன் ஞாபகத்தை அவன் ஹம்ஸாவின் உதடுகளில் தோய்ந்த உதடுகள் மூலம் தெரிவித்தான்: "ஹம்ஸா, பேரன் பிறக்கும் நாளும் வந்து விடும்.''

"ஜின பகவானுடைய ஆசீர்வாதம். அது இருக்கட்டும். நீங்கள் இப்படியே உட்கார்ந்திருந்து விட்டால் காரியம் கெட்டு விடப் போகிறதே!''

"பிரியே, ஆவது ஆகட்டும்!''

"அப்படி என்றால் எப்படி முடியும்?''

"எல்லாம் முடியும். பட்டண், குஜராத் என் வாக்கு...... எது எப்படி ஆனாலும் ஆகட்டும். பதினைந்து வருஷங்களாகத் தாகம் வரட்டி விட்டது. இனி எனக்கு நீ தான் வேண்டும்.''

"நாதா! இது தங்களுக்கு அழகா? உலகம் என்ன சொல்லும்?''

"ஹம்ஸா அதை விட்டு விடு. உலகத்தைப் பற்றி எனக்கு என்ன கவலை? இனி உன் அருகில் தான் என் உலகம்.'' என்று சொல்லிக் கொண்டே தேவப்ரஸாத் தன் உலகத்தைத் தழுவிக் கொண்டான்.

இன்பக் கடலில் நீந்திய அவள், மனது கொடுத்த பயங்கரமான எச்சரிக்கையைக் கையால் தூரத் தள்ளினாள். நீர் நிறைந்த கண்களுடன் மண்டலேசுவரனின் முகத்தைப் பார்த்தாள். அவள் அழகிய கண்கள் அமுங்கி மறைந்திருந்த காதல் ஒளி பெற்றுக் கவர்ந்தன. இருவரும் ஒருவரில் ஒருவரை மறந்தனர்.

* * *

பகல் கழிந்து, இரவு வந்தது. சந்திரன் மெதுவாக ஆகாயத்தில் ஏறினான். இரண்டு தம்மை மறந்த காதலர்களைக் கண்டு கண் சிமிட்டிச் சிரித்தான். அழுத்தத் தண் கிரணங்களின் இடையே 'சூட்டை'ச் சுருட்டி அனுப்பி அவர்களை இன்னும் பித்துக்கொள்ளச் செய்தான்.

"நாதா, ஒரு நாள் கழிந்துவிட்டதே. முஞ்ஜால் வரவில்லையே! சேனை என்ன ஆகும்?''

"யாருக்கு எது ஆனாலும் சரி; ஆவது ஆகட்டும்! நம் அன்பு வாழ்ந்தால் சரி.''

அந்த அரக்கன் சந்திரன் தன் ராஜ்யத்தின் வெற்றியைக் கண்டு சிரித்தான்.

அதிகாரத்தின் ஆணவம்

யதியின் நிபுணத்துவம் பூர்ண கலைகளுடன் பிரகாசிக்கத் தொடங்கிற்று. சந்திராவதியின் புதுச்சேனையின் பகுதிகள் அங்கங்கே ராணியுடன் வந்து சேர்ந்துகொண்டிருந்தன. ராணி மது உண்டாள். உண்மையிலேயே அதிகாரம் கைக்கு வந்த பெருமையை உணர்ந்தாள். ஆனந்தசூரியும் அடிக்கடி தாம் செய்துவந்தவைகளை எல்லாம் வந்து சொல்லிக் கொண்டிருந்தார். மதுபுரி சேனைக்குச் சமாசாரம் அனுப்பியிருந்தது. புதுச் சேனையின் ஒரு பகுதி கொஞ்ச தூரத்தில் வந்து தங்கியிருந்தது. முஞ்ஜாலின் மேலும் பாரா போடப்பட்டிருந்தது. ஒற்றர்களும் தூதர்களும் அங்கங்கே வந்து சமாசாரம் தெரிவித்துப் போய்க்கொண்டிருந்தனர்.

பிரம்ம முகூர்த்தத்திலேயே முதல் பகுதி வந்து சேர்ந்துவிட்டது. அதன்மூலம் எல்லா விஷயங்களும் தெரியவந்தன. முழுச் சேனையும் யதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. முஞ்ஜாலுக்கு வேண்டியவர்களும் அவர்கள் அறியாமலேயே காவலுக்குட்பட்டிருந்தனர். ராணிக்கு முஞ்ஜாலின் பதற்றத்தை நேரில் பார்த்து மகிழ ஆசை. இந்த நேரத்தில் முஞ்ஜால் கொஞ்சம் சேனையுடன் பாகேசுவரி மாதாவின் கோவிலுக்குக் கிளம்பிக்கொண்டிருக்கிறான் என்ற தகவல் கிடைத்தது. ராணிக்கு இதயத்தில் ஒரு அடி ஏற்பட்டது. அவளுடைய முஞ்ஜால் இப்படியும் ஆவானா? இவ்வளவு வருஷம் அவளை ஆண்டவன்; இன்று சத்துருவுடன் சேர்ந்துவிட்டான். அவளுக்குத் தான் செய்த அநியாயம் மறந்துவிட்டது.

"என்ன செய்யலாம்? இந்தச் சிறிய சேனையுடன் மதுபுரிக்குப் பாகேசுவரி மாதாவின் கோயில் வழியாகப் போகலாம். வழியிலேயே முஞ்ஜாலைத் தடுக்கலாமா? முஞ்ஜால் எப்படிக் காட்சி அளிப்பான். இப்படிப் பிடிக்கப்பட்டால் என்ன நினைப்பான்? 'ராணிக்கு அதிகாரப் போதை மீண்டு தலைக்கு ஏறிற்று. அவனைப் பிடித்து மீனல் தேவி தனித்தே அதிகாரம் பிடிக்க வல்லவள் என்று காட்டுவாள்."

"யதிஜி! பாகேசுவரி வழியாக மதுபுரி போனால் எப்படி?"

"பரவாயில்லை!"

யதி அறிந்துகொண்டார். ஆனால் தர்மயுத்தத்தில் ஜனங்கள் சொந்த ஆசையை ஏன் கொண்டு வருகிறார்கள் என்று அவருக்குப் புரியவில்லை. இதைக் கண்டு அவர் கொஞ்சம் ராணியிடம் அவமதிப்புக் கொண்டார். ஆனால் ராணியிடம் வாதப்பிரதிவாதம் செய்வது அவருக்குச் சரி என்று படவில்லை. அவர் சரி என்று சொல்லி மேலும் சொன்னார்: ஜயதேவனைப் பல்லக்கிலிருந்து இறக்கி, குதிரை மேல் உட்காரவைக்க வேண்டும். இல்லாவிடில் ஜனங்களிடையே உத்வேகம் பிறக்காது.

"அதுவும் சரி" குமாரன் ஜயதேவனை ராணி குதிரைமேல் அமர்த்தினாள். ஜயதேவனுக்கும் சேனையுடன் போவது மனதுக்குப் பிடித்திருந்தது. பறைக்கொடியுடன் பெருமையோடு அவர்கள் மேலேறிக் கொண்டிருந்தார்கள்.

அருணோதயம் ஆயிற்று. வேளை கொஞ்சம் வெளுத்து வர ஆரம்பித்திருந்தது. மதுபுரி மிகவும் அண்மையில் வந்து விட்டது. இந்தச்சமயத்தில் தூரத்தில் ஓடிவரும்குதிரைகளின் அடிச்சத்தம் கேட்டது. ராணியின் இதயம் எழும்பிக் குதித்தது. உதட்டை மடித்துப் பல்லக்கிலேயே அமர்ந்திருந்தாள். கொஞ்ச நேரம் சென்று யதிக்கு அழைப்பு விடுத்தாள்.

"யதிஜி! இவை யாருடைய குதிரைகள் வருகின்றன?"

"வேறு யார்? முஞ்ஜால் மந்திரி மண்டலேசுவரருடன் சேரப் போய்க்கொண்டிருக்கிறார் போலும். என்ன செய்யலாம்?"

"இங்கேயே தடுத்து நிறுத்துங்கள். வேறு என்ன செய்வது?" தலை தூக்காத அலக்ஷியம் நிறைந்த குரலில் 'யதி' ரொம்ப சரி என்றார்.

எதிரே வரும் குதிரைகள் சற்றே தென்படலாயின. வேகத்துடன் வரும் காரணமாகத் தூசி எழும்பி மேகம்போலப் படர்ந்திருந்தது. விடியற்காலை வெளிச்சத்தில் ஒளி மங்கும் தீவட்டிகளின் ஒளி தூசி மண்டலத்துடன் சண்டையிட்டுக்கொண்டிருந்தது. கூட்டம் நெருங்கி வந்தது. ராணி பார்த்தாள். எல்லோருக்கும் முன்னே வெண்குதிரை மேல் ஆரோகணித்து ஒளி கக்கும் கவசம் அணிந்து முஞ்ஜால் தோற்றமளித்தான். அவள் உள்ளூர ஆட்டம்கொண்டாள், ஆகா! அவன் இவளுடைய வெற்றி வீரன் முஞ்ஜால்; இன்று அவளுக்கே எதிரி.

யதி தம் சைனியத்தை வழியில் குறுக்கே நிறுத்திவைத்திருந்தார். முஞ்ஜால் குதிரையை நிறுத்தி மேகம்போல் இடித்தான். "வழியை விடு, ஏன் வழியை அடைத்து நிற்கிறாய்?"

ஒரு 'நாயக்' பதில் சொன்னான்: "இந்த வழியில் ஒருவருக்கும் மேலே போக உத்தரவு கிடையாது."

முஞ்ஜால் சற்று நேரத்திற்குள் தன்னுடைய பலத்தையும் எதிரி பலத்தையும் அளந்தான். அவனிடம் சுமார் இருபது வீரர்கள் இருந்தனர். எதிரிகள் ஐம்பது அறுபது பேர் இருந்தனர். அவன் திரஸ்கார ரம் சீறும் குரலில்—"ஏன் உத்தரவில்லை? நீ யார்?" என்று அதட்டினான்.

"நான் சந்திராவதியின் 'நாயக்'"

"நீ என்னை அறிகிறாயா?"

"இல்லை, தெரிய வில்லையே!"

"நான் சந்திராவதி சேனையின் தலைவன். விடு வழியை."

நாயக் சிரித்தான். தன் உருவிய வாளை ஆட்டிக் காண்பித்தான். முஞ்ஜாலின் கண்களிலிருந்து நெருப்புப் பொறி பறந்தது. அவன் தன் கையிலுள்ள ஈட்டியால் நாயக்கினுடைய மார்பைப் பிளந்தான். திரும்பிப் பார்த்து, "ஜய சோம்நாத்" என்றான்.

அவன் வீரர்களும் ஈட்டியைக் கையிலேந்திச் சண்டைக்குத் தயாரானார்கள். யதி இதைப் பார்த்துக் கொண்டிருந்தார். இந்தச் சமயம் அவரை மதப்பித்து ஆட்டி வைத்துக் கொண்டிருந்தது. மத வெற்றிக்கு எதிரே இரண்டு விரோதிகள் தென்பட்டனர். ஒருவன் முஞ்ஜால், மற்றொருவன் தேவப்ரஸாத். அவர் இஷ்டப்படி நடப்பதானால் ஒரே பாணத்தில் முஞ்ஜாலின் உயிரைக் குடித்து விடுவார். ஆனால் அவருக்கு ராணியின் நாடி தெரிந்திருந்தது. முஞ்ஜாலுக்கு ஏதாவது நேர்ந்தால் ராணி எல்லாவற்றையும் மறந்து யதியிடம் ஆத்திரம் காட்டி, ஆகி வந்ததைக் கூட மண்ணோடு மண்ணாக்கி விடுவாள் என்று தெரியும். ஆகவே முஞ்ஜால் சண்டைக்குத் தயாரானது தெரிந்தவுடன் ஜய தேவனையும் அழைத்துக் கொண்டு முன்னேறி வந்தார். 'ஜய தேவ் மஹாராஜ் கீ ஜய்' என்று கூச்சலிட்டார். வீரர்களும் சேர்ந்து ஜெய கோஷம் செய்தனர். முஞ்ஜால் யதியைப் பார்த்தான். ஜய தேவை அடையாளம் புரிந்து கொண்டான். வீரர்கள் யார் என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். உடனே குதிரையை நிறுத்தி ஈட்டியைத் தணித்தான். அவன் வீரர்களும் அதைப் பின் தொடர்ந்தனர்.

குமாரன் ஜய தேவன் சிறியவன் தான் என்றாலும் சமயம் வந்தால் தக்க படி நடந்து கொள்வதில் கெட்டிக்காரன். அவன் கேட்டான்: "முஞ்ஜால் மேதா! என்ன என்னையே எதிர்க்கத் துணிந்தாய் விட்டதா?"

"குமார் மன்னித்துக் கொள். 'எனக்குத் தெரிய வில்லை. நீங்கள் இங்கே எங்கே? எனக்குச் சொல்லி யிருக்கக் கூடாதா?" என்று சொல்லிக் கொண்டே ராஜபுத்திரன் வேஷத்திலிருக்கும் யதியைச் சந்தேகத்துடன் பார்த்தான்.

யதி கொஞ்சம் பரிகாசம் செய்யும் குரலில், இவ்வளவு சீக்கிரம் நீங்கள் எங்கே கிளம்பியதோ? என்றார்.

முஞ்ஜால் அலக்ஷியம் காட்டி, "இதைப் பற்றி உங்களுக்கென்ன அக்கரை? ஜப தபங்களை விட்டு இப்படி என்று முதல் வேஷம் போட ஆரம்பித்து விட்டீர்?...... மகாராஜ்? என்னை மன்னியுங்கள். நீங்கள் இந்த வழியே மதுபுரி செல்லுங்கள். நான் இரண்டு மணி நேரத்தில் திரும்பி வந்து விடுகிறேன். கொஞ்சம் அவசியமான வேலை இருக்கிறது." நமஸ்காரம் செய்து முஞ்ஜால் குதிரையைத் திருப்பினான்.

ஜய தேவனுக்கு முஞ்ஜாலிடம் பயத்துடன் மரியாதையும் உண்டு. தவிர, என்ன நடக்கிறது என்று சிறுவன் அவன் என்ன கண்டான்? மேலே என்ன சொல்வது என்று தெரியவில்லை. துறவி பின் எதற்கு இருக்கிறார்?

"மந்திரி மகாராஜ்! மகாராணியும் இருக்கிறார்கள். அவர்களைச் சந்திக்காமலா போகிறீர்கள்?"

முஞ்ஜால் உதட்டைக் கடித்துக்கொண்டான்: "இதோ போய்விட்டு வந்துவிடுகிறேன்."

ஜயதேவ்: 'இல்லை இல்லை அவர்களைப் பார்த்துவிட்டுப் போங்கள்.'

"இல்லை. இல்லை. பிறகு......"

இதே சமயம் வீரர்கள் வரிசையில் இடைவெளி கிடைக்க ராணியின் பல்லக்கு முன்னேறிற்று. முஞ்ஜால் வந்து சண்டை ஏற்பட ஜயதேவனும் போயிருக்கிறான் என்று கேட்ட ராணிக்கு ஆவலை அடக்க முடியவில்லை. அவள் வருவதைப் பார்த்த முஞ்ஜால் வெகு கஷ்டப்பட்டு, கோபத்தை அடக்கிக்கொண்டான். முஞ்ஜாலைச் சண்டைக்குச் செல்பவன் வேஷத்தில் பார்த்து, ராணி உள்ளம் நிரம்பிப் பொங்கிற்று. கஷ்டப்பட்டு மனதைத் தன் வசப்படுத்தி அவனை அடக்கிக் காட்டும் வேகத்தை அதிகரிக்கச் செய்து சிரித்தவாறே முன்னால் வந்தாள்.

"யார்? மந்திரி முஞ்ஜாலோ? எங்கே போகிறீர், வாரும் இப்படி."

முஞ்ஜால் மிகுந்த தன்னடக்கத்துடன் குதிரையைப் பல்லக்கருகே செலுத்தி நிறுத்தினான். எல்லா வீரர்களும் தள்ளி நின்றனர்.

ராணி அதிகாரக் குரல் தணிந்து பேசிற்று. "முஞ்ஜால்! நீயும் இப்படி யாவாய் என்று கனவிலும் நாம் எண்ணவில்லை. இந்தச் சமயம் எங்கே போகிறாய்? இங்கே ராணிக்கு உதவி செய்ய வந்தாயா? அல்லது விரோதம் வளர்க்கவா? முஞ்ஜால் நீ எந்த முகம் கொண்டு என்னைப் பார்க்கிறாய்?"

முஞ்ஜால் கம்பீரப் பார்வையுடன் நின்று கொண்டிருந்தான். அவன் இதுவரை ராணியை நல்வழி திருப்பிவிடலாம் என்று நம்பிக்கொண்டுதானிருந்தான். ஆனால் இந்தச் சமயம் ராணி தன் யோசனையற்ற காரியங்களால் பயங்கரமான ஒரு சண்டைக்கு அழைப்பு அனுப்பிக்கொண்டிருந்தாள். தனித்திருக்கும் தலைவனற்ற பட்டண்: முஞ்ஜாலைக் காணாது சீறும் தேவப்ரஸாத்: துக்கம் காப்பதை விட்டு வெளியேறியிருக்கும் ராணியிடம் ஜனங்கள் கொண்டுள்ள அவமரியாதை: பிறகு என்ன வேண்டும்.? அழிவுக்காலம் கிட்டிவிட்டது. ஸோலங்கி வம்சத்தவரின் வீழ்ச்சி ஆரம்பித்துவிட்டது. இதை எல்லாம் எண்ணி அவன் சொன்னான்: "தேவி, நீங்கள் என்ன செய்கிறீர்கள். என்று உங்களுக்கே தெரியாது. இப்பொழுதும் என்னிடம் கொஞ்சமாவது நம்பிக்கை இருந்தால் என்னைப் போகவிடுங்கள். நடுப்பகல் ஆவதற்குமுன் நான் தங்களைச் சந்திக்கிறேன்."

"எங்கே? என் மைத்துனர் மகனுடன் சேரத்தானே! முஞ்ஜால் நீ என் வம்சத்தையே அழிக்க முனைந்து விட்டாய். உன் சகோதரி மகனைச் சிம்மாசனமேற்ற முடிவு செய்துவிட்டாய்!"

முஞ்ஜால் வார்த்தைகளை அளந்தவாறே சொன்னான்: "தேவி, பட்டண் சிம்மாஸனத்தில் ஜயதேவன்தான் உட்காரவேண்டும். அல்லது பட்டண் அழிந்து மடியவேண்டும். இவ் இரண்டு தவிர வேறு ஒன்றும் நடக்க விடேன். ஆனால் உங்கள் மதிதான் திரும்பி விட்டது."

ராணி அகங்காரம் பறக்கத் தலையைத் தூக்கினாள். அவளுக்குக் கோபம் கட்டுமீறி வந்தது. அதிகார ஆணவத்தில் தான் ராணி

ஆரோக்கியமான, சிறந்த, ருசியான, உணவிற்கும், ஊறுகாய்களுக்கும் அவசியமானது ?

— எங்கள் —
டெக்கான் குவீன்
மார்க்
மிஸ்கி
பெருங்காயமே
காரம், குணம், மணம், ருசி இவைகளில் உயர்ந்தது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

நாராயணதாஸ் கேஸர்தாஸ் & சன்ஸ்,
17, கோவிந்தப்பநாயக்கன்தெரு, மதராஸ்.

ஹெட் ஆபீஸ்:- வட்காடி, பம்பாய். பிராஞ்சு:- பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

என்ற எண்ணம் ஓங்கி நின்றது. அவள் கண்களில் அரக்கத் தன்மை தோன்றிற்று. ''முஞ்ஜால்; கடைசியில் நீ வணிக ஜாதி வழக்கத்தைக் காண்பித்துவிட்டாயே! ஏன், எதனால்? இதுவரை சுதந்திரமாக விட்டு வைத்திருந்ததினால் அல்லவா நீ இந்த விதம் நடந்துகொள்கிறாய்? தெரியுமா, நான் யார் என்று?''

முஞ்ஜால் ஓர் சிரிப்புச் சிரித்தான் மிகவும் அமைதியாக: ''நீங்களா, ராஜமாதா! முஞ்ஜாலுக்கு மறக்கும் வழக்கம் கிடையாது, தேவி! நீங்கள் நான் அறிய வளர்ந்து கெட்டிக்காரியான சந்திரபுரியின் குமாரி. என் புத்தியால் வந்து, என் புத்தி பலத்தால் பட்டண் ராணியானவர்கள். இந்தச் சமயம் சொல்லட்டுமா.... (குனிந்து) ஸோலங்கியின்

வம்சத்தைச் சாம்பலாக்க உதித்த யோகமாயை! ஓர் செய்நன்றி மறந்த, நம்பிக்கைக்கு லாயக்கில்லாத, அன்பு நீங்கிய...'' முஞ்ஜால் கடைசி வார்த்தையை விழுங்கி விட்டான்.

மீனல் தேவி இடியுண்ட சர்ப்பம்போல் திகைத்து இருந்தாள். அவள் கோபம் அவள் மண்டையையே பிளந்துவிடும் போலிருந்தது. எப்படியாவது முஞ்ஜாலை அடக்க வேண்டும் என்ற எண்ணம் அவள் உள்ளத்தைப் பிடித்து, தலைவிரித்து ஆடச்செய்தது. அவள் அங்குமிங்கும் பார்த்தாள். யதியும் சைன்யமும் நின்றுகொண்டிருந்தனர். முஞ்ஜாலுக்குத் தப்பி விழுந்த காய்கள் சரியாகப் புரளும் என்ற நம்பிக்கை இல்லை. எப்படியாவது சங்கட நிலையிலிருந்து தப்ப எண்ணினான். கையிலிருந்த ஈட்டியையும் தோளில் தொங்கிய வில்லையும் எறிந்து குமாரன் ஜயதேவன் பக்கம் திரும்பி, ''மகாராஜா! இதோ என் ஆயுதங்கள். எடுத்துக்கொள்ளுங்கள். இவைகளைச் சரியாக உபயோகித்தால் உலகில் புகழும் பெருமையும் எய்தலாம். இனி அவைகள் எனக்கு வேண்டாம். ஆனந்த சூரிஜீ.! என்னைக் கைது செய்து கொள்ளுங்கள்.''

எல்லோரும் பார்த்தனர். ஒருவருக்கும் என்ன செய்வது என்று புரியவேயில்லை.

மீனல் தேவி சொன்னாள்: ''ஆம், ஆனந்த சூரி! கைது செய்யுங்கள் இவனை. இந்த ராஜத் துரோஹிகளுக்குத் தக்க தண்டனை கொடுக்கிறேன்!''

துறவி சற்று நேரம் நின்றார். பிறகு மேலேறி முஞ்ஜால் விட்ட குதிரைக் கடிவாளங்களை கையில் பிடித்துக்கொண்டார்.

ராணி உத்தரவிட்டாள்: ''சரி செல்லுங்கள் மதுபுரிக்கு. சூரியன் எவ்வளவு ஏறிவிட்டான்!''

எல்லோரும் மெதுவாகச் செல்ல ஆரம்பித்தனர். சற்று நேரம் சென்று ராணி யதியை அழைத்தாள்: ''யதி மகாராஜ். ஒரு வேலை முடிந்து விட்டது. மற்றொன்று பாக்கி. நீர் கொஞ்சம் வீரர்களுடன் மாண்டுகேசுவரத்தின் வழியே செல்லும்; எப்படியாவது மண்டலேசுவரனை அங்கேயே சிறைவைத்துவிடும். அவன் வல்லப சேனனிடம் சென்று ஒன்றும் சொல்ல முடியாதபடி செய்துவிடும். அப்பொழுது அவனும் தோல்வியுற்று ஒளிந்து கொள்வான்.''

''சரி. நான் இருபத்தைந்து முப்பது வீரர்களை இட்டுச் செல்கிறேன்.''

''முடிந்த வரையில் இரண்டு மூன்று நாட்கள் மண்டலேசுவரனை வெளியே விடாமல்



பார்த்துக்கொள்ளும். அதற்குள் நானும் பட்டண் பக்கம் திரும்பிவிடுவேன்.''

''அப்படியே ஆகட்டும், தேவி! நம் தானைத் தலைவன் மதுபுரி எல்லையில் தங்கள் வரவை எதிர்பார்த்து நிற்கிருன். அவன் உங்கள் உத்தரவை எல்லாம் நிறைவேற்று வான்.''

''சரி விக்கராட் பக்கத்திலேயே சேனை தண்டு இறங்கட்டும். அப்பொழுது தான் பட்டணத்திலிருந்து வேண்டுமவ்வளவு தூரத்தில் இருக்கும். இதற்குள் வல்லப சேனனும் வந்து விட்டால் பிறகு கவலை இல்லை. சரி போம்; சீக்கிரம் செய்யும்.'' என்று உத்தரவிட்டு ராணி மதுபுரிப் பக்கம் சென்ருள்.

யதியும் வேகமாய் மாண்டுகேசுவரத்தின் பக்கம் சென்ருர்.

ஊதா மார்வாடி

ஊதா சேட் மார்வார் ஆசாமி. இரவு பூராவும் மாடியிலேயே உட்கார்ந்திருந்தான். அவன் வீட்டுக்கெதிரிலேயிருந்த சாம்பானேரி வாயிலிலிருந்து இரண்டு பல்லக்குகள் சென்றதை அவன் பார்த்தான். இந்த நேரத்தில் பட்டணத்துப்புருகூட வெளியேற இயலாத தருணத்தில், இது யார் இப்படிப் போனது? ஊதாவுக்கு ஒரு சரியான தருணம் எதிர்நோக்கி வந்தது. இதைச் சரியானபடி உபயோகித்துக் கொண்டால் பாக்ய லக்ஷ்மியின் மடியில் ஏறி அமரலாம். எவ்வளவு நாளாக அவன் அவளை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். அலக்ஷிய மாயிருந்து வந்த தருணத்தை வீணுக்கிக் கொள்ளக் கூடாது என்று பயந்தான்.

அவனுக்குத் தன்னிடம் அபார நம்பிக்கை உண்டு. பதினேழு வயதில் பாக்யலக்ஷ்மி காலால் உதைத்துத் தள்ளப்பட்ட, தாய் தந்தையற்ற அவன் ஒரு கயிறு சொம்புடன் மார்வாடின் ஓர் பாழ்த்த கிராமத்திலிருந்து வெளியேறியவன். கட்டிய துணிக்கு ஒரே மாற்றுத் துணியுடன் வந்தான். அதனுல் தன்னம்பிக்கையும் தைரியமும் நிரம்பப் பெற்றிருந்தான்.

ஊதாவும் அநேக விதமான எண்ணங்கள் கொண்டிருந்தான். உலகம் பூராவும் முட்டாள்கள்; சிலர் பரமார்த்தத்தில், சிலர் அகங்காரத்தில், சிலர் பெருந்தன்மையில், வாழ்க்கையை அழிக்கிருர்கள். தவிர வெறும் விரக்தியினுல் மனிதன் உலகத்தின் உச்சியில் ஏற முடிந்தால் சும்மா இருக்க மாட்டான். ஆனுல் இந்தத் தத்துவ ஞானத்தைப் பிரயோகம் செய்து பார்க்கத் தாகம் கொண்ட ஊதாவுக்கு இது வரை நேரம் கிடைத்ததில்லை.

அலைந்து திரிந்த ஊதா புது ஊரான கர்ணுவதியின் எல்லைக்கு வந்து சேர்ந்தான். மூன்று நாட்களை ஒரு பருக்கைச் சாதத்தைக் கூடப் பார்க்காமல் கழித்திருந்தான். மயக்கம் வந்து கீழே விழுந்தான். மயக்கம் தீர்ந்த பிறகு ஒரு பெரிய வீட்டில் படுத்துக் கொண்டிருந்தான். ஒரு பெரிய மனதுள்ள பணக்கார ஜைன விதவை லாக்கி அவனைத் தன் வீட்டுக்கு எடுத்து வந்திருந்தாள். சமீபத்தில் உட்கார்ந்திருந்த ஒரு ஜைனத் துறவி அவன் கை நாடி பார்த்துக் கொண்டிருந்தார். அந்த மதப் பற்றுள்ள விதவை அவனைத் தன் புத்திரனுக்கி வைத்துக் கொண்டாள். ஊதாவின் உள்ளத்தில் நம்பிக்கை ஊற்றுக் கொண்டு பாக்கியக் கிணறு நிரம்ப ஆரம்பித்தது. அவன் பார்வைக்கு நல்லவனுகவும், பிறருக்கே உழைப்பவன் போலவும் நேர்மையான சுபாவமுள்ளனுகவும் தோன்றியதால் எல்லோரும் அவனை விரும்பினர். புத்தியிலும் கூர்மையுள்ளவனுக இருந்தான். ஆதலால் தனக்குக் கிடைத்த புது நிலைமையை முற்றும் உபயோகித்துக் கொள்ள ஆரம்பித்தான். அவன் வருங்காலத்தைப் பற்றி ஜோஸியர்கள் பிரமாதமாகச் சொன்னுர்கள். அதனுல் அவனிடம் எல்லோருக்கும் ஒரு மரியாதையும் ஏற்பட்டிருந்தது.

லாக்கி இறந்த பிறகு ஊதா கர்ணுவதியில் தங்குவது உசிதமல்ல என்று எண்ணினுன். கர்ணுவதி வீட்டை விற்றுவிட்டுப் பட்டணில் ஒரு சிறிய வீட்டை வாங்கி, பாக்கிப் பணத்தைக் கொண்டு தொழிலை ஆரம்பித்தான். அவனுக்குப் பணம் பெரிதல்ல. அதிகாரம் வேண்டும். முஞ்ஜால், சாந்தி சந்திரன் போன்றசேட்டுகளைப்பார்க்கும் போது அவன் உள்ளம் எரிந்து சாம்பலாயிற்று. பட்டணில் கொஞ்சம் 'ஆத்ம ஞானமும்' ஏற்பட்டது. பட்டணின் காரியப் போக்கும் ஸமூக அமைப்பும் ஒழுங்கான முறையில் நடந்து கொண்டிருந்தபடியால் திடீரென்று வந்த மனிதர்கள் முனைந்து எழுவது என்பது சுலபமான காரியமாயில்லை. ஊதா எப்பொழுதும் கவலையிலேயே காலத்தைக் கழித்தான்.

பெரிய பெரிய வீடுகளில் போக்கு வரத்து வைத்துக் கொள்வதும் சுலபமாயில்லை. இருந்தாலும் மனத்திடம் உள்ள ஊதா நம்பிக்கை யிழக்கவில்லை. அவனுக்கு ஒரு காலமும் வந்தது. இனிப் பட்டணில் ஏதாவது குழப்பம் ஏற்படும். கொந்தளிப்பில் சமுத்திரத்தின் அடியிலுள்ள மிருகங்கள் முதல்

குதிரையானலும் வாட்சானலும்

அதன் பரம்பரையை உற்றுக் கவனிக்கவேண்டும்

வெஸ்ட் எண்ட் வாட்ச் கம்பெனி ஸ்தாபிதமாகி 75 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இக்காலத்திற்குள் இந்தியாவுக்கென்றே உரித்தான வாட்ச் வகைகளைத் தயார் செய்வதில் மிகவும் தேர்ச்சிபெற்றிருக்கிருர்கள். கவர்ச்சியான அமைப்பும், நெடுநாள் உழைக்கும் சக்தியும் கூடிய வாட்ச்களைத் தயார் செய்யும் பொருட்டு விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. ஒவ்வொரு **வெஸ்ட் எண்ட் வாட்சும்** மிக நேர்த்தியான வேலைப்பாடுடன் செய்யப்படுவதால், நீங்கள் எவ்விலை கொடுத்து வாங்கினுலும் பாதகமில்லை.

தேவைகள் அதிகமாக இருப்பதாலும், போதுமான அளவு கருவிகள் இறக்குமதி செய்ய வசதிக் குறைவினுலும், விளம்பரப்படுத்துகிற ஒவ்வொரு வாட்ச் வகையும் அனுப்ப இயலாவிடினும் இயன்றவரை தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிசெய்து வருகிருேம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.
பம்பாய் & கல்கத்தா



West End Watch Co.

BOMBAY CALCUTTA

தடவையாக மேலே மிதந்து காணப்படுவது போலச் சில புதிய மனிதர்களும் மேலே வரலாம். ஊதா அந்த நேரத்துக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டான். மெதுவாகச் சமயத்தில் உதவக் கூடியக் கொஞ்சம் ஏழையான ராஜபுத்திர வீரர்களுக்கும் ராஜ சேவகர்களுக்கும் கொஞ்சம் கடன் கொடுக்க ஆரம்பித்தான். ஒவ்வொரு பெரிய மனிதர் சரித்திரத்தையும் ஆரம்பம் முதல் சில்லறைத் தகவல்கள்கூட விடாமல் கேட்டு மனப்பாடம் செய்து கொண்டான். எல்லாரையும் நேரிடையாகத் தெரிந்து கொண்டு திருப்தி செய்விக்க ஏற்பாடு செய்தான். அரண்மனையில் அவன் ஆட்கள் இருந்தனர். துறவிகளிடம் தயவு காட்டினான். ராஜபுத்திரர்களும் அவன் தயவை எதிர் பார்த்தனர். சாந்திசந்திரன் முஞ்ஜால் மீனல்தேவி கர்ண தேவன் வரையில் 'இவன் ஒரு ஏழை வியாபாரி; ஆனால் நல்லவன்' என்ற விஷயம் எட்டியிருந்தது. ஆனால் என்னென்ன எண்ணங்கள் அவன் மண்டைக்குள் சுற்றி வருகின்றன என்று ஒருவரும் அறியவில்லை.

கர்ணதேவன் இறந்து விட்டான். ஊதா காதைத் தீட்டிக் கொண்டான். வீட்டில் இருந்த தங்கம் வெள்ளியைப் பூமியில் புதைத்துப் புத்தியைத் தூரு எடுத்துக் கொண்டு உட்கார்ந்தான். "முஞ்ஜால் மதுபுரி சென்று விட்டான். தேவப்ரஸாத் அகிழின் கரைகளைத் தாண்டி ஓடி விட்டான். சரி, இனிமேல் நம் நாட்டில் மழைதான் என்று அறிந்து கொண்டான் ஊதா. இரவில் இரண்டு பல்லக்குகள் வெளியேறின. யார் போயிருப்பார்கள்? இரவு முழுவதும் யோசித்தான். சூரியன் எட்டிப்பார்த்தானே தவிர அவன் மூளைக்கு ஒன்றும் உதவியாகவில்லை. காலை நேரத்தில் பார்த்தான்: சாம்பானேரி கதவின் திட்டி வாசல் திறந்தது. இரண்டு மனிதர்கள் உள்ளே போனார்கள். ஒன்று ஆண் மற்றொன்று பெண். இவர்களும் யார் என்று அந்த வெளிச்சம் கலந்த இருட்டில் கண்டு பிடிக்க முடியவில்லை. அவன் குல்லாயைத் தலையில் வைத்து, "பண்டி"யின் கயிறுகளை இழுத்துக் கட்டிக் கொண்டான். வீட்டைப் பூட்டிக்கொண்டு அவர்களைத் தொடர்ந்தான்.

அவன் காதுகளில் ஆண் கேட்டது காதில் விழுந்தது. "நீ என் வீட்டுக்கு வருகிறாயா?"

'இல்லை!' அமைதியுடன் அமுதம் சொரியும் குரலில் சொன்னாள் அந்தப் பெண். பெண்குரல் பழக்கமானதாயிருந்தது. ஊதா அதை எங்கே கேட்டிருப்பான்!

அமுக்கப்பட்ட ஆனால் உணர்ச்சி மிகுந்த குரலில் ஆண் கேட்டான்: "இப்பொழுது தனியாக எங்கே போவாய்?"

"பட்டன் என் வீடு. இதில் எங்கே போவது என்ன? நீங்கள் அரண்மனைவரை வாருங்கள். பிறகு நானே போய்க் கொள்கிறேன்."

"பிறகு நீ எங்கே போய்க்கொள்வதாக உத்தேசம் என்று தானே கேட்கிறேன்."

"அதைச் சொல்ல முடியாது. இவ்வளவு நம்பினவர் இன்னம் கொஞ்சம் நம்பக்கூடாதா?" "என்று சொல்லி அவள் விஷமச் சிரிப்புச் சிரித்தாள்.

ஊதா திடுக்கிட்டான். "அட! மீனல் தேவியின் இந்த மருமகள் இந்த நேரத்தில் எங்கே!" அவன் காதுகள் கூர்ந்து கவனித்தன.

"நீமட்டும் என்னை நம்பமாட்டேன் என்கிறாய்? நான் உன்னை நம்பவேண்டும் என்று எதிர்பார்க்கிறாயே. சரி, ஒரு பிரமாணம் செய்து கொடு. பிறகு சந்திக்கிறாயா?"

"ஓஹோ, இவ்வளவுதானே! சரி, வேறு ஒன்றுமில்லையே!"

"ஆஹா நிரம்ப இருக்கிறது சொல்ல. ஆனால் மற்றொருநாள் சொல்கிறேன்."

பிரஸன்னா சிரித்தாள். இருவரும் கொஞ்ச நேரம் சும்மாவே போய்க்கொண்டிருந்தார்கள். பின்னாலேயே ஊதாவும் என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டே போய்க் கொண்டிருந்தான். கடைசியில் அரண்மனை வெளி முற்றத்துக்கு வந்து சேர்ந்தாள்.

"முரார்பால் ஜீ ! நீங்கள் போகலாம்."

"ஆனால். கோட்டை மூடியிருந்தால்......"

"மூடியிருக்கட்டும்; நீங்கள் உங்கள் வாக்கைக் காப்பாற்றுங்கள். அதிக ஆசை காட்டாதீர்கள்?" என்று சொல்லிவிட்டு, பிரஸன்னா அரண்மனையின் பின்பக்கமாக நடக்க ஆரம்பித்தாள். முரார்பாலும் நீண்ட நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். கடைசியில் பெருமூச்சு விட்டுத் தன் வீட்டுப் பக்கம் சென்றான்.

ஊதா கொஞ்ச நேரம் பிரஸன்னா பின்னாலேயே போய்க்கொண்டிருந்தான். "இது என்ன ரஹஸ்யம்?" அவன் மூளையில் கொஞ்சம் ஒளி தோன்றிற்று. ராத்திரியில் பல்லக்கில் உட்கார்ந்துகொண்டு மீனல் தேவிதான் வெளியே போனாளோ? அது அப்படியிருந்தால் கண்டிப்பாய் உபத்ரவம்தான்!"

பிரஸன்னா பின் வாயிலுக்குச் சென்றாள். சென்று கதவைத் தட்டினாள். ஆனால் ஒரு

பதிலும் கிடைக்கவில்லை. சாந்தி சந்திரனின் கடுமையான உத்தரவின் காரணமாக ஒரு கதவையும் ஒரு ஜன்னலையும்கூட திறக்க முடியவில்லை. பிரஸன்னா பயந்துவிட்டாள்; அவள் பதறிவிட்டாள். முரார்பால் இருக்கும்வரை தைரியம் இருந்தது. இப்பொழுது தனிமை அவளைப் பதறவைத்துவிட்டது.

"என்ன பிரஸன்னா தேவி! எங்கே போகிறீர்கள் இந்தச் சமயம்?"

'யார்? ஊதா சேட்டா?" பிரஸன்னாவுக்கு ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. "நீ எங்கே போகிறாய்?"

"நான் தரிசனத்துக்குப் போய்க்கொண்டிருந்தேன்."

"நீங்கள் தனியே எங்கே கிளம்பினீர்கள்? கூட ஒருவரையும் காணோமே!"

"ஊதா சேட். அதைவிடு. உன் இருப்பிடம் எங்கே இருக்கிறது? அங்கேஅழைத்துச் செல். யாராவதுஎன்னை இங்கே பார்த்தால், நன்றாயிராது."

ஊதாவுக்கு அதுதானே வேண்டும். "அவசியம் வாருங்கள், என் பாக்கியத்தை என்னென்று சொல்வேன்.! என் வீடு மிகவும் அருகில்தான் இருக்கிறது. வாருங்கள் வாருங்கள் !" என்று திரும்பி, தன் வீட்டை நோக்கிச் செல்ல ஆரம்பித்தான். "ஆனால் நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? ஏதாவது கஷ்டமிருந்தால் தயங்காமல் சொல்லுங்கள்; ஊதா என்றும் தயாராயிருக்கிறேன்,"

பிரஸன்னாவுக்கு ஊதாவிடம் நம்பிக்கை உண்டு. "ஊதா சேட், நான் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறேன். நான் அத்தையிடமிருந்து பயந்து ஓடி வந்திருக்கிறேன்"

"அத்தையா? அவர்கள் இப்பொழுது நகருக்கு வெளியே இருக்கிறார்கள் இல்லையா?" நிச்சயம் செய்து கொள்வதற்காக அவன் மிகவும் கெட்டிக்காரத்தனமாய்க் கேட்டான்.

"நீ அதை எப்படி அறிந்தாய்?"

"எனக்குத் தெரியாமல் எப்படி இருக்கும்? நான் சாம்பானேரி வாயிலுக்கு எதிரே இருக்கிறேன்......... அது இருக்கட்டும். நீங்கள் எப்படி ஓடி வந்தீர்கள்?"

உ

எத்தனை ரகம் பட்டுசேலைகள் இருந்தாலும்

கொள்ளேகாலம் பட்டு சேலைக்கு

இணையாகாது.

பளபளப்பு, நீடித்த உழைப்பு எல்லா

அம்சங்களும் பொருந்தியவை

பலவூர் ஜவுளிகளும் கிடைக்கும்

விற்பனையாளர்:

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

99, பெரியதெரு :; கும்பகோணம்



''ஊதா, நீ எப்படி என் கஷ்டங்களை எல்லாம் அறிவாய்?''

''நீங்கள் ஓடி வந்ததும் நல்லதாய்ப் போயிற்று. இல்லையானல் பட்டன் மூக்கு அறுந்து விடாதா?'' அது எப்படி என்று அவனுக்கே தெரியாது. இருந்தாலும் பிரஸன்ன அதனல் திருப்தியடைந்தால் லாபம் தானே! இன்னும் கொஞ்சம் சமாசாரம் பிடுங்கி எடுத்துக் கொள்ளலாமே!

''ஆம். ; ஆம் அத்தையும் ஏனே இப்படி

எல்லாம் செய்கிறார்கள்! அவந்தியைக் காட்டிலும் பட்டணுக்கு என்ன குறைவு வந்து விட்டது?''

பெரிய வெளிச்சத்தின் ஒரு கிரணத்தைப் பார்த்தான் ஊதா. 'ஆம், பட்டண் பாரத தேசத்தின் மணி முடி அல்லவா? ராணியம்மாள் ஏன் இப்படிச் செய்கிறார்கள்?''

''ஆம். இந்தச் சமயத்தில் பட்டணை விட்டுப் போகலாமா? என்ன சொல்வேன் ஊதா? பாரஹட் சொல்கிறபடி பட்டணின் பெருமை குன்ற ஆரம்பித்து விட்டது! அத்தை பட்டணை விட்டு மதுபுரி சென்றிருக்கிறார்கள். அது எவ்வளவு கெடுதலான காரியம்!'' ஆதாரம் கிடைத்த ஆவேசத்தில் பிரஸன்னா சொல்லிக்கொண்டே இருந்தாள்.

ஊதாவுக்கு விஷயம் விளங்க ஆரம்பித்து விட்டது. ராஜ்யத்தின் சூழல்களை எல்லாம் அவன் அறிந்திருந்தான். ''அது சரி தான். பட்டண் மஹாராணி பட்டணுக்கே எதிரியாகலாமா? நானும் தான் ஜைன மதத்தைச் சேர்ந்தவன். அதற்காக நம் ராஜ்ய பக்தியை மறந்து விடலாமா? என்ன செய்வது—ராஜா காலஸ்ய காரணம்!

''ராஜா காலஸ்ய காரணமா? உன் பட்டணத்து ஆண்கள் எல்லாம் வளையணிந்து உட்கார்ந்திருக்கிறார்கள். இல்லாவிடில் சந்திராவதி தலை தூக்குமா? இன்று சாந்தி சந்திரன் தான் பட்டணின் சேனைத் தலைவன் ஆக முடியுமா?''

''ஆனால் என்ன செய்வது குமாரி! சரி வாருங்கள். ஏழையின் வீடு வந்து விட்டது'' என்று சொல்லிக் கொண்டே, ஊதா கதவைத் திறந்தான். விளக்கேற்றிக் கொண்டு இருவரும் மேலே சென்றனர். ''குமாரி, காலம் ரொம்ப கெட்டு விட்டது. பட்டணில் சரியான ஆசாமியே இல்லை. முஞ்ஜால் மேதாவாவது சரியாயிருந்தால் பட்டணின் பெருமை உலகத்திலேயே பறையடிக்கும்.''

''முஞ்ஜால் மேதாவைத்தான் முதலிலேயே நகர்த்தியாய் விட்டதே! மண்டலேசுவரர்... ஆம் ஊதா. பேசிக்கொண்டே முக்கியமான விஷயத்தை மறந்து விட்டேன். திரிபுவன் பால் காயத்துடன் அரண்மனையில் படுத்திருந்தார். விடிவதற்குள் அவர் சமாசாரம் தெரிந்தால் தான் எனக்கு அமைதி ஏற்படும்.''

இந்தப்பெண் திரிபுவன் விஷயத்தில் இவ்வளவு கவலைப் படுவதிற்குக் காரணம் கற்பனைசெய்ய ஊதாவுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

''சரி, குமாரிதேவி! இதோ பற்பொடியும் ஜலமும் இருக்கின்றன சூரியன் உதிப்பதற்குள் வந்து விடுகிறேன். காலை ஆவதற்குள் மீனல் தேவி வெளியே போயிருக்கிறார்கள் என்று ஜனங்கள் அறிந்து கொள்வார்கள்... இல்லையா?''

''இல்லை ஊதா. அது முடியாது. சாந்தி சந்திரன் அரண்மனையில் பாரா வைத்திருப்பார். பிறகு யார் அறிய முடியும்? நாளை இரவுக்குள் அவர்களே திரும்பி வந்தாலும் வந்து விடுவார்கள்.''

''இந்த விஷயங்கள் காற்றிலே பறக்க வல்லன, குமாரி தேவி! சரி, நான் சென்று கடையைத் திறந்து வைத்து, கோவிலுக்குச் சென்று திரிபுவன் விஷயமும் தெரிந்து கொண்டு வருகிறேன். ஏதாவது சொல்ல வேண்டுமா?'' ஊதா மிகவும் தணிந்த குரலில் கேட்டான். அவன் பெண் உள்ளத்தின் போக்கையும் அறிந்தவனாகக் காணப்பட்டான்.

''ஆம், வைத்யர் லீலாதரனிடம் நான் இங்கே இருக்கிறேன் என்று சொல்லிவிடு. திரிபுவன் கேட்டாலும் லீலாதரர் சொல்லி விடலாம். அவசியமிருந்தால் வந்து சேருகிறேன். ஆனால் ஊதா, நான் சொன்னதை ஒருவரிடமும் சொல்ல மாட்டாயே!''

''சை, இதெல்லாம் பிறரிடம் சொல்லலாமா? ஏழைக்கு அதுகூடத் தெரியாதா? கவலைப்படாதீர்கள்.'' ஊதா போய்விட்டான்.

ஊதாவுக்கு ஜோஸ்யர்கள் சொன்னது ஞாபகம் வந்தது. இந்தச் சமயம் வேலை செய்தால் நகர் சேட்டுக்கெல்லாம் சேட் ஆகிவிடலாம். கவலை கொண்டு நம்பிக்கையுடன் பிரஸன்னா பேசிக்கொண்டிருந்த போது அவன் மூளை தீவிரமான வேலை செய்து கொண்டிருந்தது. இந்தமாதிரி சந்தர்ப்பம் நூறு வருஷங்களுக்கு ஒருமுறைகூட வராது! மீனல்தேவி வெளியே போன விஷயம் அவன் தனிச் சொத்து. அதை வைத்துக்கொண்டு என்ன வியாபாரம் செய்யலாம்? எவ்வளவு லாபம் வரும்? எவ்வளவு வட்டிக்குக் கட்டும்? என்று அவன் நிச்சயம் செய்ய ஆரம்பித்தான்.

[தொடரும்.]

தகோபாத் தமிழ்க் கல்வெட்டு

தராசு

"சுமார் 47 ஆண்டுகளாகச் சிலாசாஸன ஆராய்ச்சியாளர்களின் சிந்தனையில் இருந்து வருவதும், தமிழர்கள் பெருமைப்படக் கூடியதுமான கடல் கடந்த தமிழன் ஆராய்ச்சியாகும்"

'வடவேங்கடம் முதல் தென்குமரி வரை" என்பது தமிழ் நாட்டின் எல்லையாகும், இந்த எல்லையானது, எந்தச் சந்தர்ப்பத்தில் யாரால் வரையறுக்கப்பட்டதென்று நிர்ணயிக்க முடியா விட்டாலும், தமிழ் இலக்கியங்களுக்குள் இந்த எல்லையானது வெகுகாலத்துக்கு முன்பே புகுந்துவிட்டதென்று தெரிய வருகிறது. வடவேங்கடமானது இன்று தமிழர்களும் தெலுங்கர்களும் கலந்து வாழும் பிரதேசமாக இருப்பதுபோல், தென்குமரியும் தமிழர்களும், மலையாளிகளும் சேர்ந்துவாழும் பிரதேசமாகத் திகழ்கின்றது. இதுதான் தமிழ் நாட்டின் எல்லையென்று கூறப்பட்டிருந்த போதிலும், ஒருகாலத்தில் தமிழானது ஹிமயம் வரையில் பரவியிருந்தது; அத்துடன் கடல்தாண்டியும் சென்றிருக்கிறது. தமிழர்கள் அக்கரைப்பிரதேசங்களில் நல்லாட்சி நடத்திய காலமுமுண்டு. இந்த நினைவுச்சின்னம் ஏதோ ஒருவிதமாக மறைந்து விட்டபோதிலும், தமிழர்கள் அன்னியநாட்டில் எழுப்பிய ஞாபகச்சின்னங்கள் மட்டும் அழியாமல் இருக்கின்றன. உலகத்திலேயே ஆங்கிலேயர்கள்தான் தாய்மொழிப் பற்றிலும், தன்னுட்டுப் பற்றிலும் சிறந்தவர்கள் என்பது பலருடைய கருத்து; ஆனல் தமிழர்கள் வெகுகாலத்துக்கு முன்னமேயே இத்துறையில் பிறநாட்டினருக்கு வழிகாட்டியாக இருந்தார்கள் என்று கூறுவதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன.

தனித்தமிழ்ப் பிரதேசமான சேர, சோழ, பாண்டிய நாட்டின் எல்லைகளிலிருந்து, தமிழர்கள் கடல் தாண்டிச் சென்று வியாபாரம் செய்திருக்கிருர்கள். அக்காலத்தில் தமிழானது கடல் கடந்து பல இடங்களில் பரவி இருந்திருக்கிறது. தமிழர்களின் பெருமையையும், சமயப் பற்றையும் அன்னிய தேசங்களுக்குச் சென்ற போதிலும் மறவாதிருந்து, தங்களுடைய பெருமையை என்றென்றும் பலரும் அறிந்து கொள்ளும் படியாக அழியாச் சின்னங்களை அமைத்தார்கள். "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற பழமொழியின்படி பொருளை மட்டும் சம்பாதிக்காமல், பெருமையைக் காப்பாற்றிக்கொண்டும், தங்களுடைய மேன்மையான விஷயங்களைப் பலருக்கு நன்கு கற்றுக் கொடுத்தும் பெரும் புகழுடன் தமிழ் நாட்டவர்கள், தம்நாட்டுக்குத் திரும்பியிருக்கிருர்கள்.

தமிழர்கள் கடல் கடந்து சென்று வாணிகம் நடத்தியதற்கு இலக்கியங்களின் மூலம் கிடைக்கும் ஆதாரத்தைப் போலவே, கல்வெட்டுகளின் மூலமும் சில ஆதாரங்கள் கிடைக்கின்றன. கி.பி.984 முதல் 1044ஆம் ஆண்டுவரையில் சோழ ராஜ்யத்தின் அதிபனுன ராஜேந்திர சோழனின் காலத்தில்தான் தமிழர்களின் கடல் கடந்த வியாபாரம் உன்னத நிலையில் இருந்ததென்று கூற வேண்டும். வியாபாரத்தின் மேன்மையை விளக்கியும், தமிழர்கள் அரசு புரிந்த விவரத்தையும் தெரிவிக்கும் கி.பி. 1030ஆம் ஆண்டு திருக்களர் செப்பேடும், 1031ஆம் ஆண்டு தஞ்சைக் கோயில் சாஸனமும் ஐயமறத் தெரிவிக்கின்றன; கி. பி. 4ஆம் நூற்றுண்டு முதலே கடல் தாண்டிச் சென்றிருக்கிருர்கள் என்று ஆராய்ச்சியானது அறிவிக்கின்றது.

தமிழ் நாட்டிலிருந்து சென்ற வியாபாரக்கூட்டத்தினரில் ஒரு கோஷ்டியினர் சியாம் நாட்டிற்குச் சென்று அங்கேயே

சில காலம் தங்கி யிருந்திருக்கிறார்கள். தங்களுடைய சமயப் பற்றின்படி தெய்வங்களையும் வழிபாடு செய்து வந்திருக்கிறார்கள். 'தகோபா' வென்ற இடத்தில் ஒரு கல்வெட்டும் தெய்வங்களின் உருவமும் காணப்படுகின்றன; இக் கல்வெட்டுத்தான் தகோபாத் தமிழ்க் கல்வெட்டென்று கூறப்படுகின்றது. தகோபா என்ற ஊர் தற்காலத்தில் 'தலத்ஜை' எனப்படுகிறது; இந்த இடத்திலுள்ள ஏரியின் கரையில் உருவங்களும், கல்வெட்டும் காணப்படுகின்றன. சிலர் இந்த ஊரைத் தகோலா வென்றும் அழைக்கிறார்கள். தாலமி என்ற எகிப்து தேசத்து ஆராய்ச்சியாளர், தம்முடைய ஆராய்ச்சிக் குறிப்பில் இந்த ஊரைத் தகோலா வென்றே குறிப்பிட்டுள்ளார். கனகசபை பிள்ளை எழுதிய "1800 வருஷங்களுக்கு முன் தமிழர்கள்" என்ற ஆராய்ச்சி நூலில், இப் பிராந்தியத்திற்குத் தமிழர்கள் வாணிகம் செய்ய வந்தார்கள் என்று எழுதியிருக்கிறார். கடாரம் கொண்ட சாஸனத்தில் இந்த ஊர் தகோலா வென்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஊருக்கு அருகில் 'இரா' என்ற தீபகற்பம் இருக்கிறது. தீபகற்பத்திலுள்ள தகோபா என்ற நதியோடு மேலே சென்றால் கோபி நாரணம் என்ற மலை உள்ளது.

கோபி நாரணன் மலையைச் சிலர் கோபி நாரை யென்றும் கூறுகிறார்கள். இதனடியில் ஒரு பெரிய ஏரி, அதன் தென் கரையில் ஒரு மரத்தின் அடியில் மூன்று உருவங்கள் (இப்பொழுது மூன்றும் பாதி உருவங்கள் தான்.) இருக்கின்றன. உயரமாகவும், கம்பீரமாகவும் இருக்கும் உருவத்திற்குத் தலையானது சிதைந்து விட்டது. இது கம்பீரமான ஆணுருவம், மற்றைய இரண்டும், இரண்டு பக்கங்களிலு மிருக்கின்றன; இவைகள் பெண் உருவங்களாகும். இந்த உருவங்களைப் பற்றிய ஆராய்ச்சியில், விஷ்ணுவும், அவருடைய இரு மனைவியரான ஸ்ரீதேவியும், பூதேவியுமென்றும், சிலர் சிவபெருமானுடைய உருவமென்றும் கூறுகிறார்கள்; சிவபெருமானுடைய காரணார்த்த உருவங்களிலும் சிற்ப சாஸ்திரங்களிலுங்கூட சிவனின் இரண்டு பெண்ணுருவமும் இருக்கலாமென்று கூறப்படவில்லை; ஆகையால் விஷ்ணுவின் உருவமென்றே ஒருவாறு ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்து விட்டார்கள். 1902ஆம் ஆண்டில் இந்தப் பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த H. M. ப்ரோக் என்ற ஆங்கில இஞ்சினியர் முதன் முதலில் கல்வெட்டையும், இவ்வுருவங்களையும் கண்டு பிடித்தார்; தம்முடைய குறிப்பில், இந்தச் சின்னங்கள் யாவும், இந்தியர்களின் கீழ்த்திசைத் தொடர்பை விளக்குகின்றன வென்றும், இந்தக் கல்வெட்டு சம்ஸ்கிருதமென்றும் எழுதியிருக்கிறார். இதைப் பற்றிய ஆராய்ச்சியில் விசேஷ கவனம் அது முதல் ஏற்பட்டது. கல்வெட்டில் சில பாகங்கள் அழிந்துவிட்டன. மிகுதியானது கீழே தரப்பட்டிருக்கிறது. இந்தக் கல்வெட்டு பழைய தமிழ் எழுத்தில் வெட்டப் பட்டுள்ளது.

1. ....வர்ம(ன்) குண
2. ....மாந்த நாங்கூருடைய
3. ன்தொட்ட குளம் பேர் ஸ்ரீ அவனி
4. நாரணம், மணிக்கிராமத்தார்க
5. கும் சேனு முக்தார்க்கும்
6. .... பதருக்கும் அடைக்கலம்,

என்று காணப்படுகிறது.

கல்வெட்டில் கண்டுள்ள லிபியின் வழியிலிருந்து, இக் கல்வெட்டானது கி. பி. 8ஆம் நூற்றாண்டில் வெட்டப்பட்டிருக்கலாமென்று கூறமுடிகிறது. யாரோ ஒரு அரசன் (வர்மன்), அவனுடைய முழுப் பெயரும் ஆண்டும் மறைந்து விட்டன. அவனுடைய காலத்தில் நாங்கூருடையார் என்பவர் அவனி நாரணம் என்ற அந்த ஏரியையும், அதன்கரையில் மூன்று உருவங்களையும், இக்கல்வெட்டையும் உருவாக்கியிருக்கிறார். சிலைகள் யாவும் பண்டைய திராவிட நாகரிகத்தை ஒத்தவையென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

மலையின் பெயர் அவனி நாரணம்' செதுக்கப்பட்டிருக்கும் உருவம் திருமாலும் அவருடைய மனைவிமார்களுமாகையால், இந்த நினைவுச் சின்னமானது வைணவ மதத்தினரால் செதுக்கப்பட்டிருக்க வேண்டும். தங்களுடைய சமயத்தின்படி வழிபாடு செய்ய வேண்டி

இந்த ஏற்பாட்டை மேற்கொள்ள வியாபாரக் கூட்டத்தினர் முன்வந்திருக்க வேண்டும். திருவெண்காடு கோயிலின் கல்வெட்டின் மூலமும், திருக்களர் செப்பேடுகளின் வாயிலாகவும் ஆராயும் போது நாங்கூருடயார் என்ற பட்டப் பெயர் கொண்ட ஒரு வியாபாரக் கூட்டத்தினர் தமிழ் நாட்டில் இருந்தார்களென்று சொல்ல முடியும். நாங்கூருடயார் என்று பட்டப்பெயராகவே கருதப்பட்டபோதிலும், நாங்கூர் என்ற கிராமம் தஞ்சை ஜில்லாவில் இன்றுமிருக்கிறது. இந்த ஊரைச் சேர்ந்தவர்களின் வியாபாரக் கூட்டத்தினர் நாங்கூருடயார் என்ற பட்டப் பெயர் கொண்டவர்களென்பது ஆராய்ச்சியின் முடிவாகும்.

சோழ தேசத்தைச் சேர்ந்த பழைய கிராமங்களில் ஒன்று நாங்கூரென்பது; இப்பொழுதுகூட இந்த ஊர் பிரசித்தியாகவே விளங்கி வருகிறது. வருடமொரு முறை தை மாதத்து அமாவாசை கழித்த மறு தினம், இந்த ஊரில் நடக்கும் 'கருடசேவை' மிகப் பிரசித்தி பெற்றதாகும். இந்த ஊரில் இருப்பவர்களில் பெரும்பாலோர் வைணவ மதத்தைச் சேர்ந்தவர்களே. நாங்கூருக்குச் சமீபத்தில் தான் காவிரிப்பூம்பட்டினம் இருக்கிறது. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் புகார் என்ற காவிரிப்பூம்பட்டினம் கடலில் மூழ்கி விட்ட படியால் இப்பொழுதுள்ள காவிரிப்பூம்பட்டினம் தோன்றியிருக்கவேண்டும்; இந்த ஊரிலிருந்து ஒரு சில மைல்கள் கடலில் சென்றால் சிறிய திட்டுகள் தென்படுகின்றன. இவைகள்தான் பழைய புகார் நகரமென்று கூறப்படுகிறது. துறைமுகத்தைக் கொண்ட காவிரிப்பூம்பட்டினத்தை அடுத்து நாங்கூர் இருப்பதாலும், அங்கு விஷ்ணுவே முக்ய தெய்வமாகக் கொண்டாடப்படுவதாலும் நாங்கூருடையார் என்ற வியாபாரக்கூட்டத்தினர் இந்தநாங்கூரைச் சேர்ந்தவர்களே. காவிரிப்பூம்பட்டினத்தின் மூலம் கடல் கடந்து சென்றிருக்க வேண்டும் என்று ஊகம் செய்ய முடிகிறது. இந்த நாங்கூரைத் தவிர வேறு ஊரே கிடையாதாகையால், இவ்வியாபாரக் கூட்டத்தார், இந்த ஊரைச் சேர்ந்தவர்களென்பது 1949ஆம் வருஷத்தின் முடிவாகும்.

நாங்கூரைப்பற்றிய ஆராய்ச்சியில் இந்த ஊரில் பிறந்த குமுதவல்லியாரை, திருநகரி நாட்டுத் தலைவன் மணந்து கொண்டதாயும் தெரியவருகிறது. ஒரு காலத்தில் ராஜாங்க உதவிகூட இந்த வியாபாரிகளுக்குக் கிடைத்திருக்கிறது. திருநகரி என்றஊர் நாங்கூருக்குச் சமீபத்தில் இருக்கிறது. நாங்கூரிலிருக்கும் பூர்வீக குடிகளிடம் சென்று விசாரித்ததில் நாங்கூருடையான் என்பது தங்கள் முன்னோருடைய பட்டப் பெயரென்றே கூறுகிறார்கள். பலான ஊரிலிருந்து சென்றவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டவே இக் கூட்டத்தார், பொதுவாகத் தங்களுடைய ஊரின் பெயரைச் சூட்டிக் கொண்டிருக்கக்கூடும்.

கல்வெட்டில் கண்டுள்ள நாங்கூருடயாரைப்பற்றி ஒரு முடிவுக்கு நாம் வந்துவிட்டபடியால், அடுத்தபடியாக மணிக்கிராமத்தாரைப்பற்றி ஆராய்வோம். மணிக்கிராமம் என்பது நாங்கூருக்கும், காவிரிப்பூம்பட்டினத்திற்கும் மத்தியில் இருக்கும் ஒரு சிறு கிராமமாகும். இந்த ஊரிலிருந்து சென்ற வியாபாரக் கூட்டத்தாரை மணிக்கிராமத்தார் என்று கூறப்பட்டிருக்கிறது. கடல் கடந்து வெகு தூரம் செல்ல வேண்டியிருந்ததால் அக்கம் பக்கத்திலுள்ள கிராமக் கூட்டத்தாருடன் ஒன்றுகூடி செல்வதன் மூலம் தக்க துணையாக இருக்கக்கூடுமென்று அவர்கள் கருதியிருக்கக்கூடும். இவர்கள் வைஷ்ணவராக இருக்கலாம் அல்லது அன்னிய தேசங்களில் விஷ்ணுவை வழிபாடு செய்திருக்கலாமென்பது ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொண்ட ஒருமித்தமுடிவாகும். மணிக்கிராமத்தாரைப் பற்றிய ஆராய்ச்சியில், இவர்கள் சைவமதத்தவர்கள் என்று தெரிய வருகிறது. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளை ஆராய்வதின் மூலம் மற்றும் சில வியாபாரக் கூட்டத்தார்கள் இருந்திருக்கிற விவரம் தெரிய வருகிறது. அஞ்சுவண்ணம், நானாதேசி, வளஞ்சியார், ஆயிரத்தெண்ணூரார் என்ற வியாபாரக் கூட்டாத்தாரும் இருந்திருக்கிறார்கள். சங்க நூல்களில் மணிக்கிராமத்தாரைப்பற்றிய விவரமொன்றும் காணப்படவில்லை; ஆயிரத்தெண்ணூராரைப்பற்றிய சில குறிப்புகள் சில பழைய நூல்களில் காணப்படுகின்றன.

வடமொழி நூல்களில் 'வணிக்கிராமம்' என்று கூறப்பட்டுள்ளது. வடமொழிச் செப்பேடுகளும் இதே விதமாகத்தான் கூறுகின்றன. திருவனந்தபுரம் சமஸ்தானத்திலுள்ள ஒருகோயிலை மணிக்கிராமத்தாரும் அஞ்சுவண்ணத்தாரும் காப்பாற்றிவந்தவிவரம் கேரள நாட்டுச் சிலாசாஸனம் தெரிவிக்கிறது. உள்நாட்டு வியாபாரநிமித்தம் இவர்கள் அங்கேசென்றிருக்கக்கூடும். அல்லது அந்தப் பக்கத்திலுள்ள துறைமுகங்களின் மூலம் வெளிநாட்டு வியாபாரத்தை நடத்தியிருக்கவேண்டும். மார்த்தாண்ட வர்மா திருவனந்தபுர ராஜ்யத்தைச் சீர்திருத்தி அமைக்கும்போது இந்த வியாபாரக் கூட்டத்தாருக்குப் 'பேரூர் கடா' என்ற இடத்தில் தகுந்த இடமளித்ததாகத் தெரிகிறது.

புதுக்கோட்டைப் பிராந்தியத்தில் கொடும்பாளூர் என்ற கிராமமுள்ளது. இந்த ஊரிலிருந்த மணிக்கிராமத்தார் சேலத்திலுள்ள சுகவனேசுவரர் கோயிலுக்குத் தர்மம் செய்த விவரம் தெரிய வருகிறது. இதனைக் கொண்டு பார்க்கும்போது மணிக் கிராமத்தார் உள் நாட்டிலேயே பற்பல ஊர்களில் தங்கியிருக்கிறார்கள் என்பது புலனாகிறது; பல இடங்களில் இவர்கள் தர்மம் செய்திருக்கிறார்கள். திருநெய்த்தானத்து மஹா தேவருக்கு நந்தாவிளக்கு அளித்த விவரம் கல்வெட்டு ஆராய்ச்சியின்மூலம் அறிய முடிகிறது. மணிக் கிராமத்தாரைப் பற்றிய ஆராய்ச்சியில், ஒரு புதிய விஷயம் தெரிய வருகிறது. இந்தச் சமூகத்தினரின் உயரிய நடவடிக்கைகளைக் கண்ட அக்கால அரசர்கள் இவர்களுக்குப் புதிய மரியாதையையும், கௌரவத்தையும் அளித்திருக்கிறார்கள்; இதன்படி இவர்களுக்குள் ஒருவர் குற்றம் செய்தால், அக்குற்றத்தைப் பற்றிய விசாரணையையும், அதற்கான தண்டனையையும் இக் கூட்டத்தாரே விதிப்பது என்ற முறையை இவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். இந்த உரிமையை, தேச வரம்பு கடந்த உரிமை (Extra Territorial Rights) என்று கூறப்படுகிறது; ஆகையால் இக் கூட்டத்தார்தான் தகோபாக் கல்வெட்டில் கண்ட மணிக் கிராமத்தார் என்று முடிவு செய்யப்படுகிறது.



மணிக் கிராமத்தாருக்கு அடுத்த படியாகச் சேனாமுக்தாரைப்பற்றிய விவரத்தை அறிந்து கொள்ள வேண்டும். இவர்கள் வியாபாரக் கூட்டத்தார் அல்லவென்பது பெரும்பாலான ஆராய்ச்சியாளர்களின் முடிவாகும். வியாபாரிகளையும், அவர்களுடைய பண்டகசாலைகளையும் அன்னிய தேசங்களிலே காவல் புரிவதற்காக அழைத்துச் செல்லப் பட்ட வீரர்கள் என்று ஊர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆங்கிலேயர்கள் தான் வியாபாரக் கூட்டத்தாருடன் படை வீரர்களை அழைத்து வந்தார்கள் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் தமிழர்கள் வெகு காலத்துக்கு முன்னமேயே இந்த முறையைக் கையாண்டிருக்கிறார்கள் என்பதற்கு இக் கல்வெட்டு தக்க ஆதாரமாக அமைந்துள்ளது. கீழ்த் திசை நாகரிகங்களில் இந்த முறை வெகுவாகப் புகழப்படுகிறது. சேனாமுக்தார்கள் படை வீரர்கள் அல்லவென்று கூறுவதற்கு இது வரையில் யாதொரு ஆதாரமும் கிடைக்கவில்லையென்பது குறிப்பிடத் தக்கது.

சேனாமுக்தாரைப் பற்றிய விவரம் பல்லவர்களின் காலத்திலிருந்தே காணப்படுகிறது. நந்தி வர்மனின் (3) சகோதரன் சையாம் நாட்டுப் பெண்ணொருத்தியை மணம் செய்து கொள்ள, சேனாமுக்தர் உதவி புரிந்ததாக ஷூல்ட்டு என்ற ஆராய்ச்சியாளர் கூறுகிறார். இந்த மூன்றாம் நந்தி வர்மனுக்கு 'அவனி நாரணன்' என்ற விருது இருந்ததாகத் தெரிய வருகிறது; ஆகையால் இவனுடைய காலத்தில்தான் மேற்கூறிய வியாரக் கூட்டத்தார் தகோபாவிற்குச் சென்று இந்த நினைவுச் சின்னங்களை அமைத்திருக்க வேண்டும். இக்கல் வெட்டின் ஆராய்ச்சி இன்னும் முடிவடைய வில்லை. பலர் ஆராய்ச்சி செய்த வண்ணமாகவே இருக்கிறார்கள், இந்த ஆராய்ச்சியானது எவ்விதமாக இருந்தபோதிலும் தமிழ்நாட்டவரால்தான் இந்த ஞாபகச்சின்னங்கள் தோன்றினவென்பதில் ஐயமில்லை. கல்வெட்டில் கண்ட நாங்கூருடையாரும் மணிக்கிராமத்தாரும் சேனாமுக்தாருடைய பாதுகாப்பில் தம்முடைய தெய்வத்தையும், சிலாசாஸனத்தையும் ஒப்படைத்தார்கள் என்று திண்ணமாய்க் கூறமுடிகிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே தமிழர்கள் கடல் தாண்டிச்சென்றிருக்கும் விவரமும் இந்த நினைவுச்சின்னங்களும் தமிழர்களுடைய வம்சாவளிக்குத் தனிப்பெருமையை அளிக்கின்றனவென்றே கூறவேண்டும். சையாம்நாட்டில் கடந்த சிலவருடங்களாக அமைதியற்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையானது மாறி, கிழக்குப் பிராந்தியத்தில் அமைதி ஏற்பட்டால், மறைந்து கொண்டிருக்கும் பல ஆதாரங்களைக் கண்டுபிடிக்க இயலும். அத்தகைய நற்காலம் எப்பொழுது ஏற்படப் போகிறதென்று ஆராய்ச்சியாளர்கள் கவலைகொண்டிருக்கிறார்கள். அமைதியேற்பட்டவுடன் அரசாங்கத்தின் உதவி கிடைக்குமானால் கீழ்த்திசை நாடுகளிலுள்ள பல விஷயங்களை வெளிப்படுத்த முடியுமென்பது உறுதியாகும்.

வருந்துகிறோம்

பிரபல தமிழ் எழுத்தாளரும், "காவேரி"யின் சிறந்த கட்டுரையாளருமான க. கணபதி B.A., B.L., (காகை) அவர்கள் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். அவர் தம் பிரிவால் வருந்தும் உறவினருக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபம்.



நியாயமான பொறுப்பு

என் திடத்திலும் உழைப்பிலும் எனக்கு பெருமை உண்டு. ஆனால் நாங்கள் நால்வரிருக்கும்போது எல்லா கனத்தையும் நான் ஒருவனே தாங்கிக் கொண்டு, என் முன்பக்கக் கூட்டாளிகள் சுமையில்லாமல் போவதென்றால் அது நியாயமல்லவே. சாமான்கள் ஏற்றும்போது எங்கள் நால்வர் மீதும் சரிசமமாக பாரம் விழும்படி அடுக்கினால் நாங்களும் உண்மையாக வெகுகாலம் உழைப்பது ஸாத்தியம்.

பாரத்தை பார்த்து
நிரவி ஏற்றவும்



TRADE MARK

டன்லப்

DCX 10TM



பரிசு ரூ. 1,000/-

வசீகர சக்தி வாய்ந்த மோதிரம்

(ஓர் அபூர்வ சிருஷ்டி)

யோக சித்தியாலும், வசீகரசக்தியின் உதவியாலும் இம் மோதிரம் தயாரிக்கப்படுகிறது. இது அதிசயங்கள் புரிகிறது! இதை அணிபவர் எத்துணை நீங்காத கஷ்டங்கள் அனுபவிப்பவராயினும் எக்காரியத்திலும் வெற்றி பெறுவது திண்ணம். கிரக தோஷங்களும் நீங்கும். எவரும் இம் மோதிரம் அணிபவரிடம் பணிந்துவிடுவர். இம் மோதிரத்தை அணிபவர் தொழில், காதல், செல்வம், உடல் நலம், வழக்கு, விவாகம், பரீக்ஷை முதலியவைகளில் அமோக வெற்றி பெறுகிருர். லாட்டரி முதலியவை மூலம் நிறைய பணவசதியும் ஏற்படக்கூடும். சகல விதமான பிணிகளினின்றும், அபாயத்தினின்றும் காப்பாற்ற வல்லது. இம் மோதிரம் உங்கள் மெய்க்காவலனக விளங்கும்!!

ஒரு முறை உபயோகித்தால், முதல் நாளிலேயே இதன் அபூர்வ இயலபுகள் விளங்கும். விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—15—0 (மிகவும் சக்தி வாய்ந்தது) வெளி நாடுகளில் 5 ஷில்லிங். ஸ்பெஷல் ரகம் 10 ஷில்லிங். அட்வான்ஸ் தொகையுடன் ஆர்டர் அனுப்பவும்.

இது உண்மையல்ல என்று நிரூபிப்பவருக்கு பணம் திருப்பி அளிக்கப்படும்.

SHINING MESMERISM HOUSE
(C. M.) KARTARPUR (E. P.)

பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்

பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சத்து மிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினுலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி ஸீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு, இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் மாவாக கரைத்து, இரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சர்க்கரை அல்லது எலுமிச்சை ரஸம் சேர்த்துக்கொள்ளலாம்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APBX 5TM

198052

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.



இதோ!

உங்களுக்காக
புதியவிதமான உயர்ந்த ரக,
காம்பு மண்வெட்டி

A I C
TRADE MARK

டாடா
அக்ரிகோ

எல்லா பெரிய
இரும்பு கடைகளிலும்
கிடைக்கும்.

தி டாடா அயரன் அண்டு ஸ்டீல் கம்பனி லிமிடெட்
தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்: 23 B, நேதாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா.
பிராஞ்ச் ஸேல்ஸ் ஆபீஸ்:
ஓரியன்டல் பில்டிங்ஸ், 108, அரண்மனைக்காரத்தெரு, ஜீ. டி. மதருஸ்.

OFFICE OF THE ... OF BOOKS
20 JUL 1949
MADRAS

The Cauveri Colour Press, Kumbakonam.